ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவத் விஷயம்

ஆறும் பத்து

திருவாய்மொழி மூலமும்

ஆறுயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி,
இருபத்துனாலாயிரப்படி, ஈடு முப்பத்தாறுயிரப்படி
வ்யாக்யானங்களும், ஜீயர் அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு
த்ரவிடோபநிஷத்ஸங்கதி, த்ரவிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி
திருவாய்மொழி நூற்றந்தாதி இவைகளுடன்

சே. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி பதிப்பின்

மறுபதிப்பு

பதிப்பித்து வெளியிட்டவர்கள் :

ஸ்ரீ ஸுதர்சனர் ட்ரஸ்ட்

5, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620017.

ஈச்வர-வரு

பங்குனி உத்தரம்

10—4—1998

விலை ரூ. 160

தபால் செலவு தனி

Released by Maaran's Dog ,Toronto , Canada

லிப்ரா ஆப்செட், தஞ்சை.

Released by Maaran's Dog ,Toronto , Canada

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ப,க,வத் விஷயம்—ஆறும் பத்து

பதிப்பாசிரியரின் முன்னுரை

ஆசார்யஹ்ருதயத்தில் உள்ளபடி
ஆறும்பத்தின் ஸாரம் விளக்கப்படுகிறது

முதல்பத்தில் ஆழ்வார் எம்பெருமானுடைய பரத்வத்தையும், இரண்டாம் பத்தில் காரணத்வத்தையும், மூன்றும் பத்தில் வ்யாபகத்வத்தையும், நாலாம் பத்தில் நியந்த்ருத்வத்தையும், ஐந்தாம்பத்தில் காருணிகத்வத்தையும் அனுபவித்தார். இப்படிப் பரமகருணையுடையவனாகையாலே இவனே ஸர்வ ஶரண்யன்—அனைவருக்கும் சரணமடையத் தக்கவன் என்று காட்டி இந்த ஆறும்பத்தில் எம்பெருமானுடைய சரண்யத்வத்தை அனுபவிக்கிறார்.

ஆசார்யஹ்ருதயத்தில் மூன்றாவது ப்ரகரணத்தில் இறுதியானதான 218வது சூர்ணிகையில் ஆழ்வார் இப்பத்தில் அனுபவித்த குணம், "சரண்யத்வம்" என்று காட்டிய அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், ஆழ்வார் இப்பத்தில் பெற்ற பேற்றை "ப்ரேமபலோபாயத்தே புகுந்து" என்னும் தொடராலே காட்டுகிறார். இதன் கருத்தாவது:— ஐந்தாம் பத்தில் பெற்ற மிகப்பெரிய ப்ரேமத்துக்குப் பலன் எம்பெருமானை உபாயமாக வரிப்பதேயாகையாலே, "அலர்மேல் மங்கையுறை மார்பா-உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்" [திருவாய் 6-10-10] என்று உபாயவரணமாகிற பேற்றை ஆறும்பத்திலே ஆழ்வார் பெற்றார் என்றபடி. "உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்கிற சந்தையை நினைவூட்டுவதற்காகவே "உபாயத்தே புகுந்து" என்கிறார். "பலை" என்னும் சொல் 'புகுந்து' என்பதன் பகுதியான புகுதலிலே அந்வயிக்கிறது. "ப்ரேமத்துக்குப் பலமான உபாயம் புகுதலைச் செய்து" என்றபடி. பெரும் காதலினால் காலதாமதத்தைப் பொறுக்காமையினால் உண்டான துடிப்பாலே உபாய வரணம் விளைவதனால் இது ப்ரேமபலமாகிறது.

இனி, ஆறும்பத்தின் ஸாரத்தை விளக்குவதாய், ஆசார்ய ஹ்ருதயத்தின் நாலாம் ப்ரகரணத்தின் ஆறும் சூர்ணையாக அமைந்ததான—

[1] என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மின் என்று கருணையாலே "ஸர்வலோக ஶுபதேப்ய:" என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலும் ஆகாமல் உபாயத்வம் கல்வெட்டாக்குகிற ஶரண்யன் [2] அஜ்ஞாந அஶக்தி யாதாத்ம்ய ஜ்ஞாநங்கள் அளவாலன்றிக்கே அங்குற்றேன் என்னான் புணராய் என்னும்படி மெய்யமர் பக்தி ஶும பலமாகவும் அநந்யகதித்வமுடைய தமக்குப் பாதமே

சரணாக்க [3] அவையே சேமங்கொண்டு ஏகசிந்தையராய் [4] திர்யக்குகளையிட்டு ஸ்வாபி,ப்ராயத்தை நிவேதித்து [5] விளம்ப,ரோஷம் உபாயத்தாலே அழிய [6] உருகாமல் வரித்ததும் நண்ணிவணங்கப் பலித்தவாறே [7] ஸப்ரகாரமாக ஸக்ருத்கரணீயமென்று [8] புராண பௌராணிகர் த்யாஜ்யாம்ஶமாக்கின சித,சித் ப்ராப்ய ப்ராபக ஆப,ாஸங்களைக் [9] கைவலிந்து கைகழலக்கண்டும் எல்லாம் கிடக்க நினையாது அகன்றும் [10] ஆளீர் மேளீர் ஊதீர் என்று ததீய ஶேஷமாக்கியும் [11] புறத்திட்டுக்காட்டியென்று ப்ரஸங்கிக்கில் முடியும்படிவிட்டு, [12] தந்தை தாய் உண்ணுஞ் சோறு மாநிதி பூவை யாவையும் ஒன்றேயாக்கி [13] தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோ என்னும்ஆ ர்த்தியோடே [14] திரிவிக்கிரமனுகக் குறள்கோலப்பிரானுய் அடியை மூன்றை இரந்த வன்கள்வன் கண் முகப்பே அகல்கொள் திசை வையம் விண்ணும் தடவந்த தடந்தாமரைகளை [15] இணைத்தாமரைகள் காண இமையோரும் வரும்படி சென்று சேர்ந்த உலகத் திலதத்தேகண்டு அகலகில்லேன் என்று பூர்வவாக்யம் அநுஸந்தித்தவர் [16] பிணக் கறத் தொடங்கி வேதப்புனித இறுதி சொன்ன ஸாத்,யோபாய ஶ்ரவண ஸஶோக ஸஜாதீயர்க்கு, தந்தனன் மற்றோர்கலைகணிலம் புகுந்தேன் என்று ஸ்வஸித்,தோ,பாய நிஷ்டை,யை உக்த்யநுஷ்ட,ாநங்களாலே காட்டுகிருர் ஆறும்பத்தில் என்னும் ஆசார்ய ஹ்ருத,ய சூர்ணையின் கருத்தை விளக்குவோம்.

இந்தச் சூர்ணை மேலே குறிப்பிட்டுள்ளபடி 16 பகுதிகளாக உள்ளது. இதில் முதல் பகுதி எம்பெருமான் அனைவரும் வந்து ஆஶ்ரயிக்கும்படியிருக்கிற ஸர்வஶரண்யன் என்று காட்டுகிறது. அதாவது "ஏறு சேவகனுர்க்கு என்னை யும் உளள் என்மின்களே" [திருவாய் 6-1-10] என்று "வருந்தியிருப்பவர்களை ரக்ஷிப்பது என்னும் விரதம் கொண்டிருக்கிற பெருமானுக்கு ரக்ஷிக்கவேண்டும் பொருள்களில் நானும் ஒருத்தி உளள் என்று சொல்லுங்கோள்" என்றும், "திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் வரம் கொள் பாதமல்லால் இல்லையாவர்க்கும் வன்சரணே" [6-9-7] என்று. "திருவிண்ணகரிலே நிற்கும் பிரானுடைய திருவடிகள் அல்லது அனைவர்க்கும் வலிமைமிக்க தஞ்சம் வேறில்லை" என் றும், "வன்சரண் சுரர்க்காய்" [6-3-8] என்று "தேவர்களுக்கு வலிமைமிக்க ரக்ஷி கன்" என்றும் "அடிக்கீழ் அமர்ந்துபுகுந்து அடியீர் வாழ்மின் என்றென்று அருள் கொடுக்கும்" [6-10-11] என்று "நம்முடைய அடியார்களாய் இருப்பவர்கள் அனைவரும் நம் அடிகளின் கீழே புகுந்து உய்யுங்கள் — என்று இடைவிடாமல் உரைப்பதுபோலே தன் அருளைப் பண்ணுநிற்கும் திருவேங்கடமுடையான்" என் றும் சொல்லுகிறபடியே, கருணையாலே தன்னுடைய உபாயத்வத்தைக் கல்வெட் டாக ஆக்குகிருன் ஶரண்யன் — என்று இந்த முதல் பகுதி கூறுகிறது. இந்த உபாயத்வம் சரணமடைபவன் வார்த்தை ஒன்ருலும் சரண்யனுடைய வார்த்தை ஒன்ருலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது—

நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணம் உபஸ்திதம் ।
ஸர்வலோக ஶரண்யாய ராகவாய மஹாத்மநே ॥ [ரா-யு 17-15]

[எல்லா உலகினராலும் சரணமடையத்தக்கவராய், பெருங்குணவாளரான ஸ்ரீராம பிரான் பொருட்டு (அவரை) வந்தடைந்திருக்கிற விபீஷணனென்னும் பெயரையுடைய என்னை விரைவில் அறிவியுங்கள்] என்று சரணமடைந்த ஸ்ரீ விபீஷணாழ்வான் எம்பெருமானை ஸர்வலோக ஶரண்யன் என்று கடற்கரையிலே சொன்னசொல் கடலோசையைப்போலே பொருளற்றதாகாதபடியாகவும்,

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்யோ தத்யாம்யேதத் வ்ரதம் மம ॥ [ரா-யு 18-33]

[ஒருதரமே ப்ரபத்தி பண்ணினவன் பொருட்டும், உனக்கு (அடியேனாய்) ஆகிறேன் என்று யாசிக்கிறவன் பொருட்டும் எல்லாப் பிராணிகளிடத்தில் நின்றும் பயமின்மையைப் பண்ணிக்கொடுக்கிறேன்; இது எனக்கு விடமுடியாதஸங்கல்பம்] என்று சரணமடைந்தவர்களை ரக்ஷிப்பதில் விரதம் கொண்ட எம்பெருமான் சொன்னசொல் கழுத்துக்கு மேற்பட (மனப்பூர்வமாக அல்லாமல்) சொன்னதாகாதபடியாகவும் தன்னுடைய உபாயத்வத்தைக் கல்வெட்டாகக் காட்டுகிறான் 'கல்' [பெரிய திருவ 68] எனப்படும் திருமலையிலே நிற்கும் திருவேங்கடமுடையான் என்று கருத்து. எப்படிக் காட்டுகிறான் எனில்;

''வானவர் வானவர் கோனொடும் நமன்றெழும் திருவேங்கடம்''
[திருவாய் 3-3-7] என்றும்,

''எழுவார் விடைகொள்வார் ஈன் துழாயானை வழுவா வகைநினைந்து வைகல் தொழுவார் வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடம்'' [முதல் திருவ 26] என்றும், ''போதறிந்து வானரங்கள் — அணிவேங்கடவன்'' [இர.திருவ 72] என்றும், ''விறல் வேங்கடவனையே கண்டு வணங்கும் களிறு'' [மூன் திருவ 70] என்றும் நித்ய ஸூரிகள், ஸம்ஸாரி ஜீவர்கள், மற்ற பயன்களை விரும்புவோர், எம்பெருமானையே பயனாகக்கொள்பவர், மனிதர், விலங்குகள் என்னும் வேற்றுமை இல்லாமல் அனைவரும் ஆஶ்ரயிக்கலாம்படி நிற்கையாலே தன்னுடைய உபாயத்வம் கல்வெட்டாயிருக்கிறது என்னலாம்படி திருமலையிலே எழுந்தருளியிருக்கிறான் ஸர்வலோக ஶரண்யன் என்பது இந்த முதற்பகுதிக்குத் திரண்ட பொருள். இந்த முதற்பகுதியில் ஶரண்யன் என்னும் எழுவாய் இரண்டாம் பகுதியின் இறுதியிலுள்ள 'பாதமே சரணாக்க' என்பதோடு அந்வயிக்கிறது.

இனி, இரண்டாம் பகுதியில் ''காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்'' [பெரிய திருவ 34] என்கிறபடியே பக்தி பரவஶராயிருக்கையாலே அது காரணமாகவே ஒரு ஸாதநத்தை அனுஷ்டிக்க இயலாத ஆழ்வாருக்குத் தன திருவடிகளையே நிரபேக்ஷ உபாயமாக (வேறொன்றையும் எதிர்பாராத உபாயமாகக்) காட்டிக்கொடுத்தான் எம்பெருமான் என்கிறது.

அவித்₃யாதோ தே₃வே பரிப்₃ருட₄தயா வா விதி₄தயா
ஸ்வபக்₄தேர் பூ₄ய நா வா ஜக₃தி க₃திமந்யாமவிது₃ஷாம் ।
க₃திர்க₃ம்யஶ்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ:
ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ க₃லு ப₄க₃வாந் ஶௌநகமுநி: ॥ [பட்டர் முக்தகம்]

["ப₄க₃வத்₃விஷயத்தில் அறியாமையினாலாவது நன்றாக அறிந்திருப்பதினாலேயாவது தன் ப₄க்தியின் ஆதி₄க்யத்தினாலேயாவது இவ்வுலகில் வேறு உபாயத்தை அறியாதவர்களுக்கு உபாயமும் உபேயமும் இந்த ஹரியே" என்று 'ஜிதந்தே' என்று பெயரையுடையமந்திரத்தின் ரஹஸ்யத்தை ப₄க₃வான் ஶௌநகமுனி வெளிப்படுத்தினாரன்றோ] என்று பட்டர் முக்தக ஶ்லோகத்தில் அருளிச்செய்தபடி ப்ரபத்தி செய்யும் அதிகாரிகள் மூன்றுவகைப்படுவர். எம்பெருமானை அடைவதற்கு உரியதோர் உபாயத்தை அனுஷ்டிப்பதற்கு ஜ்ஞானம் ஶக்தி முதலானவையில்லாத நம்மைப்போன்றவர்கள் முதல்வகை. "மூவகைப்பட்ட அளவுகளுமில்லாத பெருமையையுடையவனாய் நம்மை அடைவதற்குத்தான் அநாதி₃காலமாக முயல்பவனாக இருக்கும் ஸர்வேஶ்வரனை அவனுக்கு அத்யந்த பரதந்த்ரரான நாம் அடைவதற்கு உபாயாநுஷ்ட₂ானமாக ஒரு முயற்சி செய்வதே நம் ஸ்வரூபத்துக்கு தகாது" என்று உணர்ந்த ஸர்வஜ்ஞர்களான நம்முடைய பூர்வாசார்யர்களைப் போன்றவர்கள் இரண்டாவது வகை. உபாயாந்தரங்களை அநுஷ்டிப்பதற்கு ஜ்ஞாநம் ஶக்தி முதலியவை இருந்த போதிலும் எம்பெருமானை நினைத்தவுடன் மனமும் இந்த்ரியங்களும் உடலும் நீர்ப்பண்டமாய் உருகுகையாலே எந்த உபாயத்தையும் அநுஷ்டிக்க இயலாத ஆழ்வார்களைப் போன்றவர்கள் மூன்றாவது வகை. இந்த ஆழ்வார் தாம் மூன்றாவது வகையைச் சேர்ந்தவர் என்பதைப் பலவிடங்களில் காட்டுகிறார். அதாவது "அங்குற்றேனல்லேன் இங்குற்றேனல்லேன் உன்னைக்காணும் அவாவில் வீழ்ந்து நான் எங்குற்றேனும் அல்லேன்" [திருவாய் 5-7-2] என்று "பரமபதத்திலுள்ள முக்தர்களில் ஒருவராயும் அல்லாமல், இங்கிருந்து ஸாத₄நாநுஷ்ட₂ானம் பண்ணும் உபாஸகர்களில் ஒருவராயும் அல்லாமல், ஸாத₄நாநுஷ்டானம் பண்ணவொண்ணாதபடி எம்பெருமானுடைய வடிவழகு முதலியவற்றில் ஈடுபட்டு அவனைக் காணவேணும் என்னும் ஆசையினாலே தளர்ந்து, இனி ஒரு உபாயம் அனுஷ்டிக்கவல்லவனாயும் அல்லாமல் இருக்கிறேன்" என்றும், "என்னான் செய்கேன்" [திருவாய் 5-8-3] என்கிறபடியே "உன் திருவடிகளைப் பெறுகைக்கு என்னால் செய்யலாவது எதுவும் இல்லை" என்றும், "பூவார் கழல்கள் அருவினையேன பொருந்துமாறு புணராயே" [6-10-4] என்று 'என்னிடம் முன்பு அனுஷ்டிக்கப்பட்ட உபாயங்கள் எதுவும் இல்லை உன் திருவடிகளை நான் கிட்டும் வழியை நீயே காட்டவேணும்' என்றும் சொல்லும்படி "மெய்யமர் காதல்" [6-8-2] என்று "அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்தோ அல்லது குணங்களை அநுஸந்தித்தோ தரிக்கமுடியாதபடியாய், திருமேனியிலே அணையவேண்டும்படியான காதல்" என்னும்படி கீழ்ப்பத்தில் தமக்குப் பிறந்த மிகுந்த ப₄க்தி காரணமாக மற்றஉபாயங்களை அநுஷ்டிக்கத தம்மால் இயலாது என்று காட்டுகையாலே "ஸ்வப₄க்தேர்

பூம்நாவா'' என்று பட்டர் காட்டிய மூன்றாவது வகையைச் சேர்ந்தவர் ஆழ்வார் என்று விளங்குகிறது. அத்துடன் ''களைகண் மற்றிலேன்'' [திருவாய் 5-8-8] என்கிறபடி வேறுகதியற்றவருமான தமக்கு ''ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்'' [5-7-10] என்று சொல்லும்படி எம்பெருமான் தன் திருவடிகளை மற்றொரு துணையை எதிர்பாராத ஸாதநமாகக் காட்டிக்கொடுத்தான் என்பது இந்த இரண்டாவது பகுதியின் இரண்டாம் பொருள்.

இனி மூன்றும் பகுதியில், இப்படி எம்பெருமான் ஆக்கினபிறகு ஆழ்வார் இன்னவிதமாக ஆனார் என்கிறது. அதாவது ''கழல்கள் அவையே சரணாகக் கொண்ட குருகூர்ச் சடகோபன்'' [திருவாய் 5-8-11] என்றும், ''நம்பெருமான் அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்'' [5-9-11] என்றும், ''நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று நாடொறும் ஏக சிந்தையனாய்க் குருகூர்ச் சடகோபன்'' [திருவாய் 5-10-11] என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமான் திருவடிகளை மாத்திரமே உபாயமாகக்கொண்டு ஒருநிலைப்பட்ட உறுதியுடையவரானார் ஆழ்வார் என்கிறது.

இனி நாலாவது பகுதியில் ஆறும்பத்தின் முதல் திருவாய்மொழியின் ஸாரம் சொல்லப்படுகிறது. ''வைகல் பூங்கழிவாய்'' என்கிற அந்த முதல் திருவாய்மொழியில் தம்முடைய திருவுள்ளத்தை ஆழ்வார் பக்ஷிகளாகிற தூதர்கள் மூலம் அறிவித்தார். அதாவது – எம்பெருமானைப் பெற்றல்லது தரிக்க மாட்டாத அளவுகடந்த அன்பு உண்டாயிருந்தபோதிலும் தன்னை ரக்ஷித்துக்கொள்வதில் தான் முயல்வதைப் பொறுக்க மாட்டாத தம் ஸ்வரூபத்தின் பாரதந்த்ரியத்தாலே அவன் கையையே பார்த்திருக்கையை அறிவித்தார் ஆழ்வார். ''வைகல் பூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்..... என்கனிவாய்ப் பெருமானைக் கண்டு கைகள் கூப்பிச் சொல்லீர்-வினையாட்டியேன் காதன்மையே'' 6-1-1] என்று தொடங்கி, ''ஏறு சேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்களே'' [6 1-10] என்பது ஈறாக, பக்ஷிகளாகிற சேர்ப்பாரையிட்டு அறிவித்தாராயிற்று.

இனி இப்படி அறிவித்தபின்பும் எம்பெருமான் எழுந்தருளத் தாமதித்தாராக, அதன்மேல் என்ன நடந்தது என்னும் இரண்டாம் திருவாய்மொழியின் ஸாரத்தை ஐந்தாம் பகுதியாலே அறிவிக்கிறார். அதாவது ''மின்னிடைமடவார்'' என்னும் இரண்டாம் திருவாய்மொழியில் எம்பெருமான் வந்து மேல் விழுந்தபோதிலும் 'தாமதித்து வந்தான்' என்கிற ப்ரணயரோஷத்தாலே, (ஊடல் கோபத்தாலே) ''போகு நம்பீ'' [6-2-1. 2] ''கழகமேறேல் நம்பீ'' [6-2-6] என்று அவனுக்கு முகங்கொடாமல் சிற்றிலிழைப்பது, சிறு சோறு அடுவது முதலான காரியங்களைச் செய்ய, எம்பெருமான் அச்செயல்கள் தன்போகத்துக்குத் தடை

யாகையாலே, ''அழித்தாய் உன் திருவடியால்'' [6-2-9] என்கிறபடியே தனக்கும் சரமோபாயமான திருவடிகளாலே உணர்த்தப்படும் திருமேனியினுடைய சிறப்பைக்காட்டி ஆழ்வாருடைய அந்த அநாதரத்தையும் சிற்றிலிழைப்பது முதலான செயல்களையும் அழித்தமையைச் சொல்லுகிறது.

இனி, ஐந்தாம்பத்திலே ''பிறந்தவாறும்'' என்கிற பத்தாம் திருவாய்மொழியில் எம்பெருமானுடைய அவதாராநுபவம் பெருத வருத்தத்தாலே ஆழ்வார் பதற, அவனுடைய குணங்களையும் செயல்களையும் அநுஸந்தித்தாவது தரிப்போம் என்று நினைத்து அவற்றை அனுபவிக்கத்தொடங்கியவுடன், ''நிறந்தனூடு புக்கு எனதாவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற'' [திருவாய் 5-10-1] என்றும் ''பையவே நிலையும் வந்து என் நெஞ்சை உருக்குங்களே'' [5-10-3] என்றும், ''உள்ளம் உள்குடைந்து என் உயிரை உருக்கி உண்ணுமே'' [5-10-4] என்றும், ''ஊடுபுக்கு எனதாவியை உருக்கி உண்டிடுகின்ற'' [5-10-10] என்றும் பேசும்படி அந்த குண சேஷ்டித அநுஸந்தானம் ஆழ்வாருக்கு மிகவும் தளர்த்தியை விளைக்கையாலே தரித்து நின்று அநுபவிக்கவல்லேனும்படி பண்ணி அருள வேணுமென்று அவனை உபாயமாக வரித்தார் ஆழ்வார். இதுவே, ''பிறந்து உலகம் காத்தளிக்கும் பேரருட் கண்ணா உன் சிறந்த குணத்தால் உருகும் சீலத்திறம் தவிர்ந்து சேர்ந்து அனுபவிக்கும் நிலை செய்'' என்று, திருவாய்மொழி நூற்றந்தாதியில் [50] மாமுனிகளால் பேசப்பட்டது. இப்படி பிறந்தவாற்றிலே ப்ரபத்தி பண்ணினது ''குரவை ஆய்ச்சியர்'' [6-4] என்னும் திருவாய்மொழியில் பலித்தமையைச் சொல்லுகிறது ஆறும் பகுதி. அதாவது — இத்திருவாய்மொழியில் ''என்ன குறைவு எனக்கே'' [6-4-1] என்று தொடங்கி, ''நண்ணி நான் வணங்கப் பெற்றேன் எனக்கு ஆர் பிறர் நாயகரே'' [6-4-10] என்பது ஈறாக ''எம்பெருமானுடைய அவதார குணச்செயல்களை எல்லாக் காலமும் முறையாகக் கிட்டி அனுபவிக்கப்பெற்ற எனக்கு நிகரானவர் எவருமில்லை'' என்று செருக்கிப் பேசும்படி பலித்து விட்டது என்றபடி.

இனி 7 முதல் 16 ஈறாகவுள்ள பகுதிகளில் ஆழ்வார் சரணாகதி செய்ததை விரிவாகக் குறிப்பிடுகிறார். அதில் 7 வது பகுதியில் இந்தச்சரணாகதியைச்செய்ய வேண்டிய முறையைக் காட்டுகிறார். ''ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ'' [கீதை 18-66] [எல்லா உபாயங்களையும் விட்டு என்னை சரணமடைவாய்] என்கிறபடியே மற்ற உபாயங்களை விடுகையாகிற ப்ரகாரத்தோடே [அங்கத்தோடே] கூட இந்த ஸித்தோபாயத்தை வரிப்பதாகிற சரணாகதியைச் செய்யவேண்டும்; அதிலும் 'ஸக்ருதேவ ப்ரபந்நாய'' [ரா-யு 18-33] என்கிறபடியே எம்பெருமானை அடைவதற்கு இந்த ஶரணாகதியை ஒருதடவையே செய்ய வேண்டும் என்று எண்ணினார் என்கிறது ஏழாம் பகுதி. 'ஸக்ருத் கரணீயம் என்று' என்னும் இந்த ஏழாம் பகுதி ''பூர்வவாக்யம் அநுஸந்தித்தவர்'' என்னும் 16 வது பகுதியோடு அந்வயிக்கிறது.

இனி 8, 9 பகுதிகளாலே தாய் தந்தை முதலான மற்ற தாழ்ந்த ப்ராப்யங்களிலிருந்தும் மற்ற உபாயங்களாகிற தாழ்ந்த ப்ராபகங்களிலிருந்தும் நீங்கப் பெற்றதைக் கூறுகிறார். அதில் எட்டாம் பகுதி இந்தத் தாழ்ந்த ப்ராப்யங்களும் ப்ராபகங்களும் புராணங்களாலும் பௌராணிகராலும் தாழ்ந்தவையாகையாலே கைவிடத்தக்கவை என்று சொல்லப்பட்டிருப்பதைக் காட்டுகிறார். அதாவது

பிதரம் மாதரம் தா₃ராந் புத்ராந் ப₃ந்தூ₄ந் ஸகீ₂ந் கு₃ருந் ।
ரத்நாநி த₄நதா₄ந்யாநி க்ஷேத்ராணி ச க்₃ருஹாணி ச ॥
ஸர்வ தா₄ர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந் ।
லோக விக்ராந்த சரணௌ ஶரணம் தே₃வ்ரஜம் விபோ₄ ॥

[ப₄விஷ்யத்புராணம்]

[ஐயனே! தந்தை தாய் மனைவி மக்கள் உறவினர்கள் நண்பர்கள் லௌகிக ஆசார்யர்கள் ரத்னங்கள் தனதான்யங்கள் வயல்கள் வீடுகள் ஆகிய இவ்வுலகிலுள்ள தாழ்ந்த ப்ராப்ய ப்ராபகங்களையும், கர்மயோகமும் முதலான தாழ்ந்த ப்ராபகங்களையும், ஐஶ்வர்ய கைவல்யங்களாகிற மறுமையில்பெறும்தாழ்ந்தப்ராப்யங்களையும்வாஸனையோடு விட்டு, திருவுலகளந்தருளின உன்திருவடிகளைஉபாயமாகப்பற்றுகிறேன்] என்று ப₄விஷ்யத்புராணத்தில் இந்தத்தாழ்ந்த ப்ராப்யப்ராபகங்களைக்கைவிடவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. புராணங்களை அறிந்தவர்களில் தலைசிறந்த பௌராணிகரான ஸ்ரீப₄ாஷ்யகாரர் க₃த்₃யத்திலே இந்தவசனங்களை எடுத்து, கைவிடத்தக்க ப்ராப்ய ப்ராபகங்களைக் கைவிட்டு எம்பெருமானை ஶரணமாகப்பற்றுகிறார். ஆக வசனத்தாலும் அனுஷ்டா₃நத்தாலும் கைவிடத்தக்கவையாகத் தேறின இவை சித்₃வஸ்துக்களும் அசித்₃வஸ்துக்களுமாயிருக்கும். மேலெழப்பார்க்கும்போது ப்ராப்ய ப்ராபகங்களாய் உண்மையில் அப்படியல்லாமையாலே இவை ப்ராப்யாப₄ாஸம் ப்ராபகாப₄ாஸம் எனப்படுகின்றன. முற்கூறிய ஶ்லோகத்தில் "பிதரம்" என்று தொடங்கி "கு₃ருந்" என்னும் வரை அறிவுள்ள சித்₃வஸ்துக்களாயிருக்கும் ப்ராப்ய ப்ராபக ஆப₄ாஸங்கள் சொல்லப்பட்டன. "ரத்நாநி" என்று தொடங்கி "க்₃ருஹாணி" என்னும் வரை அறிவற்ற அசித்₃வஸ்துக்களாயிருக்கும் ப்ராப்ய ப்ராபக ஆப₄ாஸங்கள் சொல்லப்பட்டன. இவை ஓர் ஆகாரத்தாலே ப்ராப்யங்களாகவும் மற்றோர் ஆகாரத்தாலே ப்ராபகங்களாகவும் ஆகின்றன என்பது வெளிப்படை. ஆக, இந்த எட்டாம் பகுதியால் கைவிடத்தக்கவையான ஆப₄ாஸ (மேலெழத் தோன்றும்) ப்ராப்ய ப்ராபகங்கள் சொல்லப்பட்டன.

இனி 9ம் பகுதியால் ஆழ்வார் இவற்றினின்றும் நீங்கப்பெற்றமை குறிக்கப்படுகிறது. இவற்றில் சில ப்ராப்ய ப்ராபகங்களை ஆழ்வார் தாமாகக் கைவிடுவதும் உண்டு. மற்றும்சில அவை தானே கையொழிந்து போவதும் உண்டு. வேறு

சிலவற்றை ஆழ்வார் ஒருசரக்காகவே மதியாமல் உபேக்ஷித்துப்போவதும் உண்டு. இம்மூன்று வகைகளையும் முறையே "துவளில் மாமணிமாடம்" [6-5] "மாலுக்கு வையம்' [6-6] "உண்ணும் சோறு" [6-7] என்கிற மூன்று திருவாய் மொழிகளிலுள்ள பாசுரங்களினால் விளங்கக் காணலாம். அதாவது—"அன்னைமீர் அணிமாமயில் சிறுமானிவள் நம்மைக் கைவலிந்து" [6-5-7] என்கையாலே ஆழ்வார் தாமே இவற்றைக் கைவிட்டமை விளங்குகிறது. "இழந்தது சங்கே" [6-6-1] என்று தொடங்கிக் கூறுகையாலே தூங்குகிறவன் கையிலிருக்கிற பொருள்போலே எம்பெருமானிடம் அன்பின் வசப்பட்டிருக்கையாலே இவை ஆழ்வாருக்குத் தானே கைகழிந்து போனமை தோற்றுகிறது. "இதெல்லாம் கிடக்க இனிப்போய் ..... எம்மையொன்றும் நினைத்திலனே" [6-7-9] என்றும், "இன்றெனக்கு உதவாது அகன்ற" [6-7-6] என்றும் சொல்லுகையாலே இவற்றில் சிலவற்றை ஆழ்வார் ஒரு பொருளாக நினையாமல் உபேக்ஷித்து அகன்று போனமை விளங்குகிறது. ஆக 8, 9 பகுதிகளால் கைவிடத்தக்கவையாகச் சொல்லப்பட்ட ப்ராப்ய ப்ராபக ஆபாஸங்களிலிருந்து ஆழ்வார் நீங்கப்பெற்றமை சொல்லப்பட்டது. அடுத்த இரு பகுதிகளிலும் இவ்விஷயம் தொடர்கிறது.

கைவிடத்தக்க இந்த ப்ராப்ய ப்ராபகங்களில் எம்பெருமானுடைய அடியார்களுக்கு ஸமர்ப்பிக்கத்தக்கவையாய் இருப்பவற்றை அவர்களுக்கு ஸமர்ப்பித்தார் என்று பத்தாம் பகுதியில் காட்டுகிறார். "பொன்னுல காளீரோ" [6-8] என்னும் திருவாய்மொழியில் தன்னை எம்பெருமானோடு சேர்ப்பிக்கும் அவனுடைய அடியார்களுக்கு "புவனிமுழுதாளீரோ" [6-8-1] என்றும், "நெய்யமர் இன்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ" [6-8-2] என்றும், "ஓடிவந்து என் குழல்மேல் ஒளிமாமலர் ஊதீரோ" [6-8-3] என்றும் அடியார்களுக்கு இவற்றைப் பரிசிலாக ஸமர்ப்பித்தார் என்றபடி.

அடியார்களுக்கு போக்யமான அவற்றை ஸமர்ப்பித்தாலும், தம்மைப் பொறுத்தவரையில் மற்ற ப்ராப்ய ப்ராபகங்களின் பேச்சே தமக்குப் பொறுக்கவொண்ணாதபடி அவற்றைக் கைவிட்டமையைப் பதினோராம் பகுதி காட்டுகிறது அதாவது — "கிறி செய்து என்னைப்புறத்திட்டு இன்னம் கெடுப்பாயோ" [6-9-8] [விஷயங்களிலே தள்ளி உன்னிடமிருந்து விலக்கி என்னைக் கெடுக்கப் பார்க்கிறாயோ] என்றும், "ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ" [6-9-9] [ஐந்து இந்த்ரியங்கள் அனுபவிக்கும் சிற்றின்பங்கள் பலவற்றை எனக்குக் காட்டி என்னை அழியச்செய்வாயோ] என்றும் சொல்லுகையாலே மற்ற விஷயங்களைப் பற்றிய பேச்சு நேர்ந்தாலும் உயிர் நீங்கும்படி பயந்தவராய் அவற்றைவிட்டார் என்றபடி.

இனி, பனிரண்டாம் பகுதியில் ''கைவிட்ட அவையெல்லாம் பகவத் விஷய மேயாம்படி ஆனார்'' என்று சொல்லப்படுகிறது. அதாவது ''பிதரம் மாதரம்'' [பவிஷ்யத் புராணம்] என்று கைவிடப்பட்ட அந்த உறவுகளெல்லாம்

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ த்வமேவ பந்துஶ்ச குருஸ் த்வமேவ |
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தேவதேவ||

[தேவ தேவனே! நீயே தாய், நீயே தந்தை, நீயே உறவினர். குருவும் நீயே, அறிவும் நீயே, செல்வமும் நீயே. நீயே எனக்கு எல்லாம் ஆவாய்] என்று புராணங்களில் சொன்னபடியே ''தேவபிரானையே தந்தை தாய் என்றடைந்த வண் குருகூரவர் சடகோபன்'' [6-5-11] என்று எம்பெருமானே என்று அநுஸந்தித்தார் ஆழ்வார். ''உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்'' [6-7-1]என்று ''தாரக போஷக போக்யங்களும் எல்லாம்கண்ணன்'' என்று ஆழ்வார் அநுஸந்தித்தார். ''வைத்தமாநிதியாம் மதுசூதனையே அலற்றி'' [6-7-11] என்று ஆபத்துக்கு உதவும் சேமநிதியும் அவனே என்று அநுஸந்தித்தார். ''பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூப்புட்டில்கள் யாவையும் திருமால் திருநாமங்களே கூவியெழும்'' [6-7-3] என்று விளையாட்டுக்கருவிகளால் வரும் சுவையெல்லாம் திருமாலின் திருநாமங்களைச் சொல்வதனாலேயே உண்டாகும் என்று அநுஸந்தித்தார். இவ்வண்ணமாக, கீழ்விட்ட விஷயங்களெல்லாம் பகவத்விஷயம் ஒன்றுமேயாக நினைத்தார்.

இனி, பதின்மூன்றும் பகுதியில் ''நீராய் நிலனாய்'' [6-9] என்னும் திருவாய்மொழியில் ஆழ்வாருக்கு எம்பெருமானுடைய திருவடிகளைப் பெறவேண்டுமென்னும் ஆர்த்திமிகுந்தமை சொல்லப்பட்டது. ''கோலத் திருமா மகளோடு உன்னைக் கூடாதே சாலப்பலநாள் அடியேன் இன்னம் தளர்வேனோ'' [6-9-3] என்றும், ''ஓரடியால் எல்லாவுலகும் தடவந்த மாயோன் உன்னைக் காண்பான் வருந்தி எனைநாளும் தீயோடுடன் சேர் மெழுகாய் உலகில் திரிவேனோ'' [6-9-6] என்றும், ''தாவி வையம்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ?'' [6-9-9] என்றும், ''புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல்வாவோ..... திருவேங்கடத்தானே நினைசார் சார்ங்கத்துனபாதம் சேர்வது அடியேன் எந்நாளே'' [6 10 5] என்றும் பேசும்படி ஆழ்வார் எம்பெருமானின் திருவடிகளை நேரே கிட்டவேண்டும் என்னும் ஆர்த்தி மிகப் பெற்றார்.

இந்த ஆர்த்தியோடே திரிவிக்கிரமனின் திருவடிகளைத் திருவேங்கடமுடையானிடத்திலே கண்டு ''அகலகில்லேன்'' [6-10-10] என்னும் பாட்டிலே பூர்வவாக்யத்தின் பொருளை அநுஸந்தித்தார் என்று 14, 15 வது பகுதிகளில் சொல்லப்படுகிறது. அதில்14 வது பகுதி ஆழ்வார்கண்ட திருவடித் தாமரைகளை வர்ணிக்கிறது. ''பிதரம் மாதரம்'' என்று தொடங்கும் பவிஷ்யத்புராண ஶ்லோகத்தில் மற்ற ப்ரா

ப்ய ப்ராபகங்களைக் கைவிட்டு, திருவுலகளந்த திருவடிகளையே உபாயமாகப் பற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டது. அந்தத் திருவடிகளிலேயே ஆழ்வார் பூர்வ வாக்யம் அநுஸந்தித்தார் என்று காட்டுவதற்காக அத்திருவடிகள் இப்பகுதியில் வர்ணிக்கப்படுகின்றன. ''தெய்வ நாயகன் நாரணன் திருவிக்கிரமன் அடியிணை மிசை'' [5-7-11] என்றும், ''மாண்குறள் கோலப்பிரான்'' [5-9-6] என்றும், ''அடியை மூன்றை யிரந்தவாறும்'' [5-10-9] என்றும், ''மின்கொள்சேர் புரிநூல் குறளாய் அகல்ஞாலங்கொண்ட வன்கள்வன்'' [6-1-11] என்றும், ''காண்மின்கள் உலகீர்! என்று கண்முகப்பே நிமிர்ந்த தாளிணையன்'' [6-3-11] என்றும், ''அகல் கொள் வையமளந்த மாயன் என் அப்பன்'' [6-4-6] என்றும், ''திசைஞாலம்தாவியள ந்ததும்'' [6-5-3] என்றும், ''மாலுக்குவையம் அளந்தமணாளற்கு'' [6-6-1] என்றும், ''மண்ணும் விண்ணும் கொண்ட மாயவம்மான்'' [6-9-2] என்றும், ''பாயோர் அடி வைத்து அதன் கீழ்ப்பரவை நிலமெல்லாம் தாய் ஓர் அடியால் எல்லாவுலகும் தட வந்த'' [6-9-6] என்றும், ''தாவி வையம்கொண்ட தடந்தாமரைகள்'' [6-9-9] என்றும் ஆரும்பத்தில் பலகாலும் உலகளந்த திருவடிகளையே ஆழ்வார் வாய்வெருவினார்.

இனி பதினைந்தாவது பகுதியில் இந்த உலகளந்த திருவடிகளை திருவேங்கடமுடையானின் திருவடிகளிலே கண்டு த்வயத்தின் பூர்வவாக்யத்தின்படி அத்திருவடிகளை ஶரணமாகப்பற்றினார் என்கிறார். ''உலகமுண்ட பெருவாயா'' [6-10] என்னும் திருவாய்மொழியிலும், ''எந்நாளே நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்பதற்கென்று எந்நாளும் நின்று இமை யோர்கள் ஏத்தியிறைஞ்சி இனமினமாய் மெய்ந்நாமனத்தால் வழிபாடு செய்யும் திருவேங்கடத்தானே!'' [திருவாய் 6-10-6] என்கையாலே திருவேங்கடமுடையானின் திருவடிகள் உலகமளந்த திருவடிகளே என்று காட்டப்பட்டதாயிற்று. மூன்றும் பத்தில் த்வயத்தின் உத்தரவாக்யத்தின் பொருளை அநுஸந்திக்கும் ''ஒழி வில் காலமெல்லாய்'' [3-3] திருவாய்மொழியில் ''அன்று ஞாலம் அளந்த பிரான் பரன் சென்று சேர் திருவேங்கடமாமலை'' [3-3-8] என்று உலகமளந்த பெருமானே திருவேங்கட முடையான் என்று அநுஸந்தித்தார். பதினாலாவது பகுதியில் வர்ணிக்கப்பட்ட உலகமளந்த தடந்தாமரைகளை ''திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடம்'' [6-10-1] என்று சொல்லப்பட்ட உலகத் திலதமாகிற (உல குக்குத் திலகம்போன்ற) திருவேங்கடத்திலே கண்டார் ஆழ்வார். கண்டபின்பு ''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கை உறைமார்பா'' [6-10-10] என்று புருஷகார பூதையான பெரிய பிராட்டியாரை முன்னிட்டு 'ஸ்ரீமத்' ஶப்தார் த்தத்தை அநுஸந்தித்து ''நிகரில் புகழாய் உலகம்மூன்றுடையாய் என்னையாள் வானே நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே'' [6-10-10] என்று முறையே வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌஶீல்யம், ஸௌலப்யம் என்று நான்கு திருக்குணங்களை அநுஸந்திப்பதன்மூலம் ''நாராயண'' ஶப்தார்த்தத்தையும் அநுஸந்தித்து, ''புகலொன்றில்லா அடியேன்'' [6-10-10] என்று ஆகிஞ்சன்ய

அநந்ய கதித்வங்களை முன்னிட்டுக்கொண்டு -'உன் அடிக்கீழமர்ந்து புகுந்தேனே'' [6-10-10] என்று ''சரணௌ ஶரணம் ப்ரபத்யே'' என்கிற பதங்களின் பொருளையும் அநுஸந்தித்தருளுகையாலே த்வயத்தின் பூர்வவாக்யத்தின்படி பூர்ண ப்ரபத்தி பண்ணினார் ஆழ்வார். 'அநுஸந்தித்தவர்' என்று இப்பகுதியின் இறுதியிலுள்ள பதம் அடுத்த பகுதியின் இறுதியிலுள்ள ''ஸ்வ ஸித்தோபாய நிஷ்டையை உக்த்யனுஷ்டானங்களாலே காட்டுகிறார்'' என்னும் தொடரோடு அந்வயிக்கிறது.

இனி பதினாறும் பகுதியில் முற்கூறிய பூர்வவாக்யத்தின் பொருளை யாருக்கு எப்படிக் காட்டுகிறார் என்று விவரிக்கப்படுகிறது. இந்த ஆறும் பத்துக்கு ''நல்குரவும் செல்வும்'' [6-3] என்னும் திருவாய்மொழியே உபதேசத் திருவாய்மொழியாக அமைந்திருக்கிறது. ஏனெனில் ''திருவிண்ணக்கர் மன்னுபிரான் கழல்கள் அன்றி, மற்றோர் களைகண் இலம் காண்மின்களே'' [6-3-10] என்று இத்திருவாய்மொழியிலுள்ள பாட்டில் ''காண்மின்களே'' என்று உபதேசம் செய்யப்பட்டிருக்கையாலே இத்திருவாய்மொழிக்கு உபதேசத்திலே நோக்கு என்று அறியலாம். ஆழ்வார் எதைக் காட்டினார் எனில்— ''திருவிண்ணகர் சேர்ந்த அப்பன் தன்னைப்பார் இல்லப்பன் தந்தனன் தனதாள் நிழலே'' [6-3-9] ''திருவிண்ணகர் மன்னுபிரான் கழல்கள் அன்றி, மற்றோர் களைகண் இலம் காண்மின்களே'' [6-3-10] என்கிற தம்முடைய உக்தியாலும், ''அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'' [6-10-10] என்கிற தம்முடைய அநுஷ்டானத்தாலும் எம்பெருமான் திருவடிகளாகிற இந்த ஸித்தோபாயத்திலுண்டான தம்முடைய நிஷ்டையைக் காட்டுகிறார். யாருக்குக் காட்டுகிறார் எனில்—''பத்துடையடியவர்'' [1-3] என்னும் திருவாய்மொழியில், ''பிணக்கற அறுவகைச் சமயமும்'' (1-3-5) என்கிற பாட்டில் ''வணக்குடைத்தவநெறி வழி நின்று'' என்று பக்தியோகமாகிற உபாயம் ஆழ்வாரால் முதன் முதலில் உபதேசிக்கப்பட்டது. ஐந்தாம் பத்தில் ''பொலிக பொலிக'' [5-2] என்னும திருவாய்மொழியில், ''மேவித்தொழுது உய்ம்மினீர்கள்'' [5-2-9] என்னும் பாட்டில், ''வேதப்புனித இருக்கை நாவிற்கொண்டு ஞானவிதிபிழையாமே அச்சுதன் தன்னை மேவித்தொழுது உய்ம்மினீர்கள்'' என்பது வரையிலும், முதல் பத்து மூன்றும் திருவாய்மொழியில் தொடங்கப்பெற்ற அந்த ஸாத்யோபாயமான ஸாதநபக்தியை ஆங்காங்கு உபதேசித்துப் போந்தார் ஆழ்வார். அந்த ஸாதந பக்தியினுடைய ஶ்ரவணத்தாலே 'அது அநுஷ்ட்டிக்க முடியாதது' என்றும், 'அத்யந்த பரதந்த்ரமான நம் ஸ்வரூபத்துக்கு விரோதி' என்றும் நினைத்துப் பிறந்த சோகத்தோடே கூடி, ''எய்தக் கூவுதல் ஆவதே எனக்கு'' [5-7-5] என்றும், ''என்னுன் செய்கேன்'' [5-8-3] என்றும் இருக்கும் தம்மோடு ஸஜாதீயர் (ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்) ஆம்படியான அதிகாரம் (தகுதி) பிறந்தவர்களுக்கு முற்கூறிய ஸித்தோபாய நிஷ்டையைக் காட்டுகிறார் என்றபடி.

இந்த பகவத் விஷயம் ஆறும் பத்து அமெரிக்கா (U S A) வில் வாழ்ந்து வரும் ஸ்ரீவைஷ்ணவர்களின் 'தொண்டர்குலம்' என்னும் அமைப்பைச் சேர்ந்த திருமலை அனந்தாண்பிள்ளை ஸ்ரீநிவாஸவரதன் மற்றும் அவரது நண்பர்களான மணி வரதராஜன், விஜயராகவன், ஸம்பத் ரங்கராஜன் சித்ரா மாதவன், திருமதி & திரு கிருஷ்ணமாச்சாரி, நாராயணன், மோஹன் சாகர் ஆகியோருடைய நிதியுதவியால் வெளியிடப்படுகிறது. இவர்களுக்கும் இவர்களுடைய குடும்பத்தினர்க்கும் எம்பெருமான் எல்லா நலன்களையும் அருள்வானாக.

ஸ்ரீ வைஷ்ணவ தாஸன்

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்

[ஸுதர்சனர்] ஆசிரியர், ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

3 B புத்தூர் அக்ரஹாரம்

திருச்சிராப்பள்ளி 620017

ஈச்வர வரு

பங்குனி உத்தரம்

10—4—1998

SRI SUDARSANAR TRUST

(Regd Under the Indian Trust Act)

3 B, Puthur Agraharam, Tiruchiralli—620017,

BOARD OF TRUSTEES

Shri S. Krishnaswamy Iyengar,
President and Managing Trustee,
No. 3 B, Puthur Agraharam,
Trichy-620017.

Shri V. Ramamoorthy, Advocate,
14, South Tank Street,
Thuraiyur 621010.

Shri R Doraiswamy, L. T. M. (Hons)
Vice President,
Sri Ramakrihna Nilayam,
6, Nethaji Road,
Pappa Naickanpalayam,
Coimbatore 641037,

Shri S. Murali,
10, Thyagarajapuram,
Mylapore,
Madras-6000004.

Shri Ammal
S. Thiruvenkatacharlaswamy,
[Thiruvellarai Keezhathirumaligai,
Secretary & Treasurer,
48, West Chittirai Street, Srirangam, Trichy-620006.

ஸ்ரீ

திருவாய்மொழி.

ஆறும்பத்து.

முதல் திருவாய்மொழி—வைகல்: ப்ரவேசம்.

ஆறுயிரப்படி.

(வைகல்பூங்கழிவாய்.) எம்பெருமானோடே கலந்து பிரிந்தாளொருபிராட்டி.

ஒன்பதினாயிரப்படி.

ஆறும்பத்தில், முதல் திருவாய்மொழியில், இப்படி நோற்றநோன்பு தொடங்கி, நாலுப்ரயோகம் ஶரணம்புக்கவிடத்திலும் அவன்வாராமையாலே, "குணவானாய் ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியாகையாலே ஸர்வநிர்வாஹசக்தனாயிருக்கிற வெம்பெருமானைத் திருவண்வண்டூரில் ஸம்ருத்தி நம்மைநினையாதபடி பண்ணுகையாலே நம் தசையறியாமல் வாராதொழிந்தான், அறிவிக்கவரும்" என்றுபார்த்து, தன்பரிஜநங்களில் அவன்பக்கல்போய்வரவல்லாரொருத்தரைக் காணாமையாலே, தன்னாற்றாமைகை கொடுக்கக் கழிக்கரையிலேசென்று, அங்கேவர்த்திக்கின்றன சிலபக்ஷிகளை அத்யாதரம் பண்ணியிருந்து திருவண்வண்டூரில்தூதுவிடுகிறாள்.

பன்னீராயிரப்படி.

ஆறும்பத்தில், கீழ்பத்திலே - ஈஶ்வரனுடைய வுபாயஸ்வரூபத்தை ஸப்ரகாரமாக நிரூபித்து, அநந்தரம், இவ்வுபாயஸ்வரூபத்தினுடைய ஸ்வீகாரப்ரகாரத்தை யருளிச்செய்வதாக; உபாயஸ்வீகாரம் வடகலையான ஆசார்யர்கள் முகமாக ஸித்திக்கும் ப்ரகாரத்தையும், ஸ்வீகர்த்தாவான அதிகாரியினுடைய பகவதாபிமுக்யம் ஸ்வீகாரத்துக்கு அபேக்ஷிதமென்னுமிடத்தையும், அவடிகவடகலையான ஸர்வரக்ஷகனான ஈஶ்வரவிஷயத்தில் பலப்ரதத்வஶக்தியில் ஸம்ஶயமில்லை யென்னுமிடத்தையும், ஆகர்ஷகசேஷிதனுகையாலே ஆஶ்ரயணம் ஸுகரமென்னுமிடத்தையும், தஶாஸந்தியை யாசைப்பட்டார்க்கு அந்யபரர்பக்கல் வைராக்யம் அபேக்ஷிதமென்னுமிடத்தையும், ஆத்மாத்மீயபதார்த்தமெல்லாம் அவனிட்டவழக்காம்படியான ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியையும், யாவதாத்மபாவிகளெல்லாம் தானேயான ப்ராப்யவிஷயத்தில் த்வராயோகத்தையும், த்வரிதனுடைய ப்ராப்திக்கு வடகலையான்விஷயத்தில் அத்யந்தாதரத்தையும், பரிபூர்ணமான ப்ராப்ய ப்ராபகங்களை அதிகாரிக்கு விபோஷணமென்னுமிடத்தையும், ஸர்வரக்ஷகனான ஶரண்யன் பக்கல் ஸப்ரகார ஶரணாகதியையும் அருளிச்செய்து, ஸ்வதஸ்ஸித்தமான வுபாயவிஷயத்தில் ஸ்வீகாரத்தை ஸ்வாதுஷ்டாந பர்யந்தமாக வருளிச்செய்கிறார்.

இதில் முதல்திருவாய்மொழியில், ஆஶ்ரயணம் ஆசார்யோபஜ்ஞமாகையாலே; ஆஶ்ரயணீயனானவன் கையுந்திருவாழியுமான வடிவழகைக் காட்டி யடிமைகொள்ளும் திருபாயிக ஸௌஶீல்யஸம்பந்தத்தையும், அந்த ஸம்பந்தமடியான ஆபத்ஸகத்வத்தையும், ரக்ஷகத்வயோக்யத்வவிஶிஷ்டமான ஆதிக்யவிஶேஷத்தையும், அநுபாவ்யாகாரயுக்தமான ஆஶ்ரிதஸமவ்யவதையினுடைய அதிஶயத்தையும், லோக்யத்வஸ்வீகாரத்தால் வந்த பூர்த்தி விஶேஷத்தையும், தத்கார்யமான ஸர்வரக்ஷாவஹகத்வத்தையும், அநுபாவ்ய அஸாதாரணமான லக்ஷணங்களையும், விலக்ஷண லக்ஷணங்களாலே ப்ரகாஶிதமான விஶேஷஶாயிக்யத்தையும், ஆஶ்ரிதஸமவ்யவதைக்கடியான அத்யந்தவ்யாமோஹத்தையும், வ்யாமோஹகார்யமான விரோதிநிரஸந ஸாமர்த்யத்தையும் நுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிஶிஷ்டனான ஸர்வேஶ்வரனுடைய ஆஶ்ரயணம் படகத்வாரமாகவேணுமென்றறுதியிட்டு, படகத்வாநுரூபமான ஸ்வபாவவிஶேஷங்களையுடைய வ்யக்திவிஶேஷமுகத்தாலே ஸ்வதசையை யறிவித்தப்ரகாரத்தை, விஶ்லிஷ்டநாயகி நாயகனைநோக்கித் தூதுவிடுகிற பாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

இருபத்துநாலாயிரப்படி.

ஆறும்பத்தில், முதற்றிருவாய்மொழியில், * நோற்றநோன்புதொடங்கி நாலுப்ரயோகம் ஶரணம்புக்கவிடத்திலும் தம்முடைய அபேக்ஷிதம் பெற்றிலர். பலத்தோடு அவ்யவஸிதாரியாய் அவிளம்ப்ய பலப்ரதமானவுபாயத்தை ஸ்வீகரிக்கச்செய்தேயும் அபேக்ஷிதங்கிடையாதொழிவானென்? என்னில்; இவர் தம்முடைய ஶக்திக்கீடாக ஜகத்திலுடையஶக்தத்துக்குங் கடவனாகையாலே ஈஶ்வரனுக்கு த்யாதலைக்கட்டுற்றில்லை. அநுபற்றுமையாலே அற்றுமாகிதூர்க்கு, கலந்துபிரிந்து பிரிவாற்றுமையாலே திருவண்வண்பரிசிலே தூதுவிடுகிறவொருபிராட்டிபோக்காலே இவர் தன்தசையை யருளிச்செய்கிறார். நாயகனானவன் "யஶஸ்வீஜ்ஜோ நஷ்டம்வஸு:" என்று நம்தசையை யறியுமவனுமாய், "ஶிவஶ்ரிணாஶிவ தலம்" என்று - ஶத்ருக்கள்படக்கலிலும் இரங்கும்நீர்மையையுடையவனுமாய் "ஶரெதோ:ஶ்வ்வ்யாகவீயஶ்வ்ஶ்ரஜ்ஜுநீயஶ்வ்விகு ரெஶ:" என்று - வருமிடத்தில் ப்ரபலப்ரதிபந்தகங்களையும் தள்ளிவரவல்ல ஆண்பிள்ளையுமாயிருக்க, வாராமைக்கடி - திருவண்வண்பரிசில் லோக்யதையாலே; நம்மாற்றுமையை யறிவிக்கவரும் என்றுபார்த்து தன்பரிகரங்களில் அவ்வண்பக்கல் போய்வையல்லாதொருவனைக் காணாமையாலே, தன்னாற்றுமை கைகொடுக்க, பிரிந்தாரிரங்கும் நெய்தல்நிலத்திலே புறப்பட்டு, கண்ணால்கண்டபடிகளைத் தூதுவிடுகிறாள்.

ஈடு

கீழ் * நோற்றநோன்புதொடங்கி நாலுப்ரயோகம் ஶரணம்புக்க விடத்திலும் தம் அபேக்ஷிதம் பெற்றிலர். பலத்தோடு அவ்யவஸிதாரியாய் அவிளம்ப்ய பலப்ரதமான வுபாயத்தை ஸ்வீகரிக்கச்செய்தேயும் அபேக்ஷிதங்கிட்டாதொழிவானென்? என்னில்;—ஆழ்வாரு

வைகல்பூங்கழிவாய் ப்ரவேஶே, உக்தத்தை வர்த்திப்பியமாணத்தோடே ஸங்கதமாக்குகைக்காக வ்ருத்தத்தையருளிச்செய்கிறார் - கீழ்நோற்றநோன்பு இத்யாதி. அபேக்ஷிதாலாபத்தை ஶங்கித்து பரிஹரிக்கிறார் - பலத்தோடு இத்யாதி. பலத்தோடவ்யவஸிதாரியாவது - ப்ரபத்தியை ப்ரயோகித்தால் பலம் மோக்ஷமாயிருக்கை. இது ஸந்திக்கு முண்டாகையாலே அத்தை வ்யாவர்த்திக்கைக்காக - அவிளம்ப்யபலப்ரதம் என்கிறார். அதாவது - பக்தியும் அலோகமாயிருக்கச்செய்தேயும், ப்ராரப்த கர்மாவஸாநத்திலே பலமாகையாலே விளம்ப்ய காரியகரம்; இது சேர்பலப்ரதமென்று

டைய ஹிதத்தோபாதி ஜகத்தினுடைய ஹிதத்துக்கும் கடவனாகையாலே ஈஶ்வரனைத் த்யா தலைக்கட்டிற்றில்லை.

உகந்தருளின நிலங்களிதோறும் புக்குத் தட்டித்திரிந்தார், அங்குத் தாம் நினைத்தபடி பரிமாறப்பெற்றிலர், நினைத்தபடி பரிமாறலான அவதாரத்தேறப்போகார், அது காலாந்தரமாகையாலே கிட்டப்பெற்றிலர்; அதுதானே தளர்த்திக்கு உடலாயிற்று. இனி நித்யஸந்நி஧ியுமுண்டாய், முகப்பழக்கத்தாலும் குறையற்று, ஶக்தி வைகல்யமுமின்றிக்கேயிருக்கிற இவ்விடமே யமையுமென்று மிண்டார்; அவ்வநுஸந்தாநந்தான் கால்நடை தந்து போகாதபடி ஈடுபடுத்திற்று, கால்நடைதருவார் காலிலே விழுந்து தூது விடுகிறார். தாம் கீழ் அநுஸந்தித்தவவதாரம் தூதற்குச் சென்று அறிவிக்கவொண்ணாதபடியா யிருந்தது; "இனி அறிவிக்கலாம்படி கிட்ட நின்றாரோகில் திருவண்வண்டூரிலே யறிவிப்போம்" என்று அங்கே ஆள் விடுகிறார். இவர்க்குப்பிறந்தது ஜ்ஞாநகர்மாநுக்ருஹீதபக்தியன்றே! ஒருவன் ப்ரஸாதமடியாக வந்ததிறே. தந்தலையிலேயும் ஒன்றுண்டாய் "அதுநிரம்பிப்பெறவேணும்" என்று இருக்கிலிறே விளம்பம் பொறுக்கலாவது, அங்ஙனம் சொல்லலாவதொன்றின்றிக்கே யிருந்தது. இவர்தாம் பரிக்ரஹித்த ஸாதநந்தான் விளம்பஸஹமுமன்றே! உபாயாந்தரங்களிற்காட்டில் கால்வாசி யேற்றமுண்டே! இங்ஙனே யடிப்பட்டவுபாயத்தை ஸ்வீகரித்தவர் ஆறியிருக்க மாட்டாரிறே; ஆகையாலே ஆற்றாமை கரைபுரண்டு ஆளிட்டு அறிவிக்கிறார். "ஶரணம்புக்கோமாகில் அத்தலையாலே பேறுமளவும் ஆறியிருப்போம்" என்று பரித்திருக்கவல்ல ப்ரக்ருதியன்றே. ப்ரஹ்மாஸ்த்ரம் வாய்மடியச்செய்

படி. ஈஶ்வராபுத்தியாவது - இவருடைய ப்ரபந்தத்தைக்கொண்டு ஜகத்தைத் திருத்தவேணுமென்கிறநினைவு.

கீழ் - ப்ராஸங்கிக ஶங்காபரிஹாரம்பண்ணி, "கோற்றகோன்புதொடங்கி" இத்யாதி வாக்யத்தை விவரியாநின்றுகொண்டு இத்திருவாய்மொழிக்கு ஸங்கதி - உகந்தருளின இத்யாதி. நட்டிந்தார் - "இப்பரீரத்தோடே யிருக்கச்செய்தே, குளிரமேகக்குதல் அணைத்தல் வினவுதல்செய்யவேணும்" என்ற திருப்பதிகளின்தோறும் தமோறித்திரிந்தா ரென்றபடி. அர்ச்சாவதாரத்திலே மீளுகைக்கு ஹேதுத்வயம் - இனி நித்யஸந்நிதியும் இத்யாதி. ஆறுவன், தாம்போகாதே தாதுவிடுவாரெங்ஙன்? என்ன - அவ்வநுஸந்தாநமானது - நித்யஸந்நிதியுமுண்டாய் என்றகொண்ட திருவண்வண்டூரில் எம்பெருமானுடைய முகப்பழக்கமும். கால்நடை தருவார் - கால்நடையுடையார். அவதாரத்திலே தாதுவிடாதே, அர்ச்சாவதாரத்திலே தாதுவிடுவாரெங்ஙன்? என்ன - நாம்கீழ் அநுஸந்தித்த இத்யாதி. நினைத்தபரிமாற்றமுண்டாயிட்டால் தாது விடவேணுமோ, "ஶோஷியானவன் செய்தபோது கண்டிருக்கிறோம்" என்று ஆறியிருக்கவொண்ணாதோ? என்ன - இவர்க்கு இத்யாதி. ஜ்ஞாநகர்மாநுக்ருஹீதபக்தியானால் ஆறியிருக்கைக்கும், பகவத்ப்ரஸாதலப்தையானால் ஆறியிருக்கவொண்ணாமைக்கும் ஹேதுவையருளிச்செய்கிறார் - தந்தலையிலே இத்யாதி வாக்யத்வயத்தாலே. உபாயாந்தரங்களிற்காட்டில் ப்ரபத்தியினுடைய ஸித்தத்வா விளம்ப்ய பல ப்ரதத்வாதியான ஏற்றத்தை அருளிச்செய்யாநின்றகொண்டு, இப்படிப்பட்டவுபாயத்தை ஸ்வீகரித்தவராகையாலும் ஆறியிருக்கமாட்டாரென்கிறார் - இவர்தாம் இத்யாதி வாக்யத்ரயத்தாலே. கால்வாசியென்றதுக்கு - "சரணௌ" என்றதிலேநோக்கு. ஆகையாலேயென்றது பக்திபரவஶராய் ஸித்தோபாயத்தை ஸ்வீகரித்தவருமாகையாலேயென்றபடி. தம்ப்ரக்ருதியாலும் ஆறியிருக்கமாட்டாரென்ற ந்ருதியஹேது - ஶரணம்புக்கோமாகில் இத்யாதி. கீழ்நாலுப்ரகாரம் ப்ரபத்திபண்ணியும் பெறாதவர் தாதுவிடுகிறதென்? என்ன - ப்ரஹ்மாஸ்த்ரம் இத்யாதி. ப்ரஹ்மாஸ்த்ரமென்கிறது -

தேயும் இவர் தூதுவிடுகிறவிது ஜ்ஞாநகார்யமோ சாபலகார்யமோ தெரிகிறதில்லை, ஶ்ருதிக ளுங்கூட "**யதோவாசோநிவர்த்தந்தே**" (யதோவசோநிவர்த்தந்தே)என்று - பேச்சுக்கு அநிலமன்று என்று மீண்ட விஷயத்தை மறுபாடுருவப் பாசுரமிட்டுச் சொல்லவல்ல இவர்க்கு "அறிவில்லை" என்னவொண்ணாது; பக்ஷிகளின் காலிலேவிழுகிற இவர்க்கு "அறிவுண்டு" என்னவுமொண்ணாது. ஆனால் என்றாவது? எதென்னில்;— ஜ்ஞாநகார்யமான சாபல மிறே இவரது. இதரவிஷயங்களில் விரக்தியிறே ஜ்ஞாநத்துக்கு ப்ரயோஜநமாகச் சொல்லு கிறது, அந்த, ஜ்ஞாநபலமாயிறே இவ்விஷயத்தில் சபால மிருப்பது. **ஜ்ஞாநவைராக்ய** ராஶியெயிறே. இனித் தூதுவிடப்பார்த்தால் ஒரு ஐந்த்ரவ்யாகரணபண்டிதனைத் தூதுவிடுகிறதுமன்றே. இத்தால் சொல்லுகிறது - பிராட்டியிலுண்டான ஏற்றமோ? என் னில்:— அதுவுமுண்டிறே - அவரோருவரையும் அநுஹவிக்கையால் வந்ததிறே அவளுக் குள்ளது,இருவரையுங்கூடவநுஹவிக்கக் கோலுகிற ஏற்றமுண்டிறே இவளுக்கு விஷயாநு குணமாயிறே கலக்கமிருப்பது. இனித்தான் அத்தலையில்நின்றும்வந்தாக்கே வார்த்தை சொல்லிவிடவேணுமென்னும் நிர்ப்பந்தமில்லையே இவளுக்கு, ராவணஶங்கையில்லாமை யாலே; ஆகையாலே கண்ணுற்கண்டாரை யடங்கலும் போகவிடுகிறாள்.

பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலேயிறே; திருவல்லவாழ், திருவண்வண்டு ரென்கிறவையெல்லாம் அந்நிலங்களிறே. தூதுவிடுவார், நாயகன்பக்கலிலே சிலகுணங்கள் கண்டிறேவிடுவது; அவையாவன- இத்தலையில் ஆர்த்தியறியுந்தனை அறிவையுமுடையனாய், அறிந்தால் வருகைக்கீடான நிர்மையுடையனாய், வருகைக் கீடான ஶக்தியுமுடையனாயிரு கையிறே; அவையெல்லாம் இவள்தூதுவிடுகிறவிஷயத்திற் குறையில்லை, அறிவில்வந்தால் "**ஜ்ஞாநஸம்பந்நம்**" (ஜ்ஞாநஸம்பந்நம்)-என்கிறபடியே- அறிவுகொடுத்த வஸிஷ்டாதிக

ஆமோஸமான ப்ரபத்தியை, ஜ்ஞாநகார்யமோ சாபலகார்யமோ தெரிகிறதில்லையென்றது - "ப்ரபத்தி பண்ணியும் வாராதவன் தூதுவிட்டாலவாரான்" என்கிறவிவேகமின்றிக்கே, மீளவும் தூதுவிடுகை யாலே ஜ்ஞாநகார்யமென்று நிஶ்சயிக்கப்போகாது; அவன்வருகைக்குடலான குணவிஷயகாதயவ ஸாயம் நெஞ்சிலேகிடக்கையாலே சாபலகார்யமென்றும் நிஶ்சயிக்கப்போகிறதில்லை யென்றபடி. உபய கார்யமுமன்றிக்கே அஜ்ஞாநகார்யமென்றாலோ? என்ன - ஶ்ருதிகளும் இத்யாதி. ஜ்ஞாநகார்யமென்ன வொண்ணாமைக்கு ஹேதுவந்தரம் - பக்ஷிகள் இத்யாதி. ஶங்காவாக்யம் - இதரவிஷயங்களில் இத் யாதி. ப்ரயோஜநமாகச்சொல்லுகிறது என்றவநந்தரம், 'சாபலம் ஜ்ஞாநகார்யமென்று சொல்லுகிற படி யெங்ஙனே' என்று கூட்டிக்கொள்வது. பரிஹாரம் - அந்தஜ்ஞாந இத்யாதி. அதாவது - விரக்தி யோபாதி பகவத்விஷயத்தில் சாபலமும் ஜ்ஞாநபலமென்றபடி. அந்தஜ்ஞாநபலமென்றது - விரக்தி ஹேதுவான ஜ்ஞாநபலமென்றபடி. வைராக்யம் ஜ்ஞாநபலமென்னுமதுக்கு ஸம்வாதம் - ஜ்ஞாநவைரா ராஶி இத்யாதி. சாபலம் ஜ்ஞாநகார்யமென்னுமதுக்கு 'ஜ்ஞாநாநுராகாதிஶயாத்" இத் யாதி என்று கண்டுகொள்வது. பக்ஷிகள்காலிலேவிழுகிறது அஜ்ஞாநகார்யமென்னுமத்தை ஸோப பத்திகமாக விவரிக்கிறார் - இனித்தூதுவிட இத்யாதி. இத்தாலென்றது - ஐந்த்ரவ்யாகரணபண்டி தனைவிடாதே, பக்ஷிகளைவிடுகிற இத்தாலென்றபடி. ஏற்றம் - ப்ரேமாதிக்யம். அதாவது - நாம் "அஜ் ஞாநமிவர்க்குண்டு" என்கைக்காகச்சொல்லுகிற இதுதன்னைக்கொண்டே பிராட்டியிலேற்றம் ஸாதிக் கப்பார்த்தால், அதுவுமுண்டென்றபடி. பிராட்டியிலேற்ற முண்டென்கைக்கு மேற்றதுவை யருளிச செய்வாராக, இவளுடையவும் அவளுடையவும் ப்ரதிபத்தியை யருளிச்செய்கிறார் - இனித்தான் அத் தலையில் இத்யாதி வாக்யத்வயத்தாலே. இவர் இருக்கிறவிடத்திலே பக்ஷிகளுண்டோ? என்ன - பிரிந்தார் இத்யாதி. அதாவது - அந்யாபதேஶலக்ஷணாதிக்குச் சேர வருளிச்செய்கிறாரென்றபடி. ஆனால் இவள் நெய்தல்நிலத்திலேயோவிருக்கிறாள், திருவண்வண்டோரிலேயன்றோ? என்ன - திருவல்லவாழ்

ளுக்கு முபகரிக்கவல்லனும்படி யிருப்பானொருவன், நீர்மையில்வந்தால் "ரிவ ஶுணாஶவி வத்ஸலம்(ரிபூணுமபிவத்ஸலம்) என்றால் "ஸஞ்ஜாதபாஷ்ப:" (ஸஞ்ஜாதபாஷ்ப:) என்னும்படியிறே அதிருப்பது, ஶக்தியில் வந்தால் "ரஞ்ஜநீயஸ்ஸுவிக்ரமெ:" (ரஞ்ஜநீயஸ்யவிக்ரமை:) என்ற - எதிரிகள்பக்கலிலேகேட்குமத்தனை. இனித்தான், நாயகனாவான் அறிவு நிறைவு ஓர்ப்பு கலைப்பிடி யுடையவனாறே. 'இப்படிப்பட்டகுணங்களை யுடையவனா யிருக்கிறவன் வாராதொழிகைக்குஹேது - அவ்விடங்களிலே ஆர்த்தர் பலருண்டாகையாலே அவர்கள் ரக்ஷணத்திலே யொருப்பட்டு இத்தலையை மறந்தானித்தனை; ரக்ஷணத்திலே யந்வயித்தால் 'அஸ்தமிதாந்யபாவம்'(அஸ்தமிதாந்யபாவம்) என்னும்படியிறே யிருப்பது, ஆனபின்பு ஆர்த்தியை அறிவிக்கவரும்" என்றுபார்த்தாள். இனி அறிவித்தால் ஆர்த்திக்கு இத்தலையில்மேற்பட்டாரின்றிக்கே யிருக்குமிறே. அறிவிக்குமிடத்தில் தான் கால்நடை தந்துபோகமாட்டாள், தன் ஶரீரபவர்க்கம் தனக்குமுன்னே நோவுபடாரிறே; இனி கால் நடைதந்துபோகவல்லார் வேணுமே; தன் பரிஸரத்தில் வர்த்திக்கிற பக்ஷிகளை "ஏகதேஶ வாஸித்வத்தால் வந்த ஸம்பந்தமே நங்கார்யம்செய்து தலைக்கட்டுகைக் குறுப்பு" என்று பார்த்து, அவற்றின் காலிலேவிழுந்து போகவிடுகிறாள்.

உருத்தோறும், இத்திருவாய்மொழி யருளிச்செய்யப் புக்கவாறே ஜீயர் அருளிச்செய்யும்வார்த்தை - "பாண்டவர்கள்கார்யத்துக்காகத் தன்னையொக்கி அவர்கள் கழுத்தைக் கட்டிக்கொண்டு கூடத் திரியச்செய்தேயும் அவர்கள்பட்ட வ்யஸநமெல்லாம் படுகிறார்காணு மிவரும்; அவர்கள்தான் ஒரு ஶர்மாஹாஸமுண்டு என்றிருக்கையாலே வ்யஸநப்படுகிறார்கள், இவர்க்கு அதுவுமின்றிக்கேயிருக்க என்செய்யப்படுகிறார்" என்று அருளிச்செய்வர்.

இத்யாதி. திருவல்லவாழை எடுத்தது - அங்குப்பேரிலே திருவண்வண்டூரிலும் புறச்சோலையாவும் போய் அங்கே விழுந்துகிடந்து துதுவிடுகிறானென்கைக்காக. ஸஞ்ஜாதபாஷ்ப: என்னும்படியிறே யத்ருப்பது - ஸஞ்ஜாதபாஷ்ப: என்ற அநுஷ்டாநபர்யந்தமாம்படியிறே யதிருப்பதென்றபடி. எதிரிகள்பக்கலிலே யென்றது - "தான்போலுமென்றெழுந்தான்" இத்யாதிப்படியே - தன்வீரமொழியப்பிறர்வீரம் ஸஹியாத ராவணன்பக்கலிலே யென்றபடி. நாயகலக்ஷணம் சொல்லுமளவில் பெருமான்விஷயமான ப்ரமாணங்களையெடுத்தது - "ஏறுசேவகனார்க்கு" என்ற தாதுக்குவிஷயம் பெருமானாகையாலே. அந்யாபதேச ஸமாதிக்குச்சேர்த்தமிழர் சொல்லுகிற நாயகலக்ஷணமும் இந்தநாயகனுக்குண்டென்கிறார் - இவர்க்கிறான் இத்யாதி. ரக்ஷணத்திலே யொருப்பட்டால் இத்தலையை மறக்கலாவதுமோ? என்ன - ரக்ஷணத்திலே இத்யாதி. அங்கும் ஆர்த்தருண்டே? என்ன - இவ்வர்த்தத்தால் இத்யாதி. தான் போகுதல் தொழியாரைப்போகவிடுதல் செய்யாமே, பசுக்களைத் துதுவிடுவானென்? என்ன - அறிவிக்குமிடத்தில் இத்யாதி. உறவல்லாதபக்ஷிகள் தன்கார்யம் செய்யக்கூடுமோ? என்ன - தன்பரிஸரத்தில் இத்யாதி. ஏகதேஶ வாஸித்வத்தால் வந்த ஸம்பந்தம் கார்யம்செய்வைக்கு உறப்பென்றபடி. ஸர்வேஶ்வரனிவரிடத்திலே அதிவ்யாமுக்தனா யிருக்கச்செயதேயும் இவர் அவிச்சிந்நமாக நோவுபடுகிறபடியை யநுஸந்தித்து ஜீயர் ஈடுபட்டருளுகிற ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் - உருத்தோறும் இத்யாதி. பாண்டவர்களோ டொப்பா ரொருவரோ இவரும்? என்ன - அவர்கள்தாம் இத்யாதி. தர்மபாஸங்களைவிட்டு அவன்கைபார்த்திருக்கச்செய்தேயும் இவர்படுகிறதசை யாரைப்போலே யிருக்கிறதென்ன - ஸாஹஸம் இத்யாதி. த்ரௌபதி யெல்லாவற்றையும் விட்டு "அவனே ரக்ஷகன்" என்றிருந்தாளோ? என்ன - ஊஹாதீதாவதி இத்யாதி. "மஹாதி" என்றதுக்கு ஊஹாவம் - ஆபாஸ இத்யாதி. அவனென்றது - ருஷியை. "ஹரி:" என்றதுக்கர்த்தம் - ஆஸ்ரிதருடைய இத்யாதி. "ஹரி:" என்றால் விரோதி நிரஸநத்வமாத்ரத்தைக் காட்டுமொழியா, தத்ஸ்வபாவத்தைக்

"ஸாஹம்கேஶாத் ஹம்ப்ராப்தா த்வயிஜீவத்யபிப்ரபோ"; (ஸாஹம்கேஶக்ரஹம்ப்ராப்தா - த்வயிஜீவத்யபிப்ரபோ)என்றவள் நிலையிறே இவளது. "மஹத்யாபதிஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோபகவாந் ஹரிஃ" (மஹத்யாபதிஸம்ப்ராப்தேஸ்மர்த்தவ்யோபகவாந் ஹரிஃ)-ஆபாஸரக்ஷகரான பர்த்தாக்களாலும் தன்னாலும் நோக்கிக்கொள்ள வொண்ணாதபடி அவ்வருகுபட்டவாபத்திறே. "஭கவாந்" (பகவாந்) - பூர்ணரன்றோ! அபூர்ணர் கார்யம் செய்யவல்லாரென்றுகாணும் அவன் நினைவு. "ஹரிஃ" (ஹரிஃ)-ஆஶ்ரிதருடைய விரோதி நிரஸநமே ஸ்வபாவமாகவுடையவனைப் பற்றினாள். ஜ்ஞாநாதிகுணங்களால் சொன்ன பூர்த்தியிலே ஶக்தியுமுண்டாயிருக்கச் செய்தே "ஹரிஃ" என்றுவிசேஷிக்கவேண்டிற்று - அல்லாதார்க்கும் இக்குணங்கள் ஓரோருகால் உண்டாகையாலே; இவனுக்கு அங்ஙனன்று, இது ஸ்வபாவம் என்கைக்காக வேடுத்தது.

முதற்பாட்டு.

வைகல்பூங்கழிவாய் வந்துமேயும்குருகினங்காள்!
செய்கோள்சேர்நெல்லையர் திருவண்வண்டூறையும்
கைகோள்சக்கரத்து என்கனிவாய்ப்பெருமானைக்கண்டு
கைகள்கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன் காதன்மையே.

அ.—தன்னுடைய நிரவதிக ஸௌந்தர்யத்தாலே என்னுடைய ஸர்வகரணங்களையும் அபஹரித்துப்போய், திருவண்வண்டூரிலுள்ள நிரவதிகைச்வர்யத்தாலே என்னை மறந்திருக்கிற எம்பெருமானைக்கண்டு எனக்காக அவனைக் கைகள்கூப்பிச்சொல்லீர் வினையாட்டியேன் காதன்மையென்று சிலகுருகுகளைநோக்கி யருளிச்செய்கிறாள்.

காட்டுமோ? என்ன - ஜ்ஞாநாதி இத்யாதி. "நமோவிஷ்ணவே ஸுரநாதாய" இத்யாதி ஸ்தோத்ரே. "யஶஸ்வீஜ்ஞாநஸம்பந்ந ஶுசிர்வஶ்யஸமாதிமாந்" இத்யாதி ஸ்ரீஸங்க்ஷேபே. "தேவகுலே ஜ்ஞாநஶரீரிணா ஶேஷேண ஶேஷவத்யா ஸுகுணாஃ கோயஶிஃ கரணாஃ கோரணாஃ" இத்யயோத்யாகாண்டே லக்ஷ்மணஃ. "ஸர்வே ராகவயஶிஃ ஜ்ஞாநிபி ஸுகுணாஃ ஶேஷவத்ஸு" இதி யுத்தகாண்டே வைநதேயஃ. "ஏதெ வயோ தத்ஸ்ய ராஜ்ஞ்ஶ்ச வீரஶ்ரீ ஶுக்ரவாவபோவா ஜீவ ஸ்ய ஜீவஸ்ய । ஸஜ்ஞாதவாஷ்ஷ்ஃ பரவீ ரஹஜ்ஞாராஶோ ஹ்ரீ தஶ்விஶாவஹ்ரிவ" இதி கிஷ்கிந்தாகாண்டே. "ஶத்ரோஃ ப்ரவ்ருத்தவீரஸ்ய ராஜ்ஞ்ஶ்ச நீயஸ்ய விக்ரமெஃ । ஶ்ரூயதாம் யுஜ்யதாம் ஶ்ரீமந் காலஸ்ய ஹி ஶுபாஶுபே" இதி யுத்தகாண்டே ஸுதம்ப்ரதி ராவணஃ. "யதிஷ்யயஸி தத்ஷிப்ரம் தாநுஹாவஶாநநுஶிஷ்ய தாவ்ரவநாதிவாஹ்ரிக । ஸ்தஜ்ஞியஸ்ய தஶ்ரீ ஸ்ய ஸ்ரீயஶ்ஶாந்த ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

ஓ.—முதற்பாட்டில், இப்பிராட்டி சிலகுருகுகளைநோக்கி, திருவண்வண்டூரிலேசென்று என்னுடையதசையை எம்பெருமானுக்கு அறிவியுங்கோளென்கிறாள்.

[வைகல் என்றுதொடங்கி] - நாள்தோறும் அழகிய கழியிலேவந்து மேய்கிற குருகினங்காள், இத்தால் - தன்னுடைய அபேக்ஷிதங்களைச் செய்துமுடிக்கவேண்டும்படி தன்னோடு அவற்றுக்குள்ள கண்ணழகையே சொல்லிற்று. [செய்கொள்செந்நெல் என்று தொடங்கி] - ஓரோமுதலே செய்யை விழுங்கும்படியான செந்நெல் உயர்ந்த திருவண்வண்டூரிலே உறைவதுசெய்து கையுந்திருவாழியுமானவழகையும் முறுவலையுங்காட்டி என்னைத்தோற்பித்திருக்கிறவனைக் கண்டு, [கைகள் என்றுதொடங்கி] - "இங்குநின்றும் போனேம்" என்று வேண்டப்பாடடியாதே உசிதவிநயங்களைப்பண்ணி, பிரிந்தால் தன்னைப்போலேயன்றிக்கே தரியாதபடியான பாபத்தைப்பண்ணின வென்காதன்மை சொல்லுங்கோள். கைகள்கூப்புகை - சிறகுவிரிக்கை, காதன்மை - ஆசைப்பாடு.

ப.—முதற்பாட்டில், "நம்மைத் தன்னழகைக்காட்டி அநந்யார்ஹமாக்கிக் கொண்ட ஸோஷியானவன் திருவண்வண்டூரில் ஸம்ருத்தியாலே அந்யபரனாயிருக்கிறானாகக்கூடும்" என்றுநினைத்து, ஸந்தேஹிதமான சிலகுருகுகளைத் தூதாகப்போகவிடுகிறாள்.

வைகல் - என்றுமொக்க, பூ-அழகிய, கழிவாய் - கழியிலே, வந்து-என்கண்முகப்பேவந்து, மேயும் - மேய்கிற, குருகினங்காள் - குருகினங்காள்! செய்-செய்யை, கொள் - விளாக்கொலைகொள்ளுகிற, செந்நெல் - செந்நெலானது, உயர்-மிகவும்வளருகிற, திருவண்வண்டூர் - திருவண்வண்டூரிலே, உறையும் - நித்யவாஸம்பண்ணுகிற்பானாய், (ஆழிதர்க்கநுபாவ்யமாம்படி), கை-கையிலே, கொள் - இடங்கொண்ட, சக்கரம்-திருவாழியையுடையனாய், என் - அம்வைகாலை யென்னை வரிகிறான் எனக்கு போக்யமாக்கித்தந்த, கனி-கனிபோன்ற, வாய் - அதரபோஜனத்தையுடையனாய், பெருமானை-(இப்படி என்னைஅநந்யார்ஹமாக்கிக்கொண்ட) பரமபோஷியானவனை, கண்டு-கண்டு, கைகள் கூப்பி - அவனுடையபோஷித்வத்துக்குத் தகுதியாம்படி சேஷத்வாநுரூபவ்ருத்தியைப் பண்ணி, வினையாட்டியேன் - விஶ்லேஷஹேதுவான பாபத்தையுடையேனான என்னுடைய, காதன்மை - அபிநிவேஶாதிசயத்தை, சொல்லீர் - சொல்லுங்கோள். குருகுகை கூப்புதல் - அநுவ்ருத்திரூபமானசிறகசைத்தல். இத்தால் - ஸுகருடைய ஸமானதேசவர்த்தித்வத்தால்வந்த ஸந்நிதியும், உத்தேஶ்யவிஷயாநுவ்ருத்தியும் தோற்றுகிறது.

இ.—முதற்பாட்டில், குருகுகளைநோக்கி, அவன்பக்கலிலேசென்று என்னுடையதசையை யறிவியுங்கோ ளென்கிறாள்.

[வைகல்] - நாள்தோறும் - நாயகவ்யாவ்ருத்தி. காதாசித்கமாகக்கலந்து போகட்டுப்போனவனைப்போலன்றிறே நாள்தோறும்முகங்காட்டுகிற நீங்கள். [பூங்கழிவாய்]-தர்ஶநீயமான கழியென்றுதல், பூத்தகழியென்றுதல். [கழிவாய்]-கழியிடத்து, கழியிலே. பிரிந்தவன் ஸாயகனாகையன்றியே, இருந்ததேசமும் ஸாயகமாகை. இருவர் கூடவநுபவிக்குமிடம் தனித்தால் ம்ருத்யுஸமமாயிறே இருப்பது. [வந்து] - வழிபரிக்கும் தேஶத்திலேவந்து உதவினாற்போலேயிறே நீங்கள்ஸந்நிதிபண்ணினபடி. "ஸ்ரீ ரீரொஹநாஸிதாஸஹ:" ஆளிட்டு அறிவிக்கவேண்டும்தசையிலே நீங்களேவந்து. [வந்துமேயும்] - நான் அபேக்ஷியாதிருக்க, "ஸ்ரீரொஹநாஸ்ரிதா" என்றுமாபோலேயிறே நீங்கள்செய்தது. என்காரியம்செய்தபின், இனி உங்கள்காரியம் செய்ய

வேண்டாவோ, இவள்கார்யம் இங்கேவந்து மேய்கை. [மேயும்குருகினங்காள்] - உப வாஸக்ருஶையாயிருக்கிற என்கார்யம் புஷ்கலமாயிருக்கி, வுங்களுக்குச் செய்யவேண்டாவோ. இரவு உண்டார்க்கு உண்ணுதார்கார்யம் செய்கை பரமன்றோ. [இனங்காள்] - இருவராயிருப்பார்க்குத் தனியர் கார்யம் செய்யவேண்டாவோ. பெருமாள் தனிமையிலே மஹாராஜரும் பரிகரமும் தோற்றினாற்போலேயாயிற்று தனிமையிலே இவைவந்து முகங்காட்டினபடி. [செய்கொள் இத்யாதி] - வாராமல் கால்தாழப்பண்ணிற்று அவ்வூரில் போக்யதையாயிற்று, அவன்குற்றமன்று. "யோஸ்ராம்ப்ரூவ்யுமொவிநு:". [செய்கொள் செந்நெல்] - ஒருமுதலே ஒருசெய்யைக்கொள்ளும். [உயர்] - செய்க்கு வரம்பென்று ஒருமர்யாதையுண்டு, அதுவுமில்லையிறே ஆகாஶத்துக்கு, உயராநிற்குமித்தனை. [திருவண்வண்டூர்] - பரமபதவ்யாவ்ருத்தி. [உறையும்] - அவதாரவ்யாவ்ருத்தி. [கைகொள் சக்கரம்] - கைக்கடங்கலும்தானேயாஶரணமாயிருக்குமென்னுதல், கையிலேகொண்ட திருவாழியென்னுதல். [என்கனிவாய்] - முறுவலையெனக்கு முற்றூட்டாக்கினவன். [பெருமான்] - திருவயிரத்தில்பழுப்புக்கும், கையுந்திருவாழியுமான ஶோர்த்திக்குமாயிற்றிவளெழுதிக்கொடுத்தது. ராஜபுத்ரர்கள்கையிலே இடைச்செறி கடைச்செறிக்குத்தோற்றாரைப்போலே. [கண்டு] - காட்சியிலெனக்கு முற்பாடராகப் பெறுகின்றிலிகோளிறே. இவளைப்பற்றினார்க் கிவளிலுமேற்ற முண்டிறே. "ஏத்தியிருப்பாரை வெல்லுமே" "வஸுஷ்வ ஶுபாசிணிஶ்ரீசாநு". [கைகள்கூப்பி] - "அவனுக்கு மறுக்கவொண்ணாத அந்ஜலியைப்பண்ணுங்கோள், பலத்தோடுவ்யபிசரியாத செயலைச்செய்யுங்கோள்" என்று பூர்வர்கள் நிர்வஹிப்பர்கள்; பத்தாம்பாட்டிலேயாயிற்றின்னுப்பு ப்ரஸங்கிப்பது. பட்டர் பத்துப்பாட்டிலுமின்னுப்புத்தோற்ற நிர்வஹித்தருளுவர். "முன்புபோலே" என்றிருந்தே பெரிய முதலிகள், கும்பிடுங்கோள். கும்பிட்டவாறே முகம்பார்ப்பர், பின்னை முகம் மாறுவதற்கு முன்னே என்கலைமனையச் சொல்லுங்கோள். [கைகள்கூப்பி] - கைகள் கூப்புகையாவது - சிறகுகளைவிரிக்கை. [சொல்லீர்] - ஒருமஹாபாரதத்துக்குப்போருமிறே. [வினையாட்டியேன் காதன்மை-சொல்லீர்] - பிரிந்தாலவனைப்போலன்றியேயுரிக்கமாட்டாதபடி பாபம்பண்ணினவென்காதன்மை சொல்லீர். அவன் "வேண்டேன்" என்றாலும் விடமாட்டாதபடியான பாபம். வந்த ஆளின்கையிலே வார்த்தைசொல்லிவிடுகையன்றிக்கே, நிர்யக்ருஶளைக்குறித்து தூதுவிடவேண்டும்படி பாபத்தைப் பண்ணினேன். காதன்மையென்றவாறே - தம்மளவென்றிராமே, என்னுடையகாதன்மை. வன்னெஞ்சர் காதல்போலன்றிறே மெல்லியலார்காதல். மெல்லியலார்காதலாவல்லாதவென் காதன்மை சொல்லீர். சொல்லின் தாழ்வே, வரவுதப்பாதென் றிருக்கிறாள்.

ஏடு—முதற்பாட்டு. சிலகுருகுகளைநோக்கி, திருவண்வண்டூரிலேசென்றேம்பெருமானுக் கென்தசையை யறிவியுங்கோ ளென்கிறாள்.

[வைகல்]-உங்கள்தனை நீர்மையுடையார் சிலரோடே கலக்கப் பெறுமையிறே எனக்கிப்பிரிவு விளைந்தது; அவ்விழவெல்லாம் உங்களைக்கொண்டு தீரலாம்படியாயன்றோ

முதற்பாட்டு, வைகல் இத்யாதி. "குருகினங்காள், திருவண்வண்டூருறையும் - பெருமானைக்கண்டு - சொல்லீர்வினையாட்டியேன் காதன்மை" என்கிறபதங்களைக் கடாகஶித்தவதாரிகை - சில இத்யாதி.

"வந்து" என்றதைக்கடாகஶித்துஹாவம் - உங்கள்தனை இத்யாதி. "வைகல் - வந்து" என்றதுக்குஹாவம் - ஒருகால் இத்யாதி. காடோறும் பூங்கழியிடத்துவந்து. அதாவது - தானிருந்த

வேனக்கிருக்கிறது. ஒருகால் கலந்து போகட்டுப்போனவவனைப் போலன்றிக்கே நீங்களேப் போதும் இங்கே வர்த்திக்கப்பெற்றேனே! உங்கள் நீர்மையில் ஏற்றமிருந்தபடியென். [வைகல்] - நாடோறும். [பூங்கழிவாய்] - அழகியகழியிடத்து. பூத்த கழியிடத்தென்னவுமாம். ரக்ஷகனானவன் கைவிடுவது, வாயுகவர்க்கங்களானவை மிகைப்பதான இவ்வளவிலே நீங்கள் முகங்காட்டுவதே. அழகியசோலை, குளிர்ந்த தென்றல், இனியபரிமளந்தொடக்கமான இவையுமுண்டிறே. பிரிந்தவனே வாயுகனுகையன்றிக்கே, இருந்த தேசமும் வாயுகமாகை. [வந்து] - * "வம்வாதீரெ ஹநூஸதா ஸஹ்ருத:" போலே, ஆளிட்டறிவிக்குங் தசையிலே நீங்களே வந்து. வழிபறியுண்டவிடத்தே தாய்முகங் காட்டினாற்போலே காணும் பிராட்டியைப்பிரிந்து நோவுபடுகிறசமயத்திலே திருவடி வந்து முகங்காட்டினபடி. (ஹநுமதா) தளர்ந்து "ஆவாரார்துணை" என்று தமோறுகிறசமயத்திலே, வெற்றித்தழும்புகொண்ட ஆண்பிள்ளையோடே கூடப்பெற்ற தென்கிறது. (வாநரேண) ஸந்யாஸிவேஷங்கொண்டு வந்து பிரிவைவிளைத்து நலிவபண்ணுமவனைப்போலன்றிக்கே, சேவ்வியாதேநுவனேடே சோப்பெறுவதே (ஹ) நுவிகொண்டாடுகிறார். போகத்துக்குச் சேர்த்துக்கொள்ளுகிறோம், ஸத்தைதோக்குவாரைப்பெற்றோமிறே! என்று ஹ்ருஷ்டனாகிறான். [வந்து] - அவனைப்போலே தூதர்க்கும் ஆளிட்டழைக்க வேண்டாதொழியப் பெற்றோமே ஆளிட்டழைக்க வேண்டுகிறதிறே யவனை. ஒருகலத்திலேயோக்கவுண்டு ஒரு படுக்கையிலேகிடந்து தூதுபோவாரைப்போலேகாணும் இவற்றின்படி. [மேயும்]- ஸுரஹை ஸாகூகுஶஶ்ரிதது" (க்ருஹேபுக்தமபங்கிதம்) என்றாப்படியிருக்கை [குருகினங்காள்] - "ஶஶி-தாரிகலை-தூரணி" (தர்ஶிதாரிகளத்ராணி) என்கிறபடியேஇதோருசேர்த்தியிருக்கபடியென். [வந்துமேயும்] - திருவாய்ப்பாடியிலே ஸார்யாபுத்ராதிகளோடேசென்று "சோறிடும்" என்று ஸுஹ்ருத்தாரைப்போலேகாணும் இவற்றின்படி. குருகினங்காள் - கைகள்கூப்பிச்சொல்லீரென்று க்ரியை. பண்டை முதலிகள், "பத்தாம்

விடத்தே வர்த்தித்துக்கொண்டு புறப்பட்ட குருகினங்களென்று பாவார்த்தம். "புத்தகழியிடத்து" என்றதுக்கு ஸாவம்-ரக்ஷகனானவன் இத்யாதி. வாயுகவர்க்கங்களாவனவென்ன, வழியிலோலை இத்யாதி. இத்தால் ஹிதம் - பிரிவிலே இத்யாதி. வாயுகவர்க்கங்கள் மிகைப்பதான இவ்வளவிலே முகங்காட்டினதுக்கு த்ருஷ்டாந்தம் - வாவா இத்யாதி. "வம்வாதீரெ ஹநூஸதா ஸஹ்ருதொவாநரேண ஹ" இதி ஸுந்தரே. "வம்வாதீரெ ஸஹ்ருத:" என்றதுக்கு ஸாவம்- வழிபறி இத்யாதி வெற்றித்தழும்புகொண்டவென்றது - "ஹநூஸதா" என்றத்தைப்பற்ற. கொண்டாடுகிறதுக்கு ஹேதுவேதென்ன - போகந்துக்த இத்யாதி "ஆளிட்டறிவிக்கவேண்டும் தசையிலே" இத்யாதிவாக்யவிவரணம் - அவனைப்போலே இத்யாதி. அவனைப்போலேயென்றது - நாயகனையும் உங்களையிட்டழைக்குமாபோலே யென்றபடி. தூதர்க்குமென்றது - தூதரானவுங்களுக்குமென்றபடி. அன்றிக்கே, திருவடியை இளையபெருமாளையிட்டுப் பெருமாளழைப்பித்தாற் போலே என்றுதல். "மேயும்" என்றத்தைக்கடாக்ஷித்துஸாவம் - ஒருகலத்திலே இத்யாதி. அதாவது - "உஹ்ய வாநரவிஶ்வாஸ:" என்கிறபடியே - அர்ஜுநனும் க்ருஷ்ணனும் ஒருகலத்திலேபுஜித்து ஒரு படுக்கையிலேகிடந்து க்ருஷ்ணன் தூதுபோனாற்போலேயென்றபடி. "கயிதாரிரஹஸ்யாநிஶ்ருணொஹ்ருதிஶாஶ்ரிதது । ஶஶி-தாரிகலை-தூரணிஸஸஹாரம்கிஶதுவாரது" இதி மஹாஹாரதே க்ருஷ்ணம்ப்ரதிகர்ணது. "வந்து, மேயும், இனங்காள்" என்ற பதச்சேர்த்திக்குஸாவம் -

பாட்டிலே - ப்ரணயரோஷந்தோற்றச்சொல்லுகிறாள் " என்று நிர்வஹிப்பர்கள். "பாட்டுத்தோறும் - கிலாந்தோற்றச்சொல்லுகிறாள் " என்று பட்டரருளிச்செய்யும்படி. [வந்து மேயும்குருகினங்காள் - கைகள்கூப்பிச்சொல்லீர்] - என்றும் பிறர்க்குபகரிக்கவே தேடித் திரியுமித்தனையோ, உங்கள்கார்யமும் செய்யவேண்டாவோ. †(இவள்கார்யமிங்கேவந்து மேய்கை. இவற்றின்கார்யமங்கே சென்றுசொல்லுகை.) * உபவாசக்ருசையாயிருக்கிற என்கார்யம் புஷ்கலராயிருக்கிற உங்களுக்குச் செய்யவேண்டாவோ. [செய்கொள்செந்நெல்] - இத்தலையை நினைக்கலாம்படியோ அங்குத்தை ஹோக்யதையிருக்கிறபடி. * "யோராம்பூவ்யுமொவிநு: கயமெமொகுலுஷேவ்யுதி | நமாவஸ்கலுா லுாவயோஹெஞாதெ்ரணவாஸ்யுதி" இறே யவன்படி. அத்தேசத்தில் ஹோக்யதையிலே அகப்பட்டிருக்கிறவன் நம்மைநினைக்கப்புகாரின்றானே. [செய்கொள் செந்நெல்] - ஒரு முதலைசெய்யை விழுங்கும்படியாயிருக்கை. [உயர்] - அங்குவரம்பில்லாமையாலே முடிய உயராநிற்குமத்தனை. " சுஹாஸ ஸுடு " (அஹமங்நம்) என்பாரளவும் செல்லத்தானுயராநிற்குமத்தனை. [திருவண்வண்டுறையும்] - "செய்துபோனமாயங்களும்" என்று கூப்பிடவேண்டாதபடியாயிருக்கை. அதாவது - அவதாரவ்யாவ்ருத்தி. [கைகொள்சக்கரத்து] - செந்நெலின்படியாயிருக்கை. கைக்கெல்லாம் தானே ஆஸரணமாயிருக்கை. [என்

ப்ர:—(வைகலித்யாதி)—ஸம்க்ஷேபெ, " ஶவைய்ரூவ்ரமிஜிதஸ்ஸுஶ்ரா ஶொடஶராயாதஜ: | வஶ்ரா தீரொஹநாஶிதாஸுஜெதாவாநரொணஹாரு அ॥"

(செய்கொள்செந்நெல்)—விஷுவாராணெவெஞ்ஜெ [கஅ] தத: ஶ்ரூஹாதெவிஶெராரிக்ஷுஷாஶஹாஶ்ரு: | கு ஶ்ரொணெ ஸஹாமதுராஶ்ரு)தள ஶ்யாராம்பாரீ॥கங॥ ஶ்ரூஷாஹொவீஜநஸ்வாஸ்ரு ஶ்ரு ஶ்ரு ஶ

போய் [இத்யாதி. விவரணம் - ஸுபுருஷர்க [இத்யாதி விவரணம் - விஶேஷஜ்ஞர் [இத்யாதி. கீழே "விண்" என்று - [illegible] [illegible] [illegible] அர்த்தாந்தரம் - இவ்விடையாட்டம் இத்யாதி. இடையாட்டம் - வ்யவஹாரம். அறிவிலுமுக் குறைவில்லா அகல்ஞாலமென்றது - "கொஞ்சு ஞ்ஞானமில்லை" என்று, குறைவு படவும் அநுபபிக்கவும் அறியாத அகல்ஞாலமென்றபடி. 'ஏற்றுகிறோம்கைமேலே' என்றது - சரி; ப்ரத்யக்ஷமாக இகழக்கிறோமென்று சரிவுக்கு அர்த்தம்; கையில் திருவாழியைக்கொண்டு அறிவிப்பிக்கிறோம் என்று ஸ்வாபிப்பாயர்த்தம். குற்றந்தன்னையே துணைமாகக் கொள்ளுவாரைக் கேளென்றது - தோஷத்தை ஸ்வரூபமாக அறிந்திருக்கச்செய்தேயும், நாட்டார் "தோஷம்" என்று நினைவாகிற, "துணை" என்றுசொல்லுமாபோல் மறைக்கும் அவர்களைக் கேளென்றபடி. விவரணம் - [illegible] இத்யாதி. அதாவது - உன் க்ருத்ரிமத்துக்கு எல்லையாம் படி பண்ணுவார்க்கன்றோ உன் தோஷத்தை மறைக்கும் ப்ரகாரம் தெரிவதென்றபடி. பெருகிலைகிற்பார் - ஸஹாயர்பண்ணுவார். பெருகிலை கிற்குப்பாடலையைக் காட்டுகிறார் - [illegible] இத்யாதி. கையிலேவந்திருப்பதென்றது - [illegible] கையிலேவந்திருப்ப தென்றபடி. * திண்டிறல் கர்த்தம் - அப்பொய்யில் இத்யாதி. பேதிக்கவொண்ணாமைக்கு [illegible] - ஸ்வதந்த்ரன் இத்யாதி. இவனுக்கதில்லையிறே என்றது - பரதந்த்ரனுகையாலே பேதிக்கப்போகாதென்றபடி. நடத்துகையாவது - பெருகிலைகிற்கை. அர்த்தாந்தரம் - அதாவது நிறங்கொடுக்கை இத்யாதி. அதாவதென்றது - நிறுகையாவதென்றபடி. 'காரியத்தைப் பிறப்பித்து' என்றவிடத்திலே - 'ஸ்ரீமஹிஷிவைஶாப' இத்யாதி யாகுமாகிறபடி. இப்படிக்கென்றது - இவ்வாகாரங்களுக்கென்றபடி. திண்ணிதான திருவாழியாகிற தேஜஸ்ஸாலான அலாதாரணாயுதத்தை யுடையவனே! என்று ஸம்தாயர்த்தம். கல்லதொரு தமிந்த வென்றது - க்ருத்ரிமங்களைப் பண்ணாதே அங்கீகரப் போ என்கையாதல், க்ருத்ரிமங்களைப்பண்ணினேனென்று சொல்லவேண்டா என்கையாதல். 'மறுமாற்றமில்லை'

மில்லை; †(இவனுக்குப் போக்கடியாவது - "நான் ஸ்வதந்த்ரன்" என்றுசொல்லுகையிறே.) இதெல்லாங் கிடக்கச்செய்தே பேசாதேபுகா "இதோரு பேச்சின்இனிமை யிருந்தபடி யென்?" என்றான். [மழறுதேன்மொழியார்கள்] - பாலியேன், நீ யாருடைய பேச்சை யாருடைய பேச்சென்று ப்ரமிக்கிறாய்! மழறுதேன் - மழலைத்தேன். கலங்கின தேன்போலே இனியபேச்சுக்களையுடையராயிருக்கை. இவன் ஸங்கிதிமாறாமையாலே கலக்கமும் மாறாதே யிருக்குமே. "அவையெல்லாம் இங்கேயிறே" என்றுமே அவன். [மொழியார்கள்] - எத்தனைபேர் உனக்கு? [நின்னருள்சூடுவார்] - ஆரேனும் பேச்சைக்கேட்டுத் தங்கள் பேச்சென்று ப்ரமிக்கும்படி பண்ணவல்லவர்கள். ஒருக்தியாலே 'ஷ்ரிதாஷ்ரிதவஷரெஹ:' (ஸ்திதோஸ்மிகதஸந்தேஹ:) என்னும்படி வார்த்தைசொல்லவல்ல உன்னை ஒருக்தியாலே கலங்கப்பண்ணவல்லவர்கள். "அதுக்கென்?" என்றான்; "அவர்களெங்களைப் போலல்ல காண்; நீ ப்ரயோஜந நிரபேக்ஷமாக இங்கே நிற்கச் செய்தேயும், இத்தை அறிந்துவைத்தும் க்ஷணமாத்ரவிஶ்லேஷம் பொறுக்கமாட்டாமையாலே அவர்கள் மநஸ்ஸை வாடுங்காண்! ஆஶ்ரயத்தை யிழந்த தளிர்போலேகாண் அவர்கள் நெஞ்சு வாடும்படி. 'கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள் தங்குமேல் என்னுயிர் தங்கும்' என்றிருக்குமவர்களிறே அவர்கள்; அவ்வளவில் நீ உதவப்பெறாமையாலே போர நோவுபடுவார்கள்; அதுகண்டால், நீ பொறுக்கவல்லையோ?" என்றுசொல்லிப் பேசாதேயிருந்தாள். "உங்கள்பேச்சிலும் எனக்கு யாரகம் இவற்றின்பேச்சன்றோ!" என்று அவர்களைவிடாப் பூவையையும் கிளியையும் கொண்டாடப் புக்கான்; சிலரை ஆதரிக்கையாவது - அவர்களுடைமையை ஆதரிக்கை யிறே. அவற்றை ஆதரித்து வார்த்தைகொள்ளப் புக்கவாறே, வாராய்! அவைதான் நீ ஆரினவென்றிருக்கிறாய்? அவை நீ நினைக்கிறவர்களதன்று காண்! [எம்குழறுபூவையோடும் கிளியோடும் குழகேலே] - அவை உனக்குவார்த்தைசொல்லுகிறனவல்லகாண்! அவற்றுக்குஅது ஸ்வபாவங்காண்! [குழகேலே]- நாங்கள் அந்யமாக வார்த்தை சொல்லச்செய்தேயும் கண்டாயே நீ அந்யகதித்வந்தோற்ற வார்த்தைசொல்லுகிறபடி; அப்படியே இவற்

என்றது - திருவாழியாலே ஆதித்யனை மறைக்கையாலே, "ஸருத்ரிமத்தைப்பண்ணவில்லை" என்று சொல்லலாவதொரு ப்ரத்யுத்தரமில்லையென்றபடி. 'போக்கடியும் இல்லை' யென்றது - தான் ஸத்ய வாதி என்னுமதுக்கு ப்ரத்யுத்தரமில்லாதபின்பு, இவர்களோடிட்டுமேகொண்டு வார்த்தைசொல்லுகைக்கு அவகாசம் இல்லையென்றபடி. 'இதெல்லாங் கிடக்கச்செய்தே' என்றது - 'உணர்த்துவன்காண்" என்றால், "அமைதது" என்றுகேட்குதல், ப்ரத்யுத்தரம்சொல்லுதல் செய்கையாகிற இதெல்லாங் கிடக்கச்செய்தே என்றபடி. பேசாதேபுகா - பேசாதேயிருந்து. பழுலைத்தேன் - இனிமைதேன். அர்த்தாந்தரம் - கலங்கின இத்யாதி. கலங்குகைக்கு ஹேதுவென்ன - இவன்ஸந்நிதி இத்யாதி. "மொழியார்கள்" என்றதுக்கு அவதாரிகை - அவையெல்லாம் இத்யாதி. "மழறுதேன்" என்றதினர்த்தத்வயத்துக்கும்சேர ஸாவம் - ஆரேனும்பேச்சை இத்யாதி வாக்யத்வயமும் என்னுதல்; கீழ்வாக்யத்துக்குஹேதுத்வம் - ஒருக்தியாலே இத்யாதி என்னுதல். ஒருக்தியாலே - "ஶாஸ்ரஹ:" என்கிற உக்தியாலே இத்யர்த்த:. 'எங்களைப்போலல்லகாண்' என்றது - நெடுநாள்பிரிந்து நோவுபட்டு, ஜீவிக்கவும் மாட்டாதே முடியவும்மாட்டாதே யாரித்திருக்கிற எங்களைப்போலல்லகாண் என்றபடி. விவரணம் - நீ ப்ரயோஜந இத்யாதி. "வாடிநிற்க" என்றதுக்குஸாவம் - ஆஶ்ரயத்தை இத்யாதி. க்ஷணமாத்ரம் விஶ்லேஷம்பொறுக்கமாட்டாமல் வாடுகைக்கடியேதென்ன - கொங்கைமேல் இத்யாதி. நாச்சியார்திருமொழி. பாகரஸ்ய ஸ்பஷ்டோர்த்த:. இவர்களைவிட்டுப் பூவைகிளிகளையாதரிக்கிறது என்னென்ன - சிலரை இத்யாதி. "எம்" என்றதுக்குஸாவம் - வாராய் இத்யாதி. "குழறுபூவை" என்றதுக்குஸாவம் - அவை இத்யாதி. ஸ்வபாவமானபடி எப்படியென்ன - நாங்கள்அந்யமாக இத்

றின்பேச்சும் அந்யார்த்தங்காண் ! ([குழறுபூவை] - அநக்ஷரஸ்ரஸமாகப்பேசுகிற பூவை. குழகுதல் - லீலாரஸங் கொண்டாடுகை.) (ரு)

ஆறாம் பாட்டு.

குழகினங்கள் குழமணன்கொண்டு கோயின்மைசெய்துகன்மமொன்றில்லை
பழகியாமிருப்போம் பரமேயித்திருவருள்கள் ?
அழகியார் இவ்வுலகுமூன்றுக்கும் தேவிமை தகுவார் பலருளர்
கழகமேறேல் நம்பீ! உனக்கும் இளைதேகண்டமே.

ஆ.—(குழகி.)-முற்பட இவளையணுகக்கூசியிருந்த எம்பெருமான், இப்படி இவள் தன்னைக்குறித்துச் சிலவார்த்தைகளைச் சொன்னவாறே, அதுவேபற்றாகநிர்ப்பயனாய்ச் சென்றணுகி, இவள்பாடேயிருந்த குழமணனை எடுத்தருள ; "குழகியெங்கள் குழமணன்கொண்டு அடிக்கழிவு செய்தால் உனக்கென்ன ப்ரயோஜநமுண்டு ?" என்று இவள்சொல்ல, "என்னுடைய ஆத்மதாரணார்த்தமாக எடுத்தேன்" என்று அவனருளிச்செய்ய, "நாங்கள் இப்பொய்களுக்குப் பழையோமல்லோமோ ! உன்னுடைய இந்த நிரவதிகமான அபிநிவேசத்துக்கு நாங்கள் விஷயமாகப்போதுவோமோ ?" என்று இவள் சொல்ல, "நீ யல்லது மற்றெனக்கு ஸ்ப்ருஹணீயவிஷயமுண்டோ ?" என்று அவனருளிச்செய்ய, "த்ரைலோக்யத்திலுள்ளாரிலும் அழகியார் உனக்கே தேவிமைக்குறுப்பாயிருப்பார் எத்தனைபேருளர் ! அதுநிற்க; நீ முந்தற எங்கள்பரிஷத்திலே வந்தேறாதே கொள்: இது உனக்கும் இளையதான கன்மம்" என்கிறாள்.

ஒ.—[குழகி] - முந்தற இப்பிராட்டியும் தோழிமாரும் அநஹிலவரீயைகளாயிருக்கையாலே அணுகக் கூசியிருந்த எம்பெருமான், தன்முகமுத்ரையாலும் ஸஞ்ஞையாய் ஹாவமர்ப்பமான பேச்சுக்களாலும் அலங்கி மருந்திடுபட்டாரைப்போலே இவர்கள் நிஷேதிக்கமாட்டாதேயிருக்க அதுவேபற்றாகக்கொண்டு நிர்ப்பயனாய்ச்சென்று அணுகி இவள்பாடேஇருந்த குழமணனை எடுத்தருள், குழகி "எங்கள் குழமணன் கொண்டு அடிக்கழிவுசெய்தால் உனக்கு என்ன ப்ரயோஜநமுண்டு?" என்ன, அவனும் "எனக்கு இனி இதுவேப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநமுண்டோ?" என்ன, "நாங்கள் இப்பொய்களுக்குப் பழையோம் அல்லோமோ? உன்னுடைய நிரவதிகமான அதிநிவேஶத்து நாங்கள் விஷயமாகப் போருவதோமோ?" என்று பிராட்டி அருளிச்செய்ய, "நீயல்லது எனக்கு ஸ்ப்ருஹணீயவிஷயமுண்டோ?" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, "அழகியார் இவ்வுலகு மூன்றுக்கும் தேவிமைதகுவார் பலர்உளர்: அங்கே போ" என்று இவர்கள் சொல்ல, "அங்கே போவோம்" என்று இவர்களிருந்தகோஷ்டியில் நடுவேவந்துபுகுரப்புக, "முதலிகளாயிருக்கிற நமக்குச் சிறுப்பெண்கள்சமூகத்திலே புகுருகை ஈடன்னப்போராது" என்ன, "எனக்கு முதலித்தனம்வேண்டா; நான் பயலி

யாதி. அந்யமாக - வேறாக; உறவாத என்றபடி. குழகேலே - ஆராய்ந்து வார்த்தைகொள்ளாதேகொள். குழறுமை - அநக்ஷர ஸரஸமாகச் சொல்லுகை. "ஸ்ரீதொஸ்ரீஶகஸஹஸ்ரெ ஹஹுகரிஷ்யெவ நநுவ" இதி பகவத்கீதா ஸ்லோகாதஸோ. (ரு)

யாய்ப் போகவே அமையும்'' என்று அவன் அருளிச்செய்ய, *''நீமைமெய்யும் சிரீதரனை உனக்கும் இதுவோவிஶ்வாஸம்வருத்தி'' என்கிறாள்.

ப.—அநந்தரம், மேலுலகித்துக் குழுமணனையெடுத்த அவனைக்குறித்து, ''உன்னுடைய ஈஶ்வரத்வம் எங்களோடேகாட்டாதே; அதுக்குத்தகுவாரோடேகாட்டு'' என்கிறாள்.

குழகி எங்கள் குழுமணன் கொண்டு - விளையாட்டிலே எங்கள் குழுமணனையெடுத்துக்கொண்டு, கோயின்மைசெய்து - கைப்பட்ட ப்ரியத்தாலே மேன்மை பாவித்தால், ஒன்று-ஒரு, கன்மம்-காரியம், இல்லை-இல்லை; (உம்முடைய ஸரஸங்களும் மேன்மையும்), யாம் - நாங்கள், பழகி - பண்டேபழகி, இருப்போம் - இருப்புதோம்; இ-இந்த, திரு - அதிஶயிதமான, அருள்கள் - அருள்களானவை, பரமே - நாங்கள் பொறுக்கவல்லவை யல்ல; அழகியார்-(அதுக்கநுரூபமான) அழகையுடையராய், இ-(உம்முடைய ஸர்வேஶ்வரத்வத்துக்கு விஷயமான) இந்த, உலகுமூன்றுக்கும் - லோக த்ரயத்துக்கும், தேவிமை - உம்மோடொக்கமுடிசூடுகைக்கு, தகுவார் - தகுதியாயிருப்பார், பலர் - (தெவ்ஸஹஸ்ரஸ்ரு'' என்னும்படி) அநேகம்பேர், உளர் - உளர்; நம்பீ-பரிபூர்ணபாணமேன்மையையுடைய உனக்கு அவர்கள் திரளல்லவோ தகுவது! கழகம் - எங்கள் திரளில்வந்து, ஏறேல் - ஏறாதேகொள்; உனக்கும் - (பிறர்க்குத்தீமைசெய்கையே ப்ரக்ருதியான) உனக்கும், கன்மம் - இந்தச்செயல், இளைது - பால்யஸஹசகம். கழகம்- திரள், குழுமணனென்று - ஆஶ்ரிதருடைய லீலாபரிகரமும் அவனுக்கபிமதமென்று ஸமர்ப்பிக்கிறது.

இ—ஆறும்பாட்டில், முன்பு இவளும் தோழிமாரும் அநந்ரிஸவரீயைகளாயிருக்கையாலே அணுகக்கூசினவன், தன்னுடைய முகவிகாரத்தாலும் ஸ்மிதவீக்ஷணாதிகளாலும் மாவமர்ப்பமான தாழ்ந்த பேச்சுக்களாலும் இவர்கள் மருந்திடுபட்டாப்போலேயாய் இவனைநிஷேதிக்கமாட்டாத ஒ-ஸையிலே நிர்ப்பயனாய்ச்சென்று அணுகி, இவர்கள் பாடே இருந்தகுழுமணனைமேல்விழுந்து எடுத்துக்கொண்டான். [குழகி எங்கள் குழுமணன்கொண்டு] - பாவீ! இது ஆரதாகவெடுத்தாய்? எங்களதுகாண்; நீ நினைக்கிறவர்களதன்றுகாண்! என்கிறாள். ''எங்களது என்றவாறே பொகட்டுப்போம்'' என்று சொன்னாள்; அதுதானே அவனுக்குவிருப்பத்துக்கு உடலாயிற்று. ''எங்கள் அநுமதி வேண்டாவோ உனக்கு?'' என்ன, ''எனக்குநிவாரகர்உண்டோ? நான்செய்தது செய்யலாமித்தனையன்றோ'' என்ன, [கோயின்மைசெய்து கன்மமொன்றில்லை] - நிவாரகர் இல்லையென்ன, அடிக்கழிவானசெயல்களைச்செய்தால் உனக்கு ஒருகார்யமில்லை; நீ நினைக்கிறவர்களது அல்லாமையாலே உனக்கு ஒன்றும்வாராது; எங்களநுமதி இல்லாமையாலும் ப்ரயோஜநமில்லை. ''ப்ரயோஜநமில்லையாவதென்? இதுதானே ப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநமுண்டோ?'' என்ன, [பழகியாமிருப்போம்] - இப்பொய்களுக்குப்பழையோம் அல்லோமோ? [பரமேயித்திருவருள்கள்]—''உங்களுடைய லீலோபகரணம் எனக்கு வேணோபகரணமன்றோ? இதுவழியவேறொரு ப்ரயோஜநம்உண்டோ?'' என்று நீசொல்லுகிற அநுநிவேஶமெல்லாம் எங்களவோ? இதுக்கு நாங்கள் விஷயமாகப்போருமோ? போலிகண்டுப்பாமிக்கும்படி உன்னைப்பண்ணினவர்கள் பக்கலிலேபோ'' என்ன, ''அவர்கள் ஆர்? அங்கேயும் சிலருண்டோ!'' என்ன, ''அவர்களைச்சொல்லித்தருகிறோம்: [அழகியா

சிவ்வுலகுமுன்றுக்கும்] - "ஜெ தூலோகாயாராஜ்யம் ஸகலம்ஸீதாயாநாவ்ரூயாதஜாழு" என்றிருக்குமவர்கள். [தேவிமைதகுவார்] - உனக்குப் பட்டத்துக்குரியராய் இருக்குமவர்கள். "ராஜவொஹ்ருதி" என்று உனக்குஸ்த்ருசைகளாயிருப்பார். [பலருளர்]- ஒருவரிருவர் அல்லர். ஓரடிப்பாடரல்லீரே! பரப்பரன்றோ நீர்!! அவர்கள் பக்கலிலே போம்" என்ன, "போவோம்" என்று இவர்கள் திரளிலே வந்து புகுரப்புக, [கழகமேறேல்]- "எங்கள் திரளிலேவருதேகொள்" என்ன, "எனக்குக்குற்றமென்?" என்ன, [நம்மி]- ஸமஷ்டிமாத்யாத்மகுணோபேதர் திரளிலேயன்றோநீர்புகுவது! அவர்களன்றோஉம்மைக்கிட்ட உரியார்; சிறுப்பெண்கள் திரளிலே புகுதக்கடன்று" என்ன, "ஆனால் நாம் செய்ததுக்கு நிவாரகர் உண்டோ?" என்ன, [உனக்குமிளைதேகண்மமே]-* தீமைசெய்யும் சிறிதரனான உனக்கும் இது வொலிஸப்ரவ்ருத்தி என்கிறாள். "ஸர்வேஸ்வரனாய் அவாப்தஸமஸ்தகாமனான அவனைச் சில பெண்கள் 'எங்கள் திரளிலே புகுராதேகொள்' என்ன, புகமாட்டாதே பேகணித்துநின்ற இந்த ஆழ்ந்தியபாரதந்த்ர்யத்தை, உத்கர்ஷம்சொல்லப்பொறாத ஸம்ஸாரத்திலே தங்களைஒழிய ஆர் விப்பலம்பிக்க எழுதியிட்டுவைத்தார்கள்" என்றாப்பட்டர் அருளிச்செய்தார்.

ஈடு.— ஆறும்பாட்டு. தங்களகவாயிலோடுகிறது தெரியாமல் மறைத்துக்கொண்டு அநமிஹவரீயைகளா யிருக்கிற இப்பிராட்டியையும் தோழிமாரையுங்கண்டு, அவன் தன்முகமுத்ரைகளாலும், பாவகர்ப்பமான உக்திகளாலும், அத்தை அநுவதித்தாற்போலேயிருக்கிற விலாஸசேஷ்டிதங்களாலுமாக இவர்கள் அபிநந்தியைக்குலைத்து, இனி இவர்கள் நான் சொன்னவையெல்லாம் "வேண்டா" என்னமாட்டாதவர்களென்னும்படி வாய்மாளப் பண்ணி, அவ்வளவிலேசென்று இவளுடைய லீலோபகரணமான குழமணனை எடுத்துக்கொண்டான்.

[குழகியேங்கள்குழமணன்கொண்டு] என்கிறார்கள். குழகுணகயாவது - யுவாக்களாயிருக்கும் அவர்கள், எதிர்த்தலை தங்களுக்கு அலவ்யமாறால் அவர்களைச் சேரவிட்டுக்கொள்ளுகைக்காகப் பண்ணும் சேஷ்டிதங்களுக்குப்பேர். மேன்மையாலேயாகவுமாம், கீழ்மையாலேயாகவுமாம்: ஏதேனுமாக இவ்வளவுகிட்டிநின்று அவர்களைக்குலைத்துக் குழமணனை எடுத்துக்கொள்ளும்படியாகக் கைப்புகுந்தானிறே. [எங்கள்குழமணன்கொண்டு] - அதுதான் நீ யாரதென்று இருக்கிறாய்? அது நீ நினைக்கிறவர்களாதல்ல காண்; அது எங்களது. உனக்குஇதினால் ஒருகார்யமில்லை. "'எங்களது' என்றவாறே போகட்டுப்

ஆறும்பாட்டு.— குழகி இத்யாதி. "குழகியேங்கள் குழமணன்கொண்டு" என்கிறபதத்திலே நோக்காக அவதாரிகை - தங்களகவாயில் இத்யாதி. "குழகியென்றது - ரூபாவம் - தன்முக இத்யாதி. அத்தை - அந்தபாவத்தை. அநுவதிக்கை - ஸமீபிப்பிக்கை. 'சொன்னவையெல்லாம்' என்றது - செய்தவையெல்லாமென்றபடி. 'வாய்மாளப்பண்ணி' என்றது - நிபெடித்தியென்றபடி.

"குழகி" என்றால் - 'முகமுத்ரைகளாலும்' என்றுதொடங்கிச்சொன்ன இவையெல்லாம் காட்டுமோ? என்ன - குழதுணகயாவது இத்யாதி. "குழகி" என்கிறஇது - ஸாமாந்யஸப்தமானையாலே, கீழ்ச்சொன்னவற்றையெல்லாம் காட்டும் என்றாகருத்து. "கோயின்மைசெய்து" என்கிறபதத்தாலே - மேன்மைதோற்றியிருக்க, முகமுத்ரைதொடக்கமானவற்றால் குழமணன்கொள்ளுகிறபடி எங்ஙனே? என்ன - மேன்மையாலே இத்யாதி. குழமணன் - மாப்பாச்சி. "எங்கள்" என்ற வநந்தரம் "கொண்டு" என்கிறபதத்துக்கு வாஸநை - எங்களதென்றுவாறே இத்யாதி. கோயின்மை

போம்'' என்று சொன்னார்கள்; அதுதானே அவனுக்குப் பற்றுகைக்குஉடலாயிற்று. "எங்களநுமதிவேண்டாவோவுனக்கு ?'' என்ன, "எனக்கு நிவாரகருண்டோ! நான்செய்வது செய்யலாமித்தனையன்றோ ?'' என்ன, [கோயின்மைசெய்து கன்மமோன்றில்லை] - நீசெய்கிற அடிக்கழிவால் உனக்கொரு ஹலமில்லை. கன்மமென்று - கன்மஹலத்தை நினைக்கிறது. ஆராய்ச்சியில்லாதவிடத்தே செய்யுமவற்றைச் செய்யாதே கொள்ளாய். அவை செய்தாலும்ஆமிறே உனக்கொருப்ரயோஜநமுண்டாகில். கோயின்மைசெய்ததாகிறது - இவர்கள் இசைவின்றிக்கே யிருக்க இவர்கள் லீலோபகரணங்களை எடுத்துக்கொள்வது, அவர்கள் வேண்டவேண்டக் கொடாதொழிவதாய் மிறக்குப்பண்ணுகை. [கன்மமோன்றில்லை] - நீ போகிறவிடத்துக்கு இவை கொண்டுபோகவொண்ணாது; உனக்கு இவைதான் வேண்டா: இனி எங்களுக்கோ அநவிமதம்; ஆனபின்புஇச்செயலாலென்ன ப்ரயோஜநமுண்டு? இவைகொண்டுபோனால், தங்களதல்லாமையாலே அவர்கள் முகம் பாரார்களே; நீ ஆதரித்தவிஷயத்தினதல்லாமையாலே உனக்குவேண்டா, எங்கள் இசைவோடேகொடுபோகாமையாலே எங்களுக்கு ப்ரியமன்றே! ஆனபின்பு, இத்தால்வருவதொரு பேறில்லை காணென்றார்கள். '' அதுகிடக்க; நான் முன்னம் உங்களோடுவேககண்டன்; எனக்கும் ஒருப்ரயோஜநமில்லை, இத்தை ஸாதநமாகக்கொண்டு சாதிக்கவேண்டுவதோர் அர்த்தங்கண்டு வைத்திலேன்; இதுதானேயிறே எனக்குப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ஒருப்ரயோஜநமுண்டோ?'' என்றான்; அங்ஙனேயானவன்று அநவஸ்த்தைவரத்தொடங்குமிறே. [பழகியாமிருப்போம்] - இப்பொய்களுக்குப் பழகியோமல்லோமோ! எங்களுக்கன்றுகாண் இவை சொல்லுவது! நீசொல்லும் பொய்யெல்லாம் ''மெய்'' என்றிருப்பார்க்குச்சொல்லாயென்றார்கள். அவனும், '' இத்தலையையொழிய எனக்குச்செல்லாது '' என்னுமிடந்தோற்றச் சிலக்ரியைகளைப் பண்ண, [எம்பரமேயித்திருவருள்கள்] - நீ எங்களாலவல்லாத அபிநிவேசத்தைப்பண்ணி, குளப்படியிலே கடலை எடுத்தாற்போலே நீசெய்கிறவையெல்லாம் எங்களால்பொறுக்கப்போமோ? நீசெய்கிறவையெல்லாம் பொறுக்கவல்லார் வேறே சிலவர்களென்றார்கள். '' அவர்களார் ?'' என்றான்: [அழகியாரிவ்வுலகு மூன்றுக்கும்] -

---

யாவது - நியாமகர்கீழடங்காத ஆகாரமாகையாலே - 'நீசெய்கிற அடிக்கழிவால்' என்கிறார்கள். அடிக்கழிவு - அடைவுகேடு. கோயின்மைசெய்து - மேன்மைபொலித்து இத்யர்த்தம். குழகி - வசீகரண வ்யாபாரங்களைப்பண்ணி என்று ஸப்தார்த்தம். கன்மம் - கர்மம். "கன்மம்'' என்றால் - பலத்தைக்காட்டுமோ ? என்ன - கன்மமென்று இத்யாதி. "கோயின்மைசெய்து'' என்றபதத்துக்கர்த்தம் - ஆராய்ச்சி இத்யாதி. 'ஆராய்ச்சியில்லாதவிடத்தே' என்றது - அராஜகதேஶத்திலேயென்றபடி. "கன்மமொன்றில்லை'' என்றதுக்கர்த்தம் - அவைசெய்தாலும் இத்யாதி. "கோயின்மைசெய்து'' என்று இவர்கள் சொல்லுகைக்கு அவன்செய்தகோயின்மையேதென்ன - கோயின்மைசெய்கையாகிறது இத்யாதி. "ஒன்று'' என்றதுக்குபாவம் - நீபோகிறவிடத்துக்கு இத்யாதி. அடைவே கீழ்வாக்யவிவரணம் - இவைகொண்டுபோனால் இத்யாதி. மேலிற்பதத்துக்கவதாரிகை - அதுகிடக்க இத்யாதி. 'அதுகிடக்க' என்றது - எனக்கு உங்கள்பக்கல் ஸ்நேஹமில்லையென்றதுகிடக்கவென்றபடி. 'அங்ஙனேயானவன்று' - ப்ரயோஜநத்துக்குப்ரயோஜநம் கல்பிக்குமன்று. 'அவஸ்த்தை'யாவது - அதுக்கும் ப்ரயோஜநம், அதுக்கும்ப்ரயோஜநமாகை. "பழகியாமிருப்போம்'' என்றதுக்கு ஹார்த்தபாவம் - எங்களுக்கன்றுகாண் இத்யாதி. "எம்'' என்றத்யாஹாரித்து - 'எம்பரமே' என்கிறார். "அழகியாரிவ்வுலகுமூன்றுக்கும்'' - உலகுமூன்றும் விலையாகப்போரும்படி அழகியாரென்றுவிவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் - த்ரைலோக்யாஶ்ரயம் இத்யாதி. "ராஜ்யம்வா ஶ்ரியோகேஷு ஸ்ரீகாவாஜநகாத்மஜா । ஸ்ரீர்ஹி லோகாஸ்ராஜ்யம்ஸகலம்ஸ்ரீர்யாநாவ்யாகுலாபவேத் '' இதிஸ்மர்த்த

"ஶ்ரைலோக்ய ராஜ்யம் ஸகலம் ஸீதாயாநாப்நுயாத்கலாம்" (த்ரைலோக்ய ராஜ்யம்ஸகலம்ஸீதாயாநாப்நுயாத்கலாம்) - மூன்றுலோகத்தையும், அத்தோடே விஶ்வ ஶப்தவாச்யனானவன்தன்னையுங்கூட ஒருதட்டாக்கினால், பிராட்டியுடைய ஒருகலா மாத்ரத்துக்கு எடை நிற்கமாட்டாது. "அவர்களெங்ஙனேயிருப்பர்கள்?" என்றான்: [தேவி மைதகுவார்]-"உனக்குப் பட்டங்கட்டப்போரும்படியாயிருப்பார்" என்ன, "ஆனால், எனக்கு உபேக்ஷிக்கைக்கும் சிலர்வேணுமே!" என்றான்: [பலருளர்] - உனக்குப்போகடுகைக்கும் விஷயமங்கே உண்டென்கிறார்கள். ஒருத்தனுக்கொன்று ஸ்வபாவமானால், அது வேறோரிடத்தே போங்காட்டில் குலையாதிறே; அப்படியே, அங்குள்ளாரையும் போகடுகை இவனுக்கு ஸ்வபாவமென்னுமிடந்தோற்றச் சொல்லுகிறாள். "ஓரடிப்பாடரல்லீரேநீர்; பரப்பரல்லீரோ! அவர்கள்பக்கலேறப்போம்" என்ன, "ஆனால், அங்குப் போம்வழியும், போனாற்செய்யும்படிகளும் எல்லாம் கேட்டுப்போகவேணுமே; இனித்தான் அந்தேவாஸிகளுக்கிறே ஒன்று சொல்லுவதும்; "பரிபூரணஸேவயா" (பரிப்ரஶ்நேநஸேவயா) என்றிறே கேட்பார்படி; ஆனபின்பு, நாலடிகிட்டநின்று கேட்கவேணும்" என்று திரளிலேவந்து புகுரப்புக்கான்: [கழகமேறேல்நம்பீ] - அவர்கள்முன்னமானாராகிடுகை; †ஏறிட்டுக்கொள்ளுவதுஎங்களுக்குப் பரமோ? நீர் முன்னம் எங்களோலக்கத்தில் புகுராதேகொள்ளும். இவ்விடத்தே பட்டரருளிச்செய்வதொரு வார்த்தையுண்டு:—'ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் உபயவிபூதியுக்தனாய் ஸர்வாதிகனாய் ஸர்வநியந்தாவாயிருக்கிற ஸர்வேஶ்வரன் நாலிடைப்பெண்களிருந்தவிடத்தே புக்கல்லது நிற்கமாட்டாத செல்லாமை விளைய அவர்கள் 'நீயிங்குப்புகுராதேகொள்' என்ன, விலங்கிட்டாற்போலே பேரவும் திரியவும் மாட்டாதே தடுமாறிநின்றானென்கிற ஸௌஶீல்யம் † (தங்களையுமிவர்களையுமொழிய)

காண்மே. [16;14] * ஸகலஶப்தத்துக்கர்த்தம் - விஶ்வஶப்தவாச்யனான இத்யாதி. 'கலாமாத்ரத்துக்கு என்றது - அழகிலே கலாமாத்ரத்துக்கென்றபடி. அவர்களெங்ஙனேயிருப்பர்களென்றது - அவர்கள் நமக்கு உபேக்ஷாவிஷயமாயிருப்பார்களோ? ஆதரவிஷயமாயிருப்பர்களோ? என்றபடி. தேவிமை - தேவியானகைக்கும். ஆகுமென்றது - அவர்களெனக்கு ஆதரவிஷயமாகுமென்றபடி. உபேக்ஷிக்கிறதுக்குத் தாங்களே விஷயமித்தனையொழிய, அங்குள்ளாரை இவன்போகடுமோ? என்ன- ஒருத்தனுக்கு இத்யாதி. "அழகியார்" இத்யாதிக்கு - இவ்வுலகம்மூன்றும் விலையாம்படியான அழகையுடையராய்; தேவியானகைக்கும் தகுதியாயிருப்பார் அநேகம்பேருளர் என்ற ஶப்தார்த்தம் தேவியானகைக்கும் - பட்டமஹிஷியானகைக்கும். "மூன்றுக்கும்" என்றது - மூன்றுமென்றபடி. "அழகையுடையராய்த் இந்தலோகத்ரயத்துக்கும் ஒக்கமுடிசூடுகைக்குத் தகுதியாயிருப்பார் அநேகம்பேருளர்" என்று இருந்தபடியே உரையில் ஶப்தார்த்தம். "பலர்" என்றதுக்குமெலிதம் - ஓரடிப்பாடர் இத்யாதி. அதாவது - உபேக்ஷாவிஷயமும் உண்டென்றபடி. ஓரடிப்பாடர் - சக்ருச்சிதர். தாராவிருந்துகேட்கவொண்ணாதோ? என்ன - இவர்தாம் இத்யாதி. ஆகிஞ்சந்யமாகுமல் கிட்டவரவேதகுமோ? என்ன, பரிப்ரஶ்நேந இத்யாதி. "தத்விஜ்ஞாநார்தம் ஸ குரும் ஏவாபிகச்சேத் | ஸமித்பாணி: ஶ்ரோத்ரிய ப்ரஹ்மநிஷ்ட:" இதி பகவத்கீதாஸு [4;34]. 'ஏறிட்டுக்கொள்ளுவதெங்களுக்குப் பரமோ' என்றது - இதுக்குமுன்பில்லாத ஆசார்யத்வத்தை ஏறிட்டுக்கொள்ளுகை எங்களுக்குப் பரமோவென்னுதல்; போம்வழியும் போனால்செய்யும்படிகளும் சொல்லுவத்தை ஏறிட்டுக்கொள்ளுகை எங்களுக்குப் பரமோவென்னுதல். இவர்கள் "கழகமேறேல்" என்றவாறே அவன்ஸ்தப்தனாய்நின்றபடியை அநுஸந்தித்து பட்டர்ஈடுபாடு - இவ்விடத்தேபட்டர் இத்யாதி. ஶ்ரீ - ப்ராஸங்கிகம். 'நாலிடைப்பெண்கள்' என்றது - "ஆய்ச்சியோம்" என்றத்தைப்பற்ற. வ்யாஸாதிகள் என்றது - க்ருஷ்ணைவ்ருத்தாந்தத்திலே ஈடுபட்டவர்களானகையாலே. ஆதிஶப்தத்தாலே - ஆழ்வார்களைச்சொல்லு

---

† ஏறிட்டுக்கொள்ளாதது என்றும் பாடமுண்டென்பது அடையவளைந்தானரும்பதத்தாலிலம்பகிறது.

ஆரறிந்து கொண்டாட வ்யாஸாதிகளெழுதிவிட்டுவைத்துப்போனார்களோ?'' என்றருளிச் செய்வர். '' ஸர்வநியந்தாவானவன் சிலர்க்கு நியமிக்கலாம்படி எளியனானான் '' என்றால், ''இதுமெய்'' என்று கைக்கொள்ளுவாரைக் கிடையாதிறே. ஶாஸ்த்ரங்களெல்லாம் ஈஶோஶி தவ்யவிபாகம்பண்ணி ஒருங்கவிடாநிற்க, அத்தலையித்தலையாகச் சொல்லுகிறதிறே இது! 'சாதுகோட்டியுட்கொள்ளப்படுவோர்' என்றுசொல்லுவது - வைஷ்ணவர்களுடைய திரளிலே ஒருவன்வந்துபுகுந்தால் துர்மாநத்தாலே மலையிட்டமுக்கிறாற்போலே இருக்கையன்றிக்கே, நீரும்நீரும் கலந்தாற்போல இவன் புகுந்தமை தெரியாதபடியிருந்து, அவர்கள்இடங் சொடுத்து அவர்கள் பரிக்ரஹிக்கையிறே ஒருவனுக்கு நன்மையாவது; இது இவர்களுக்கே யன்றியே, அவனுக்குமோத்திருக்கிறபடி; ''ஸசாவிராமஃபரிஷத்கதஶ்ஶைநர்ப்புஷயாஸக்த நாபபூவஹ'' (ஸசாபிராமஃபரிஷத்கதஶ்ஶைநர்ப்புஷயாஸக்த நாபபூவஹ) - பெருமதிப்பராய்ப் பாட்டறிந்து கொண்டாடுகைக்குப் போரும்படி பேறி வாளரான வித்வஜ்ஜநங்களுக்கு தாமுமாகப் பேரோலக்கமிருந்து பிள்ளைகளைப் பாடவிட்டுத் தாம் ஸிம்ஹாஸநஸ்த்தராயிருந்தார்; இவர்கள் தாழவிருக்கத் தாமுயரவிருந்த இடம் தமக்கு அநபிமதமாகையாலே ஸிம்ஹாஸநத்தினின்றும் மெள்ள இழிந்து, தெரியாதபடி இவர்கள் நடுவே புகுந்திருந்தார். அது என்னென்னில்:-ராஜா எழுந்திருந்தால் ஓலக்கம் கிளம்புமிறே; தாம் எழுந்திருந்தவாறே ஓலக்கம் கிளம்புகிறதாகக்கருதி, மெள்ளப்புகுந்திருந்தா ரென்கிறது. இங்ஙன்வேண்டுவானேன்? என்னில்; ஸநாவாஸலிஷயா என்னுதல், ஸவிதாஜிஹ்யா என்னுதல்-'இவர்களோடேகூடியிருந்து அநுபவிக்கைக்காக' என்னுதல், 'தாமுளராகைக் காக' என்னுதல். [நம்பீ] - உமக்கும் எங்களுக்கும் உள்ள நேவோசிபாரீர்! உமக்கொன்று கேட்கவேண்டும்படியாயிருந்ததோ? முதலிகளாயிருக்கிற உமக்கு நாங்களிருக்கிற இடத்தே

கிறது. ''ஆரறிந்துகொண்டாட'' என்பானேன்? கொண்டாடுவாரில்லையோ? என்ன, ஸர்வநியந்தா வானவன் இத்யாதி. 'ஶாஸ்த்ரஞ்சொன்னால் மெய் என்றுகொள்ளலாமே' என்ன - ஶாஸ்த்ரங்க ளெல்லாம் இத்யாதி. 'ஒருங்கவிடுகை' யாவது - ஒருதலைப்படவிடுகை. 'அத்தலையித்தலையாகச் சொல்லுகிறதிறே' என்றது - நியந்த்ருநியாம்யபாவத்தையாறுடி, அவனை நியாம்யனாயும் இவர்களை நியந்த்ரிகளாயும் சொல்லுகிறதிறே யென்றபடி. ''சழகமேறேல்'' என்கையாலே - ஸ்ரீவைஷ்ணவ கோஷ்ட்யந்தர்ப்ரவேசம் ஸோஷபூதர்க்கேயன்றிக்கே ஸோஷியானவனுக்கும் உத்தேஶ்யமென்கிறார் - சாதுகோட்டி இத்யாதி. ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலேபுகுந்தால் அவர்கள் ஸஹ்ருதயராகப் பரிக்ரஹிக் கும்படியாவர்கள் இத்யர்த்தம். பெரியாழ்வார்திருமொழி, முன்றாம்பத்து, ஆறாந்திருமொழி சாற்றுப் பாட்டு - ''குழலிருண்டு'' இத்யாதி. ''உட்கொள்ள'' என்றதற்கு பாவம் - வைஷ்ணவர்களுடைய இத்யாதி. 'துர்மாநத்தாலே' - வருகிறவனுடைய துர்மாநத்தாலே யென்றபடி. அப்படி ஒத்திருக்கு மோ? என்ன - ஸஹாவி இத்யாதி. ''தத்ஸ்ரீதளராஜவஃ ஸ்ரீவொஹிதாவமாயுதாம்ஶாரு வியாநஸம்வெஷா। ஸவாவிராமஃ வரிஷத்கதஶ்ஶைநர்ப்புஷயாஸக்தநாபை ஹலிவஹ'' இதிபாலகாண்டே. [4;31½] ''ஶைநஃ'' (ஶநைஃ) - என்றதுக்கர்த்தம் - தெரியாத படியென்று: 'அதுவென்? என்னில்' என்றது - ஸிம்ஹாஸநத்திலிருந்தவர்க்கு இங்ஙன்வேண்டுவா னென் என்னில் என்றபடி. 'இங்ஙன்வேண்டுவானென்னென்னில் என்றது - மெள்ளவாகிலும்இவர் கள்நடுவே புகுரவேண்டுவானென்? ஸிம்ஹாஸநத்திலேதானே யிருந்துவிட வொண்ணாதோ! என்ற படி. 'அநுபூஷயா'என்றவிஸர்க்கத்தைக்கூட்டினது - ''யாதாஸ்ரீநிஜாவஸமாயயா:'' என் கிற ந்யாயத்தைப்பற்ற. உத்தரார்த்தத்வயவிவரணம் - இவர்களோடே இத்யாதிவாக்யத்வயம். 'தாமுள ராகைக்காக' என்றது - ''ஹலிஸ்தாயாம்'' என்கிற யாதுவைப்பற்ற. தாத்பர்யார்த்தம் - முதலி

புகுருகைபோருமோ? என்றார்கள். "அழகிது! நான் முதலியாகிலும் ஆகிறேன்; பயலியாகிலும் ஆகிறேன்; என்னைத்தான் அறிகையில்லையோ! * 'தீமைசெய்யும்சிரீதரன்' என்றன்றோ என்னைச்சொல்லுவது? ஆனபின்பு, நாலுபேர்களிருந்தவிடமெங்கும் தீம்புசெய்கை எனக்கு ஸ்வரூபமன்றோ?" என்றான். [உனக்கு மிளைதேகன்மமே]- தீம்புசெய்கையிலே சமைந்திருக்கிற உனக்குங்கூட இதுவாலியம். தீமைசெய்வார்க்கும் ஒருப்ராப்திவேண்டாவோ? (கூ)

ஏழாம் பாட்டு.

கன்மமன்றுஎங்கள்கையில்பாவைபறிப்பது கடல்ஞாலமுண்டிட்ட
நின்மலா! நெடியாய்! உனக்கேவும்பிழைபிழையே
வன்மமேசொல்லிஎம்மைமரீஇவிளையாடுதி அதுகேட்கில்என்னைமார்
தன்மபாவமென்னார் ஒருநான்றதாடிணக்கே.

ஆ—(கன்மமன்று.) - இப்படி அவன் நிவார்யமானனாயிருக்கச்செய்தேயும் இவளுடைய பரிஷத்திலேபோறி இவளுடைய கையிற்பாவையைப் பறித்தருள, "எங்கள் கையிற்பாவை பறிப்பது உனக்கவத்யாவஹமாம்; அநந்ய ப்ரயோஜநனாய்க்கொண்டு ஸர்வாத்மாக்களையும் வயிற்றிலேவைத்து மஹாகுணத்தை விளைத்தாற்போலே, இத்தீமையும் உனக்கு மஹாவத்யத்தைவிளைக்கும்" என்று இவள்சொல்ல, அதன்மேலே பணிமொழிகளை இவன் அருளிச்செய்ய, "இங்கனே அதிதுர்லபமான வார்த்தைகளையே சொல்லி எம்மைமரீஇவிளையாடுதி; அதுகேட்கில் என்னைமார் இதுகூடும்கூடாது என்று பாராதே உன்னைப்பேசித்து ஒருநாளும் ஊடாகிப்பாதும் செய்யார்" என்கிறாள்.

ஓ.—[கன்மமன்று] - இவர்கள்தமக்கு இவர்களாலே நிவார்யமானனாய் ஏறப்பெறுதொழிந்த எம்பெருமான், செய்யலாவது காணுமையாலே, அவர்களுடைய லீலோபகரணமான பாவையைச் சென்றெடுக்கக்கணிசிக்க, அத்தையறிந்து பிராட்டியும் தோழிமாருமாகப் பாவையைச் சென்றெடுக்க, அத்தை இவன்தான் அவர்கள் கையினின்றும் பறிக்கப்புக, அவர்களும் எங்கள் கையில் பாவையைப்பறிப்பது உனக்குப் போராதென்றுசொல்ல, அவனும் "பலஹாகுணனானவெனக்கு அல்பதோஷம் தோற்றப்படுமோ?" என்று அருளிச்செய்ய; அவர்களும் நிர்ஹேதுகமாக ஜகத்தை ப்ரளய காலத்திலே திருவயிற்றிலேவைத்து பரிஹரிக்கை†தொடக்கமான அபரிச்சேத்யமஹாகுணங்களையுடையையாயிருந்தாயேயாகிலும் அக்குணங்களுக்கு நிறம்தருமாபோலே இப்போராச்செயலும் உனக்கு அவத்யாவஹமென்று அருளிச்செய்ய, அதுக்குமேலே சில பணிமொழிகளை எம்பெருமான் அருளிச்செய்ய, "இப்படிபொறுக்கவொண்ணாத வார்த்தைகளைச்சொல்லி எங்களோடே நீவிளையாடுதி: அதுகேட்கில் என்னைமார்கூடும் கூடாதென்று நிரூபியாதொழிவர்கள்," என்ன, "அதுவல்தான் வந்ததென்?" என்ன, "ஒருநாளாக அவர்க

[illegible] இத்யாதி. பயலி - பாலிசன். பாலிசமாவானென்? என்ன - தீமைசெய்வார்க்கும் இத்யாதி. [illegible]ப்பரை. கன்மம் - கர்மம். இந்தக்கார்யமென்றபடி. 'தீமைசெய்யும்சிரீதரன்' - தீம்புசெய்யும் ஸ்ரீதரனித்யர்த்தம். நாச்சியார்திருமொழி, இரண்டாந்திருமொழி, முதற்பாட்டு - "ஸாமமாயிரம்" இத்யாதி. "கழகம் - திரள். இளைது - பால்யஸமசகம்" என்றுஉரையிலர்த்தம். (கூ)

† தொடக்கமானவையென்று இருக்கலாமெனத் தோன்றுகின்றது.

ளுக்கும் உனக்கும் விப்ரதிபத்தியாய் முடியும்" என்கிறாள். ஐம்மார் - ஆறுடன் பிறந்தார்.

ப.—அநந்தரம், ப்ரயோஜநநிரபேக்ஷமாக ஸர்வலோகத்தையும் ரக்ஷிக்கும் பெருமையையுடைய உனக்கு, எங்களை ஸ்பர்ஶித்துக் கையில் பாவையைப்பறிக்கிற இது கார்யமன்று என்கிறாள்.

எங்கள் - எங்கள், கையில் - கையிலிருக்கிற, பாவை - பாவையை, பறிப்பது- தீண்டிப்பறிப்பது, கன்மம் - காரியம், அன்று - அன்று; கடல் - ப்ரளயார்ணவத்திலே அழுந்துகிற, ஞாலம் - ஜகத்தை, உண்டிட்ட - அமுதுசெய்து வயிற்றிலேவைத்து ரக்ஷித்து, நின்மலா - அதுதானே ப்ரயோஜநமாம்படியான ஔஜ்ஜ்வல்யத்தையுடையையாய்! நெடியாய் - ("இன்னமும்செய்ததுபோராது" என்று அவற்றை வெளிநாடுகாட்டி ரக்ஷிக்கும்) பெருமையையுடையவனே! உனக்கும் - இப்படிப்பட்டஉனக்கும், பிழை - (இப்படி அபலைகளா யிருப்பாரைத் தீண்டிப்பறித்தா யென்கிற)பிழை, பிழையே - அவத்யமாயேவிடும்; நீ-(இப்படிபெரியையாயிருக்கிற) நீ, வன்மம் - ("நாணுங்களைஸ்பர்ஶிக்கலாமோ? அன்று ஆரைநினைத்திருந்திகோள்' என்று பூர்வஸம்ப்ரலேஷஸ்மரணத்தைப்பண்ணுவித்து எங்களுக்குநினைக்கவும் சொல்லவுமொண்ணாத) மர்மங்களை, எம்மை - எங்களை நோக்கி, சொல்லி - சொல்லி, விளையாடுதி - விளைகொண்டாடாநின்றாய்; என்னைமார் - எங்களுடைய ஆறுடன்பிறந்தார், அதுகேட்கில் - அதுகேட்பாராகில், தன்மபாவம் - தர்மமும்பாபமுமிமென்று, என்றார் - நினையார்கள்; ஒருநாள் - ஒருநாள் வரையிலே வந்து, தடி-தடியையெடுத்து, பிணக்குறும் - பிணங்கும்படியாம். என்னைமார் - ஆறுடன் பிறந்தார். என்னைமார் என்கிறது - ஸுறஜமான ஸர்மாதிதம்பமதாதிகள் பகவத்விரோதிகளென்று ஸூசிப்பிக்கிறது. 'பாவை' என்கிறது - ஆஶ்ரிதவிஷயத்தில் பரதந்த்ரமான அசித்வஸ்துவும் ஈஶ்வரனுக்கு உத்தேச்யமென்று ஸூசிப்பிக்கிறது.

இ.—ஏழாம்பாட்டில், "கழுகுமேறிக்கண்டு" என்று - தங்கள் நிரவிருந்தாவொட்டிற்றிலர்கள்; அவனும் செய்யலாவதுகாணாமையாலே அவள்கையிற் பாவையைக் கடாக்ஷித்தான்; "வ்ரேக்ஷிதஜ்ஜோஷ்ணகோஷயா?" என்று நினைவறியுமவர்களானகையாலே எல்லாருங்கூட அத்தைப்பற்ற, இவன் அத்தை அவர்கள் கையினின்றும் பறிக்கப்புக்கான். [கன்மமன்றெங்கள் கையிற் பாவைபறிப்பது]-எங்கள்கையிற் பாவைபறிப்பது கார்யமன்று, நீ நினைக்கிறவர்களது அல்லாமையாலே உனக்கொரு ப்ரயோஜநமில்லை. எங்கள் அநுமதியில்லாமையாலே பறிக்கப்போகாது. தன்னுடைய பலத்தினாலன்றி அழிக்கலாவது எதிரிகளாகிலிறே! அவைலைகள் கையில் அதுபறிக்க பலத்தனல்லேன். ஒருகலத்திலே உண்பாரைப்போலே அவர்கள்கையிலும் தன்கையிலுமாக இருக்கிறிறே ப்ரயோஜநமுள்ளது. "ப்ரயோஜநமில்லாமையே யுண்டு, உனக்கு ஊணாறாகியாய் வரும்" என்ன, "வ்ரஹ்மணனான எனக்கு அல்பதோஷம் தோற்றப்படுமோ?" என்ன, [கடல்ஞாலமுண்டிட்ட நின்மலாநெடியா யுனக்கேயும்பிழைபிழையே] - நிர்ஹேதுகமாக ப்ரளயாபத்திலே ஜகத்தையுமிற்றிலேவைத்து நோக்கினவனாய், "ஸுகாஶஉவநிஶ்ஶுஶ்" என்கிறபடியே ஹேயப்ரத்யநீகனாய், "யதோவாஇமாநிபூதாநி" என்று அபரிச்சேத்ய மஹாகுணனாயிருந்த உனக்கு வந்ததாகிலும், பிழையானது பிழையேகாண். லோகத்துக்கு ப்ரகாஶகனான சந்த்ரனுக்கு உண்டானமறுவும் லோகப்ரஸித்தமன்றோ! குணங்கள் புக்கவிடமெங்கும் குணஹாநியும் புகுங்காண். குணங்கள் உனக்கு நிறந்

கருமாபோலே இ வ்ஷாத்ரப்ரவ்ருத்தியும் உனக்கு அவத்யாவஹங்காண் என்ன, மேற் சொல்லலாவது கண்டிலன்; அவர்கள் செவியிலே, "இன்னது சொன்னான்" என்று அநுபாஷிக்க வொண்ணாதாயிருப்பதொன்றைச் சொன்னான். அதாவது - ப்ரணய வேளையிற் பணிமொழிகள்: [என்மனமே சொல்லியெம்மை நீ விளையாடுதி] - நினைக்கவுங் கூடாக் கூசவேண்டும் நெஞ்சறிந்த வார்த்தைகளைச் சொல்லி எங்களோடே விளையாடுதி. இவன்றோமுடிவிலே நோக்கறியாச்சொன்ன வார்த்தைகளை நங்களுக்கு அவனோடு ஸாவவைத்யம் இல்லையென்று தோற்றுகைக்காக அஸ்ஸமமாக்கி 'விளையாடுதி' என்றாள். "எங்களோடு விளையாட முறை உண்டோ?" என்ன, "பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களிலும் எனக்கு விளையாட்டு முறையில்லாதார் உண்டோ?" என்ன:— [அது கேட்கிலென்னைமார் தன்மபாவமென்றார்] - என்பந்துக்கள் அத்தைக்கேட்கில் கூடும் கூடாதென்று நினையார்கள். என்னைமார் - தமையன்மார்-ஐம்மார், ஆணுடன் பிறந்தார். "வேலைப்பிடித்தென்னை மார்களோட்டி லென்னவிளையாட்டோ?" என்னக்கடவதிறே: வைய்யக்கலைகளுக்கு உப லக்ஷணம். உன்னோடு ஸாவவைத்யம் இல்லை என்றறியாதே, உன்னுடைய சளப்ரவ்ருத்தியை "மெய்" என்று, "ஸம்ப்ரலேஷம் வ்ருத்தம்" என்று மேவினவர்கள். 'நினைத்துச்சொல்லுகை - யர்மம், நினையாதே சொல்லுகை - பாபம்' என்றாதே கேட்டமாத்ரத்திலே பொறுப்பர்கள். "அவர்கள் அறியப்புக்கா நின்றார்களோ?" என்ன, "பிறந்ததொன்று காளோட்டத்திலே அறியார்களோ?" என்ன, "ஆனால்தான் வருவதென்?" என்ன. [ஒரு நாள்] - ஒருநாளாக உன்னோடே விவாதமாய் முடியுமென்னாக. [கடிணைக்கே] - இடையர் பெருமிடுக்கரை அழியச்செய்யும்போதாம் கடியாலே அழிக்குறிக்கனை.

ஏடு.—எழாம்பாட்டு. ஸர்வோபாயங்களையும் அநுஷ்ட்டித்து பரீபரதாழ்வான் தன்பக்கல் பட்டதெல்லாம் தான் இவர்கள் பக்கலிலே பட்டான். "விநிவர்தயிதும் வயுராச" (விநிவர்த்தயிதும் - பாத்) என்று பிள்ளைகளிலே போர வருந்தினானிறே. "ஶொஷ்டுவாரஸ்வாரயாயாவலெ நநவுஸீதி" (ஶோஷ்யேபுரஸ்தாச்சாலாயா யாவந்மேநப்ரஸீததி) - தாமேயிரங்கி மீளும்படிபண்ணுகிறேன்; அதுதான் கேட்டார்வாய் கேட்கவேணுமோ? 'வாரஸ்வாச' என்றானிறே. அப்படியே இவனும்ஸர்வோபாயங்களையும் ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும் அணுகவொண்ணாதபடி கடுமைதோற்ற இருந்தார்கள்; "இனிச் செய்யலாவதென்?" என்றுபார்த்தான்; "பலத்தாலே கார்யங்கொள்ளுவோம்" என்றுநிச்சயித்து, இவர்கள்பாவையை எடுப்பாணைக் கணிசித்தான்; "வெகுக்ஷிதஜநோஸ்மி

எழாம்பாட்டு.—கஸீமம் இத்யாதி. "கன்மமன்றெங்கள்கையில் பாவைபறிப்பது" என்ற திலேநோக்காக அவதாரிகை - ஸர்வ இத்யாதி. 'ஸர்வோபாயங்களையும்' என்றது - தாய்மாரையிட்டும், வஸிஷ்ட்டாதிகளையிட்டும், சொல்லிவைக்கை தொடக்கமானவற்றை. 'ஸ்ரீபரதாழ்வான் பட்டதெல்லாம்' என்றதுக்குப்ரமாணம் - விநிவர்தயிதும் இத்யாதி. ப்ரமாணாந்தரம் - ஶொஷ்டு இத்யாதி. "ஸவெதாவாபஹுவதி-ஶுஷ்டுவிநிவர்தயிதும்வைராச । ஸகேஷாரோயுதி ஶ்ரீராணாம்ஸாயாஹுநாம்ஹுணைவதி-ஹாடு" "ஹாஹாஸோ நிராலொகொயுநஹீநொ யயாவிஜ்ஞாஶொஷ்டுவாரஸ்வாரயாயாவலெ நநவுஸீதி" இத்யயோத்யாகாண்டே. இதுக்குபாவம் - தாமேயிரங்கி இத்யாதி. கணிசிக்கை - உபக்ரமிக்கை. அவன்கணிசித்தபடியை இவர்களறிந்தபடியெங்ஙனே? என்ன - வெகுக்ஷிதஜநோ இத்யாதி. "ஜ்ஞாதஜநோஸ்மி

---

† சளம்-ஹலடு

ஸஸுராஃ '' (ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்துகோஸலாஃ) என்று நினைவறியுமவர்களாகையாலே, எல்லாருங்கூடவைத்த பாலவையைச் சென்றெடுத்துக்கொண்டார்கள்; அதுதான் "நங்கார்யம்" என்றே இருந்தான். "ப்ருதக்ப்ரயத்நாபேக்ஷிதமின்றிக்கே ஒழியப்பெற்றோம்" என்று பார்த்தான். திருக்குறளைபோலே ஆளுக்காளாய்நின்று கைப்பிடிக்க வேண்டாவாயிருந்தது; "நல்லவாய்ப்பு" என்று இவர்கள் பாலவையைச் சென்றபற்றினான்.

[கன்மமன்று] - வாராய்! உனக்கிதுகார்யமன்று கிடாய் என்கிறார்கள். "ஏன்தான் இதுகார்யமன்றிக்கே ஒழிவானேன்?" என்றான். [எங்கள்கையிற்பாலைபறிப்பது] - "இதுதான்ஆரதென்றிருக்கிறாய்? நீ நினைக்கிறவர்களாதன்றுகாண்! இதெங்களதுகாண்!!" என்றார்கள். "அதுதான் மெய்யே!" என்றான்; *யதெவைஷ்ணவாநாம் இதே. † (இவர்கள் ஸ்வரூபஜ்ஞராகையாலே இவனுடையவர்களிறே). இவர்கள் "எங்களது" என்கையிறே அவன்விருப்பத்துக்கடி. "இவர்களது" என்னுமிடம் அறிதியிட்டுக்கொள்ளுகையிலேயிறே அவனுக்குத் தாத்பர்யம்; நீ நினைக்கிறவர்களாதன்று என்கையிறே இவர்களுக்குத் தாத்பர்யம். [எங்கள்கையில் பாலைபறிப்பது]-இவர்கள்கையிலே பாதிகொடுத்துப்போலே காணும்பறிப்பது! அவர்கள்விட்டுக் கடக்கறிற்கும் அதிலொருப்ரயோஜநமில்லையே; அத்தையவர்கள் ஒருதலைபற்றத் தானு மொருதலை பற்றாமன்றிறே ஒருகலத்திலே உண்பாரைப் போலே ஹோ-மாயிருப்பது. [கையில்பாலைபறிப்பது] - கிடக்கிறதெல்லாங் கிடக்க, எங்கள்கையிற் பாலைபறிப்பது கன்மமன்று. செய்யக் கடவதெல்லாதத்தைச் செய்யாநின்றாய்; உனக்கு இத்தாலொரு ப்ரயோஜநமில்லைகாண் என்றார்கள். ஆக, இத்தால் விளைந்ததென்? என்னில்;—ஒருவைஷ்ணவன் "என்னது" என்றபிமாநித்துக் கைப்பிடித்தால் "அவன் விரும்புவது" என்றபடி. "'செய்யக்கடவதல்லாதத்தைச் செய்யாநின்றாய்' என்று நீங்கள் சொல்லுவானேன்? செய்யக்கடவதுக்கும் செய்யக்கடவதல்லாததுக்கும் வாம்புகட்டினேன் நானன்றோ!" என்றான். [கடல்நுழைமுண்டிட்டு] - ப்ரபாவாத்யாபத்திலே இவற்றை

ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்துகோஸலாஃ | கலியுகாரம்பகாலத்தில் வைஷ்ணவாக்ரேஸரராகிய ஸ்ரீராமபிரானாரால் "எங்கள்" என்று - பன்மைவசகமாய், "பாலை" என்று - ஏக வசநமாயிருக்கையாலே - எல்லாருங்கூடவைத்தபாலவையை இத்யாதி. கார்யமானபடியெங்ஙனே? என்ன - ப்ருதக்ப்ரயத்ந இத்யாதி. அபேக்ஷிதமென்றது - அபேக்ஷையென்றபடி. விவரணம் - திருக்குறளை இத்யாதி.

மெய்யானால் தனக்குப்ரயோஜநமேதென்ன-யதெவைஷ்ணவாநாம் இத்யாதி. ஆகையாலே, 'இவர்களதென்றிடம்' என்று கூட்டிக்கொள்வது. இவர்கள் "எங்களது" என்றதுக்குப்பொலிமிதென்ன - நீநினைக்கிற இத்யாதி. "எங்கள்" என்றபன்மைவசநத்துக்கும், "பாலை" என்ற ஏக வசநத்துக்கும், "பறிப்பது" என்கிற வர்த்தமாநத்துக்கும் வ்யவிதார்த்தம் [illegible]கையிலே இத்யாதி. இவன் ஸக்தனன்றோ? பாதி கொடுக்கிறதென்? என்ன - அவர்கள்விட்டு இத்யாதி. விவரணம் - அத்வைதயவர்கள் இத்யாதி. "கையில்" என்றதுக்குடாவும் - கிடக்கிறதெல்லாம் இத்யாதி. "வாராயுனக்கு" இத்யாதிவாக்யத்திலே, "கன்மம்" என்று - கார்யமாக விவக்ஷித்தருளிச்செய்து, கார்யபலத்தை விவக்ஷித்தருளிச்செய்கிறார் - செய்யக்கடவதல்லாதத்தை இத்யாதி. 'ஆக இத்தால்' என்றது - "எங்களது" என்றதேஹேதுவாக அவன் மேல்விழுந்து வந்தடுக்கிற இத்தால் என்றபடி. 'பலித்ததென்னென்னில்' என்றது - ஸ்வாபதேசத்தில்எந்தஅர்த்தம் சொல்லிற்றாயிற்றென்னில்என்றபடி. "கன்மமன்று" என்றதின் முந்தினவர்த்தத்துக்குச்சேர மேலிற்பதத்துக்கு அவதாரிகை-செய்யக்கடவதல்லாதத்தை இத்யாதி. வாம்புகட்டுகையாவது - கடலாலேசூழப்பண்ணுகை. வாம்புகட்டினபடியைக் காட்டுகிறார் - ப்ரபாவாத்யாபத்திலே இத்யாதி. காரணியின் [illegible] ஸ்வாபதேசமருளிச்

---

† குண்டலிக்ராந்தம் க்வாசித்கம்.

யெல்லாமெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கிற்றிலேனோ? இவர்களளவும் அப்படியேயாகாதே தான். இவன்சென்று பறித்திலனாகில் அழியுமளவாகாதே அவர்களது. அது அவஸ்த்தாந் தரத்தை பஜித்தாகிலும் கிடக்குமிறே; இவர்களுக்கிவனையொழிந்தவன்று ஸத்தாநாஶமிறே யுள்ளது! "ஆபத்ரக்ஷகனன்றோநான்! ஆனபின்பு, நான் செய்யுமவையெல்லாம் ப்ரயோஜந நிரபேக்ஷமாயன்றோ இருப்பது; ஆகையினால் எனக்கிதுதானேயிறே ப்ரயோஜநம்! ப்ர யோஜநத்துக்கு ப்ரயோஜநம் வருமன்று அநவஸ்த்தையாமிறே; இத்தை ஸாதநமாக நினைத் திருக்கிலிறே நான் வேறேயொன்றை ப்ரயோஜநமாக ஸாதித்துக்கொள்வது!" என்றான்; நீ இங்ஙன்சொல்லுமது வார்த்தையன்றுகாண்; எங்களிசைவின்றிக்கேயிருக்க, நீ பலத்தாலே பறிக்கிறஇதுக்கு "ஆபத்ரக்ஷகன்" என்றசொல்லுகிறஇது, நிர்ப்பந்நமாகமாட்டாதுகாண்; ஆன பின்பு,உனக்கு குணஹாநியேகாண்மேற்படுவது" என்றார்கள். [நின்மலாநெடியாய்!] "ஹேய குணனானஎனக்கு ஒருதோஷம் கிடக்குங்காட்டில் அது தெரியாநின்றதோ?" என்றான். [நின்மலா! நெடியாய்!] - நிர்மலனான சந்த்ரனுக்குமன்றோ மறு கிடக்கிறது! ஆன பின்பு, குணம்ப்ரகாசிக்குமிடமெங்கும் குணஹாநியும் ப்ரகாசிக்குங்காண்!! ஹேயப்ரத்ய நீகனாய் அபரிச்சேத்ய மஹாகுணனானவனே! [உனக்கேலும்பிழைபிழையே] - அபரிச்சேத்ய மான குணங்களையுடையையா யிருந்தாயேயாகிலும், குணஹாநி குணஹாநியாயே கிடக் குங்காண். இவர்கள் இப்படி சொன்னவாறே, இதுக்கொரு மறுமாற்றம் காணாமையாலே, பிறர்க்குப் பாசுரமிட்டுச் சொல்லவொண்ணாதபடி இவர்கள் செவியிலே ச்லவற்றைச் சொல்லப்புக்கான்: "வன்மமேசொல்லி" என்கிறார்கள். தங்கள்நெஞ்சும் அவன்நெஞ்சும் அறியுமத்தனை; வாசாவ்யவஹரிக்கவொண்ணாது † (ப்ரணயவேதனையில்பணிமொழிகள்). [எம்மை நீவிளையாடுதி] - நீ மர்மம்சொல்லும்போது, சொல்லுகிறஉன்னையும் கேட்கிற எங் களையும் அறிந்தன்றோசொல்லுவது. ("இவன்சொன்னமர்மம்எது" என்று எம்பாரைச்சிலர் கேட்க, *"மயர்வறுமதிநலமருளப்பெற்றவர் பாசுரமிடமாட்டாமல் 'வன்மம்' என்றுநின் றார்; என்னைப்பாசுரமிடச்சொல்லுகிறிகோளோர்" என்றருளிச்செய்தார்.) [விளையாடுதி] - அவன்தன்னையழியமாறி ஒருமர்மம்சான்றானானான்; இவர்கள் அத்தையெல்லாம் விளை யாட்டாக்குகிறார்கள்; நெஞ்சிலில்லாதவை சொல்லுகிறவத்தால் உனக்கென்ன ப்ரயோஜநம்

செய்கிறார் - இவர்களளவும் இத்யாதி. வவரணம் - இவனைசென்று இத்யாதி. இவர்களளவுமப் படியே ஆகாதேதானென்றது - இவர்கள்தசையும் ஜகத்தின்படியன்றோவென்றபடி. பூமியோடு ஸம்யமன்றிக்கே ஆதிக்யமருளிச்செய்கிறார் - அதுஅவஸ்த்தாந்தரத்தை இத்யாதி. "கன்மம்" என்ற தின் த்விதீயார்த்தத்துக்குச்சேர, "கடல்ஞாலமுண்டிட்ட" என்றதுக்கு இரண்டாம்அவதாரிகை-ஆபத் ரக்ஷகனன்றோ இத்யாதி. இந்தவவதாரிகாந்வயத்துக்குச்சேர, "கடல்ஞாலமுண்டிட்ட" என்றதுக்கு ஹாவம் - எங்களிசைவின்றிக்கே இத்யாதி. அதாவது, இசைவின்றிக்கே இருக்கப்பறிக்கையாலே உனக்கொருப்ரயோஜநமில்லையென்ற த்விதீயஸங்கதிக்குபரிஹாரம்; பலத்தாலே பறிக்கிறஇதுஉனக்குக் கார்யமன்றென்று முந்தினஸங்கதிக்கு பரிஹாரம். "பிழைபிழையே" என்றதன்றை - "கடல்ஞாலமுண் டிட்ட, நின்மலா, நெடியாய்" என்றபதத்ரயத்திலும் அந்வயிப்பது. நின்மலா - ஹேயப்ரத்யநீகனான வனே. நெடியாய் - பெரியோனே; ஸமஸ்தகல்யாணகுணாத்மகனே. உனக்கேலும் பிழைபிழையே - இப்படிப்பட்டஉனக்கும் அபலைகளைத் தின்றுப்பறிக்கிற இநதத்தப்பு அவத்யமாயேவிடுமென்று ஸம் தார்த்தம். சிலவற்றையென்றது - ப்ரணயவேதனையிற் பணிமொழிகளை. வன்மம் - மர்மம். அந்தவன் மமேதென்ன - தங்கள்நெஞ்சும் இத்யாதி. ஸுஸஹஸ்யமென்றபடி. 'சொல்லுகிறவுன்னையும்' இத்ய திக்குக்கருத்து-உனக்குமெங்களுக்கும் உறவுஉண்டானாலன்றோ ஹாஸ்யம்பண்ணலாவது. உறவில்லாத விடத்திலே ஹாஸ்யம்பண்ணலாமோவென்று. விளையாட்டாக்குகைக்குஹேதுவேதென்ன - நெஞ்சி

---

† குண்டலி க்ரந்தவ்யம் ப்ரகாசிப்பது.

உண்டென்கிறார்கள். திரியவும் சிலவற்றைச்சொல்லப்புக்கான்: [அதுகேட்கிலென்னைமார்] - சொல்லுகிறவையெல்லாம் எங்கள்பந்துக்கள் கேட்பார்களாகில் சாலத் தப்பாய்விடுங்கிடாய். என்னைமார் - ஆணுடன்பிறந்தார். [தன்மபாவமென்றோர்] - உன்பக்கலேங்கருத்து ஸாவ ஹேந்தமில்லை என்னுமிடம் அறியார்கள். நீ மேல்விழுகிறத்தைக் கண்டு, "இதுசெய்யலாம், இதுசெய்யவொண்ணாது" என்றுபாராதே நலிவர்கள்கிடாய். "ஆனாலென்? அவர்கள் அது அறியாநின்றார்களோ? அவர்களிங்கில்லையே!" என்றான். [ஒருநான்று] - அதுவோ! முதலிலே தவிரில் அறியாதொழியுமத்தனைபோக்கி. எல்லாம் செய்தாலு முண்டானாலொரு நாள்வரையிலே அறிவர்கள்காண். "அழகிது; அறிந்தால்தான் வருவதென்?" என்றான். [தடிபிணக்கே] - பின்னைக்குத்தும் பூசலுமாயன்றோ தலைக்கட்டுவது. ராமாவதாரத்தில் ஸர்வவ்யாபாரங்களும் விற்கொண்டே வ்யாபரிக்குமாபோலே, க்ருஷ்ணாவதாரத்திலே தடிகொண்டே கார்யங்கொள்ளுமத்தனை. (எ)

எட்டாம் பாட்டு.

பிணக்கியானையும்பிறரும் பிறையாமல்பேதித்துப்பேதியாதகாலும்
கணக்கில்கீர்த்திவெள்ளக் கதிர்ஞானமுத்திமிறும்! [தோமை
இணக்கிளம்மைளம்தோழிமார் விளையாடப்போநாரினென்னப்போர்
உணக்கிநீவளைத்தால் என்சொல்லாருகவாதவரே!

அவ.—(பிணக்கி.)-"இப்படி இவன் க்ருஷ்ணம்சொல்லி நம்மை இங்கிருந்து விளையாடவொட்டானாகில், நாமிங்கு நின்றும் போகலாம்" என்று பார்த்துத் தன் தோழிமாரோடேகூடப் போகப்புக, "நாம்போகவொட்டேன்" என்று இவன் தங்களை வளைத்தருள, "அறியாதே விளையாடப்போக்கு எங்களை உன்னுடைய நிரவதிக ஸௌந்தர்யத்தாலே இழுவித்துக்கொண்டு, ஸர்வேஶ்வரனான நீ வளைத்தால், உன்னை உகவாதவர் உனக்கென்ன பழிசொல்லார்? உனக்கெங்களோடே ஸம்ப்ரலேஷம் வ்ருத்தமென்றும் சொல்லுவாரிறே! ஆனபின்பு இதுகூடல்ல" என்று அவனை உபாலம்பிக்கிறாள்.

ஓ.—[பிணக்கியானையும்.]-"நாமிருக்கிலிறே இங்கு இவனுக்கு நம்மை நலிய லாவது; நாம் போவோம்" என்று தோழிமாரும்தானுமாகப் போக உபக்ரமிக்க, வம்பிடுமாறும் அவர்கள் போகிற வழியைக்கொண்டு அவர்களைப் போகவொட்டாதே வளைக்க, அவர்களும் சேதநர்சேதநங்களை தேவதிர்யங்மனுஷ்யாதி விஷயங்களை ஒழிந்து ஒன்றாய்ப் படிகலசி, "அழிக்கத்து ஸ்ருஷ்டித்தது" என்று தெரியாதபடி, ஸம்ஹாரகாலத்துக்கு முன்பு இருந்தபடிகளில் ஒருவாசிபடாதபடி ஸ்ருஷ்டித்து இதில் ஓராயாஸப்படாதபடி

ஸிஸ்லாதவை இத்யாதி. திரியவும் சிலவற்றையென்றது-பத்தாயிரங்குடியிற்பெண்களும் எனக்குஉறவன்றோ? என்னை, என்னைமாரென்றது - வெம்மங்களுக்குமுடியாமலிருக்கிறவர்கள். "தன்மபாவமென்றோர்" என்றதுக்குபாவம் - உண்பங்கல் இத்யாதி. பாவபேதமென்றது - ஸம்ப்ரலேஷமிடமென்றபடி. ஸம்ப்ரலேஷ முண்டென்று நிரூபித்துச்செய்கை - தர்மம், நிரூபியாமல்செய்கை - பாபம். இரண்டிலும்தாமே படிப்பர்களென்றபடி. தடியென்? ஆயுதமில்லையோவென்னா - ராமாவதாரத்தில் இத்யாதி. என்னைமார் - இணுடன்பிறந்தார். தமையன்மாரென்றபடி. தடியினைக்கு தடிச்சொன்னாள். (ஈ)

மஹாப்ரபாவமான விலக்ஷணஸங்கல்ப ரூபஜ்ஞாநத்தையுடைய ஸர்வேஶ்வரனான நீ, 'தோழிமார் தங்களோடே கூடிக்கொண்டு விளையாடப் போருங்கோள்' என்ன அறியாதே போந்த எங்களை உன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே வெருக்கி எங்களைப் போக வொட்டாதொழிந்தால் இத்தை ஸஹியாத உன்னுடைய மின்னிடைமடவார் இம்மாத்ரத்தையே கொண்டு, யோக்யதையாலே, "ஸம்ஶ்லேஷம் வ்ருத்தம்" என்று சொல்லி உன்னை உபேக்ஷிப்பார் என்கிறாள்.

ப—அநந்தரம், "இவன் ஸந்நிதியிலிருக்கிலன்றோ மர்மம் சொல்லுவது?" என்றுபோகத்தேட, இவர்கள் போகிறவழியைக் கட்டித்தகைந்த அவனைநோக்கி; "எல்லாம் அறிவீர் ஈதேயறியீர்" என்று ஸர்வஜ்ஞனான நீ யெங்களைத் தகைந்தால்உகவாதார் என் சொல்லாரென்கிறாள்.

யாவரும் யாவையும் - ஸகல சேதநாசேதநங்களையும், பிணைத்து-(ஸம்ஶ்லேஷ்ய வஸ்துக்களிலே நாமரூபவிஶேஷாதிகளை ஒன்றாகப்படி) கலந்து, (ஸ்ருஷ்டியில்வந்தவாறே), பிழையாமல் - (அவ்வோ சேதநருடைய கர்மங்களுக்கு ஸாங்கர்யம்) பிறவாதபடி, பேதித்தும்- தேவதிர்யகாதிபேதத்தைப் பண்ணினாவிடத்தும், பேதியாதது - (தத்ஸ்தம்தோஷத்தால்) ஸ்வரூபத்துக்கு பேதம்வாராதபடி, ஓர் - அத்விதீயமாய், கணக்கு இல் - அபரிச்சிந்நமான, கீர்த்திவெள்ளம் - கீர்த்திஸமுத்ரத்தையுடைத்தாயிருக்கிற, கதிர் - ப்ரபாரூபமான, ஞானம் - ஸங்கல்ப ரூப ஜ்ஞாநத்தை, மூர்த்தியினாய் - வடிவாகவுடையவனே! எம் - ஸஜாதீயைகளாய் ஸமாநதுக்கைகளான, தோழிமார் - தோழிமார், எம்மை இணக்கி - நாங்கள் இசையும்படி வார்த்தைசொல்லி, 'விளையாட- விளையாட, போதுமின்-போங்கோள்' என்ன - என்றுவிலக்கை வ்யாஜமாகச் சொன்னபடியாலே, போந்தோமை - (நீ இங்கு நிற்பதறியாதே விலாபரைகளாய்) வந்த எங்களை, உணைக்கி - உன்னைவிமோட்டாதே உணங்கும்படிபண்ணி, நீ-நீ, விளைத்தால் - தகைந்தால், (இச்செய்திகண்டு), உகவாதவர்-உகக்கமாட்டாத நாட்டார், என் - என்ன, சொல்லார் - சொல்லார்? உகவாதவர் - உன்னுடைய மின்னிடை மடவாரென்றுமாம். இங்கு, இணைக்கி எம்தோழிமாரென்றது ஸாஜாத்யத்தாலே கலந்து விலாஸ வ்யபதேஶத்தாலே பாகவதவிஷயத்தை ஸூசிப்பிக்கிறது.

இ.—எட்டாம்பாட்டில், "நாம் இங்கிருக்கிலிறே இவனுக்கு மர்மங்களைச் சொல்லி நலியலாவது; நாம் போவோம்" என்று, எல்லாரும்கூடப் போகப்புக்கார்கள்; இவர்கள் போகிறவழி ஓடிப்பரப்பாய் ஒழுகப்போகவேண்டுகையாலே, வழியைக்கட்டி யிருவிலங்காகக்கிடந்தான்; அவனைப்பார்த்து வார்த்தை சொல்லுகிறார்கள்:—[பிணைக்கி இத்யாதி]. [யாவையும்யாவரும் - பிணைக்கி] - சேதநாசேதநங்களை சேவாதிவிஶேஷமற்று "தஶ்ஶ. வாகீஹவதி" என்று தன்னோடே அவிஶேஷமாம்படி கலந்து. [பிழையாமல் பேதித்தும்] - ஸ்ருஷ்டிகாலத்திலே ஒருத்தன் கர்மம் வேறொருவன் அநு஭வியாதபடி, பேதித்தும் - ஸ்ருஷ்டித்து மென்றபடி. [பேதியாததோர் கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினாய்] - ஸம்ஹாரகாலத்தில், அசித்ஸமமான ஸூக்ஷ்மபரிணாமம், சேதநஸமமான அஜ்ஞாநம்: ஸ்ருஷ்டிகாலத்தில், அசித்ஸமமான ஸ்வரூபாந்யதாபாவம், சேதநஸமமான ஸ்வபாவாந்யதாபாவம்: ஆக, இப்பேதங்கள் ஒன்றுமின்றிக்கே ஏகரூபமாய் அத்விதீயமாய் அநவயியான ஏகரூபத்வமாகிற கீர்த்தி ஸமுத்ரத்தை யுடையையாய்,

ப்ரஹ்மரூபமான ஸங்கல்பஜ்ஞாநத்துக்கு ஆச்ரயமானவனே! இத்தால் - விஸ்லேஷதசையில் கலக்கமும், ஸம்ஸ்லேஷதசையில் ஹர்ஷரூபவிக்ருதியு மின்றிக்கே ஏகரூபனென்கை. [இணக்கி இத்யாதி] - "உன்னோட்டை கலவி யுபாயம்" என்று அறியாத எங்களை உன்னோடே சேர்த்து. இவ்வளவாக விளைத்தவர்களைச் சொல்லாதே உன்னைச் சொல்லுகிறதென்? ஸர்வவிஷயத்தில் வைராக்யம் பிறந்தால் உபகாரகனைக் கொன்றாடுமென்னும் அர்த்தமிறே உள்ளோடுகிறது. "பிரகாயபீயமாணஸ்ஸ்மாணைரபீயது"; [எங்கோழிமார்] - ஸஜாதீயராயிறே சேர்ப்பது. [விளையாடப்போதுமி னென்னாப் போந்தோமை] - "க்ருஷ்ணனுண்டு" என்றறிந்தோமாகில், வாரோம்; இவ்வகப்பாட்டை அறிந்திருந்தோமாகில் வாராதொழியலாயிற்று. "அந்தால் வந்ததென்?" என்ன, [உணக்கி நீ வளைத்தால்] - உணக்குகையாவது - யுரிக்கமாட்டாதே துவளும்படி பண்ணுகை. உன்முகம் பார்த்து அநுஸரிக்கப்பெறாமையாலே யுரிக்கமாட்டுகிறிலோம்; நீ வளைக்கையாலே போகமாட்டுகிறிலோம். [என்சொல்லாருகவாதவரே] - நீயும் நாங்களுமாக இருக்கக்கண்டால் உகவாதவர் என்றொல்லார்? "உங்கள் ஸங்கியுமாத்ரமே யன்றோ உள்ளது: இதுக்குச் சொல்லுவதெந்தை?" என்ன, யோக்யதையாலே 'ஸம்ஸ்லேஷம் ஸுகம்' என்று உன்னுடைய மின்னிடைமடவார்கள் உபேக்ஷிப்பர்கள்; பிரிவாற்றாமையாலே கண்ணுஞ்சுழலே இடுகிறவர்கள் எத்தைச் சொல்லார்? உன்மேன்மையையும் குணவத்தாப்ரதைகையையும் இழக்கக்கிடாய்புகுகிறாய். ஆப்பான், "இவனை இவர்கள் கடந்துபோனார்களாகிற் செய்வதென்?" என்ன, ஜீயர், "அது ஆர்க்கு ஆறுகு?" என்று அருளிச்செய்தார். நின்றார்களாகில் நினைத்தது பெற்றாகிறான்; கடந்து போனார்களாகில் ஸம்ஸ்லேஷார்த்தமான க்ருஷி தலைக்கட்டிற்றாகிறது.

ஈடு.—எட்டாம்பாட்டு. கிட்டிநின்ற இவர்களைச் சிலமிறுக்குக்களைப் பண்ணப் புக்கான்; 'இங்கே யிருக்கிலன்றோ இதெல்லாம் வேண்டுவது' என்றடாய்த்து. ஒருவரொருவராகப் போகப்புக்கார்கள்; "இதுவோ பார்த்தபடி!" என்று வழியைப்பற்றி இருவிலங்காகக்கிடந்தான். உத்யாநமாகையாலே வழி ஓடிப்பாடாயிருக்குமிறே. இப்பாட்டை ஜீயர் அருளிச்செய்யாநிற்கச்செய்தே ஆப்பானிருந்தவர் "இவர்களிவனைக் கடந்துபோனார்களாகிற்செய்வதென்?" என்றுகேட்க, "அது ஆர்காரியம்? பின்னை இரண்டத்தொன்று ஸித்திக்கும் என்றன்றோ அவன்தான்கிடந்தது!" என்றருளிச்செய்தார். † (நின்றார்களாகில் நினைத்தது பெற்றாகிறான்; கடந்துபோனார்களாகில் ஸம்ஸ்லேஷார்த்தமான க்ருஷி தலைக்கட்டிற்றாகிறது.)

நீ வழியைப்பற்றிக் கிடவாநின்றாய்; நீசெய்கிறவையெல்லாம் உறவுஉண்டாய்ச் செய்கிறாயென்றிருப்பர்கள்கிடாய்; நீஸர்வவிஷயமாகப்பண்ணும் லீலைக்கோரளவுஉண்டோ?

எட்டாம்பாட்டு.—பிணக்கி இத்யாதி. "உணக்கிநீவளைத்தால்" என்றிருக்கையாலே - இவன் அவளைவளைத்துக்கிடக்கும்போது, இவன்மிறக்கடியாக இவர்கள்போகப்புக்கார்களாகவேணுமென்கிறார் - கிட்டிநின்ற இவர்களை இத்யாதிவாக்யத்தாலே. மிறக்குக்களை - நிஷ்டுரோக்திகளை. இருவிலங்கு - பெருவிலங்காதல், இரட்டைவிலங்காதல். வேறுவழியில்லையோ? என்ன - உத்யாநம் இத்யாதி. இரண்டத்தொன்றுவன்றது - தலைகவுபட்டு நிற்கையாதல், கடந்துபோய்போது ஸ்பர்ஶமாதல்; ஸ்பர்ஶித்தல்லது போகக்கூடாதிறே.

"பிணக்கி" என்றுதொடங்கி, "பேதியாதது" என்றாளவுக்கும் அவதாரிகை - நீவெறுமையாய் பின்னி இத்யாதி. "பேதித்தும் பேதியாதது" என்றதுக்கு ஸமாதாநமாவும் - அப்படியிறே இத்யாதி.

---

† குண்டலிதக்ரார்த்தம் ப்ரகாஶிப்பது.

உன்னையொழிந்த வஸ்துக்களெல்லாவற்றுக்கும் கோடிலிகாரத்தைப்பண்ணி, அவிக்ருதனாயிருப்பானொருவனிறே; அப்படியே எங்களை விக்ருதராகப்பண்ணி நீ அவிக்ருதனாயிராநின்றாய்! [யாவையும்யாவரும் - பிணக்கி] - தன்பக்கல்பொருந்துகைக்கு நினைவில்லாதவற்றையும், நினைவாலே பொருந்தாதவற்றையுங்கூட்டி, "தமேவைகேவலம்" (தமபேரேதேவ ஏகீபவதி) என்று தன்னோடு அவிபக்தமாம்படி கலசி. [பிழையாமல் பேதித்தும்] - தப்பாமல் பிரித்தும். வயிற்றிலே வைத்துப்புறப்படவிடுதல், ஸர்வரித்துப்புறப்படவிடுதல். ஓரோகேஷாபங்களிலே யமர்ந்துநிலங்களிலே குடிவாங்கிப் பின்புதெளிந்தவாறே ஸ்வஸ்த்தாநங்களிலேபுகுந்து, விட்டகார்யங்களிலே அதிகரிப்பாரைப்போலே. ஒருத்தன் பண்ணினகர்மம் வேறொருத்தன்சென்று புஜியாதபடி தன்பக்கலினின்றும் பிரித்தும். [பேதியாததோர்கணக்கில் கீர்த்திவெள்ளக்கதிர்ஞானமூர்த்தியினாய்] - கார்யாவஸ்த்தமானதுவே காரணாவஸ்த்தமானாலும், அசித்ஶதமான ஸூக்ஷ்மபரிணாமம், சேதநஶதமான அஜ்ஞாநம், ஸ்ருஷ்டிகாலத்தில் அசித்ஶதமான ஸ்வரூபாந்யதாபாவம், சேதநஶதமான ஸ்வபாவாந்யதாபாவம், ஆக இப்பேதங்கள் ஒன்றும் இன்றிக்கே. ஏகரூபமாய், அத்விதீயமாய், அநவதியான கீர்த்தி ஸமுத்ரத்தை யுடைத்தாய், ப்ரபாரூபமான ஸங்கல்பரூபஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமானவனே! *எல்லாப்பொருள்களுக்கும் வித்தாய் முதலிற்சிதையாத மனந்செய் ஞானமிறே. இத்தால் - விஶ்லேஷஶையில் கலக்கமும், ஸம்ஶ்லேஷஶையில் ஸோஶரூபவிக்ருதியுமின்றிக்கே ஏகரூபனென்கை. [கணக்கில் கீர்த்திவெள்ளம்] - "இப்படிப்பட்ட குணங்களை அளவிடுவோம்" என்றுபார்த்தாருண்டாகில் இளைத்துக் கால்வாங்குதம்படி இருக்கை. [கதிர்ஞானமூர்த்தியினாய்] - இப்படி கூட்டுவனகூட்டிப் பிரிப்பன பிரித்தாலும், ஜ்ஞாநத்துக்கோரு குறைவற்றிருக்கை. [கதிர்ஞானமூர்த்தியினாய்] - கார்யங்கொண்ட தென்னாமழுங்காதிருக்கை: கார்யங் கொள்ளக்கொள்ளப் புகர்த்துவருகை. [கதிர்ஞானமூர்த்தி

நீ அவிக்ருதனாயிராநின்றாயென்றது - விஶ்லேஷத்தால் வந்தகலக்கமும், ஸம்ஶ்லேஷத்தால்வந்த போகரூபவிக்ருதியும் இன்றிக்கேயிராநின்றாயென்றபடி. அசேதநங்களை முந்தறச்சொல்லி சேதநரை அநந்தரம்சொன்னதுக்குபாவம் - ந்யாபந்தல் இத்யாதி. அதாவது - இரண்டிவர்களுக்கும் பொருந்தாமை ஸமாநமாகையாலே அசேதநங்களோடே சேதநரையுங்கூட்டி அருளிச்செய்கிறாரென்றபடி. நினைவாலேயென்றது - நினைவு உண்டாயிருக்கச்செய்தேயென்றபடி. கூட்டியென்றாதே, "பிணக்கி" என்றதுக்குபாவம் - தமேவ இத்யாதி. பிணக்கி - கலசி. மஹாப்ரளயபக்ஷத்திலே, பிணக்குகை - கலக்கை; அவாந்தர ப்ரளயபக்ஷத்திலே, பிணக்குகை - வயிற்றிலேவைக்கையென்று கண்டுகொள்வது. இதுக்குச்சேர அர்த்தத்வயம் - வயிற்றிலே இத்யாதிவாக்யத்வயம். 'வயிற்றிலேவைத்துப்புறப்படவிடுதல்' என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - ஓரோகேஷாபங்களிலே இத்யாதி. ஸம்ஹரித்துப்புறப்பட விடுதலென்றபக்ஷத்தில், "பிழையாமல்" என்றதுக்கர்த்தம் - ஒருநாள் இத்யாதி. பிரிக்கை - ஸ்ருஷ்டிக்கை. "பேதியாதது" என்றதுக்கர்த்தம் - 'கார்யாவஸ்த்தம்' என்றுதொடங்கி, 'ஆக இப்பேதங்களொன்றுமின்றிக்கே' யென்றுபளவும். கார்யாவஸ்த்தமானதுவேயென்றது - கார்யாவஸ்த்த ப்ரஹ்மஸ்வரூபமென்றபடி. காரணாவஸ்த்தையில் 'அசித்கதமான ஸூக்ஷ்மபரிணாமம்' என்றுகூட்டுவது. ஏகரூபனுமாய் அத்விதீயனுமாய், கீர்த்திஸமுத்ரத்தையுடையனுமாயென்று திருத்துவது. ஸ்வரூபாந்யதாபாவமாகிறது - ஸ்தூலபரிணாமம். இது - ஸூக்ஷ்மபரிணாமம் என்றதுக்கு ப்ரதிகோடி. ஸ்வபாவாந்யதாபாவமாகிறது - ஜ்ஞாநவிகாஸம்; இது - 'சேதநகதமானவஜ்ஞாநம்' என்றதுக்குப்ரதிகோடி. "பேதியாதது" என்றத்தால் ஹேதுவிதம் - 'ஏகரூபமாய்என்று. "ஓர்" என்றுதொடங்கி உண்டானபதங்களுக்கெல்லாம் ஶப்தார்த்தம் - அத்விதீயமாய் இத்யாதி. "பேதித்தும் பேதியாதது"என்றதுக்குப்ரமாணம்- எல்லாப்பொருள்களுமிறே இத்யாதி. "கணக்கில்" என்றதுக்குபாவம் - இப்படிப்பட்ட இத்யாதி. "கதிர்" என்றுவிஶேஷித்ததுக்குபாவம் - 'இப்படி கூட்டுவன' இத்யாதிவாக்யத்ரயத்தாலே. "இப்படி

யினாய்] - ஜ்ஞாநஸ்வரூபனாயுள்ளவனே! [இணைக்கியித்யாதி] - நீ செய்கிறவற்றால் ப்ரயோஜந முள்ளது நீ யிருந்தவிடத்தே நினைத்துத் தேடிவந்தாருண்டாகிலன்றோ! [இணக்கி] - இசையும்படி வார்த்தைசொல்லி. "அவ்விடம் கிருஷ்ணன் வாராத விடம்" என்றுகிடீர் சொல்லிக்கொண்டுபோந்தது. [எம்மை] - உன்னோட்டைக்கலவி அபாயம் என்றறியாத எங்களை. [எந்தோழிமார்] - உன்னைவெறுக்கிறதென்? உன்பக்கல் குற்றமுண்டோ? சேர்த்தாராலேவந்ததுகிடீர்! பகவத்விஷயத்தில் வைலக்ஷண்யம் நெஞ்சிலேபட்டால் உபகாரகரைக்கொண்டாடுமென்னும் அர்த்தமிறே உள்ளோடுகிறது. "நித்ய யதீயவரணைளஶரணம்மதீய" (நித்யம்யதீயசரணௌஶரணம்மதீயம்) என்று இங்கோடு அங்கோடு வாசியற அவர்களாலே வருமதிறே. [எந்தோழிமார்]-ஸஜாதீயராயிறேசேர்ப்பது. [விளையாடப்போதுமி னென்னப்போந்தோமை] - அவர்கள் உனக்குப் பெருநிலை நிற்பதறியப் பெற்றிலோம். சொலவுக்குமேல்அகவாய் ஆராயப்பெற்றிலோம். "நீயுண்டு" என்றறிந்தோமாகில் இவ்விடமென்று நினையோம்; "அவர்களுனக்குப்பார்வை" என்னுமிடம் அறியப்பெற்றிலோம். "போகடுங்கோள்; ஆனாலென்? அவர்கள்சொல்லப்போந்திகோளாகில் உங்களுக்கு வந்த அநர்த்தமென்?" என்றான்: [உணக்கிநீவளைத்தால்]-உணக்குகையாவது - யரிக்கமாட்டாதே துவளும்படி பண்ணுகை. எங்களுக்கு இதுக்குமேல் வருவதென்? கால் வாங்கிப்போகப் பெறுகிறிலோம்; கிட்டிநின்று முகம்பார்த்து அநுபவிக்கப்பெறுகிறிலோம். இதுகாணவேண்டாதவர்கள் என்சொல்லுவர்கள்? "எத்தைச் சொல்லுவது: என்னை 'ஈஶ்வரன்' என்றிகோளாகில், உங்களை 'இடைச்சிறுபெண்கள்' என்றிகோளாகில், இனி எத்தைச்சொல்லுவது?" என்றான். "நீ ஸர்வேஶ்வரனானாலும், நாங்கள்இடைப்பெண்க

கூட்டுவன" இத்யாதிவாக்யவிவரணம் - 'கார்யங்கொண்டது 'இத்யாதிவாக்யந்வயம். ஞானமூர்த்தியினாய்" என்றதுக்கு - ஸங்கல்ப ரூபஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமானவனென்று நிற்அநுஸந்திசெய்து, ஸ்வரூப பரமாகவர்த்தாந்தரம் - 'ஜ்ஞாநஸ்வரூபனாயுள்ளவனே' என்று; ஏதத்ஸ்ருதாவர்த்தம் பரிதாபாதரம் - கதிர்ஞானமூர்த்தியினாய் என்று. "பேதியாததோர் கணக்கில்கீர்த்திவெள்ளம்" என்றபதங்கள் - யோஜநாந்வயத்திலும், ஸ்வரூபவிசேஷணங்கள். "இணக்கி" என்றதுக்கு ஹார்த்தபாவம் - நீ செய்கிற இத்யாதி. விவரணம் - அவ்விடம் இத்யாதி. இணக்கி - இசையும்படிவார்த்தைசொல்லி. 'கலவி அபாயமென்றறியாத' என்றது - கலவியாகிறஅபாயம் வருமென்றறியாத என்றபடி. "எம்" என்றதுக்குபாவம் - உன்னை இத்யாதி. ஸ்வாபதேஶபரம் - பகவத்விஷயத்தில் இத்யாதி. ஆஶ்ரயணதசையிலொழிய போகதசையிலும் ஆசார்யன்வேணுமோ என்ன - நித்ய்யயதீய இத்யாதி. "ஸ்ருவரஸ்ருவாவி" என்றதுக்கர்த்தம் - இங்கோடு இத்யாதி. தோழிமாராகவேணுமோ சேர்ந்தைக்கென்ன - ஸஜாதீயராய் இத்யாதி. "விளையாடப்போதுமினென்னப்போந்தோமை" என்றதுக்கு ஹார்த்தபாவம்- அவர்கள்உனக்கு இத்யாதி. பெருநிலை-ஸஹாயம். "விளையாடவாருங்கோள்" என்னாநிற்க, இவனுக்குப் பெருநிலையென்று சொல்லுகிறபடி எங்ஙனேயென்ன - லொலனுக்கு இத்யாதி. அகவாயாராய்ந்தால் நீங்கள் செய்வதென்? என்ன - நீயுண்டென்று இத்யாதி. "உனக்குப்பெருநிலைநிற்பது" என்றதை விவரிக்கிறார்-அவர்கள்உனக்கு இத்யாதி. பார்வை-பக்ஷிக்ரஹணஸாதநமான பக்ஷிமுதலானது. உணக்கி-துவளப்பண்ணி. "உணக்கி" என்றதுக்குபாவம் - எங்களுக்கு இத்யாதி. "பிணக்கியாவையும் யாவரும், விளையாடப்போதுமின்" என்றபதத்வயத்தையுங்கடாக்ஷித்து யோக்யதையில்லையென்கிறார் - என்னை ஈஶ்வரன் இத்யாதி. அதாவது - ஸர்வாதிகனான எனக்கு அதிக்ஷுத்ரைகளான உங்களோடு ஸம்ஶ்லேஷயோக்யதையில்லாமையாலே அபவாதவசநமில்லை என்றகருத்து. அவன்சொன்னதுக்கு உத்தரம் - நீ ஸர்வேஶ்வரனானாலும் இத்யாதி. இதுக்குபாவம் - ஸர்வேஶ்வரனுக்கைத்தம் நப்பின்னைப்பிராட்டியைக் கைப்பிடிக்கையாலே, இடைப்பெண்களானதுவே போதும் என்றபடி. மலி

ளான இதுவுமேயிறே சொல்லுகைக்கு ஹேதுவும்." ஈஸ்வரனோடொக்கப் பழிசொல்லுகைக்கு இவர்கள்தாம் ஒரு நப்பின்னைப்பிராட்டிபோல்வார்ஆகாதேதான். "அது என்தான்? என்னோடு உங்களுக்கு ஸாவஸ்யந்தமில்லை என்னாநின்றிகோளாகில் இத்தால் வருவதென்?" என்றான்: [என்சொல்லாருகவாதவரே] - "உன்பக்கல் எங்களுக்கு ஸாவஸ்யந்தமில்லை" என்று அறிவார்களோ உகவாதார்? நீ அல்பம்கால்தாழ்த்த இதுவே ஹேதுவாக "ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்று" என்னார்களோ? வளைக்கிற உன்னையும், வளைப்புண்கிற எங்களையும் அறிந்தோ அவர்கள் வார்த்தைசொல்லுவது? [என்சொல்லாருகவாதவரே] - உன்னுடைய மின்னிடைமடவார் உன்னை நெகிழ வார்த்தை சொல்லுவர்கள். பிரிவாற்றாமல் கண்ணுஞ்சுழலையிடுகிறவர்கள் எத்தைச் சொல்லார்? (அ)

ஒன்பதாம் பாட்டு.

உகவையால்நெஞ்சமுள்ளுருகிஉன்தாமரைத்தடங்கண்விழிகளின்
அகவலைப்படுப்பான் அழித்தாயுன்திருவடியால்
தகவுசெய்திலைஎங்கள்சிற்றிலும் யாமடுசிறுசோறுங்கண்டு நின்
முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே.

ஆ.—(உகவையால்.)-தன்னை எம்பெருமான் இப்படி வளைக்கச் செய்தேயும் அவனைக் கடாக்ஷியாதே யிருந்து தன் தோழிமாரோடேகூடச் சிற்றிலிழைத்துச் சிறுசோறிட்டு விளையாடாநிற்க, இவளுடைய கடாக்ஷமல்லது தனக்கு ஆத்மதாரணம் இல்லாமையாலே, "ஏதேனுமொருபடியால் இவள் நம்மைக் கடாக்ஷிக்கவுமைபாம்" என்று பார்த்து, இவள் தன்னைப்பார்க்கவுமாம்படியாக இவளுடைய சிற்றிலைத் தன்னுடைய திருவடிகளாலேயழித்தருள, இவளும் அவனுடைய திருமுகத்தைப்பார்த்து அவனுடைய திருக்கண்களினழகாலே வசீகரிக்கையாய், "உன்பக்கலுள்ள ப்ரீத்யதிசயத்தாலே நெஞ்சுருகிக்கொண்டு உன்தாமரைத்தடங்கண் விழிகளாகிற வலையிலே நாங்கள் அகப்படுகைக்காக, எங்கள் சிற்றிலும் யாமடுசிறுசோறும் உன்திருவடியாலழித்தருளினாய்; நாங்கள் விளையாடுகிறபடியைக் கண்டு உகந்துகொண்டு நிற்கமாட்டிற்றில்லை; ஒன்றும் க்ருபையில்லையாகாதோ?" என்றுகொண்டு, தன்னுடைய அநுபவஸாயத்தை, எம்பெருமான் தன்னழகாலே அழித்ததாக அவனையின்னுகாகிறாள்.

ஒ.—[உகவையால் நெஞ்சமுள்ளுருகி] - எம்பெருமான் தன்னைப் போகவொட்டாதொழிய, அவனைக் கடைக்கணியாதிருந்து, தானும் தோழிமாரும் சிற்றிலிழைக்கை தொடக்கமான லீலாவிநோதங்களாஜத்தாலே அந்தபரைகளைப்போலே யிருக்க,

---

அ.—(கண்டஇன்பம்.) - உபலப்யமான ஸுகதுக்க காலுஷ்ய ப்ரஸாத நிக்ரஹாநுக்ரஹ ரீதோஷ்ணத்யந்யோந்ய விருத்த வஸ்த்வந்தராத்மலாபதனாய், ஸுதுர்த்தர்ஶனனாயிருந்த ஸர்வேஶ்வரனை நான் கண்ணாலேகண்டு அடிமை செய்யும்படி புகுந்தருளின திருநகரி திருவிண்ணகரென்று திருநகரியை அநுஸந்திக்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், விருத்தமான விஸாதிவிஸ்தாரங்களையுடையனாய் ஸ்வஸாஹாயவைலக்ஷண்யத்தால் ஒருவராலும் காணவொண்ணாதபடி அறப்பெரியனாயிருந்து வைத்து என்னை அடிமைகொள்ளுகிறவனுடைய ஊரான திருவிண்ணகர் அவனுடைய திவ்யநகரங்களெல்லாவற்றிலும் நல்ல நகரம் என்கிறார். [கண்டஇன்பம்] - பரிச்சின்ன ஸுகம். [தண்டமும் தண்மையும்] - கொடுமையும் கண்ணளியும். [தழலும் நிழலும்] - உஷ்ணிக்கும் நெருப்பும் குளிரும் நிழலும்.

ப.—அநந்தரம், அந்த ப்ரீதியாலே திருவாய்மலர்ந்தருளுகிற அநுபவத்திற்குவரும் பதார்த்தங்களை விஸாதியாகவுடையனாய், தத்ஸஜாதீயதயா த்ரஷ்டுமஶக்யனான ஸர்வேஶ்வரனுக்கு அஸாதாரணதேஶம் திருவிண்ணகரென்கிறார்.

கண்ட - லோகத்ருஷ்டமான, இன்பம்துன்பம் - ஸுகதுக்கங்களையும், கலக்கங்களும் - துக்கமடியாகவரும் சித்தவ்யாகுலங்களையும், தேற்றமும் ஆய் - ஸுகமடியாக வரும் தெளிவுகளுமாய், தண்டமும் - (அக்கலக்கமடியாகவரும்) கோபமும், தண்மையும் - (தேற்றமடியாக வரும்) ப்ரஸாதமும், தழலும் -(கோபஸமமான ஔஷ்ண்யத்தையுடைய) அக்நியும், நிழலும் - (ப்ரஸாதஸமமான ஸௌம்யத்தையுடைய) நிழலும், ஆய் - ஆய், கண்டுகோடற்கு - ஸ்ஜாதீயதயா காண, அரிய - அரியனாயிருக்கிற, பெருமான் - ஸர்வேஶ்வரனாய், என்னை - என்னை, ஆள்வான் - அடிமைகொண்டவன், ஊர் - ஊர், தெண் - தெளிந்தும், திரை - திரைக்கிளப்பத்தையுமுடைய, புனல் - ஜலத்தாலே, சூழ் - சூழப்பட்ட, திருவிண்ணகர் - திருவிண்ணகராகிற, நல்நகர்-திவ்யநகரம்.

இ.—இரண்டாம்பாட்டில், ஸ்வயத்நத்தால் ஒருவர்க்குங் காணவொண்ணாத பெருமையையுடையனாய் வைத்து, என்னை அடிமைகொள்ளுகிறவன் ஊரான திருவிண்ணகர் ஸர்வவிலக்ஷணமென்கிறார்.

யம் பண்ணித்திரிந்த நான் தேடிச்சென்று திருநறையூரிலே காணப்பெற்றேனென்றபடி. திருமொழி ஆறும்பத்து, எட்டாந்திருமொழி, "மான்கொண்ட" இத்யாதி. (க)

[கண்ட இன்பம்] - பரிச்சின்னஸுகம். ப்ரத்யக்ஷஸித்தமன்றிக்கே ஸாமான்ய ஸித்தமாய் அபரிச்சிந்நமான ஸுகத்திலேயிறே தமக்கு அந்வயம். [துன்பம்] - அநுகூலமல்லாத துக்கம். [கலக்கங்கள்] - அஜ்ஞாநங்கள். [தேற்றம்] - ஜ்ஞாநம். [தண்டம்] - கோபம். [தண்மை] - ப்ரஸாதம். [தழலும்] - உஷ்ணத்தைப்பண்ணும் அக்நியும். [நிழலும்] - ஶீதஸ்வபாவமான நிழலும். [கண்டுகோடற்கு அரிய பெருமானென்னையாள்வாரவர்] - ஸ்வயத்நத்தாலேகாண ஆசைப்பட்டார்க்கு அரியனாயிருக்கிற வுண்கிறார், தான் மேல்விழுந்து என்னைக்காண ஆசைப்படுகிறான்; கண்டுகொள்வதற்கரிய ஸர்வேஶ்வரனாய் என்னை அடிமைகொண்டவரவர். [தெண்திரை இத்யாதி] - தெளிந்ததிரையை யுடைத்தான ஜலத்தாலே சூழப்பட்ட திருவிண்ணகர். பரமபதமுத்தேஶ்யமானவாறே விரஜையுமுத்தேஶ்யமாமாபோலே, அவ்வூர் உத்தேஶ்யமானவாறே அங்குள்ள ஜலஸம்ருத்தியும் உத்தேஶ்யமாயிருக்கிறதிறே இவர்க்கு. [நன்னகரே]- * கலங்காப் பெருநகரம் இதுக்கு ஸத்ருஶமன்று; விடாய்த்தவிடத்திலே விடாய்தீரலாம்படி இருக்கிற ஏற்றமுண்டிறே இதுக்கு.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஸ்வயத்நத்தாலே ஒருவர்க்கும் காணவொண்ணாத பெருமையையுடையவனாய்வைத்து என்னை அடிமைகொள்ளுகிறவன் ஊரான திருவிண்ணகர் ஸர்வவிலக்ஷண மென்கிறார்.

[கண்டஇன்பம்] - "ஐங்கருவிகண்டவின்பம்" என்னுமாபோலே பரிச்சிந்நஸுகம். [துன்பம்] - காமபேதமாத்ரமாய் அத்தோடொத்த துக்கம். [கலக்கங்களுந்தேற்றமுமாய்] - இதரவிஷயங்களினுடையஅலாபத்தால் வரும் கலக்கமும் அவற்றினுடைய லாபத்தால் வரும் தேற்றமும். [தண்டமுந்தண்மையும்] - கோபமும், ப்ரஸாதமும். [தழலுந்நிழலுமாய்] - உஷ்ணத்தைப் பண்ணக்கடவதான அக்நியும், ஶைத்யத்தைப் பண்ணக்கடவதான நிழலுமாய். [கண்டுகோடற்கரிய பெருமான்] - இவையெல்லாவற்றாலும் அவனுடைய அபரிச்சேத்யதை சொல்லிற்றாயிற்று. இவருடைய ஜ்ஞாந ஸைஶத்யமிருந்தபடி என்தான்! இங்கே சில விஶேஷணங்களைச் சொல்லா, கண்டுகோடற்கரிய பெருமானென்று அவனைச் சொல்லாநின்றார்; கீழே சிலவற்றைச்சொல்லா, "பல்வகையும் பரந்தபெருமான்" என்றாநின்றார்; இதென்ன அநுஸந்தாந க்ரமந்தான்! இவனையொழிந்ததுஒருவஸ்துவுக்கு ஸத்ஸாவமின்றிக்கேயிருக்கிறபடியிறே. நல்லாரும் நம்பிபூர்வஸோ

இரண்டாம்பாட்டு.—கண்டஇன்பம் இத்யாதி. "கண்டுகோடற்கரிய" இத்யாதிமேலெல்லாம் கடாகஶித்தவதாரிகை - ஸ்வயத்நத்தாலே இத்யாதி.

இன்பமென்றாதே, "கண்டஇன்பம்" என்றதுக்கு ஸ்வரூபம் - ஐங்கருவி இத்யாதி. "இன்பம் துன்பம்" என்று ஒக்கவெடுக்கையாலே - மோக்ஷாபேக்ஷயாவிரண்டும் துஃகமாயிருக்குமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - காமபேதமாத்ரம் இத்யாதி. 'இவையெல்லாவற்றாலும்' இத்யாதி, "கண்டுகோடற்கரிய" என்றதுக்கவதாரிகையிற்சொன்ன அர்த்தமொழிய இதுவும்ஓர்அர்த்தமென்று கண்டுகொள்வது. இவையெல்லாவற்றாலுமென்றது - * கண்டஇன்பந்தொடங்கி உக்தமான இவையெல்லாவற்றாலுமென்றபடி. அதாவது - "இவ்வளவு" என்று எல்லைகாணமுடியாதவிஸ்தாரத்தையுடைய ஸர்வேஶ்வரனென்றபடி. "கண்டஇன்பம்" என்றுதொடங்கி, "தழலும் நிழலும்" என்ற - விஶேஷ்யவிஶேஷணங்களைப் பிரிய நினையாதே சொல்லிக்கொடுபோந்து, "கண்டுகோடற்கரியபெருமான்" என்ற - விஶேஷ்யமானவனை அருளிச்செய்தபடியை அநுஸந்தித்து வ்யாக்யாதாவின் ஈடுபாடு- இவருடைய இத்யாதி. ஸைஶத்யமாவது - ஸர்வமும் ப்ரஹ்மாத்மகத்வேந தோற்றுகை. விவரணம் - இங்கேசில இத்யாதி. இவ்வநுஸந்தாநக்ரமத்துக்கடியேது? என்ன - இவனையொழிந்தது இத்யாதி.

பதிதாஸருங் கூடத் திருமலைக்குப் போகாநிற்க, ஸ்ரீஸேநாபதிதாஸர் தண்டையிட்டுத்தூற்றை யடிக்க, நல்லார் "அர்த்தகாமநிமித்தமான த்வேஷம் இத்தோடின்றிக்கேயிருக்க, நிர்நிபந்தநமாக ஈஶ்வரவிஶ்ரமதியை நலிவதே!" என்ற வார்த்தையை நினைப்பது. †(ஸ்வயத்நத்தால் கண்டுகோடற்கரிய ஸர்வேஶ்வரன்). [என்னையாள்வானூர்] - என்னை இழக்கமாட்டாமல் * மின்னிடைமடவாரில் மிறுக்கெல்லாம்பட்டு என்னை அடிமைகொண்டவனூர். [தெண்திரையித்யாதி] - தெளிந்த திரைகளையுடைத்தான புனல்களாலே சூழப்பட்ட திருவிண்ணகராகிற நன்னகர். [தெண்திரைப்புனல்சூழ்] - திவ்யநதியானவிரஜைக்குப் போலியான ஆறும்உண்டாகப்பெற்றது. அங்கிருக்கிறவன் இங்கேவந்துநின்றால் அங்குள்ளவையெல்லாம் இங்கே உண்டாகத்தட்டில்லையே. [திருவிண்ணகர்நன்னகரே] - இவ்வளவில் முசங்காட்டாத ஸ்ரீவைகுண்டமும் ஒருதேஶமாயிற்றதோ ? அவன் விரும்பினவிடம் ப்ராப்யபூமியாமித்தனையிறே. (௨)

மூன்றும் பாட்டு.

நகரமும்நாடுகளும் ஞானமும்மூடமுமாய்
நிகரில்சூழ்சுடராய்இருளாய் நிலனாய்விசும்பாய்ச்
சிகரமாடங்கள்சூழ் திருவிண்ணகர்சேர்ந்தபிரான்
புகர்கொள்கீர்த்தியல்லாலில்லை யாவர்க்கும்புண்ணியமே.

ஆ.—(நகரமும்.)-நகரஜநபதஜ்ஞாநஅஜ்ஞாந தமஃப்ரகாஶஅவநிமஹாந ஸர்வநியந்தாவாயிருந்த, சிகரமாடங்கள்சூழ் திருவிண்ணகர் சேர்ந்தபிரானுடைய நிரவயிக காருண்யமல்லது மற்று உஜ்ஜீவநோபாயமில்லையென்று, தமக்கு உஜ்ஜீவநோபாயமான காருண்யகுணத்தை அநுஸந்திக்கிறார்.

ஓ.—மூன்றும்பாட்டில், திருவிண்ணகர்சேர்ந்த பிரானுடைய கல்யாணகுணங்களை ஓதிய ஒருவர்க்கும் உத்காரமில்லை என்கிறார்.

[நகரமும் நாடுகளும்] - சிறுமை பெருமையாலே விரோதஞ்சொல்லிற்று. [நிலனாய் விசும்பாய்] - ரூபியான நிலனும் அரூபியான விசும்பும்ஆய். [புகர்கொள்

ஜ்ஞாநாதிகர்க்கு ப்ராப்தாத்மகமாய்த் தோற்றுமென்றதுக்கு ஐதிஹ்யம் - நல்லாரும் இத்யாதி. திருவிண்ணகரை பரமபதத்தோடொத்ததாக மேலேயருளிச்செய்கையாலே, இங்குத்தையில் ஆறும் விரஜையோடொத்ததென்கிறார் - திவ்யநதியான இத்யாதி. இவ்விடத்தைப் பரமபதமென்றும், இங்குத்தையாற்றை விரஜையென்றும் சொல்லுவானென் ? என்ன - அங்கிருக்கிறவன் இத்யாதி. திருவிண்ணகராகிறநன்னகரென்று - கீழ் அருளிச்செய்து, திருவிண்ணகரே நன்னகரென்றர்த்தாந்தரம் - இவ்வளவில் இத்யாதி. பரமபதமே நன்னகரமொழிய, இத்தைநன்னகரமாகச் சொல்லலாமோ ? என்ன - அவன்விரும்பினவிடம் இத்யாதி. யத்வா, லீலாவி஭ூதியிலிருப்பு பரமபதம்போலே உத்தேஶ்யமாமோ ? என்ன - அவன்விரும்பின இத்யாதி. திருவிண்ணகரான நன்னகர் - என்னையாள்வான் வாழ்வென்றுதல்; என்னையாள்வான் வாழான திருவிண்ணகரே நன்னகரென்றுதல். (௨)

---

† குண்டலிக்ரந்தம் க்வாசித்கம்.

கீர்த்தி] என்றது - திருநாட்டுக்காட்டில் திருவிண்ணகரிலே புகுந்தபின்பு அவனுடைய கல்யாண குணங்கள் நிறம்பெற்றபடி.

ப.—அநந்தரம், ஜ்ஞாநாஜ்ஞாநாநுவேந்திபதார்த்தங்களை விஸ்ருஷ்டியாகவுடைய ஸர்வேஶ்வரனுடைய உஜ்ஜ்வலமான குணப்ரதையையொழிய வேறு ஒருவர்க்கும் உத்தாரகமில்லையென்கிறார்.

நகரமும் - விசேஷஜ்ஞப்ரசுரமான நகரமும், நாடுகளும் - அவிசேஷஜ்ஞப்ரசுரமான நாடும், (தத்ததாகாரசேஷதுவான), ஞானமும்-ஜ்ஞாநமும், மூடமும்-மௌக்த்யமும், ஆய்-ஆய், (அந்த ஜ்ஞாநாஜ்ஞாந ஸாம்யத்தையுடைத்தாய்), நிகர் - ஒப்பு, இல் - இன்றியே, சூழ்-பரந்த, சுடர் - ப்ரகாசமும், ஆய்-, இருள் - (தமோவிதமான) இருளும், ஆய்-ஆய், நிலன் - (இருளுக்கு ஸ்த்தாநமான) பூமியும், ஆய்-, விசும்பு-(ப்ரகாசஸ்த்தாநமான) ஆகாசமும், ஆய்-ஆய், சிகரம் - சிகரங்களையுடைத்தான, மாடங்கள் - மாடங்கள், சூழ்-சூழ்ந்த, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - பொருந்திவர்த்திக்கிற, பிரான் - ஸர்வேஶ்வரனுடைய, புகர் - ஔஜ்ஜ்வல்யத்தை, கொள் - உடைத்தான, கீர்த்தி - குணப்ரதையை, அல்லால் - ஒழிய, யாவர்க்கும் - ஸர்வர்க்கும், புண்ணியம் - உஜ்ஜீவநஹேதுவான ஸுக்ருதம், இல்லை - இல்லை.

இ.—மூன்றாம்பாட்டில், திருவிண்ணகர் அப்பனுடைய கல்யாண குணங்களையொழிய வேறு ஒருவர்க்கும் உத்தாரகமில்லை என்கிறார். [நகரமும்நாடுகளும்] - சிறுமை பெருமையால்வந்த விசேஷமாதல்; நகரிகர் லோகப்ரயோஜநராய் உத்க்ருஷ்டராயிருப்பர்கள்; நாட்டிலுள்ளார் அபக்ருஷ்டராய் தேஹயாத்ரைமாத்ரமேப்ரயோஜநமாயிருக்குந்தாழ்வு உண்டு; அத்தால்வந்த விசேஷமாதல். [ஞானமும் மூடமுமாய்] - ஜ்ஞாதாக்களும் அஜ்ஞருமாய். [நிகரில் சூழ்கடலாயிருளாய்] - ஒப்பின்றிக்கே சூழப்பட்ட ப்ரளயத்தையுடைத்தான தேஜஸ்ஸாய், அதுக்கு எதிர்த்தலையான தமஸ்ஸாய். [நிலனாய் விசும்பாய்] - கடிநமான ஸ்ரீமியாய், அச்சமான ஆகாசமாய். [சிகரமாடமிடையாநின்ற] - சிகரங்களைச் சேரவைத்தாற்போலே இருக்கிற மாடங்கள் சூழ்ந்த திருவிண்ணகரிலே நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன். [புகர்கொள்கீர்த்தி] - ஸத்மாவஸேஷமாகிற பரமபதத்திலுள்ளது; அந்த்யகாரத்தில் தீபம்போலே புகர்பெற்றது, இங்கேயிறே கீர்த்தி. [அல்லாலில்லையாவர்க்கும் புண்ணியமே] - * மின்னிடைமடவாரில் இழந்த மகிழ்ச்சி அன்றியே, இதில் இழியாதார்க்கும் கீர்த்தியல்லது உஜ்ஜீவந ஸாயநமில்லை.

ஈடு.—மூன்றாம்பாட்டு. திருவிண்ணகரப்பனுடைய கல்யாண குணங்களையொழிய வேறு ஒருவர்க்கும் உத்தாரகமில்லை யென்கிறார்.

[நகரமும் நாடுகளும்] - லோகப்ரதாநராய் ஸுகித்திருக்கும் நகரத்திலுள்ளார், கர்ஷகராய்க்கொண்டு தேஹயாத்ரை போக்கியிருக்கும் நாட்டிலுள்ளார். அன்றிக்கே, பரிச்

மூன்றாம்பாட்டு.—நகரமும் இத்யாதி. "திருவிண்ணகர்சேர்ந்தபிரான் புகர்கொள்கீர்த்தி" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - திருவிண்ணகரப்பனுடைய இத்யாதி. 'ஒருவர்க்கும் - வேறு - உத்தாரகமில்லை' என்றந்வயிப்பது. கீழிற்பாட்டிலே "நன்னெஞ்சே" என்று - ப்ராப்யத்வமும், இப்பாட்டிலே, "யாவர்க்கும்புண்ணியம்" என்று - ப்ராபகத்வமும் சொல்லுகிறது.

விருத்தவிபூதிகத்வம் சொல்லுகிற இதிலே "நகரமும் நாடுகளும்" என்கிறாரிறே; இதுக்கு விரோதமேது? என்ன: - இரண்டிலுமகையாகவிரோதமுண்டென்கிறார் - போகப்ரதாநராய் இத்யாதி

சிந்நமாயுள்ளவையும், அபரிச்சிந்நமாயுள்ளவையும் என்றுமாம். [ஞானமும் மூடமுமாய்] - பதார்த்தஸ்வஹாவத்தையுள்ளபடி க்ரஹிக்கக் கடவதான ஜ்ஞாநமும், அத்தைவிருத்தமாக ப்ரதிபத்தி பண்ணக்கடவதான அஜ்ஞாநமும். [நிகரில்சூழ்சுடராயிருளாய்] - உபமாந ரஹிதமாய்க் கொண்டு எங்கும் வ்யாபித்து நிற்கிற தேஜஸ்ஸாய், அதுக்கு எதிர்த்தட்டான அந்யகாரமாய். [நிலனாய் விசும்பாய்] - ரூபவதியான பூமியும், அரூபியான ஆகாசமுமாய் கடினையான பூமியும், அச்சமான ஆகாசமுமாய் என்றுமாம். [சிகரமித்யாதி] - பர்வத சிகரங்களைக் கொண்டுவந்து சூழ வைத்தாற்போலே யிருக்கிற மாடங்களாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே பொருந்திநிற்கிற உபகாரகன். [புகர்கொள்கீர்த்தியல்லாலில்லை] - பரம பதத்தில் புகழ் மழுங்கியாகாதே கிடப்பது; அங்குள்ளாரில் தன்னிற்குறைந்தாரில்லையே; "ஸமஸ்தாயஸ்ய ஶுபாமதா:" (மமஸாதர்ம்யமாகதா:), "வாஸுதேவஸ்ஸர்வமிதி" (பாமம்ஸாம்யமுபைதி), "தம்மையேயொக்கவருள்செய்வர்" என்று தன்னோடு ஸாம்யா பந்நராயிறே அங்குள்ளாரிருப்பது. குறைவாளர்க்கு முகங்கொடுத்தாலிறே புகழ் கிறர்பெறு வது? [யாவர்க்கும் புண்ணியமே] -† (*மின்னிடைமடவாரிலிருப்பத்த நம்தேயன்றிக்கே) ஸர்வர்க்கும் உத்தாரகம் அதுவல்லதில்லை. தாந்தாம்தேடிக் கொள்ளுமவையெல்லாம் கழுத் துக்கட்டியா மத்தனை; *மின்னிடைமடவாரில் - அவன்வர, "வேண்டா" என்று முடிந்து போகப்புக்கதிறே; இவன் பார்க்குமுபாயம் இவனுக்கும் கழுத்துக்கட்டியாம்; அவன் காட்டுமுபாயம் அவனுக்கும் காற்கட்டாம்; இதிறே உபாயத்தில் அடிப்பாடு.

வாக்யத்வயத்தாலே. "நிலனாய்விசும்பாய்" என்றதுக்கும் இரண்டுவகையாக விரோதமருளிச்செய்கிறார் - ரூபவதியானஇத்யாதி வாக்யத்வயத்தாலே. * கீர்த்தியாவது - நயாதிகுணங்கள். "திருவிண்ணகர் சேர்ந்தபிரான் புகர்கொள்கீர்த்தி" என்கையாலேஸாவம் - பரமபதத்தில் இத்யாதி. மழுங்குகைக்கு ஹேதுவேது? என்ன - அங்குள்ளாரில் இத்யாதிவாக்யத்வயம். இக்குப்புகருண்டானைக்குஹேது - தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கையாலேயென்கிறார் - குறைவாளர்க்கு இத்யாதி. "ஸமஸ்தாயஸ்ய ஶுபாமதா: । ஸமிதுவிநாவஜாயதெவுஉயெநவுயுஇவ" இதிவசனத்தினாலாம் உதர்த்தபோ.[2] "ரிபமு உவெபமஸாஸ்ய வாஸுதேவெதி" இதி முன்டோப நிஷதி. 'தம்மையேயொக்கவருள்செய்வர்' - தம்மோடு ஸாம்யாபத்தியைத் தந்தருளுவர் இத்யர்த்த:. திருமாலை பதினேராம்பத்து முன்றாந்திருமொழி அநுசந்தாபட்டு, "தம்மையேநாணுவரைந்தி" இத் யாதி. ஸர்வர்க்குமென்றது - * மின்னிடைமடவாரில் இருப்பத்த நம்மோடு, இதிலிருப்பாத அல்லாதா ரோடு வாசியற எல்லார்க்குமென்றபடி. "யாவர்க்கும் புண்ணியம்-இல்லை" என்றந்வயம். வேறுஉபாய மில்லையென்கிறதென்? உபாயாந்தரங்களுண்டேயென்ன - தாந்தாம் இத்யாதி. அப்படி கழுத்துக் கட்டியோ? என்ன - மின்னிடை இத்யாதி. "ஸ்வயத்நம் ப்ரதிபந்தகம், அவன்கீர்த்தியேபுபாயம்" என் கிறஇத்தால் - இவன்பார்க்கிற வுபாயத்தினுடைய பந்தகத்வத்தையும், அவன்காட்டு முபாயத்தினுடைய ஏற்றத்தையும் அருளிச்செய்கிறார் - இவன்பார்க்கும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. அவனுக்கும் காற் கட்டாமென்றது - "போகுமாபோலே" என்றாலும் போகமாட்டாமையை நினைத்து. அடிப்பாடு - பதவி.(க.)

நான்காம் பாட்டு.

புண்ணியம்பாவம் புணர்ச்சிபிரிவென் றிவையாய்
எண்ணாமாய்மறப்பாய் உண்மையாய்இன்மையாய்அல்லனாய்
திண்ணமாடங்கள்சூழ் திருவிண்ணகர்சேர்ந்தபிரான்
கண்ணனின்னருளேகண்டுகொண்மின்கள்கைதவமே.

அ.—(புண்ணியம்.) - புண்யபாப தத்பலஸுஹ்ருதுஷ்ஸஹ விஷய ஸம்ஸ்லேஷ விஸ்லேஷ ஸ்மரணவிஸ்மரண ஸாவாஸாவாதி ஸகலபதார்த்தாந்தர்யாமிதயா வ்யாப்தனாயிருந்துவைத்தே தத்ஸுகதோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனாயிருந்த, திண்ணமாடங்கள்சூழ் திருவிண்ணகர் சேர்ந்த பிரானுடைய க்ருபையாலே ஸகலபுருஷார்த்த ஸாதநபூத கரணகளைபரப்ரப்ருதி ஸர்வபதார்த்தங்களும் ஸ்ப்ருஷ்டமான இவ்வர்த்தம் திருவிண்ணகரிலே ப்ரத்யக்ஷிக்கலாமென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், புண்யபாப ரூபாதியால் எம்பெருமானுக்கு விசேஷணத்வேந தோற்றுகிற விஶேஷங்களெல்லாம் அவன் க்ருபையாலே உண்டாயிற்று; இது பொய்யல்லாமை ஆராய்ந்து பார்த்துக்கொள்ளுங்கோள் என்கிறார்.

[புணர்ச்சி பிரிவு] - புண்யபாப மூலரூபமான ஸம்ஸ்லேஷவிஸ்லேஷங்கள். அல்லனாயென்கிறது - புண்யபாபாதிகளுக்கு நியாமகனாய் அவற்றுக்கு வஶ்யனன்றிக்கே யிருக்குமென்கிறது. இன்னருளென்கிறது ஒருகாரணமறப்பண்ணும் க்ருபை.

ப.—அநந்தரம், கீழ்ச்சொன்ன புகர்கொள் சீர்த்தியாவது - புண்யபாபாதி பந்தி பதார்த்தவிஶேஷாதிகளான க்ருஷ்ணனுடைய நிர்ஹேதுகக்ருபை யென்கிறார்.

புண்ணியம்பாவம் - இஷ்டாநிஷ்ட ஹேதுவான புண்யபாபங்கள், புணர்ச்சி பிரிவு - தத்க்ருதமான தத்தத்ஸம்ஸ்லேஷவிஸ்லேஷங்கள், என்று - என்று, இவை ஆய் - இவையாய், எண்ணாம் - ஸம்ஸ்லேஷவிஸ்லேஷகுணகையாய், ஆய் —, மறப்பு ஆய் - விஸ்மரணமுமாய், உண்மை ஆய் இன்மை ஆய் - தத்தத்ஸுகதுக்கங்களுடைய ஸத்பாவாஸத்பாவங்கள் ஆய்வைத்து, அல்லன் ஆய் - தத்தத்கர்மவஶ்யனன்றிக்கே இருப்பானாய், திண்ணம் - ஸ்திரமான, மாடங்கள் - மாடங்கள், சூழ் - சூழ்ந்த, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - சேர்ந்த, பிரான் - ஸர்வாதிகனான, கண்ணன் - க்ருஷ்ணனுடைய, இன் - அதிமாநுஷ சேஷ்டிதமாய், அநந்யப்ரயோஜநமான, அருளே - க்ருபையையே, கண்டுகொண்மின்கள் - கீழ்ச்சொன்ன உத்தரக சீர்த்தியாகக்கண்டுகொள்ளுங்கோள். கைதவமே - இது கைதவமோ? பரமார்த்தமென்று கருத்து.

இ.—நாலாம்பாட்டில், இவ்விஶேஷங்கள் அவன் க்ருபையாலே உண்டாயிற்று: இது பொய்யல்லாமை பார்த்துக்கொள்ளுங்கோள் என்கிறார். [புண்ணியமித்யாதி] - ஸுகதுக்கஹேதுவான புண்யபாபங்களும், தத்ஸம்பந்தமான அநிமித்தஸம்ஸ்லேஷ விஸ்லேஷங்களும், அநுகூலவிஷயமான எண்ணமும், ப்ரதிகூலவிஷயமான விஸ்மருதியும், ஸத்பாவாஸத்பாவங்களுமாய். [அல்லனாய்] - புண்யபாபங்களை அநுபவியாநிற்கச்செய்தே † தான் அகர்மவஶ்யனாய். [திண்ணமித்யாதி] - ப்ரளயத்திலும் அழியாத மாடங்கள். [பிரான் கண்ணன்] - அவ்வைதாபத்துக்குப் பிறந்தட்டனான்றோப்

பெறுகைக்காகத் திருவிண்ணகரிலேவந்து நிற்கிற க்ருஷ்ணனான உபகாரகன். [இன்னருளே]-தன்பேறாகப்பண்ணும் க்ருபையாலே இதுஅடங்கலுண்டாயிற்று. [கைதவமே]- இதில் அர்த்தவாதமுண்டோ? இல்லையிறே. [கண்டுகொண்மின்கள்] - ஆராய்ந்துகொள்ளுங்கோள்.

௩௫.—நாலாம்பாட்டு. புண்யபாபாதியாய் எம்பெருமானுக்குவிபேஷணத்வேந தோற்றுகிற விஹாதியெல்லாம் அவன்க்ருபையாலே உண்டாயிற்று என்கிறார். [புண்ணியம்பாவம்] - ஸுகஸாதநமான புண்யம், துஃகஸாதநமான பாபம். [புணர்ச்சிபிரிவு] - புண்ய஫லமான ஸம்ஶ்லேஷம், பாப஫லமான விஶ்லேஷம். [எண்ணமாய் மறப்பாய்] - அபிமதவிஷயத்தில் ஸ்மிருதி, அநபிமத விஷயத்தில் விஸ்மிருதி. [உண்மையா யின்மையாய்] - அஸ்திஶப்தவாச்யமுமாய், நாஸ்திஶப்தவாச்யமுமாய். ஸத்஭ாவாஸத்஭ாவ மென்னுதல். சேதநாசேதநங்களென்னுதல். [அல்லனாய்] - புண்யபாபாதிகளுக்கு நியாமகனாய், அவற்றுக்கு வஶ்யனன்றிக்கே யிருக்குமென்கிறது. [திண்ண மித்யாதி] - "வாஸுதேவஹ்ருஹம்வேகம் ப்ரளயாவயதிஸ்ஸ்தி ரம்" (வாஸுதேவக்ருஹம்த்வேகம்ப்ரளயாவயதிஸ்ஸ்தி ரம்) என்கிறபடியே, ப்ரளயகாலத்துக்கும்அழியாதபடி திண்ணிதான மாடங்களாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே சேர்ந்து நிற்கிற உபகாரகனான க்ருஷ்ணன். [இன்னருளே] - புண்யபாபாதிகளாய்க்கொண்டு அவனுக்கு விபூதியாய்த் தோற்றுகிறவையெல்லாம் அவனுடைய க்ருபையாலே உண்டாயிற்று. பாபமும் அவன் க்ருபையாலேயோ என்னில்?— அதுவும்அப்படியே; சேதநனுடைய பூர்வ கர்மாநுகுணமாக ப்ரவர்த்திப்பிக்கையினாலே அதுவும்அவன் க்ருபையாலேயாமத்தனை. எல்லாம் செய்தாலும், தீமை அவன்க்ருபையாலே வரக்கூடுமோ என்னில்?— தீயத்தைக்காட்டி வெதுப்பி நல்வழிபோக்குகையினாலே கூடுமிறே. [இன்ன

நாலாம்பாட்டு.—புண்ணியம் இத்யாதி. "புண்ணியம்பாவம்" என்றுதொடங்கி, "கண்ணனின்னருளே" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - புண்ய பாபாதியாய் இத்யாதி.

"உண்மை, இன்மை" என்கிற தர்மவாசகஶப்தத்துக்கு - தர்மிபரத்வம் ஸ்வரஸமென்றென்று 'ஸத்பாவாஸத்பாவமென்னுதல்' என்கிறார். "அஸ்திஶப்தவாச்யமுமாய்" இத்யாதியின் விவரணம் - 'சேதநாசேதநங்களென்னுதல்' என்று. "புண்ணியம்" என்று தொடங்கி, "அல்லனாயிருக்கிறவன் - கண்ணன்" என்று வாக்யசேஷம்பண்ணி, ஏவம்விதமானவையெல்லாம் அவன்க்ருபையாலேயுண்டாயிற்றுஎன்றுஅந்வயம் விவக்ஷித்த அர்த்தம்-†பிராணிகளாய் இத்யாதி. தீமை அவன்க்ருபையாலே வரக்கூடுமோ? என்றது - தீமை அவன் நிர்ஹேதுகவிஷயீகாரத்தாலே வரக்கூடுமோவென்றபடி. அதுவும் ஹிதரூபமாகையாலே கூடுமென்று பரிஹரிக்கிறார் - தீயத்தை இத்யாதி. 'தீயத்தைக்காட்டி' என்றவிடத்திலே - "ஸுஹ்ருதிவநிமஜ்ஜாநெ ஹ்ருஃ" இத்யாத்யநுஸந்தேயம். 'கண்டுகொண்மின்கள்' ஶாஸ்த்ரங்களிலே இதி ஶேஷம். "கைதவமே" என்கிற ஸ்வரத்துக்கர்த்தம் - நான்சொல்லுகிற இத்யாதி. இந்தஅர்த்தத்தில், ஏகாரம் - †பிரிநிலையிலே. கைதவமே - கைதவமோ. இது கபடமோ என்றபடி. பரமார்த்தமென்றுகருத்து. கைதவம் - கபடம். த்விதீயார்த்தத்துக்கு, கைதவமென்று - க்ருத்ரிமமாய், க்ருத்ரிமமாவது - க்ருதகமாய் பண்ணப்பட்டவையடங்கலும் என்றபடி. இப்படி விசேஷணமாய்த் தோற்றுகிற புண்யபாபாதிகளெல்லாம், புண்ணியமென்றுதொடங்கி, அல்லனாய்க்கொண்டிருக்கிற திண்ணமாடங்கள் வரைதொடங்கி, கண்ணனுடைய நிர்ஹேதுகக்ருபையாலே யுண்டாயிற்று; கைதவமேயென்று காரியாம்ஶத்தை அத்யாஹரித்துக் கொள்வது. அன்றிக்கே, கைதவமென்று

---

† விஶேஷணங்களால் எதிர்மறையிலே என்று இருக்கலாம்.

ருள்] - நிர்ஹேதுக விஷயீகாரம். [கைதவமே] - நான்சொல்லுகிற இதில் அர்த்தவாதமில்லை. [கண்டு கொண்மின்கள்] - நீங்களும் எல்லாங் கண்டுகொள்ளுங்கோள்; அன்றிக்கே, [கைதவமே] - க்ருதகமென்றபடியாய், பண்ணப்பட்டவை யடங்கலும் அவனுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்தாலே. (ச)

ஐந்தாம் பாட்டு.

கைதவம்செம்மை கருமைவெளுமையுமாய்
மெய்பொய்இளமைமுதுமை புதுமைபழமையுமாய்
செய்ததிண்மதிள்சூழ் திருவிண்ணகர்சேர்ந்தபிரான்
பெய்தகாவுகண்டீர் பெருந்தேவுடைமூவுலகே.

ஆ.—(கைதவம்.) - ஆர்ஜவாநார்ஜவ விதநீல ஸத்யாஸத்ய யௌவநவார்த்தக நவத்வாநவத்வாதிரூபனான எம்பெருமான் ப்ரஹ்மாதி ஸ்தம்பபர்யந்த நிகிலஜந்து பரிபூர்ணமான ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷக னென்கிறார்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், சிறியார் பெரியார் என்றாதே எல்லார்க்கும் ரக்ஷகன் திருவிண்ணகர் சேர்ந்த பிரான் என்கிறார். [பெய்தகாவு கண்டீர் பெருந்தேவுடை மூவுலகே] - ப்ரஹ்மாதிபிபீலிகாந்தமான ஸகல ஜந்துக்களும் அவனுக்கினிதாமே. எல்லாரையுமொக்க ஸ்யாவரமாகப் பேசுகையாலே தந்தாமுடைய ஸர்வ நிர்வாஹகத்வமும் ஸமவயீநமென்று கருத்து.

ப.—அநந்தரம், உத்க்ருஷ்டாபக்ருஷ்ட ரூப ஸமஸ்தவஸ்துப்ரகாரகனான ஸர்வேஶ்வரனுக்கு ஸகலஜகத்தும் லீலோத்யாநமென்கிறார்.

கைதவம் - (அபக்ருஷ்டமான) கௌடில்யமும், செம்மை - (உத்க்ருஷ்டமான) ஆர்ஜவமும், (தத்தத்ஸத்ருஶமான), கருமை வெளுமையும்ஆய் - கருமை வெளுமையும் ஆய், மெய்பொய் - அப்படி உத்க்ருஷ்டாபக்ருஷ்டரூப ஸத்யாஸத்யங்கள், இளமை முதுமை - யௌவநவார்த்தகங்கள், புதுமைபழமையும்ஆய்- அபிநவத்வ ஜீர்ணத்வங்களும் ஆய், செய்த - தொழிற்படச்செய்யப்பட்டு, திண் - சிக்கெனவையுடைத்தான, மதிள் - மதிளாலே, சூழ்-சூழப்பட்ட, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - சேர்ந்த, பிரான் - ஸர்வேஶ்வரன், பெய்த - வைத்த, காவுகண்டீர் - லீலோத்யாநங்கிடீகோள், பெருந்தேவு - ப்ரஹ்மாத்யுத்க்ருஷ்ட தேவதைகளை, உடை - உடைத்தான, மூவுலகு - த்ரைலோக்யமும்.

இ.—அஞ்சாம்பாட்டில், சிறியார் பெரியார் என்றாதே ஸர்வர்க்கும் ரக்ஷகன் திருவிண்ணகர் சேர்ந்த பிரான் என்கிறார். [கைதவம்] - க்ருத்ரிமம். [செம்மை] - ஆர்

க்ருதகமான இந்தலோகமெல்லாம் - புண்ணியமென்ற தொடக்கி, கண்ணனுடைய நிர்ஹேதுக க்ருபையாலேயுண்டாயிற்று என்றஅநத்யாஹாரேண யோஜித்துச்சொன்னதல். "பொவயாசாஸ்ஸதாம் ஶுத்ரூயாம் ஆராகாஹ்ஸிவொஹாஉயிஃ । வாஸுதேவஸ்ஸுஹ்ருதாம் ஸ்வாவயதிஸ்வாஶ்ரயட்" இதி பஞ்சமேம்ஶே. [ரூ அ-கூ] (ச)

ஜவம். [கருமை வெளுமை] - கறுப்பும் வெளுப்பும். [மெய் பொய்] - ஸத்யாஸத்யம். [இளமை முதுமை] - பால்யவார்த்தகம். [புதுமை பழமை]- அத்யதனமும் புராதனமும். [செய்ததிண்மதில்] - புதிதாகச் செய்தாற்போலே தொழிலை யுடைத்தாய்த் திண்ணிதான மதில். [பெருந்தேவுடை மூவுலகு - பெய்த காவுகண்டீர்] - ப்ரஜாபதி ஸ்யாவராந்தமான ஜந்துக்கள் அவனுக்கின சோலை. மூவுலகு - மேலும் கீழும் நடுவும். பெய்தகாவு - உண்டாக்கின சோலை. ஸர்வரையும் ஸ்யாவரமாகச் சொல்லுகையாலே, ஸர்வருடைய ரக்ஷணமும் ஐகவதநிரம் என்கை. மின்னிடை மடவாரில்—"பொருந்தோம்" என்றதுவும் ஸ்வாபாவிகமென்றென்கை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. சிறியார் பெரியா ரென்றுதே ஸர்வர்க்கும் ரக்ஷகன் திருவிண்ணகர் சேர்ந்த பிரா னென்கிறார்.

[கைதவம்சேம்மை] - அநார்ஜவார்ஜவங்கள். [கருமைவெளுமை] - கறுப்பு வெளுப்பு. [மெய்பொய்] - ஸத்யாஸத்யம். [இளமை முதுமை] - பால்யவார்த்தகம். [புதுமைபழமை] - அத்யதனமும், புராதனமும். [செய்தவித்யாதி] - காலம் செல்லச் செய்தேயும் இப்போது செய்தாற்போலே யிருக்கிற தொழிற் புதுமையைச் சொல்லுகிறது. †(சிக்கெனவை உடைத்தான மதிளாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலே சேர்ந்த ஸர்வேஶ்வரன்) [பெய்தகாவுகண்டீர்] - வைத்தாக்கினசோலைகிடீர். (காவு- சோலை.) [பெருந்தேவுடை மூவுலகே] - ஈஶ்வராபிமாநிகளான தேவர்களையுடைத்தான த்ரைலோக்யம். (மூவுலகு - மேலும் கீழும் நடுவும்.) இத்தால் சொல்லிற்றாயிற்றென் என்னில்?—அச்சோலையானது தனக்கு வேண்டும் ரக்ஷணையையறிவிக்கமாட்டாதிறே; நின்றவிடத்தே நின்று வாடிக்காட்டுகையும், பின்பு வைத்தாக்கினவனே அதுக்குவேண்டும் ரக்ஷணபண்ண வேண்டுகையும் இத்யாதிகளை யுடைத்தாகை; அப்படியே ஈஶ்வரேஶிதவ்ய விபாகமற அவன் புத்த்யதீநமென்றபடி. (*மின்னிடை மடவாரில் "பொருந்தோம்" என்றதுவும் ஸ்வாபாவிகமன் றென்கை.)

அஞ்சாம்பாட்டு.—கைதவம் முதலாதி. "பெரியபிரதவதைகளை யுடைத்தான த்ரைலோக்யமும் அவனுண்டாக்கினசோலை" என்கையாலே வெளிப்படாவும் - சிறியார் இத்யாதி. "மூவுலகு" என்றத்தைப்பற்ற - சிறியார் என்றது. பெரியார் என்றது - "பெருந்தேவுடை" என்றத்தைப்பற்ற.

வார்த்தகம் - வ்ருத்தத்வம். "எல்லாமாய்க்கொண்டிருக்கிற திருவிண்ணகர்சேர்ந்தபிரான் பெய்தகாவு" என்கையாலே, ஸ்வரூபைக்யமன்று; கார்யகாரணஸாமாந்யத்தாலே ஸமாநாதிகரிக்கிறதென்றதாயிற்று. பெய்தல் - இடுதல். இத்தால் - "பெய்தகாவு" என்றத்தாலென்றபடி. உக்தார்த்தத்தை ப்ரக்ருதத்திலேயதிதேசிக்கிறார் - அப்படியே இத்யாதி. (☸)

---

† குண்டலிக்ரந்தம் க்வாசித்கம்.

ஆறும் பாட்டு.

மூவுலகங்களுமாய்அல்லனாய் உகப்பாய்முனிவாய்
பூவில்வாழ்மகளாய்த் தன்னையாய்ப் புகழாய்ப்பழியாய்
தேவர்மேவித்தொழுந் திருவிண்ணகர்சேர்ந்தபிரான்
பாவியேன்மனத்தே உறைகின்றபரஞ்சுடரே.

அ.—(மூவுலகங்களுமாய்.)-நித்யலீலாலோக ததந்தர்வர்த்தி ப்ரீத்யாப்ரீதி லக்ஷணயலக்ஷணீ கீர்த்யகீர்த்தி ப்ரப்ருதி கல்யாணஹேய ஸகலபதார்த்தாந்தராத்மபூதனாய், கல்யாணபதார்த்தாந்தர்வர்த்திதையாலே யாதொருபடி தோஷந்தட்டாதே யிருக்கும், அப்படியே ஹேயபதார்த்தாந்தர்வர்த்திதையாலும் நிர்த்தோஷனாயிருக்கும், அதெங்ஙனே யறிந்தபடி என்னில்? - ஸமஸ்தஹேயாஸ்பதமான என்னுடைய நெஞ்சிலேபுகுந்து வைத்து ஒருதோஷமுந்தட்டாதே நிரதிசய தீப்தியுக்தனாயிருக்கையாலே என்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், "நான் அல்லேன்" என்னச் செய்தே தன்னுடைய குணசேஷ்டிதங்களைக் காட்டி மறக்க வொண்ணாதபடி என்னோடே கலந்து அத்தாலே கிருதார்த்தனாய் அத்யுஜ்வலனாயிருக்கிறவன் திருவிண்ணகர் சேர்ந்தபிரான் கண்டீர் என்கிறார். [அல்லனாய்] - அவ்வளவன்றிக்கே மற்றும் விலக்ஷணமான விஷயங்களையுடையனாய். [பூவில் வாழ் மகளாய்த்தன்னையாய்]— ஸ்ரீயும் அஸ்ரீயும் ஆய். [புகழாய்ப் பழியாய்]-கீழ்ச் சொன்ன இரண்டையு முடையவர்களுக்கு வரும்இரண்டையுஞ் சொல்லுகிறது. [தேவர்மேவித் தொழுந்திருவிண்ணகர்]-அயர்வறுமரர்களுக்கும் வந்து தொழும்படியான திருவிண்ணகர், எம்பெருமான் மேல்விழுந்தெய்தீக, நான் "அல்லேன்" என்றிருந்த இருப்பை நினைத்து 'பாவியேன்' என்கிறார்.

ப.—அநந்தரம், விலக்ஷணவிலக்ஷண பதார்த்தங்களை விபூதியாகவுடைய ஸர்வேஶ்வரன் ஆஶ்ரிதவ்யதையால்வந்த ஔஜ்ஜ்வல்யத்தை உடையவனென்கிறார்.

மூவுலகங்களும்ஆய் - (ஸ்ருஜ்யத்வ கர்மவஶ்யத்வ குணக்ரியாத்மகத்வாதிகளாலே அவிலக்ஷணமான) த்ரைலோக்யமும் ஆய், அல்லன் ஆய் - தத்ப்ரதிபடநித்யவிபூதியுக்தனும் ஆய், உகப்பு ஆய்முனிவு ஆய்- அப்படி விலக்ஷணவிலக்ஷணாத்மகமாகத்தேவைஷங்களையும் ஆய், பூவில்வாழ்மகளாய் - ஸ்ரீதேவிதாயான லக்ஷ்மியையும் ஆய், தன்னை ஆய் - அஸ்ரீதேவிதாயான ஜ்யேஷ்டையையும் ஆய், (தத்தத்கார்யமான), புகழ் ஆய் - புகழையும் ஆய், பழி ஆய் - பழியையும் ப்ரகாரமாகவுடையனாய், (இந்தவிபூதியோகத்தாலே வந்த நீர்மையை யநுபவிக்கைக்காக), தேவர் - ஸுரிகள், மேவி-பொருந்தி, தொழும் - தொழாநிற்கிற, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த-சேர்ந்த, பிரான் - ஸர்வேஶ்வரன், பாவியேன் - தான் மேல்விழுந்தாலிலும் வைமுகத்யம்பண்ணும் பாபத்தையுடையேனான என், மனத்தே-நெஞ்சிலே, உறைகின்ற - நித்யவாஸம் பண்ணாநின்றுகொண்டு, பரஞ்சுடர் - அத்தாலே நிரதிசய ஔஜ்ஜ்வல்யத்தையுடையனானான்.

இ.—ஆறும்பாட்டில், "நான்அல்லேன்" என்னச்செய்தேயும் தன்னுடைய குணசேஷ்டிதங்களைக்காட்டி, மறக்கவொண்ணாதபடி கலந்து அத்தாலே உஜ்ஜ்வலனாயிருக்கிறான்

திருவிண்ணகர் சேர்ந்த பிரான்கிறேன் என்கிறார். [மூவுலகங்களுமாய்] - க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகம். [அல்லனாய்]-இவற்றைச்சொல்லி, அல்லனாயென்னகையாலே, இவ்வளவன்றிக்கே அஸாதாரணமான நித்யவிபூதியையுடையனாய். [உகப்பாய் முனிவாய்] - ராகத்வேஷங்களாய். [பூவில் வாழ்மகளாய்த் தவ்வையாய்]-ஸ்ரீயும் அஸ்ரீயுமாய். தவ்வை-அஸ்ரீ. [புகழாய்ப்பழியாய்] - பிராட்டி கடாக்ஷத்தாலே வந்த புகழாய், அஸ்ரீஸம்பந்தத்தாலே வந்த பழியாய். [தேவர் மேவித் தொழும் திருவிண்ணகர்] - நித்ய ஸூரிகள் நித்யவிபூதிபோலே பொருந்தித் தொழும். ப்ரஹ்மாதிகள் வரை நாற்றம் பொறுக்கமாட்டாத தேஶத்திலே, திருவிண்ணகரின் நீர்மையை அநுபவிக்க நித்யஸூரிகள் படுகாடு கிடக்கிறபடி. [திருவிண்ணகர் சேர்ந்த பிரான்] - திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகிறஉபகாரகன். நித்யஸூரிகள் மேல் விழ இருக்கிறவன் தான் மேல்விழ, "அல்லேன்" என்றிருந்த படியை நினைத்து "பாவியேன்" என்கிறார்.

[மனத்தே உறைகின்ற]-'போகுநம்பீ' என்று சொல்லிற்று, என் நெஞ்சை விடமாட்டாதவனைக் கிடீர்! [பரஞ்சுடரே]-நித்யஸூரிகளோடு கலந்திருக்கிற காட்டில் கிடீர் என்னைப்பெற்ற பின்பு பிறந்த புகர். "நின்றிலங்கு முடியினாய்" என்றதிறே.

ஈடு.—ஆறாம்பாட்டு. "நானல்லேன்" என்னச்செய்தே தன்குணசேஷ்டிதங்களைக்காட்டி மறக்கவொண்ணாதபடி கலந்து அத்தாலே உஜ்ஜ்வலனாயிருக்கிறவன் திருவிண்ணகரிலே நின்றருளின ஸர்வேஶ்வரன்கிடீ ரென்கிறார்.

[மூவுலகங்களுமாய்] - த்ரைலோக்யத்துக்கும் நிர்வாஹகனாய். க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகமென்றும். [அல்லனாய்] - அல்லாத உபரிதநலோகங்களுக்கும் நிர்வாஹகனாய். இவற்றைச்சொல்லி, அல்லனாயென்னகையாலே - இவ்வளவன்றிக்கே அஸாதாரணமான நித்யவிபூதியையுடையனாயென்றும். [உகப்பாய்முனிவாய்] - அநுக்ரஹ நிக்ரஹங்களாய். [பூவில்வாழ்மகளாய்த்தவ்வையாய்] - ஸ்ரீயுமஸ்ரீயுமாய். தவ்வை - அஸ்ரீ. [புகழாய்ப்பழியாய்] - ஸ்ரீயினுடைய கடாக்ஷமுடையார்க்கு வரும்புகழ். தவ்வையினுடைய கடாக்ஷமுடையார்க்கு வரும்பழி. [தேவரித்யாதி] - இந்த்ராதிகள் இங்குள்ளாருடைய ஹவிஸ்ஸாகொள்ளும்போது மூன்றுயோஜநம் அவ்வருகேநின்று முகத்தைத் திரியவைத்துவாங்கி சர்த்திபண்ணியாயிற்றுப்போவது; அப்படியிருக்கிறவர்களுடைய கந்த

ஆறாம்பாட்டு.—மூவுலகும் இத்யாதி. "பாவியேன்" என்றதைப்பற்ற - நானல்லேன் என்னச்செய்தேயென்றது. "மனத்தேயுறைகின்ற" என்றதைப்பற்ற - தன்குணசேஷ்டிதங்களை இத்யாதி. "பரஞ்சுடர், திருவிண்ணகர் சேர்ந்தபிரான்" என்றதைப்பற்ற - அத்தாலே உஜ்ஜ்வலனாய் இத்யாதி.

அர்த்தாந்தரம் - க்ருதகம் இத்யாதி. க்ருதக... வ ஏ - அவாந்தரப்ரளயத்திலேயழிந்து ஸ்ருஷ்டிகாலத்திலே பண்ணப்படுமது. இது ஏழேழுலோகமும் மேல்மூன்றுலோகமும். அக்ருதகமாவது - அவாந்தரஸ்ருஷ்டியில் பண்ணப்படாதது. இதுதானஸ்தபஸ்ஸத்யலோகங்கள். க்ருதாக்ருதகமாவது - அவாந்தரப்ரளயத்தில் குடிவாங்குகையாலே க்ருதகமென்றும், க்ருஹங்களுக்கு ஸ்வரூபநாஶமில்லாமையாலே அக்ருதகமென்றும் சொல்லப்படும் மஹர்லோகம். "ஸெ ஏஷ ஸர்வாகூ ஸேத ஏஷ ஸர்வாகூ ஸேத ஏஷ ஸர்வாகூ ஸேத

மும் பொறுக்கமாட்டாத நித்யஸூரிகள், திருவிண்ணகர்பூமியிலேயாகையாலே இங்கே வந்து பொருந்திவர்த்தியாநிற்பர்கள். அப்படிப்பட்ட திருவிண்ணகரிலே நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன். [பாவியேன்மனத்தே] - * மின்னிடைமடவாரில் அவன்மேல் விழத் தாம்இருப்பதடியைநினைத்து, 'பாவியேன்' என்கிறார். நித்யஸூரிகள் தன்பக்கலிலேவந்து மேல்விழ, அத்தைத் தள்ளித் தான் என்பக்கலிலேவந்து மேல்விழாநிற்கக் கிடீர் நான் "அல்லேன்" என்றது. [மனத்தேயுறைகின்ற] - இப்போது நித்யஸூரிகளும் அந்த இருப்புங் கிடக்கக் கிடீர் என்னெஞ்சிலேபுகுந்து நித்யவாஸம்பண்ணாநின்றான். [பரஞ்சுடரே] - தனக்குப்புறம்புண்டான வாஸஸ்த்தாநங்கள் கிடக்க, என்னெஞ்சிலே புகுந்துநின்றது எனக்குக் கார்யஞ்செய்தாலாயிருக்கையன்றிக்கே, "தன்பேறு" என்று தோற்றும்படி உஜ்ஜ்வலனாநான். *மின்னிடைமடவாரில் - "இவரையிழக்கிறோமோ?" என்று வந்தஉருவுதல்தீர, இவரைப் பெற்றபின்பு அத்தாலே "நின்றிலங்குமுடியினாய்!" என்கிறபடியே வடிவிலேபிறந்த வேறுபாடு இருக்கிறபடி. (சு)

ஏழாம் பாட்டு.

பரஞ்சுடர்உடம்பாய் அழுக்குப்பதித்தஉடம்பாய்
கரந்தும் தோன்றியும் நின்றும் கைதவங்கள் செய்தும்விண்ணோர்
சிரங்களால் வணங்கும் திருவிண்ணகர் சேர்ந்தபிரான்
வரங்கொள்பாதமல்லால்இல்லை யாவர்க்கும்வன்சரணே.

ஆ.—(பரஞ்சுடர்.) - நிரவயிகநிரதிசயமான திவ்யரூபனாய், ஸமஸ்தஹேயாஸ்பதமான ஸர்வஜகச்சரீரனாய், ஸமஸ்தஹேயரஹிதனாய், ஆர்ஸ்ரிதர்க்கு ஆஸ்ரிதர்க்கு மாகப் பிறந்தருளியும் அவர்களோடு ஸம்ஸ்லேஷித்தும் ப்ரதிகூலர்க்குக் கைதவம்செய்தும், விண்ணோர் சிரங்களால் வணங்கும் திருவிண்ணகர்சேர்ந்த பிரானுடைய திருவடிகளல்லது ஒருவர்க்கும் ஆத்மரக்ஷகமில்லையென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், எத்தனையேனுமளவுடையார்க்கும் வலிய புகல் அவனல்லதில்லையென்கிறார். [பரஞ்சுடருடம்பாய்] - அப்ராகிருதமான திருவுடம்பை யுடையனாய். [அழுக்குப்பதித்த வுடம்பாய்] - ஜகச்சரீரனாய். [கரந்துந்தோன்றியும் நின்றும் கைதவங்கள்செய்தும்] - அதீந்திரியனாயும் கண்காணவந்து திருவவதாரம்பண்ணியும் ஆஸ்ரிதர்க்காக அத்திருவுடம்போடே நெடுநாள் வர்த்தித்தருளியும் இப்படி ஸுலபனாய் வைத்து, தன்னை உகவாதார்திறத்து வஞ்சநங்கள் பண்ணியும்.

என்றதுக்கும்அடைவே யர்த்தவ்யம் - அஸ்லாத இத்யாதி வாக்யத்வயத்தாலே. "தண்டமும், தண்மையும்" என்றத்தோடு புநருக்தமாகையாலே, அநுக்ரஹநிக்ரஹங்களாயென்றது - அவற்றின்கார்யமான ப்ரீத்யப்ரீதிகளைச் சொல்லுகிறது. "மேலித்தொழும்" என்றதுக்கு பாவம் - இந்த்ராதிகள் இத்யாதி. பூமியிலேயாகையாலே யென்றது - பூமியிலேயிருக்கையாலே பூமியுத்தேச்யமென்றபடி. "பாவியேனென்றது - * மின்னிடைமடவாரிலே இருப்பதடியை நினைத்து" என்பானென்? என்ன - நித்யஸூரிகள் இத்யாதி. "உறைகின்ற" என்ற வர்த்தமாநநிர்த்தம் - இப்போது நித்யஸூரிகள் இத்யாதி. மேற்வாக்யவிவரணம் - மின்னிடை இத்யாதி.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதஅநாஶ்ரிதவிஷயமான ஆகாரபேதத்தையுடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளே ஸர்வர்க்கும் ப்ரவேலாஶ்ரயமென்கிறார்.

பரஞ்சுடருடம்பு ஆய் - ஆஶ்ரிதாநுகூலம்யமான அப்ராக்ருதவிக்ரஹத்தையும், (அநாஶ்ரிதர்க்கு அநுகூலம்யமான), அழுக்கு - ஹேயதையால், பதித்த - பூர்ணமான, உடம்பு ஆய் - ஜகதாகாரத்தையும் உடையனாய், கரந்தும் - (அநாஶ்ரிதவிஷயத்தில்) ப்ரகாசியாதேயும், தோன்றியும் - (ஆஶ்ரிதவிஷயத்தில்) ப்ரகாசித்தும், நின்றும் - (ப்ரகாசிக்கும் விஷயத்தில்) ஸ்த்திரனாயும், கைதவங்கள் செய்தும் - (இதரவிஷயத்தில்) அஸ்த்திரனாயும், ஆய் - இருப்பானாய், விண்ணோர் - ப்ரஹ்மருத்ராதிகள், (ஸ்வாபிமத ஸித்த்யர்த்தமாக), சிரங்களால் - தந்தாந்தலைகளாலே, வணங்கும் - வணங்கும்படி, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - சேர்ந்த, பிரான் - ஸர்வேஶ்வரனுடைய, வரம் - ஸமாப்யயிக ஶரீரமான ப்ரகாரத்தை, கொள் - உடைய, பாதம் - திருவடிகள், அல்லால் - ஒழிய, யாவர்க்கும் - ஸர்வசேதநர்க்கும், வன் - அவியஸ்த்தலமாம்படி ப்ரவேலமான, சரண் - புகலிடம், இல்லை - வேறில்லை.

இ.—ஏழாம்பாட்டில், எத்தனையேனும் அளவுடையார்க்கும் வலியபுகல் அவனல்லதில்லை யென்கிறார்.

[பரஞ்சுடரும்பாய்] - நிரவயிக தேஜோரூபனாய்: அப்ராக்ருதமான திருமேனியையுடையனாய். "தெஜஸாம்ராஶிஶுஜ்ஜ்வல" [அழுக்குப்பதித்த வடம்பாய்] - ஜகச்ச்ரீரனாய். [கரந்தும்] - "யோ ஹ்ருதி" என்று அவற்றுக்கு அந்தர்யாமியாய்க்கொண்டு அந்தராத்மாவாய் நின்றும். [தோன்றியும்] - "ஜுவிஶுஜ்ஜ்வல கம்ஶுஹா கூ" என்று ராமக்ருஷ்ணாதிகாரங்களைப் பண்ணியும். [நின்றும்] - அவ்வோவிடங்களிலே பதிந்தோராயிருக்கிறார். [கைதவங்கள்செய்தும்] - தன்படிகள் ஶிஶுபாலாதிகளுக்குத் தோற்றாதபடி பண்ணியும், ஆஶ்ரிதர்க்குத் தோற்றும்படி பண்ணியும். கைதவம் - வஞ்சகம். [விண்ணோர் இத்யாதி] - ப்ரஹ்மாதிகள் தலையாலே வணங்கும்படி திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகிற உபகாரகன். [வரங்கொள் இத்யாதி] - வரையாதே எல்லார்க்கும் ஆச்ரயிக்கலாம்படியான ப்ரதேஶமான திருவடிகள். [யாவர்க்கும் வன்சரணே] - சிறியார்பெரியார் என்று அன்றிக்கே எல்லார்க்கும் தஞ்சமான புகல் வேறில்லை. அவ்வாதலை ஓட்டை ஓடத்தோடே ஓடுகலோடமாய்க் கழுத்துக்கட்டியாயிறே யிருப்பது.

ஈ.—ஏழாம்பாட்டு. எத்தனையேனும் அளவுடையார்க்கும் வலியபுகல் அவனல்லதில்லை யென்கிறார்.

[பரஞ்சுடருடம்பாய்] - சுத்தஸத்த்வமயமான அஸாதாரண திவ்யவிக்ரஹத்தையுடையனாய். "தெஜஸாம்ராஶிஶுஜ்ஜ்வல" (தேஜஸாம்ராஶிஶுர்ஜ்ஜ்வலம்). [அழுக்குப்

ஏழாம்பாட்டு—பரஞ்சுடர் இத்யாதி. "வரங்கொள்பாதாவல்லாலில்லை" இத்யாதியைப்பற்றி அவதாரிகை - எத்தனையேனும் இத்யாதி. மேலே "அழுக்குப்பதித்தவுடம்பாய்" என்ற - ஹேயமாய் ரஜஸ்தமோ மிஶ்ரமான உடம்பைச் சொல்லுகையாலே, ஸத்ப்ரதிகோடித்வேந விவக்ஷித்து அருளிச்செய்கிறார் - சுத்தஸத்த்வ இத்யாதி. நிரவதிக தேஜோரூபமான திருமேனியை யுடையவனென்று ஸப்தார்த்தம். இதுக்குப்பிரமாணம் - தெஜஸாம் இத்யாதி. தோன்றாதபடி நிற்கிறவன் தோன்றுகிறதெதத்

பதித்தவுடம்பாய்] - குணத்ரயவஶ்யமான ஜகச்சரீரனாய். [கரந்தும்] - இவற்றுக்கு அந்தராத்மாவாய்ப் புக்கு நிற்கச் செய்தே, "யஶாத்மா ந வேத" (யஶாத்மா ந வேத) என்று இவற்றுக்குத் தோன்றாதபடி நின்று, இவற்றின் ஸத்தையை நோக்கியும். [தோன்றியும்]- *காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்திருப்பார்க்குக் காணலாம்படி ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணியும். [நின்றும்]-நூறாண்டு பதினாராயிரமாண்டு நின்றும். அவ்விடங்களிலே, [ஈகதவங்கள் செய்தும்] - க்ருத்ரிமங்களைப்பண்ணியும். அதாவது - அவதரித்துநிற்கச்செய்தே தன்படிகள் சிசுபாலாதிகளுக்குத் தோற்றாதபடி பண்ணியும், ஆஶ்ரிதர்க்குத் தோற்றும்படிபண்ணியும். [விண்ணோரித்யாதி] - ப்ரஹ்மாதிகள் 'தலைபடைத்தப்ரயோஜநம் பெற்றோம்' என்று வணங்கும்படி திருவிண்ணகரிலே நிற்கிற உபகாரகன். [வரங்கொள்பாதமல்லாலில்லை] - எத்தனையேனும் தண்ணியாரும் கிட்டலாம்படி ஶ்ரேஷ்டமான திருவடிகளல்லது. [யாவர்க்குமித்யாதி] - எத்தனையேனும் கிழார் கிழார்க்கும் அதுவல்லது வலியபுகலில்லை. அவனை யொழிந்த ஶரண்யரடங்கலும் இவனைக் கொண்டு முழுகும்போர்; இவனைக் கொண்டு கரையேற்றவல்ல வலியபுகல் அவன்திருவடிகளல்லதில்லை. அடியே பிடித்து ஜீவிக்கில் ஜீவிக்குமத்தனை. (எ)

எட்டாம் பாட்டு.

வன்சரண்சுரர்க்காய் அசுரர்க்குவேங்கூற்றுமாய்
தன்சரண் நிழற்கீழ் உலகம் வைத்தும் வையாதும்
தென்சரண் திசைக்குத் திருவிண்ணகர் சேர்ந்தபிரான்
என்சரணென்கண்ணன் என்னையாளுடை என்னப்பனே!

அ.—(வன்சரண்.) - தன் திருவடிகளை ப்ரார்த்திக்கைக்கு விரோதியான ஸமஸ்த பாபங்களையும் போக்கி ஆஶ்ரிதரைத் தன் திருவடிகளின் நிழலிலே வைத்தருளும் ஸ்வபாவனாய், ஆஶ்ரிதவிரோதிகளைத் தன் திருவடிகளிற் பொடிபடுத்த அவர்களுக்கு அதிபயங்கர ம்ருத்யுபூதனாயிருந்த எம்பெருமான், தென்திசைக்குப் புகலிடமாகத் திருவிண்ணகரிலே புகுந்தருளியிருந்து எனக்கு ப்ராப்யமாய், எனக்கு த்ருஷ்டியாய் என்னைக் கொண்டு ஸர்வபோஷணம்பண்ணி எனக்கு ஸ்வாமியானான் என்கிறார்.

ஆ.—எட்டாம்பாட்டில், எனக்கு ஶரணாகை மாத்ரமேயல்ல; மற்றுமெல்லாம் திருவிண்ணகர் சேர்ந்தபிரான் என்கிறார். [தன்சரணிழற்கீழ்உலகம்வைத்தும்

ப்ர.—[பரந்தடருடம்பாய்]—வ்யூஹமாராணாகை, "யஸ்ய ராஶரீரம்யகூதா நகிஞ்சிதொரோயயேதி - யஶாத்மாநவேத" காக? என்ன - காணவாராயி இத்யாதி. அவ்விடங்களிலே - ராமக்ருஷ்ணாத்யவதாரங்களிலே. ஆஶ்ரிதர்க்கு - அர்ஜுநாதிகளுக்கு வணங்குகிறது தலையாலேயாயிருக்க, "சிரஸ்ஸால்" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - ப்ரஹ்மாதிகள் இத்யாதி. வரங்கொள் - வரமான. திருவடிகளுக்கு ஶ்ரேஷ்டத்தையேதென்ன - எத்தனையேனும் இத்யாதி. கிழார்கிழார்க்கும் - பெரியவர்க்கும் பெரியரானவனுக்கும். கிழார் - பெரியவர். "வன்சரண்" என்றதுக்குஹாவம் - அவனையொழிந்த இத்யாதி. ஸோக்தி - அடியே இத்யாதி. திருவடிகளையேபிடித்தென்றும், முதலிலே பிடித்தென்றும். (ஸ)

வையாதும்] - அநந்யப்ரயோஜநனை பரிக்ரஹித்தும் அல்லாதாரை வெறுத்துக்கரித்தும். [தென்சரண் திசைக்கு] - தெற்குத் திக்குக்கு சரணாக. [என்கண்ணன்] - எனக்குஸுலபனாய். [என்னையாளுடை யென்னப்பனே] - என்னை அடிமைகொண்டு உபகரித்தவன்.

ப.—அநந்தரம், அநுகூல ப்ரதிகூல விஷயங்களான ஸ்வபாவங்களையுடைய ஸர்வேஶ்வரனாய் ஆஶ்ரிதவத்ஸலனான க்ருஷ்ணன் எனக்கு அஸாதாரணமான புகலிடமென்கிறார்.

சுரர்க்கு - அநுகூலமான தேவர்களுக்கு, என் - அப்ரதிஹதமான, சரண் - புகலிடம், ஆய் - ஆய், அசுரர்க்கு - ப்ரதிகூலமான அசுரர்களுக்கு, வெம் - க்ரூரமான, கூற்றமும் - ம்ருத்யுவும், ஆய் - ஆய், உலகம் - தாத்ருஶ விபாகத்தையுடைய லௌகிகரை, தன் - தன், சரண்நிழல்கீழ் - பாதச்சாயையிலே, வைத்தும் - ஒதுக்கியும், வையாதும் - ஒதுக்காதும், ஆய் - இருப்பானாய், தென்திசைக்கு - தெற்குத் திக்குக்கு, சரண் - புகலிடமான, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - சேர்ந்த, பிரான் - ஸர்வேஶ்வரனாய், என் - என்னை யங்கீகரிக்கைக்காக, கண்ணன் - க்ருஷ்ணனாய், என்னை ஆளுடை - என்னை யடிமைகொண்ட, என்னப்பன் - ஸ்வாமியானவன், (ஸர்வப்ரகாரத்தாலும்), என் - எனக்கு, சரண் - ஸாயாரணமான புகலிடம்.

இ.—எட்டாம்பாட்டில், எல்லார்க்கும் புகலென்ற மாத்ரமன்றிக்கே, எனக்கு விசேஷித்துப் புகலென்கிறார்; எனக்குப் புகலான மாத்ரமன்றியிலே மற்றுமெல்லாம் திருவிண்ணகர் சேர்ந்தபிரான் என்கிறார். [என்சரணிணித்யாதி] - தேவஜாதிக்குத் தன்னை யழியமாறி ரக்ஷிக்கும் புகலாய், தநுப்பாதிகளுக்கு வெங்கூற்றம் - "அந்தகன் தன்னோடு" என்னும்படியான கூற்றமாய், தன்பாதச்சாயையிலே அநந்யப்ரயோஜநனை வைத்தும் அல்லாதாரை வெறுத்தும். [தென்சரண் திசைக்கு] - "உக்ஷிணாதிகூ] தாவெந்த ஶரணாவுணாவுகூ உணா" என்கிறபடியே தெற்குத்திக்குக்கு ஶரணமான. [என் சரண்] - எனக்குப் புகலானவன். [என் கண்ணன்] - எனக்குலாவியனானவன். [என்னையாளுடையென்னப்பனே] - என்னை அடிமைகொண்டு போகிறவன், எனக்கு உபகாரகன்.

ஈடு.—எட்டாம்பாட்டு. எனக்குப் புகலான மாத்ர மன்றிக்கே மற்றுமெல்லாம் திருவிண்ணகர்சேர்ந்தபிரா னென்கிறார். † (எல்லார்க்கும் புகலென்றமாத்ரமன்றிக்கே, எனக்கு விசேஷித்துப்புகலென்கிறா ராகவுமாம்.)

[என்சரண்சுரர்க்காய்] - தேவர்களுக்காகத் தன்னை அம்புக்கு இலக்காக்கி அவர்களைநோக்கும் வலியரக்ஷகனாய். [அசுரர்க்கு வெங்கூற்றமுமாய்] - ஆஸுரப்ரக்ருதிகளுக்கு "அந்தகன்தன்னோடு" என்னும்படி வெவ்வியகூற்றமுமாய். [தன்சரணித்யாதி] -

---

எட்டாம்பாட்டு.—என்சரண் இத்யாதி. "என்சரணென்கண்ணன்" இத்யர்தியைக்கடாஸித்து அவதாரிகை-எனக்குப்புகலான இத்யாதி. கீழிற்பாட்டில்-எல்லார்க்கும்புகலென்றார்; இதில் - எனக்குப் புகலானமாத்ரமன்றிக்கே ஸர்வவிதபந்துவுமென்கிறாரென்றபடி. தேவர்களுக்குஶரணனென்ற ப்ரகாரத்தைக் காட்டாநின்றுகொண்டு ஶப்தார்த்தம் - தேவர்களுக்காக இத்யாதி. "வெங்கூற்றம்" என்றதுக்குமாவும் - ஆஸுரப்ரக்ருதிகளுக்கு இத்யாதி. அந்தகன் தன்னோடென்றும்படியென்றது -

---

† குண்டலிதசக்ரந்தம் ப்ரமாணம்.

தன்னுடைய பாதச்சாயையுள்ளே, அநுகூலரான அர்ஜுநாதிகளையிட்டுக்கொண்டும், ஸம்பந்தமொத்திருக்கச்செய்தே, ப்ரதிகூலரான துர்யோதநாதிகளைப் புறம்பிட்டும். [தென்சரண் திசைக்கு] - "தக்ஷிணாதிக்ரூதாயெந ஶரணாயவாணாகுடுணா" (தக்ஷிணாதிக்க்ருதாயேநஶரண்யாபுண்யகர்மணா) என்கிறபடியே, "தென் - திசைக்கு - சரண்"-தெற்குத்திக்குக்குப் புகலிடமான திருவிண்ணகரிலே கிட்டின உபகாரகன். [என்சரண்] - எனக்குப் புகலிடம். [என்கண்ணன்]-எனக்கு ஸர்வஸ்வமானவன். [என்னை யாளுடை] - என்னை யடிமைகொள்ள உரியவன். [என்னப்பன்] - எனக்கு உபகாரகன். உலகமென்பது - உயர்ந்தோர்மாட்டு. (அ)

ஒன்பதாம் பாட்டு.

என்னப்பன்னெக்காயிகுளாய் என்னைப்பெற்றவளாய்
பொன்னப்பன்மணியப்பன் முத்தப்பன்என்னப்பனாய்
மின்னப்பொன்மதிள்சூழ் திருவிண்ணகர்சேர்ந்தஅப்பன்
தன்னொப்பாரில்லப்பன் தந்தனன்தன தாள்நிழலே.

ஆ.— (என்னப்பன்.)-*கட்டுவைத்த கண்ணாடிபோலுள்ளமையும் அத்யுஜ்ஜ்வலமான ரத்நத்தினொளியையும் முலைத்தடம்போல் முலையையுமுடையவளாய், அழகியவனாய்த் தன்னொப்பாரின்றியே யிருக்கிற திருவிண்ணகர் சேர்ந்த அப்பன், தன்னைமுகாலே யடைந்தவர்க்கு ஸ்வாமியாய், தன்னுடைய வைபவத்தாலே பெற்றாரையும் வைத்தாரையும் பண்ணைக்கடவ ஸ்நேஹத்தை யன்பர்களிலே பண்ணி, ஸ்வவிப்ரலம்஭நீயமான யன்னுடைய நிரவயிக ஸந்தாபமெல்லாம் போம்படி அதிஶீதளமாய் மந்ருதஸஞ்சாரமான தன் திருவடிகளின் நிழலை எனக்குத் தந்தருளினானென்கிறார்.

ப்ர.—[என்சரண் இத்யாதி]—[தென்சரண் திசைக்கு]— ஶரணாயகாவெ- [கக] "நிஶ்ஶஸ்ய தரஸாஶ்ரிதாநாம் லொகாநாம் ஹிதகாரியா । தக்ஷிணாதிக்ரூதா யெந ஶரணாயவாணாகுடுணா ॥ தவெஸ்ய-கரூபாஶ்ரயவேஶம் ப்ரஸாவாஶ்ரயஸ்ய ராக்ஷவெஸ்ய । நிமியம் தக்ஷிணாதூராஸா ஶ்ரீஶைலநாதவஸுஜ்ஜ்வலதா ॥ அ உ ॥"

ம்ருத்யுவானவன் குளிர்ந்தவனென்னும்படியென்கை. "தென் - திசைக்கு - சரண்" என்றந்வயம். ஸப்ரமாணமாக இதுக்கர்த்தம் - தக்ஷிணா இத்யாதி. "தக்ஷிணாதிக்ரூதாயெந ஶரணாயவாணாகுடுணா - தவெஸ்ய தகரூபாஶ்ரயவேஶம் ப்ரஸாவாஶ்ரயஸ்ய ராக்ஷவெஸ்ய" இத்யாரண்யகாண்டே. என்னையாளுடை - என்னையாளுடையவனித்யர்த்தம். "உலகம்" என்றது - அநுகூலரான அர்ஜுநாதி வாசகமாமோ? என்ன - உலகமென்பது இத்யாதி. உயர்ந்தோர்மாட்டு - பெரியோரிடத்திலே வாசகமாய்க்கொண்டு வர்த்திக்கு மென்றபடி. (அ)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், எண்ணுடைய ஶ்ரமமெல்லாந்திரும்படி தன்னுடைய பாதச்சாயையை எனக்கு, "நானல்லேன்" என்ன, வலியத்தந்தானென்கிறார்.

[என்னப்பனெனக்காய்] - எனக்கு உறுதியான என்பிதாவாய்.

[இகுளாய்] - தோழியாய். [பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பனென்னப்பனுமாய்] - பொன்னும்மணியும் முத்தும்போலேயும் ஹோக்யனும், எனக்கு அவ்வளவன்றிக்கே மிகவும் உபகாரகனும். [திருவிண்ணகர் சேர்ந்தவப்பன்] - என்போல்வார்க்குளியனும்படி திருவிண்ணகரிலே வருகையாகிற உபகாரத்தைப்பண்ணினவன். [தன்னொப்பாரில்லப்பன்] - உபகாரகனுடைத்தில் தனக்கு ஒப்பில்லாதவன்.

ப.—அநந்தரம், பரஸ்பரவிருஷோகாரமான வைந்துவர்க்கமும் ஸப்ருஹணீய வஸ்துக்களும் தனக்கு ப்ரகாரமாக வுடையனான தன்னுடைய உபகாரகத்வத்துக்கு ஒப்பில்லாத ஸர்வேஶ்வரன், தன்னுடைய பாதத்ராணையை எனக்குத் தந்தருளினானென்கிறார்.

எனக்கு - எனக்குஅஸாதாரணனாய், என் - ஸத்தாஹேதுவாயிருந்துள்ள, அப்பன் - பிதா, ஆய் - ஆய், இகுள் - அந்தரம்ஸ்த்வத்துக்கு விருத்தமான ஸ்த்ரீத்வத்தையுடைய செவிலித்தாயானவள், ஆய் - ஆய், என்னைப் பெற்றவள் ஆய் - அவளைப்போலே வளர்த்து விடுகையன்றிக்கே பெற்றவளான வேறுபாட்டையுடைய நற்றாயாய், பொன் அப்பன் - பொன்போலே தன்னுடையஸ்ப்ருஹணீயதையை ப்ரகாசிப்பித்தும், மணி அப்பன்-(அதிற்காட்டில் ஔஜ்ஜ்வல்யத்தாலும் மஹார்ஹதையாலும் வேறுபட்ட) ரத்நம் போலே தன்னுடைய தேஜஸ்ஸினையை ப்ரகாசிப்பித்தும், முத்து அப்பன்-(அதிற்காட்டில் நீர்மையாலும் குளிர்த்தியாலும் ஸ்யாமளமான) முத்துப்போலே தன் சீதளமான நீர்மையை ப்ரகாசிப்பித்தும், என் அப்பன் ஆய் - (இப்படி பலவுமுகமாக) எனக்குப்பகாரகனும், ஆய் - ஆய், மின்ன - ஒளிவிடும்படி, பொன் - பொன்னான, மதில் - மதிளாலே, சூழ் - சூழப்பட்ட, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - வர்த்திக்கிற, அப்பன் - ஸர்வஸ்வாமியாய், (இப்படி ஸர்வப்ரகாரோபகாரகத்வத்துக்கு), தன் - தனக்கு, ஒப்பாரில் - ஒப்பில்லாத, அப்பன் - மஹோபகாரகனானவன், தன் - தன், தாள் - திருவடிகளின், நிழல் - நிழலை, தந்தனன் - எனக்குத் தந்தருளினான்.

இ.—ஒன்பதாம்பாட்டில், எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகனாய், தன்பாதச்சாயையை, "அல்லேன்" என்ன, வலிய எனக்குத் தந்தானென்கிறார்.

[என்னப்பனெனக்காய்]-"ஸுஹிதாநாம்யொஉவ்யஃஹிதா" என்கிறபொதுவன்றிக்கே, எனக்கேஉன பிதாவாய். [இகுளாய்] - தோழியாய். இது தமிழர் நிர்வாஹம். நம்முடையவர்கள் "செவிலித்தாய்" என்று நிர்வஹிப்பர்கள். தாய்க்குத்தோழியாயிருக்குமிறே செவிலித்தாய்: அத்தைச்சொல்லுகிறது. [என்னைப் பெற்றவளாய்] - உடம்பு நொந்து பெற்றவளாய். [பொன்னப்பன் இத்யாதி] - பொன்னும்மணியும் முத்தும்போலே எனக்குஉபகாரகன். [மின்னப்பொன் இத்யாதி] - மின்னுநின்ற பொன்மதிள்சூழ்ந்த திருவிண்ணகரிலே நித்யவாஸம் பண்ணுகையாகிற உபகாரத்தைப் பண்ணினவன். [தன்னொப்பாரில்லப்பன்] - உபகாரகரில் தன்னோடொப்பாரில்லாத உபகாரகன். ப்ரணய ரோஷத்தாலே நான் அகலப்புக, தாழநின்று பொருந்தவிட்டுக்கொண்டவன். [தந்த

னன் தனதாள்நிழலே] - தன்தாள்நிழல் தந்தான்; தன் பாதச்சாயையைத்தந்தான். "அழித்தா யுன்திருவடியால்" என்கிறபடியே என்மமேயாத்தைத் திருவடிகளாலே அழித்துத் தன்திருவடிகளின்கீழே யிட்டுக்கொண்டான்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. எனக்குஶரணமான மாத்ரமல்ல, மற்றுமெல்லாம் அவனேயென்கிறார். எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் உபகாரகனாய், தன் பாதச்சாயையை, "அல்லேன்" என்ன, வலிய எனக்குத் தந்தானென்கிறார்.

[என்னப்பனெனைக்காய்]-எனக்கு அஸாதாரணனாய் ஸத்தாஹேதுவாயுள்ளபிதா வாய். க்ஷாமகாலத்திலே ப்ரஜைகளை விற்றுண்ணும் தமப்பனைப்போலன்றியே, தன்னை யழியமாறியும் என்னைநோக்கக்கடவ பிதாவாய். [இகுளாய்] - இகுளையென்று தோழிக் குப்பேராய், அத்தைக்குறைத்து, இகுளென்றுகிடக்கிறது. இத்தால் சொல்லிற்றாயிற்று - எனக்கு வ்ருத்தகீர்த்தநம்பண்ணுகைக்குத் தோழியுமாய். [என்னைப்பெற்றவளாய்]-வளர்த் துக்கொள்ளியான தாயைப்போலன்றியே, பத்துமாஸம் வயிற்றிலேவைத்து நோக்கிப்பெற்ற தாயாய். [பொன்னப்பனித்யாதி] - வேறே ஹேயமாய்க்கொண்டு உபகாரகமாவன சில வஸ்துக்களுள; எனக்குஅவ்வோமுகங்களெல்லாம்தானாய்நின்றுஉபகரித்தவன்.†(பொன்னும் மணியும் முத்தும்போலே எனக்குபகாரகன்.) [மின்னப்பொன்னித்யாதி] - மின்னுநின் றுள்ள பொன்மதிளாலே சூழப்பட்ட திருவிண்ணகரிலேநின்ற உபகாரகன். [தன்னைப்பா ரில்லப்பன்] - சிலர்க்கு ஒன்றை உபகரித்தமிடத்தில், தன்னோடொக்க உபகரிக்கவல்லார் இல்லாதபடியான மஹோபகாரகன். இதுக்குச் சீயரருளிச்செய்யும்படி; - "மின்னிடை மடவாரிலே அவன்வந்துமேல்விழ, 'நீ எனக்குவேண்டா' என்று நான் தள்ளத்தள்ள; நீஉனக்கு ஹிதமறிந்தாயோ? நான்உனக்குவேணுங்காண் என்றுதன்னையேஎனக்குத்தந்தவன்" என்று. [தந்தனன் தனதாள்நிழலே] - "உன்னையொழிந்தவெய்யிலே யெனக்கனையும்" என்று நான் அகலப்புக, "அழித்தாயுன்திருவடியால்" என்று தன்னுடைய திருவடிகளாலே என்மமதையைப்போக்கி, பாதச்சாயையை எனக்குத்தந்தான். அடிபட்டவாறே, "எனக்கு" என்று வைத்தவற்றையும் போகவேர்களோ. (கூ)

ஒன்பதாம்பாட்டு.—என்னப்பனை இத்யாதி. "என்னப்பனெனைக்காயிகுளாய்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - எனக்கு ஶரணம் இத்யாதி. "தந்தனன் தனதாள்நிழல்" என்றத்தைப்பற்றி அவதாரிகாந்தரம் - எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் இத்யாதி.

என்னப்பனென்றதே, "எனக்கு"என்று விசேஷித்ததுக்குஹேதுவும் - க்ஷாமகாலத்திலே இத்யாதி. எனக்கேயான வென்னப்பனையென்று ஶப்தார்த்தம். "இகுளாய்" - இகுளையாயவென்றபடி. "பெற்றவன்" என்றதுக்குவாஸனை - வளர்த்துக்கொள்ளி இத்யாதி. 'ஹேயமாய்க்கொண்டு'- சுகத் தைக்கொடுத்து. 'உபகாரகமாவன' என்று கூட்டுவது. "தன்னைப்பாரில்லப்பன்" என்கைக்கு - அல் லாதாரிற்காட்டில் இவன்பண்ணின உபகாரமேதென்ன-இதுக்குச் சீயர் இத்யாதி. "தந்தனன்" என் கையாலே - வலியவே தந்தானென்கிறார். நிழலுக்கு ப்ரதிகோடித்வேக 'வெய்யில்' என்றது. "திரு வடிகளாலே மமதையைப்போக்கினான்" என்னுமத்தை ரஹஸ்யார்த்தமாக அருளிச்செய்கிறார் - அடிபட்ட வாறே இத்யாதி. அடியென்று - திருவடிகளுக்கும், ப்ரஹாரத்துக்கும் பேர். (கூ)

---

† குண்டலவிக்ரந்தம்க்வாசித்கம்.

பத்தாம் பாட்டு.

நிழல்வெய்யில்சிறுமைபெருமைகுறுமைநெடுமையுமாய்
சுழல்வனநிற்பனமற்றுமாய் அவையல்லனுமாய்
மழலைவாய்வண்டுலாம்திருவிண்ணகர்மன்னுபிரான்
கழல்கள் அன்றிமற்றோர்களைகணிலங்காண்மின்களே.

ஆ.—(நிழல்.)-ஹ்ரயாதபஅல்பமஹத் தீர்க்கஹ்ரஸ்வ சராசரங்களை ப்ரகாரமாகவுடையனாய், மதுரமாகப்பாடுகிற வண்டுகள்வாழுகிற திருவிண்ணகர் என்றோடு ஸம்ஶ்லேஷிக்கப்பெற்ற தேச மானகயாலே "இனி ஆக்மாந்தமாக இவ்விடத்தை விடேன்" என்றுஎழுந்தருளியிருந்த எம்பெருமானுடைய திருவடிகளல்லது நமக்கு மற்றொரு கதியில்லை. அவனுடைய கடாக்ஷம் பெறுவதற்குமுன்பு என்னுடைய ஸத்தையில்லாமையாலும், அவன் கடாக்ஷித்தருளினவாறே காணுமளவுகையாலும் நமக்கு அவனல்லது கதியில்லை என்னுமிடம் எல்லார்க்கும் ப்ரத்யக்ஷிக்கலாமென்கிறார்.

ஓ.—பத்தாம்பாட்டில், அவனுடைய திருவடிகளல்லது மற்றொருரக்ஷகமில்லை என்னுமிடத்தை புத்திபண்ணுங்கோளென்கிறார். [சிறுமை பெருமை] - அணுத்வ மஹத்த்வங்கள். [குறுமைநெடுமை]-நடுவுள்ள ஹ்ரஸ்வதீர்க்கங்கள். [சுழல்வனநிற்பன]- ஸ்யாவரஜங்கமங்கள். [அவையல்லனுமாய்] - இவற்றில்இவனுக்கு வ்யாப்திகர்மநிவேந்த்ரமல்லாமையாலே தன்பக்கல் அவற்றின்தோஷம் தட்டாதொழிகை. [மழலைவாய் வண்டு] - இனியபிடற்றோசையையுடைய வண்டு.

ப.—அநந்தரம், இப்படி ப்ரஸ்ப்ரஸிருத்தாகாரமான ஸகலசராசரங்களையும் விபூதியாகவுடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளல்லது வேறுரக்ஷகமுடையோமல்லோம்; இத்தை நிரூபித்துக்கொள்ளுங்கோளென்று உபதேசித்து முடிக்கிறார்.

நிழல் - தாபஸாந்திகரமானசாயையும், வெய்யில் - தாபகரமான ஆதபமும், சிறுமை - சிறுமைக்கெல்லையான அணுத்வமும், பெருமை - பெருமைக்கெல்லையான மஹத்த்வமும், (மத்யமபரிமாணங்களிலுண்டான), குறுமை - ஹ்ரஸ்வத்வமும், நெடுமையும் - தீர்க்கத்வமும், ஆய் -, சுழல்வனநிற்பன - சராசராத்மகமான, மற்றும் - மற்றுமுள்ள பதார்த்தங்களும், ஆய்—,(இப்படி ஸர்வப்ரகாரியாகாநிற்கச்செய்தே), அவை - அவற்றினுடைய ஸ்வபாவத்தை, அல்லனும் - உடையவனல்லாதவனும், ஆய்—, மழலை - முக்யமான, வாய் - வாக்வ்யவஹாரத்தையுடைய, வண்டு - வண்டுகள், வாழ் - ஸ்வலோகப்ராப்திகாலே வாழும்படியான, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, மன்னு- நித்யவாஸம்பண்ணுகிற, பிரான் - ஸர்வேஶ்வரனுடைய, கழல்கள் - திருவடிகளை, அன்றி - ஒழிய, மற்று - வேறு, ஓர் - ஒரு, களைகண் - ரக்ஷகவஸ்துவை, இலம் - உடையோமல்லோம்; காண்மின்கள் - (இது) நிரூபித்துக்கொள்ளுங்கோள்.

இ.—பத்தாம்பாட்டில், அவனுடைய திருவடிகளல்லது வேறு ரக்ஷகமில்லையென்று புத்திபண்ணுங்கோள் என்கிறார். [நிழல் வெய்யில்] - சீதஹேதுவான நிழலும், உஷ்ணஹேதுவான வெய்யிலும். [சிறுமை பெருமை]-அணுத்வமஹத்த்வங்கள். [குறுமை

நெடுமை]-மத்யமபரிமாணவஸ்துக்களிலுண்டான ஹ்ரஸ்வதீர்க்கங்கள். [சுழல்வனநிற்பன]-ஸ்யாவரஜங்கமங்கள். [மற்றுமாய்] - அநுக்தமான ஸர்வமுமாய். [அவையல்லனுமாய்] - கடிகதொரெஷாரஸம்ஸ்ரவுஷ்ணுயிருக்கை. [மழலைவாய் வண்டுவாழ் திருவிண்ணகர்] - மழலைப்பேச்சையுடைய வண்டுகள் தந்தாம்அநிமதங்கள்பெற்று வாழ்கிற ஊர். [மன்னுபிரான்இத்யாதி]-நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன் திருவடிகளல்லது வேறுபுகல்இல்லை. "மாமேகம்ஶரணம் வ்ரஜ" என்கிறவனன்றிக்கே, திருவடிகள்தானே தஞ்சமென்கை. [காண்மின்களே] - இத்தை எல்லாரும் புத்திபண்ணுங்கோள்.

ஈடு —பத்தாம்பாட்டு. அவன்திருவடிகளல்லது மற்று ரக்ஷகமில்லை யென்னுமிடத்தை புத்திபண்ணுங்கோ ளென்கிறார்.

[நிழல் வெய்யில்] - சீதஹேதுவான நிழலும், உஷ்ணஹேதுவானவெய்யிலும். [சிறுமைபெருமை] - அணுத்வமஹத்த்வங்கள். [குறுமைநெடுமை] - மத்யமபரிமாணத்திலுண்டான ஹ்ரஸ்வதீர்க்கங்கள். [சுழல்வனநிற்பன] - ஜங்கமஸ்த்தாவரங்கள். [மற்றுமாய்] - அநுக்தஸமுச்சயம்; சொல்லப்படாததெல்லாமாய். [அவையல்லனுமாய்] - அவற்றுக்குஅந்தர்யாமியாய் நிற்கச்செய்தே அவற்றின்தோஷம் தட்டாதபடிநிற்குமென்று கீழே சொல்லிற்றிறே; இனியிங்குஎன்? என்னில்,—அவற்றுக்கு வரும் அவஸ்த்தைகளையு முடையனல்லனாய்என்றபடி. அவையாவன - சேதநாநுதமாயுள்ள ஸு஖ித்வ துஃ஖ித்வாதிகளும், அசேதநாநுதமான பரிணாமாதிகளும். [மழலைவாய்வண்டுவாழ்] - பருவத்தில் இளமையாலே இனியபேச்சுக்களை யுடைத்தான வண்டுகள் வர்த்தியாநின்றுள்ள திருவிண்ணகரிலே நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன்திருவடிகளையொழிய வேறுரக்ஷகரையுடையோமல்லோம். [கழல்களன்றிமற்றோர்களைகணிலம்]-"மாமேகம் ஶரணம்வ்ரஜ" (மாமேகம் ஶரணம்வ்ரஜ) என்னுமவனன்றிக்கே, திருவடிகள்தானே தஞ்சமென்கை. [காண்மின்களே] - இது அர்த்தவாதஞ் சொல்லுகிறேனன்று; நீங்களுந் பாருங்கோள்.

பதினொராம் பாட்டு.

காண்மின்கள்உலகீர்! என்று கண்முகப்பேநிமிர்ந்த
தாளிணையன் தன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
ஆணையாயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும்வல்லார்
கோணையின்றிவிண்ணோர்க்கு என்றுமாவர்குரவர்களே.

பத்தாம்பாட்டு.—நிழல் இத்யாதி. "கழல்களன்றிமற்றோர்களைகணிலம்" இத்யாதியைப் பற்ற அவதாரிகை - அவன் திருவடிகளல்லது இத்யாதி.

"சிறுமைபெருமை" என்றுசொல்லி, "குறுமைநெடுமை" என்கையாலே மத்யமபரிமாணம் என்கிறது. கீழும் "அல்லனாய்" என்றது, இங்கும் "அல்லன் - ஆய்" என்றது; இரண்டுக்கும் பேதமென்னென்னிலென்றபடி. கீழ் - அகர்மவஶ்யதைசொல்லிற்று, இங்கு - தத்ஸ்வபாவ ஸுகதுஃகாஸஹித்யஞ் சொல்லுகிறதென்றபடி. மன்னுபிரானன்றியென்றதே, "கழல்களன்றி" என்றதுக்குஹாவம் - காரணம் இத்யாதி. அதாவது— திருவடிகளாலே நதியரைச்சொல்லி, ஈஶ்வரனன்றிக்கே நதீபாபிமானமே உத்தாரகமென்கை. 'பாருங்கோள்' மகஸ்வி லென்றபடி. (௪௦)

அ.—(காண்மின்கள்.)- ஆஸ்ரிதஅநாஸ்ரிதவிபாகமின்றியே ஸர்வாத்மாக்களுங் கண்டு வாழுங்கோளென்று அவர்கள் கண்முகப்பே நிமிர்ந்த தாளிணையன்தன்னைக் குருகூர்ச்சடகோபன் சொன்ன ஆயிரத்துள் எம்பெருமானுடைய ஸர்வநியந்த்ருத்வத்தைச் சொன்ன இத்திருவாய்மொழியை வல்லார் * அயர்வறுமமரர்களுக்கு நிஸ்ஸம்ஶயமாக ப்ரதமபூஜ்யராவரென்கிறார்.

ஒ.— நிகமத்தில் இத்திருவாய்மொழிவல்லார் அயர்வறுமமரர்களுக்குலோக்ய ராவர் என்கிறார். [காண்மின்களுலகீரென்று கண்முகப்பே நிமிர்ந்ததாளிணையன்தன்னை]- லோகத்திலுள்ள எல்லீரும் கண்டு க்ருதார்த்தராகுங்கோள் என்று அவர்கள் கண்ணெதிரே வளர்ந்த திருவடியையுடையவனை. [ஆணையாயிரத்துத் திருவிண்ணகர்ப்பத்தும் வல்லார்] - ஆயிரம் திருவாய்மொழியிலும் அவனுடைய ஜகந்நிர்வாஹகத்வத்தைச் சொன்ன இத்திருவாய்மொழிவல்லார். [கோணையின்றி] - மிறுக்கு இன்றிக்கே. [குரவர்கள்] - கௌரவ்யர்.

ப —அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஸூரிகளுக்கு நித்யகௌரவ்யராவர்களென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

உலகீர்-லோகத்தீர்! காண்மின்கள் - இத்தைக்காணுங்கோள், என்று-என்று, கண்முகப்பே - பரஸ்பர விருத்தரானவர்கள் கண்ணெதிரே, நிமிர்ந்த - வளர்ந்த, தாளிணையன்தன்னை - திருவடிகளை யுடைய த்ரிவிக்ரமாவதாரத்திற்போலே பரஸ்பரவிருத்த பதார்த்தங்களிலே பலவகையும் பரந்த ஸர்வேஶ்வரனை, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகனான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், ஆணை - ஹகவ காஜ்ஞாரூபமாயிருக்கிற, ஆயிரத்து - ஆயிரத்தில், திருவிண்ணகர் - திருவிண்ணகர் விஷயமான, பத்தும் - பத்தையும், வல்லார் - வல்லவர்கள், கோணை - ஒருமிறுக்கு, இன்றி - அற, விண்ணோர்க்கு - நித்யஸூரிகளுக்கு, என்றும் - என்றும், குரவர்கள் - கௌரவ்யர், ஆவர் - ஆவர்கள். இது - கவிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் நித்யஸூரிகளுக்கு கௌரவ்யரென்கிறார்.

[காண்மின்கள் இத்யாதி] - நோக்குவித்தை காட்டுவாரைப்போலே; இதோ ராஶ்சர்யம் பாருங்கோளென்று லௌகிகர் எல்லாருடையவும் கண்ணெதிரே வளர்ந்த திருவடிகளையுடையவனை. "உங்கள் தலையிலே திருவடிகளை வைக்க வாருங்கோள்" என்றுமேசை வாரில்லையே. [குருகூர்ச்சடகோபன்சொன்ன]- இந்த ஸௌலப்யத்தை அநுஸந்தித்தவர் சொன்ன வார்த்தையாகையாலே ஆப்தமென்கை. [ஆணையாயிரத்து] - "ஶிஷ்டாஸ்ஸாஸ்த்ர தஃவவதெ" என்கிறபடியே ஆயிரத்திலும், ஜகந்நியமனத்தைச்சொன்ன, திருவிண்ணகரை விஷயமாக உடைய பத்து. இத்தை அப்யஸிக்கவல்லார். [கோணையின்றி] - மிறுக்கின்றிக்கே, நித்யஸூரிகளுக்கு என்றுமொக்க கௌரவ்யராவர்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழிவல்லார் நித்யஸூரிகளுக்கு நாள் தோறும் கௌரவ்யராவரென்கிறார்.

நி஗மம் — காண்மின்கள் இத்யாதி. "பத்துவல்லார் - விண்ணோர்க்கென்றுமாவர்குரவர்கள்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

[காண்மின்களுலகீரேன்று கண்முகப்பேநிமிர்ந்த தாளிணையன்தன்னை] - "உங்கள்தலையிலே நான்காலைவைக்கக்கோடுவோருங்கோள்" என்றால் இசையாரென்று பார்த்து, நான் காட்டப்புகுகிறதொரு விஸ்மயம் பாருங்கோள் என்பாரைப்போலே இவர்கள் கண்முகப்பே நிமிர்ந்த திருவடித்தாமரைகளையுடையவனை. [காண்மின்கள்] - இதொருவிஸ்மயம் என்ன வேண்டிற்றுக் காணும் "தலையிலேயடிபடப்புக்கவாறே இருப்பர்கள்" என்று. [குருகூர்ச்சடகோபன்சொன்ன] - இந்தஸைலப்பத்தை யநுஸந்தித்தவர்சொன்ன வார்த்தையாகையாலே ஆப்தமென்கை. [ஆணையாயிரத்து] - ஈச்வரனுடைய ஜகதநுஶாஸநத்தைச்சொன்ன இத்திருவாய்மொழிவல்லார். விண்ணோருண்டு - நித்யஸூரிகள், அவர்களுக்கு காலதத்த்வமுள்ளதனையும், குருக்களாவர் - கௌரவ்யராவர். இதில், கோணையில்லை - ஒருமிறுக்கில்லை. ஆவதென்? அஸ்ப்ருஷ்டதோஷ கந்தரான நித்ய ஸூரிகளுக்கு, நித்யஸம்ஸாரியானவன் இத்தைக் கற்குங் காட்டில் கௌரவ்யமுண்டாம்படி யெங்ஙனே? என்னில்,—அங்கேயிருந்துவைத்தே ததீயத்வாகாரத்தாலே லீலாவிபூதியநுஸந்தாநம்பண்ணி ஹ்ருஷ்டராம் நிலையுள்ளது முக்தர்க்காகையாலே, இங்கேயிருந்தேயவர்கள் அநுஸந்தாநத்தைப் பண்ணுகிற இவனை, "ஸம்ஸாரத்தே யிருந்துவைத்தே நாம்படி யொருவனுக்குஉண்டாவதே!" என்று கொண்டாடியிருப்பர்கள். (கக)

கண்முகப்பேநிமிர்ந்தவென்றதே, "காண்மின்களுலகீர்" என்று விசேஷித்ததுக்கு ஹேதுவாம் - உங்கள்தலையிலே (இத்யாதி. சாடுவாக உக்தார்த்தவிவரணம் - இதொரு இத்யாதி. துராபிமாநிகளாகையாலே - 'இருப்பர்கள்' என்றபடி. அடி - திருவடிகளை, ப்ரதைரையும். இந்த ஸைலப்பத்தை - திருவுலகளந்தருளின ஸைலப்பத்தை. ஆணை - ஐஶ்வர்யம். "ஆயிரத்து - ஆணை - திருவிண்ணகர்ப்பத்து" என்றந்வயிப்பது : ஐஶ்வர்யமாகத்தை ப்ரதிபாதிக்கிற பத்தென்றபடி. விவரணம் - 'கௌரவ்யராவர்' என்று. மிறுக்கு - அநுபபத்தி. ப்ரஸக்தஸ்யாநிஷேதோ: அன்றோ! அநுபபத்திக்கு ப்ரஸக்தி யேது? என்ன,—ப்ரஸக்தியை ஸங்கித்துப் பரிஹரிக்கிறார் - ஆஸ்ப்ருஷ்ட - ஸ்பர்ஶம். குரவர்கள் - குருக்கள். (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— "கௌவம் ஶிஶ்ரூணயஜ ப்ரஶயூ
ஷ்ஸாயீநகாஶிதநாதெ ஸவிஸ்யஸ்ஸ: । ஸ்யாம்விராஜஜஹ்ஹாக்ஷ்ரீதாஸ்ய
தெநஸாநுஶி-தாஶிநாஸைலுவஶாநிஷ்ஷ்ரீயெ॥"

[வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும்] - தேவரிரக்க வேண்டி வந்துபிறந்ததும். "எங்களளவறியாதே ஒருவனுக்கு வரங்கொடுத்து அவனையுயரப்பார்த்தோம்: எங்களுக்குக் குடியிருப்பு அரிதாயிற்று" என்று தேவஜாதி கப்படங்கட்டிக்கொண்டு செல்ல "வி தாரம் ரொரயாமாஸ" (பிதாம்ரோசயாமாஸ) என்கிறபடியே தான் அர்த்தியாய்வந்துபிறந்தது வும். "ஆத்மமாயயா" (ஆத்மமாயயா)என்னும்படியிறே; ஆத்மேச்சயா என்றபடி; "மாயா வயுநம் ஜ்ஞாநம்" (மாயா வயுநம் ஜ்ஞாநம்). இரக்கிறவர்களளவுபார்த்தல், தன்னளவு பார்த்தல் செய்கையன்றிக்கே வந்து பிறந்தபடிகாணும், இவரைவருத்துகிறது. தான்இரப்பாள னாய்க் காரியஞ்செய்யுமவன், பிறந்தால் பொறுக்கமாட்டானிறே. [பிறந்ததும்வீங்கிருள் வாய்] - "யுஷ்மாகத்ரவிலாயாரெ ஜாயமாநெ ஜநார்தநே" (மத்யாராத்ரே கிலாதாரேஜாயமாநேஜநார்த்தநே) என்னும்படியிறே "இவனைக் கிழக்காடறியாதே யகப் பட்டுக்கொடுநின்றான், கம்ஸபயமும் ப்ராப்தமாயிராநின்றது. இருளாலேயிறே நாம் பிழைத் தது! இனி இவ்விருளைச் சரணம்புகுரித்தனையிறே" என்று பிள்ளையுறங்காவில்லிதாஸர் பணிப்பராம். * ஊரெல்லாந்துஞ்சியில் கூற்றமான இருள்இவர்க்கு இப்போது ஆதரத்துக்கு விஷயமாயிற்றிறே. வீங்கிருள்வாய் பூண்டன்றன்னை புலம்பப்போய் என்றாராம்; "மக்களறு வரைக் கல்லிடைமோத விழந்தவள்" என்கிறபடியே பெற்றுப்பெற்றுஇழந்தவளாகையாலே,

---

அஞ்சாம்பாட்டு.—வேண்டி இத்யாதி. "காண்டவின்றிவளர்ந்து" இத்யாத்யுத்தரார்த்தத் தைக் கடாகரித்தவதாரிகை - அவதரித்து இத்யாதி.

தேவர்களிரக்கும் ப்ரகாரத்தைக் காட்டுகிறார் - எங்களளவு இத்யாதி. கப்படம் - கார்ப் பண்யசூசகபடவிசேஷம், கப்பரையும். "வேண்டி-வந்து" - அர்த்தியாய்வந்தித்யர்த்த. "வ்ரஜ விலாலாக்ஷ: க்ருஷ்ணாநாம் ஸ்ரத்தாவிஷ்யதி । வி தாரம்ரொரயாமாஸ தஸ்மாத்ஜாயயா நுவ" இதி பாலகாண்டே. "வேண்டி-வந்து" என்றதுக்கு - இச்சித்துவந்தென்றர்த்தார்தரம் - ஆத்மேச்சயா இத்யாதி. இதுக்கர்த்தம் - ஆத்மேச்சயா என்றபடி என்று. சாயா ஶப்தம் - இச்சா வாசகமாமோ? என்ன - சாயாவயுநம் இத்யாதி. "தேவர்" என்றதுக்கு பாவமாதல், "வந்து பிறந்ததும்" என்றதுக்கு ஒருார்த்தபாவமாதல் - இரக்கிறவர்களளவாவது - "ஈஶ்வரோஹம்"என்றஇருக்கிற ஸர்வாதிகதேவதை: தன்னளவாவது - தன்பெருமை. இருவரளவும் பாராமல்வந்து பிறக்கைக்கு அடி என்ன - தாமியப்பாளாயி இத்யாதி. "வீங்கிருள்வாய்" - ப்ரவ் ருத்தமான இருளிலே. வளருகிற இருளிலேயோபிறந்தான்? என்ன - யுஷ்மாகத்ர இத்யாதி. "யுஷ்மாகத்ரவிலாயாரெ ஜாயமாநெ ஜநார்தநே । ஸ்ரஜ்ஜ்ஜ்ரஜ்ஜ்ஜ்

இவனையும்இழக்கிறோமோ!'' என்று விரஹகாதரதையாலே காலைப்பூண்டுகிடந்து கூப்பிடப் போய். பிள்ளைபக்கல் வாத்ஸல்யத்தாலே இவள் கூப்பிட, இவன் முலைச்சுவடறியாமையாலே போனபடி. வீங்கிருள் - வளர்கிறஇருள். [அங்கோராய்க்குலம்புக்கதுக்] - அவ்வவஸ்த்தையிலே இடையிலே வொருகைக்குழந் அந்நிஞன்புகலிட முண்டாவதே! [ஆய்க்குலம்]-''கம்ஸன்வோயகன்'' என்று பயப்படவறியாதவர்கள். ''குடிவாய்உடன்படவிருந்தாஞகில் இருக்கிறான், இல்லையாகில் உழக்கோலாலே நகர்க்கிறோம்'' என்றிருப்பர்கள். [காண்டலின்றிவளர்ந்து]- கம்ஸனும் அவன்வரக்காட்டினவோ, கவர்க்கமும் காணாதபடி வளரப்பெறுவதே! [கஞ்சனைத்துஞ்ச வஞ்சம் செய்ததும்] - ஸ்ரீநாரதபகவான் அறிவித்த பின்பு ஒருபோதுதாழாதேவந்து, அவன்தான் நினைத்தவஞ்சனையை அவன்தன்னோடே போக்கினதும். கம்ஸன் முடியும்படியாக வஞ்சனைசெய்தது, ராமாவதாரம்போலே ''செவ்வைப்பூசலல்லதறியேன்'' என்றிராமையிறே [ஈண்டுநான்ஆற்றப்பெற்றேன்] - தேவகியாரைப்போலே ஸமகாலத்திலேயிருந்து பயப்படாதே, இப்போது பயங்கெட்டிருந்து அநுபவிக்கப்பெற்றேன். ஈண்டு - இப்போது. [எனக்கென்ன இகலுளதே] - கம்ஸன்பட்டபின்பு எனக்கு ஶத்ருக்களுண்டோ? இகல் - சத்ரு. † (எல்லாரும் பேஷபூதராகையாலே தமக்கு சத்ருவில்லை. அவனும் நாராயணனாகையாலே அவனுக்கு சத்ருவில்லை. இனி யிவர் சத்ருக்கள் பகவத்விமுகரிறே.) கம்ஸனைமுடித்தபடியை இன்றுஇருந்து அநுபவிக்கப்பெற்ற எனக்குஇனி ஒரு மிடியில்லை என்கிறாராகவுமாம். (௫)

ஆறாம்பாட்டு.

இகல்கொள்புள்ளைப்பிளந்ததும் இரிலோகங்கள்சேற்றுகளும்
உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததும் உட்படமற்றுமுள்ள
அகல்கொள்வையமளந்தமாயன் என்னப்பன்தன்மாயங்களை
பகலிராப்பரவப்பெற்றேன் எனக்கென்னமனப்பரிப்பே?

ஆ.—(இகல்கொள்.) - கம்ஸப்ரேரிதரான ப்ரதிகூல விநோதங்களிலே விசேஷ துர்த்தம்ருஷ குந்தலுபாஸுரகிரஸுர ப்ரபாருதி பரமபுருஷ. திவ்யசேஷ்டிதங்களை ஸர்வகாலமும் ஏத்தப்பெற்ற நான் அவாப்தகாமன் நமக்கோரு குறைவுண்டோ என்கிறார்.

ஓ.—ஆறாம்பாட்டில், க்ருஷ்ணனுடைய ப்ரதிகூலநிரஸந ப்ரகாரங்களை அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒரு மிடிதுக்கமில்லை என்கிறார். [இகல்கொள் புள்ளைப்பிளந்ததும்] - எதிரிட்டபுள்ளைப் பிளந்ததும். இரிலோகம் என்று கருக்கைச்சொல்லு

பிராட்டியுடையவென்றபடி. பெரியாழ்வார் திருமொழி. அஞ்சாம்பத்து, மூன்றாந் திருமொழி, ''தூக்கச் சுழலை'' இத்யாதி. காலைப்பூண்டு - க்ருஷ்ணனுடைய காலைப்பூண்டு. இவள்கூப்பிடுகிறதுக்கும் அவன் போனதுக்கும் வேறுவேதென்ன - பிள்ளைபக்கல் இத்யாதி. ''ஓர்'' என்றதுக்கு ஸார்த்தபாவமாதல், ஸமபோடாதல் - அவ்வாவஸ்த்தையிலே இத்யாதி. அஞ்சினன்புகலிடம் - பயம்தன்புகுமிடம். பயப்படவறியாமையின் எல்லையைக்காட்டுகிறார் - குடிவாயுடன் இத்யாதி. குடிவாய் உடன்படவிருந்தாஞகிலென்றது - குடிமக்களோடொத்திருந்தாஞகிலென்றபடி. குடிவாய் - குடிமக்கள். உழக்கோல் - நாற்றுக்கோல். நாரதபகவான்சொன்னது கம்ஸனோடே. மிடி - க்லேஶம். (௫)

கிறது. [உயர்கொள்சோலைக் குருந்தொசித்தவும்] - ஸ்ரீகிருஷ்ணனாயிருந்து உயர்ந்து தழைத்துநின்ற குருந்தின்வடிவைக்கொண்ட அஸுரனை முடித்தவும்.

ப.—அநந்தரம், பூர்வாவதாரத்திலே அக்ரூரனாகி வந்தவனான க்ரூர விக்ரமத்தைப் பண்ணின க்ருஷ்ணனுடைய விசித்திரசரித வ்யாபாரங்களை அநுபவிக்கப்பெற்றேன்; எனக்குஎன்ன மனோரதமுமுண்டு என்கிறார். இகல் - யுத்தத்திலே, கொள் - ஒருப்பட்டெழுந்த, புள்ளை - பகாசுரனை, பிளக்கவும் - வாயைக்கிழித்தவும், இகில் - (செருக்கடியான) விசேஷமுடைய, கறுகள் - கறுகளை, செற்றவும் - செறுத்துக் கொன்றவும், உயர் - உயர்ந்தவை, கொள் - உடைத்தாய், சோலை - தழைத்த, குருந்து - குருந்தை, ஒசித்தவும் - முறித்தவும், உட்பட - முதலாக, மற்றும் - பின்னும், பல - விசித்திரங்களுடனாய்க்கொண்டு பலவாயுள்ளனவாய், அகல் - விஸ்தாரத்தை, கொள் - உடைய, வையம் - பூமியை, அளந்த - அளந்து மஹாபலியபிமானத்தை யழித்துக்கொடுத்த, மாயன் - ஆச்சர்யபூதனை த்ரிவிக்ரமனும், என் - அவ்வவதாரத்தோடொத்த ஔந்நத்தியத்தை யொக்கும் ப்ரகாசியிக்க, அம்மான்தன் - மஹாராஜகுமாரனை க்ருஷ்ணனுடைய, மாயங்கள் - அம்மாதிரி சேஷ்டிதங்களை, பகல்இரா - பகலோடு இரவோடு வாசியற, பரவ - ஸ்துதிக்க, பெற்றேன் - பெற்றேன்; எனக்கு - எனக்கு, மனப்பரிப்பு - மநோரதமும் உண்டு? பகலுக்கு ராத்ரியும் ப்ரதிபக்ஷமாகையிற்றே மநோரதமுமுள்ளதென்று கருத்து.

இ.—ஆழ்வார்பாட்டில், க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸன பரம்பரையை அநுபவிக்கப்பெற்ற எனக்கு ஒருமநோரதமும் இல்லை என்கிறார்.

[இகல்கொள் இத்யாதி] - யுத்தோத்யோகத்தோடு வந்த பகாஸுரனை வாயைக்கிழித்தவும். பகுதிவேஷத்தாலே வந்து எதிரிட்டானாயிற்று பகாஸுரன்; அவனை அநாயாஸேந கொன்றான். [இகிலேறு இத்யாதி] - கண்டார்க்கு ஸுகாவஹமான கறுத்துக்களையுடைய விஷயங்களை நிரஸித்ததும். இகில் - கறுத்த. [உயர்கொள் இத்யாதி] - ஓங்கித்தழைத்திருந்துள்ள குருந்தை முறித்ததும்; திவ்யமானான ஸ்த்தாவரவேஷத்தைக் கொண்டு வந்த மஹாஸுரனை முடித்ததும். [உட்பட மற்றும் பல] - கன்றாயும் விளவாயும் வந்த அஸுரர்முதலாக வேறும்நிரஸித்தவை அநேகங்கள். இந்த திவ்யக்ஸ்த்தாவரங்களை திவ்ய ஸூரிகள் கைங்கர்யத்துக்காக பரிக்ரஹிப்பர்கள்; இங்கு ப்ராணிகளுக்குத்தூணாகக் கொண்டவடிவுகளிறே இது. இதுக்கு பாபப்ராசுர்யம் அடி; அதுக்கு இச்சை அடி. [அகல் கொள் இத்யாதி] - பரப்பையுடைத்தானபூமி அடங்கலும் தன் திருவடிகளின்கீழேயிட்டுக் கொண்ட ஆச்சர்யத்தையுடையவன். வரையாதே தீண்டும் ஸ்வபாவ ஸாம்யத்தாலே சொல்லுகிறது. [என்னப்பன்] - இவ்வபதாநம் தமக்குஉதவ ஸித்தித்தது என்று இருக்கிறார். [மாயங்களே] - ஆச்சர்யசேஷ்டிதங்களையே. [பகலிரவு இத்யாதி] - இரவோடு பகலோடு வாசியற அநுபவித்து ப்ரீதியாலே அடைவுகெடப்பேசப்பெற்றேன். [எனக்கென்ன மனப்பரிப்பே] - எனக்குஎன்ன மநோரதமுண்டு. பரிவு என்கிறதை சந்தஸ்ஸுக்குச்சேர 'பரிப்பு' என்று சொல்லுகிறது.

ஈடு.—ஆறும்பாட்டு. க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸந பரம்பரையை அநுபவிக்கப் பெற்ற எனக்கு ஒரு மநோதுஃகமில்லையென்கிறார்.

[இகல்கொள்புள்ளைப்பிளந்ததும்] - (இகல் - யுத்தம்.) கேவலம் புள்மாத்ரமாய்வந்து தோற்றுகை யன்றிக்கே, யுத்தோந்முகமாய்க்கொண்டு எதிரிட்ட புள்ளை நிரஸித்ததும். அசுராவேசத்தோடே வரச்செய்தேயும் 'பாதிக்கவருகிறது' என்று பிறரஞ்சாத வடிவு கொண்டு வந்தபடி. * பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டுவந்தது. [இரிலேறுகள் செற்றதுவும்] - கருத்தையுடைத்தான வ்ருஷபங்களைச் செற்றதுவும். [உயர்கொள்சோலைக் குருந்தொசித்ததும்] - ஒக்கத்தை யுடைத்தாய்ச் சோலைசெய்துநின்ற குருந்தை முறித்ததும். "முக்யராயிருப்பார்க்கு ஆகர்ஷகமாயிருக்கும்" என்று தழைத்துநின்றது; "இனியிந்தைமுறித்துக் கார்யங்கொள்வோம்" என்று பொடிபடுத்தினான். [உட்படமற்றும்பல] - இப்புடையிலே மற்றுமுண்டான ப்ரதிகூலநிரஸநங்கள் அநேகமிறே. [அகல்கொள்வையமித்தியாதி] - பரப்பையுடைத்தான பூமியடங்கலும் அநாயாஸேநவளர்ந்த ஆஶ்சர்யபூதனான உபகாரகனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையே. [பகலிராப்பாவப்பெற்றேன்] - நாட்டார் அபிமத விஷயங்களை புஜிக்கைக்கு 'பகல் இரா' என்று கூறிட்ட காலம்இரண்டும் இவ்விஷயத்திலே அநுபவிக்கப்பெற்ற எனக்கு, இரவைபகல் புறம்பே விஷயங்களோ யநுபவிப்பாருடைய மநோதுஃகமுண்டோ? பரிவென்று - துஃகம். அதிலே ஒரு †ஒற்றெழுத்தேறினாலும் அவ்வர்த்தத்தையே காட்டக்கடவது. (சு)

ஏழாம் பாட்டு.

மனப்பரிப்போடு அழுக்குமானிடரதியில்தான்பிறந்து
தனக்குவேண்டுருக்கொண்டு தான்தனபிற்றத்தினைமுடிக்கும்
புனத்துழாய்முடிமாலைமார்பன் என்னப்பன்தன்மாயங்களே
நினைக்கும்நெஞ்சுடையேன் எனக்கினியார்நிகர்நீள்நிலத்தே?

ஆ.—(மனப்பரிப்போடு.) - ப்ரணதஜநஸமீஹிதங்களை நிர்வர்த்தநவிஷய மநோரதமுண்டாக்கொண்டு, ஸுரேசஸுரேதரஸோஸ்பத மநுஷ்யஜாதியிலே ஸ்வாஸாதாரண திவ்ய ரூபத்தோடே வந்துபிறந்தருளி, ஸ்வாதிமத க்ரியா ரூப சதுர்ப்பாஜாதியுபாயங்களை யாஸ்ரயித்தாகம்பண்ணிக்கொண்டு விரோதிநிரஸநம்பண்ணி பரிபூர்ண மநோரதனாகையாலே,

---

ஆறும்பாட்டு-இகல் இத்யாதி. "இகல்கொள்" என்று தொடங்கி, "மற்றும்பல" என்றுளவுங் கடாக்ஷித்தவதாரிகை-க்ருஷ்ணனுடைய இத்யாதி. "எனக்கென்ன மனப்பரிப்பு" என்றதனை எனக்கொரு மநோதுஃகமில்லையென்கிறாரென்றது. இகல் - யுத்தம். புள்ளென்றதே, "இகல்கொள் புள்" என்று விசேஷித்ததுக்கு ஹேதுவம்-கேவலம் இத்யாதி. "புள்" என்றதுக்கு ஹேதுவம்-அசுராவேச இத்யாதி. அஞ்சாத வடிவுகொண்டு வந்ததுக்கு ப்ரமாணம் - பள்ளத்தில்மேயும் இத்யாதி. நீர்த்தாழ்வுகளிலே இரைதேடித் திரிகிற ஒரு மாதிரி பக்ஷியின் வடிவைக்கொண்டு இத்யர்த்தம். பெரியாழ்வார் திருமொழி, இரண்டாம்பத்து அநுசந்திருமொழி, நாலாம்பாட்டு. சோலை செய்து நிற்கைக்கு ஹேது வேதென்ன - முக்யராய் இத்யாதி. "பகலிரா" என்று விசேஷித்ததுக்கு ஹேதுவம்-நாட்டார் இத்யாதி. கூறிடுகையாவது - அபிமதவிஷயங்களுக்குக் கொடுக்கைக்கு நடுப்பாக அர்த்தவிநியோகம்பண்ணுகைக்குப் பகலையும், அவற்றை அநுபவிக்கைக்கு ராத்ரியையும் அவச்சேதிக்கை யென்றபடி. (க)

அதிபரிமள துலஸீமாலாலங்க்ருதனாயிருந்த எம்பெருமானுடைய ஆஶ்சர்ய திவ்யசேஷ்டிதங்களையே நினைக்கும் நெஞ்சாகிற மஹாநிதியையுடையனான என்னோடொக்க இந்த லோகத்தில் யாரேனுண்டோ? என்கிறார்.

ஒ.—வழாம்பாட்டில், ஆஶ்ரிதருடைய தோஷ பொறுக்கமாட்டாமை அப்ராக்ருத திவ்யஸம்ஸ்யாநத்தோடே கூட தானேவந்து பிறந்தருளி, ஆஶ்ரிதவிரோயி நிரஸநத்தைப் பண்ணியருளினவனுடைய சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு ஆர் நிகர் நீள்நிலத்து? என்கிறார். [தனக்கு வேண்டுருக்கொண்டு] - தனக்கு அபிமதமான திவ்யஜநாதிரூபங்களைக்கொண்டு. [தான் தனசிற்றத்தினை முடிக்கும்]-ஆஶ்ரிதருடையவிரோயிகளைப் போக்கினால் அவர்களுக்கு ஒரு காரியஞ்செய்தானாயன்றிக்கே தன்னுடைய சீற்றத்தை முடித்தானாயிருக்கும். [புனத்துழாய் முடிமாலை மார்பன்] - ஆஶ்ரிதருடைய விரோயிகளைப்போக்கித் திருமஞ்சனமாடி யருளி ஒப்பித்த அழகிய திருத்துழாய்மாலையைத் திருமுடியிலும் திருமார்பிலும் உடையவன்.

ப.—அநந்தரம், அதிபவித்ர மோக்ஷகாரனான க்ருஷ்ணனுடைய ஆஶ்ரிதவிரோயிநிரஸநார்த்தமான அவதாரவைலக்ஷண்யத்தை அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு பூமியில் ஸத்ருசமுண்டோ? என்கிறார்.

("ஹ்ரஸ்வஸம்ஸ்வகிரணாஶ்ரிதம்" என்கிறபடியே ஸம்ஸாரிகள் படுகிற துக்கத்தைக்கண்டு பரதுஃகாஸஹிஷ்ணுத்வரூபமான), மனம்பரிப்போடு - நெஞ்சில் துக்கத்தோடே, அழுக்கு - ஹேயமான, மானிடசாதியில் - மநுஷ்யஜாதியிலே, தான்-(ஹேய ப்ரத்யநீகனான) தான், பிறந்து - தத்ஸஜாதீயனாய்ப் பிறந்தவிடத்திலும், தனக்கு வேண்டு - தன் இச்சாநுரூபமான, உரு - அபிமதவிக்ரஹங்களை, கொண்டு - பரிக்ரஹித்து, தான் - (ஆஶ்ரிதவாத்ஸல்ய க்ஷமாதாயுடைய) தான், (ஆஶ்ரிதவிரோயி நிரஸநத்தாலே), தனதன், சீற்றத்தினை - சீற்றம், முடிக்கும் - முடிப்பானாயிருப்பானாய், புனம்-தன்னிலத்தில் நின்றாற்போலே செவ்விபெற்ற, துழாய்-திருத்துழாய் மாலையையுடைத்தான, முடி-திருமுடியையும், மாலை- அந்தத்திருமாலையையுடைத்தான, மார்பன் - திருமார்பையுமுடையனாய், என் - அவ்வழகையெனக்கு ப்ரகாசிப்பித்த, அப்பன்தன் - உபகாரகனானவனுடைய, மாயங்கள் - ஆஶ்சர்ய சேஷ்டிதங்களை, நினைக்கும் - நினைக்கும்படி விலக்ஷணமான, நெஞ்சு-நெஞ்சை, உடையேன் - அஸாதாரணமாகவுடையேனான, எனக்கு - எனக்கு, இனி-இனி, நீள்நிலத்து-இந்தமஹாப்ரதிவிஸ்தீர்ணத்தில், நிகர் - ஒப்பாவார், ஆர்-ஆர்?

இ.—வழாம்பாட்டில், ப்ரதிகூலர் அநுகூலரை நலியாமல் பொறுக்கமாட்டாமை அவதரித்து, அவர்களை அழியாமலெயாயும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு ஸீமியில் ஸதிர் இல்லை என்கிறார். [மனப்பரிப்போடு] - "நமக்கு அநந்யார்ஹ போஷமாயிருக்கிற இவ்வஸ்து, தேஹாவஸாநத்தாலே வேறாமுலமாக நிகழப்படுவதே!" என்னும் மநோதுக்கத்தோடேயாயிற்று திருவவதரித்தது. [அழுக்குமானிடசாதியில்] - ப்ரஹ்மாதிகளுங்கூட அருவருக்கும் மநுஷ்யஜாதியிலே. [தானபிறந்து] - ஹேயப்ரத்யநீகனான தான் அப்பராக்ருததிவ்யஸம்ஸ்யாநத்தோடே முரட்டுவாஸம் பண்ணிக்கொண்டு அவதரித்து. "சாநுஷேஷேஷு கேஷுசித்". தன்ஜந்மத்தை அநுஸந்யிக்க, ஸம்ஸாரிகளுடைய ஜந்மஸம்பந்தம் ஸோபாதிகமான தான்பிறந்து. [தனக்கு வேண்டுருக்கொண்டு] - சதுர்பாஹுவது, த்விபுஜனாவது, ஸோபாலனாவது, வைஶ்ரவ

ருப்பயத்தைக் கொள்ளதானாக. இவைதான் ஆபாதிதார்த்தமானகையாலே தனக்கு அபிமதமாயிருக்கும். [வேண்டுரு] - ஐச்சம் என்றுமாம். [தான் தனிற்றத்தினை முடிக்கும்] - ஆபாதிதவத்ஸலனான தான் ஆபாதிதவிரோயிகளைப்போக்கி, அந்தாலே தன்னினம் திரத்தாக்கி இருக்கும். ப்ரஜையை நலிந்தவர்களைத் தாய் 'தனக்குபகாரு' என்று இருக்குமாபோலே. [புனத்துழாய் முடிமாலைமார்பன்] - ஆபாதிதவிரோயிகள் போகப்பெற்றவத்தாலே ஒப்பித்திருக்கிறபடி. [தன்மாயங்களை] - அவனுடைய ஆப்ரமேயசேஷ்டிதங்களையே இடைவிடாமல் அநுஸந்திக்கும் நெஞ்சுடையேன். "கோபுணாவைபவமிதோ கூ ஏயா:" என்கிறபடியே தனமை தவிர்ந்து, ஆஸ்ரயணமான நெஞ்சைப்பெற்றேன். [எனக்கு இனியார் நிகர் நீள்நிலத்தே] - பஞ்சாபத்கோடி விஸ்தீர்ணமான ஸுமியில் எனக்கு எதிர்ஆர்?

ஈடு.—ஏழாம்பாட்டு. ப்ரதிகூலர் ஆபாதிதரை நலியுமது பொறுக்கமாட்டாமை அவதரித்து அவர்களை யழியச்செய்யும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு பூமியில் நிகரில்லை யென்கிறார்.

[மனப்பரிப்பேறு அழக்கு மானிடசாதியில்தான் பிறந்து]- நாட்டாரை அழக்குடம்பு கழிக்கும் தான்கிடீர் அழுக்கு மானிடசாதியிலே வந்து பிறந்தான். ப்ரஜை கிணற்றிலேவிழுந்தால் எடுக்க வருந் தாய் கூந்தலொன்றுவந்து எடுக்குமாபோலே, "இவற்றுக்கு உதவப்பெற்றிலோம்" என்றும் திருவுள்ளத்தில் தளர்த்தியோடே வந்து பிறக்கை. [தான பிறந்து]- ஹேயப்ரத்யநீகனான தான் அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தாநத்தோடே ஸர்ப்பவாஸம் பண்ணிக்கொண்டவதரித்து: பிறக்கைக்குக் கர்மம்பண்ணிவைத்தவருங்கூட அருவருக்கும் ஜந்மத்திலே கிடீர் அகர்மவஶ்யனான தான்பிறந்தது; இதுக்கடி காருண்யமிறே. [தனக்கு வேண்டுருக்கொண்டு]-அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தாநத்தை யுடையனாய்க்கொண்டு. அப்படி பிறந்தால் ஒருபடிப்பட்டிருக்கக் பெற்றோமோ!. "ஸ்வ ஜ்ஜாவாவத ஸுஜ்ஜாவா" (த்விபுஜோவா சதுர்ப்புஜோவா) என்றும்படியிறே பட்டபடி. ஈஶ்வரத்வத்தைக் கைகழிய விட்டபின்பிறே இவனுக்கு இங்கு இடங்கொடுத்தது. இவனைதான் ஆபாதிதார்த்தமானகையாலே தனக்கபிமதமாயிருக்கும். ஐச்சமென்றுமாம். [தான் தனிற்றத்தினைமுடிக்கும்]-

---

ஏழாம்பாட்டு [மனப்பரிப்பேறு] இத்யாதி. "மனப்பரிப்பேறுக்கு" என்று தொடங்கி, "நினைக்கும் நெஞ்சுடையேன்" இத்யாதிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை - ப்ரதிகூலர் இத்யாதி.

"தான்" என்றதுக்கு ஸ்வயம் நாட்டாரை இதயாதி. நாட்டாரை யென்கிறது "ஹேயமான வுடம்பைக் கழிக்கவேணுமே" என்று ப்ரார்த்திக்கிற முமுக்ஷுக்களை. "மனப்பரிப்பேறு" என்றதுக்கு ஸத்ருஷ்டாந்தமாக ஸ்வயம் - ப்ரபந்நர் இத்யாதி. இவற்றுக்கென்றது - தனக்கு அநந்யார்ஹமேஶஷமாய் வைத்து மேநாவுபகிற இவற்றுக்கென்றபடி. "தான்" என்றதுக்கு - அகர்மவஶ்யனான தான் என்று அர்த்தாந்தரம்-ப்ரமாணங்காட்டி இத்யாதி. "தனக்கு வேண்டுருக்கொண்டு" என்றதுக்கு இரண்டர்த்தம். † அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தாநத்தை யுடையனாய்க்கொண்டு என்றுதல்; த்விபுஜனாதல் சதுர்ப்புஜனாதல் வேண்டினபடியாய்க்கொண்டு வென்றுதல். ஒரு படிப்பட்டிருக்க வில்லையோ? என்ன-த்விபுஜோவா இத்யாதி. சதுர்ப்புஜனானவன் த்விபுஜனாகைக்கு அடியேயென்ன - ஸம்ஸாரத்தினுடைய கொடுமை யென்கிறார்-ஸர்வாத்மவத்தாலே இத்யாதி. "மனப்பரிப்பேறு" இத்யாதிக்கு - "ஸம்ஸாரிகளுடைய துஃபோபஶமத்தால் வந்த மநோதுஃகத்தோடே, ஹேயமான மநுஷ்ய ஜாதியிலே, ஹேயப்ரத்யநீகனான தான் தத்ஸஜாதீயனாய்ப் பிறந்து, அவ்விடத்திலும் தன் ஸ்வாதந்த்ர்யமான அநிமிதவிக்ரஹங்களை பரிக்ரஹித்து" என்று உரையிலே ஸம்தர்ப்பம். கைகழியவிட்ட என்றது - ஸ்வீகரிக்கும்; கைகொக்கழிய விட்ட என்றும், கைகழியும்படிவிட்ட என்றும். இதுக்கு - "உபஸம்ஹாரஸுவ ஸூதாநு ஸுவ

ஆஸ்ரிதவிரோயி போக்கினனுயிருக்கையன்றிக்கே தன்சினந் தீர்ந்தானுயிருக்கை; மாதா வானவள், ப்ரஜைகளை நலிந்தவர்களைத் தான் நலிந்து தன்சினந்தீருமாபோலே. கோவ ஸ்யவஶமேயிவாநு'' (கோபஸ்யவஶமேயிவாந்). [புனத்துழாய்முடிமாலைமார்பன்] - ஆஸ்ரிதவிரோயிகளைப் போக்கித் திருமஞ்சனம்பண்ணியொப்பித்து, திருமேனியின் ஸ்பர்ஶத்தாலே தன்நிலத்திலே நின்றாற்போலே சேவ்விபெற்றிருக்கிற திருத்துழாய்மாலையைத் திருமுடியிலும் திருமார்பிலுமுடையனுய், அவ்வொப்பனையாலே என்னையெழுதிக்கொண்டவன். [தன்மாயங்களே நினைக்கும்நெஞ்சுடையேன்] - ''காரணம்வைஸுதேவஶோகஷயோ:'' (காரணம்பந்தமோக்ஷயோ:) என்று பொதுவாகையன்றிக்கே, அவனுடைய ஆஶ்சர்ய சேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடையேன். [எனக்குஇனியார்நிகர் நீள்நிலத்தே]- பூமி பரப்புடைத்தென்னு, எனக்குஒப்பாருண்டோ? பரமபதத்தையொன்றாக நினைக்கிறிலர்; தம்மைப்போலே கவிபாடியடிமைசெய்வாரில்லாமையாலே, ஸம்ஸாரத்தேயிருந்து கவிபாடியடிமைசெய்யப்பெற்ற எனக்கு, பூமியில்ஓர் எதிருண்டோ? என்கிறார். (எ)

எட்டாம் பாட்டு.

நீணிலத்தோடுவான் வியப்ப நிறைபெரும்போர்கள்செய்து
வாணனுயிரந்தோள்துணித்ததும் உட்படமற்றும்பல
மாணியாய்நிலங்கொண்டமாயன் என்னைப்பன்தன்மாயங்களே
காணும்நெஞ்சுடையேன் எனக்கினியென்னைகலக்குமுண்டே?

அ.—(நீள்நிலத்தொடு.) - வாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையும், மற்றும் ஸ்ரீவாமநனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையும் நினைக்கும் நெஞ்சுடையேனான எனக்கு இனி கலக்கமுண்டோ? என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், வாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு இனி கலக்கம் உண்டோ? என்கிறார். [காணும் நெஞ்சுடையேன்] - அநுஸந்திக்கும் நெஞ்சுடையேன்.

ப.—அநந்தரம், அர்த்தியாயும் அநேகஸஹஸ்ரம் தலைக்கட்டிக்கொள்ளுமாறுடைய வாணாஸுரத்தப்ரமுகசேஷ்டிதங்களை அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு ஒரு கலக்கமுண்டோ? என்கிறார்.

ஸேதுஸ்து ஸுஹ்ருஜ்ஜி'' என்றதிலே நோக்கு. ''தணிந்தறத்திலோ'' என்றதுக்குவாஸனை - ஆஶ்ரித விரோயி இத்யாதி. இதுக்கு திருவுள்ளக்கருத்து-மாதாவானவள் இத்யாதி. ஆஶ்ரிதவிரோதிகளைத் தன் விரோதிகளாக நினைத்துச் சீறின விடம் உண்டோ? என்னை கோவஸ்ய இத்யாதி. ''தவ தாரா ஶோகஹாரிணீ ராவணேந ஹ்ருதா ஸுதா । ஏஷ ஸுக்ரீவஸாஹாய்யம் கோவஸ்ய வஶமேயிவாநு'' இதி யுத்தகாண்டே. நிக-கா-க. ''புனத்துழாய்-மாலையை - முடியிலேயும் - மார்பிலேயுமுடையவன்'' என்றந்வயம். ''மாயங்களே'' என்றவவதாரார்த்தம்-காரணம் இத்யாதி. ஏஷவாவஶ்ரு ஷ்ருணாம்காரணம்வைஸுதேவஶோகஷயோ: இத்யாதி. கீழே ''எனக்கெவ்வுலகம் நிகர்'' என்றாரே; இங்கே ''நீணிலத்து'' என்பானென்? என்ன-பரமபதத்தையே இத்யாதி அநுகூலியேதென்ன-தம்மைப் போலே இத்யாதி. (ஏ)

நீள்-பெரிய, நிலத்தொடு - பூமியோடே, வான் - ஆகாசமும், விபப்ப - விஸ்மயப்படும்படியாக, நிறை - (வாணனொருவனுமே யெதிராயிருக்கப் படைத்துணைக்கு வந்த தனித்தனியே ப்ரதாநமான ருத்ரஸுப்ரஹ்மண்யாதிகளோடே கூட) பரிபூர்ணமான, பெரும்போர்கள் - மறுபடியுத்தங்களை, செய்து - பண்ணி, வாணன் - பாணனுடைய, ஆயிரந்தோள் - (யுத்தகண்டிப்பமான) ஆயிரந்தோள்களையும், துணித்த - துணித்ததுமும், உட்பட - முதலாக, மற்றும் —, பல - பலவாயுள்ளனவாய், மாணியாய் - (அர்த்தியான) ப்ரஹ்மசாரியாய், நிலம் - பூமியை, கொண்ட - பரிக்ரஹித்த, மாயன் - க்ருத்ரிமனாய், என்-அந்தக்ருத்ரிமத்தை யெனக்கு ப்ரகாசிப்பித்த, அப்பன் தன்- உபகாரகனான க்ருஷ்ணனுடையதான, மாயங்கள் - ஆஶ்சர்ய சேஷ்டிதங்களை, காணும்- அபரோக்ஷித்தநுபவிக்கும், நெஞ்சு - நெஞ்சை, உடையேன்-; இனி-, எனக்கு-, என்ன-, கலக்கம்-, உண்டு - உண்டு? அவிதேயசித்தர்க்கு இதே ஸ்வரக்ஷணை ஸ்வாந்வய அந்ய ரக்ஷ்யத்வாதிகளாலுள்ள கலக்கமுள்ளது.

இ.—எட்டாம்பாட்டில், வாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுஸந்யிக்கும் நெஞ்சுடைய எனக்கு ஒருகலக்கமில்லையென்கிறார். [நீணிலத்தொடு வான்விபப்ப] - பரப்பையுடைத்தான பூமியில் உள்ளாரோடே தேவர்களுங்கூட விஸ்மயப்படும்படி. பராபிபவஸாமர்த்யத்தையுடைய தேவர்களோடு, எளியரான மநுஷ்யர்களோடு வாசியற ஆஶ்சர்யப்படும்படி இருக்கை. "ரஜோ-பீயஸ்ஸுவிகு வெஶ்ச" என்று எதிரிகளுங்கூட விஸ்மயப்படும்படி இருப்பது. [நிறை பெரும்போர்கள்செய்து] - வெளிதாய்ப் பெரிதான யுத்தங்களைப்பண்ணி. [வாணன் இத்யாதி] - அப்ராப்தவிஷயத்திலே அஞ்ஜலிபண்ணினவனுக்கு ப்ரயோஜநாந்தரம் பண்ணுவானாகாதோ? வாணனுடைய வாஹநாதிகளை மேலே நிரூபிக்கிறதும். உலகை பிரிந்துநின்றையாகையாலாக இதே கொல்லாதொழிந்தது.

[உட்பட மற்றும்பல] - "பாணனை வதிக்கிறேன்" என்று எடுத்துக்கொண்டு, பசுவும்குட்டியும் தானுமாக முதுகிட்டோடினபடியும், "கூஷ்மாண்ட கூஷ்மாண்ட ஸோஹாவோ வைஹா ஜாவெநக்வாவைரூபவெஷா கதே" என்று முதுகிலே அடிபட்டு கைத்தலைபுகு ஸர்வேஶ்வரனாக அறிந்தபடியும்; மேலும் அநேகம். [மாணியாய் நிலங்கொண்ட] - ஆஹ்ரிக ரக்ஷணத்திலே, ஸாயுதியாய்த்தன்னை ஸுலபனாக்கி ரக்ஷித்தவன். [மாயன்] - தன்னுடைமையைப் பிறரதாக்கி இரந்து, சிறுகாலைக்காட்டிப் பெரியகாலாலே அளந்துகொண்டும், தன் அழகாலும் பலத்தாலும் பரீக்ஷாதிகள் வார்த்தை செல்லப்பண்ணாதபடி மறுபாலினை எழுதிக்கொண்டும், இப்படி ஆஶ்சர்யசேஷ்டிதங்களை யுடையவன். [என்னப்பன்] - அவர்கள் தலையிலே திருவடிகளை வைத்து இது நம்மீபடுக நினைத்திருக்கிறபடி. இப்படி தனித்தனியே அநுபவித்துமுடிக்கவொண்ணாத ஆஶ்சர்யசேஷ்டிதங்களையே அநுஸந்யிக்கும் நெஞ்சையுடையேன். [காணும் நெஞ்சு] - அநுஸந்யிக்கும் நெஞ்சு "நெஞ்சென்னு முட்கண்" என்னக்கடவதிறே. அங்ஙனன்றியே, "*முடியாமேயிற் கரணங்களை யுடையராகையாலே, மநஸ்ஸை ஸகல விந்த்ரியவ்ருத்தியையும் லக்ஷிக்கவற்றாயபடி சொல்லுகிறது" என்று பிள்ளான் பணிக்கும். [எனக்கினிஎன்னகலக்கமுண்டே] - இதர தேவதைகளை "ரக்ஷகர்" என்று இருக்கிற கலக்கமும், ஈஶ்வரனுடைய ரக்ஷணத்தில் அநிஶங்கைபண்ணும் கலக்கமும், "தனக்குத்தானே கடவன்" என்கிற கலக்கமும்இல்லை.

ஈடு.—எட்டாம்பாட்டு. பாணவிஜயப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்குஒரு கலக்கமில்லை என்கிறார்.

[நீள்நிலத்தோடுவான்வியப்ப] - பூமியிலுள்ளாரோடு ஸ்வர்க்கத்திலுள்ளாரோடு வாசியற விஸ்மயப்பட. கண்டதுக்கெல்லாம் ஆச்சர்யப்படும் மநுஷ்யரோடொக்க, ஒன்றுக்கும் விக்ருதராகாதே தந்தாமைப் போரப்போலியாநினைத்திருக்கும் தேவர்களும் விஸ்மயப்படும்படி. கும்பிடுவோரோடு கும்பிடுகொள்ளுவாரோடு வாசியறும்படியாக "வியப்ப" என்று மேலேகிடக்கையாலே, * மஞ்சாக்ரோசந்திபோலே யிருக்கிறது. [நிறைபெரும்போர்கள் செய்து] - குறைவற்ற மஹாயுத்தத்தைப்பண்ணி. அதாவது - ஈச்வராபிமாநிகளான ருத்ராதிகளும் கெட்டோடும்படியான போரைச்செய்து. † (பஹுபரிகரபூர்ணமான மஹாயுத்தங்களைப்பண்ணி). [வாணனுபிரந்தோள் துணித்ததும்] - வகாதவிஷயங்களை யநுவர்த்தித்த தோள்களைக்கழித்தபடி. "இவன் கரபாதை ஆற்றமாட்டாமல் கண்டார் காலிலெல்லாங் குனிந்துதிரியாநின்றான்" என்றுஅக்கரத்தைக்கழித்துவிட்டான். [வாணனிந்யாதி] - "கைகழியப்போய் ருத்ரனை யாச்ரயித்தான். இவன் கரபாதையாற்றானை" என்று அத்தைப் பட்டைக் கடைத்துவிட்டான். [வாணனிந்யாதி] - வாணன் தேவதாந்தரபஜநம்பண்ணுகையிறே அவனுக்கு இங்ஙன்கைபிழைப்பாடுவந்தது" என்று நாட்டார் ஓகைவந்தபடி செய்கைக்காகச் செய்தான். "ஈச்வராய" என்றிறே தேவஸம்பத்தியைக் கொடுத்தது. ஈச்வரன் கைவந்தபடி செய்யாதவர்களைக் கைமேலே தண்டிக்கை ப்ராப்தமிறே. ஸர்வேச்வரன் தன்னை ஆச்ரயிக்கைக்காக இவனோடே கைசெய்திறே அடியிலேவிட்டது. "அத்தை

எட்டாம்பாட்டு - நீள்நிலத்தோடு இத்யாதி. "வாணனுபிரந்தோள் துணித்ததும்" இத்யாதியைக் கடாகரித்தவதாரிகை - பாணவிஜய இத்யாதி.

பூமியில் இத்யாதி. "ஜனாநாமேகராஜ்ஜி" என்றாற்போலே "நீள்நிலம், வான்" என்கிற தென்று கருத்து. அவர்களுக்கு வாசி யேதென்னை - கண்டதுக்கெல்லாம் இத்யாதி வாக்யத்வயம். "நீலம், வான்" என்கிற ஶப்தம் - தேவமநுஷ்யர்களை வ்ரிக்கும்படி. என்? என்னை - வியப்ப இத்யாதி. "நிறை" - பரிகரபூர்ணமான. தலையையறுத்தே தோள்களைக் கழிப்பானென்? என்னை - வகாத இத்யாதி. வகாத விஷயங்களை - அப்ராப்த விஷயங்களை. "அப்ராப்த விஷயங்களை யநுவர்த்திக்கைக்கடி - யுத்தகண்டூதியால் வந்த செருக்கு" என்று அத்தைக் கழித்துவிட்டானென்றுமத்தை ரஸோக்தியாக அருளிச் செய்கிறார். இவன் கரபாதை இத்யாதி. கரம்-இறையும், கையும். "வகாத விஷயங்களை" இத்யாதி வாக்யத்தை விவரியாநின்றாரொன்று, கரத்தைக் கழித்தது திவ்யாயுதங்களாலே என்றுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார். மகுடியாலே பாம்பு இத்யாதி. பணை யென்று - ஆயுதமும், சேனையும். பணைகளைக் கடைத்துவிட்டான் - இருவாயிரத்துச் செலவிட்டானென்றும், சேனைக்குச் செலவிட்டானென்றும். அடைத்துவிடுவக - செலவிடுகை. "அப்ராப்த விஷயத்தை யாச்ரயித்த கைகள்" என்று இவற்றை சேதித்தால் நாட்டார் கைவந்தபடி தொழுகைக்கு உறுப்பாயிருக்குமென்று செய்தானென்றுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - வாணன் இத்யாதி. கைபிழைப்பாடு - கைகள் அவனைவிட்டுப்போகை. கைவந்தபடி - கைக்குத்தகுதியானபடி. கைவந்ததெதுக்காக? என்னை - ஈச்வராய இத்யாதி. அப்ராப்த விஷயத்தைத் தொழுத கைகளை ஈச்வரன் சேதிக்கை யபங்யாயமாயிரா தென்றுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - ஈச்வரன் இத்யாதி. கைவந்தபடி - சொன்னபடியென்று சாடுவுக்கர்த்தம். கைமேலே - ப்ரத்யக்ஷமாகவென்றும், ஸத்யஃ என்றும் சாடி; கையை சேதிக்கவென்று ஸ்வபாவார்த்தம். "ஶரஸ்ஸராய நிவேதிதாஃ" என்கிற ஶ்லோகார்த்தத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார். ஸர்வேச்வரன் இத்யாதி. கைசெய்தென்றது - கையை இவனோடே கூட்டியென்றும், அலங்கரித்தென்றும். சாஸ்த்ரவஶ்யனன்றிக்கே, யுத்த கண்டூதியாலே வந்த அஹங்காரமுடையவனாகையாலே

மதித்திலன், இவன் அறக்கைவிஞ்சினன்" என்று தண்டித்துவிட்டான். தேவதாந்தரத்தை யாச்ரயித்துக் கைபிலே மலம்பெற்றுவிட்டான். ஸர்வத்ஸமாச்ரயணம் பண்ணுகைக்குக் கைம்முதலில்லாமைவிட்டானன்றே. † (ருத்ரனையாச்ரயித்ததொன்றுமேயிறே அவனைக் கைதப்பிற்று.) [உட்படமற்றும்பல] - அவனுக்கும் பெருநிலைநின்றாரையும் முதுகுகாட்டும்படி பண்ணுவித்தபடி: "க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ" (க்ருஷ்ணக்ருஷ்ணமஹாபாஹோ)-என்று பின்பிறே அவன் இவனையுள்ளபடியறிந்தது. [மாணியாய்நிலங்கொண்ட மாயன்] - பெறில் ஜீவிப்பானாய்ப்பெறாவிடில் முடிவானாம்படியாய், இரப்பிலே தழும்பேறின வடிவைக்கொண்டு. இவர் அவ்வவதாரத்தில் கால்வாங்குகிறாரல்லர்; கண்ணழிவற்ற அழகாலும், வரையாதே பெல்லாரையும் தீண்டுகையாலும், ஆஸ்ரிதவிஷயத்தி லோரத்தாலும், செய்யும் ஆனைத்தொழில்களாலும் க்ருஷ்ணாவதாரத்தோடொத்திருக்கையாலே ஸ்ரீவாமநாவதாரத்தை அநுஸந்திக்கிறார். [நிலங்கொண்டமாயனென்னப்பன்] - "திருவுலகளக்க" என்றொருவ்யாஜத்தைப்பிடி அளந்துகொண்டது தம்மையென்றிருக்கிறார். [அப்பன் தன்மாயங்களே காணும் நெஞ்சுடையேன்] - "* முடியானேயிந்தாணங்களோயுடைய ஆழ்வாராகையாலே, நெஞ்சுதானேநினைக்கவும்வற்றாய்க் காணவும் வற்றாயிருக்கும்' என்று பிள்ளான்பணிக்கும்" என்றருளிச்செய்வர். அதவா, "கட்கண்" என்றும், "உட்கண்" என்றும் சொல்லுகிறபடியே நெஞ்சுதன்னையும் கண்ணாகச்சொல்லக்கடவதிறே; அதாகவுமாம். [எனக்கினியென்னகலக்கமுண்டே] - "இவ்விஷயத்தைக் காணப்பெற்றிலோம்"

ப்ர.—[நீள்நிலத்தொடு இத்யாதி]—[உட்படமற்றும்பல]—வஸுதேவஸுதாயஸ்மை, "ஹிரண்யபாஹுவதே நத ஸுரஸங்கயோஸ்ஸுஹ்ருத் । ஸுரஸுரக்ஷுபுராணநாஶாய விஜ்ஞாதஸர்வபுராணவிஷயாய ॥ ௧௩॥ ஸஉவைதுராஸுரோராஜா விநஷ்டோஸ்மாந்தவாந்தவ । ஸுரஸுரக்ஷுபுராணாம்ஸ்ரோஷ்யாமி ॥ ௧௪॥ விஷ்ணுராஸ்ரயதாம் ஸர்வ ஸுரா வவஷிதுண்டி ॥ ௧௫॥ ரூபாணி ॥ க்ருஷ்ணக்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே ஸர்வாம்பராஸ்ஸுரா । பரிஸ்ஸம்பராஸுரா நஸுநாதி நிய நம்பராழ் ॥ ௧௬॥

இவன் கையைக் கழித்துவிட்டான் என்றுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - அத்தை மதித்திலன் இத்யாதி. கைவிஞ்சினன் - கைக்கடங்காதவனானென்றும், கைகளாலே அதிகனானென்றும். அவன் பண்ணின தேவதாந்தரபஜநத்துக்கு கரச்சேதமே ஹேதுவாய்விட்டதென்றுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - தேவதாந்தரபஜநத்தை இத்யாதி. கைபிலே மலம் பெற்றுவிட்டான் - கையிலே மலம்பெற்றுவிட்டானென்றும், கரச்சேதமாகிற மலம்பெற்றுவிட்டானென்றும். இக்கைகள் பகவத் ஸம்ஶ்ரயணார்ஹமல்லாமைவிட்டானன்று; கர்வத்தாலே விட்டானென்றுமத்தையும் ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்-பகவத்ஸம்ஶ்ரயணம் இத்யாதி. கைம்முதலில்லாமை - மூலபுராதில்லாமை என்றும், முதலிலே கையில்லாமலென்றும். விட்டானன்றே - கர்வத்தாலே விட்டானென்றபடி. பெருநிலை நின்றாரையும் - ஸ்தாணுவாய் நின்ற ருத்ராதிகளையும். "ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜ்ஞாநஸ்வரூபிணே" என்னும்படியிருக்கிறவன் ஸர்வேஶ்வரனோடு எதிரிடுவானென்? என்ன - க்ருஷ்ண க்ருஷ்ண இத்யாதி. "க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே ஸர்வாம்பராஸுரா । பரிஸ்ஸம்பராஸுரா நஸுநாதி நிய நம்பராழ்" இதி, ருத்ரபேஞ்சமேம்ஸோ த்ரயஸ்த்ரிம்ஶோ. "மாணியாய்" என்றதுக்கர்த்தம்-பெறில் இத்யாதி. க்ருஷ்ணாவதார ஸந்தானான இவர் வாமநாவதாரத்தே போவானென்? என்ன - இவ்வவதாரத்தில் இத்யாதி. அதுக்கடியேதென்ன - கண்ணழிவில்லை இத்யாதி. நெஞ்சாலே காணக்கூடுமோ? என்ன-முடியானேயில் இத்யாதி. பரிஹாரமாகிறது - கட்கண்ணென்றும் இத்யாதி. "நெஞ்சென்று

என்கிறகலக்கம்எனக்குண்டோ? அதவா, தேவதாந்தரங்களை "ரக்ஷகர்" என்றிருக்கிற கலக்கமும், ஈஶ்வரனுடைய ரக்ஷணத்திலே அதிசங்கைபண்ணும் கலக்கமும், "தானே தனக்குக்கடவன்" என்னும் கலக்கமும்இல்லை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

கலக்கவழ்கடல்வழ்மலை உலகேழுங்கழியக்கடாய்
உலக்கத்தேர்கோடுசேன்றமாயமும் உட்படமற்றும்பல
வலக்கையாழிஇடக்கைச்சங்கம் இவையுடைமால்வண்ணனை
மலக்குநாவுடையேற்கு மாறுளரோ இம்மண்ணின்மிசையே?

ஆ.—(கலக்க.) - வைதிகபுத்ராகயநார்த்தமாக எழுந்தருளுகிற படியைக் கண்டு ப்ரீத்யதிஶயத்தாலே சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களும் க்ஷுபிதமாம்படி, ஸர்வலோகங்களையுங் கழிய அநாயாஸேந திருத்தேரைத் திருநாட்டிலே செல்லக்கடாவி யருளின ஆஶ்சர்யமுட்பட மற்றுமுள்ள ஸர்வதிவ்யசேஷ்டிதங்களையும், ஆழ்ந்தவார்த்தையை ஸ்வபாவஞானையாலே தத்விரோயி நிரஸநார்த்தமாக சங்க சக்ராதி ஸர்வதிவ்யாயுதங்களையும் ஏந்திக்கொண்டிருக்கிற அழகையும், எம்பெருமானையுங்கூட ஈடழிக்கும்படி * செவிக்கினிய செஞ்சொல்லால் ஏத்தப்பெற்ற என்னோடு ஒப்பாருளரோ இந்த லோகத்தில்? என்கிறார்.

ஓ.—ஒன்பதாம்பாட்டில், ஸர்வேஶ்வரனை மலைக்கப்பண்ணும் நாவீறுடைய எனக்கு, பூமியில் எதிர்உண்டோ? என்கிறார். [கலக்கவழ் கடலேழ் மலையுலகேழுங் கழியக்கடாய்] - ஏழுகடலையும் ஏழுமலையையும் ஏழுலோகங்களையும் கழியத்தள்ளியிலே நடத்தினாற்போலே ஓக்கநடத்தி. இவையெல்லாம் கலக்க என்றுமாம். ஆவது - அதிருகை. உலக்க - முடிய. [மால்வண்ணனை]!- கறுத்த திருநிறத்தை உடையவனை.

ப.—அநந்தரம், பரத்வஅஸாதாரணசிஹ்ந யுக்தனான க்ருஷ்ணனுடைய வைதிகபுத்ராகயந ப்ரமுகமான அதிமாநுஷசேஷ்டிதங்களை ஸ்துதிக்கும் நாவையுடைய எனக்கு இப்பூமியில் எதிராவாரார்? என்கிறார்.

ஏழ்-ஏழு, கடல் - கடலையும், ஏழ்-ஏழு, மலை-மலையையும், ஏழ்-ஏழு, உலகும் - லோகத்தையும், கலக்க - (ஜலஸ்தம்பனம் தெரியாதபடி) பொருந்தும்படியாக, கழிய- அண்டகபாலத்துக்கவ்வருகே போம்படியாக, கடாய் - நடத்தி, (காரணமான அவ்யக்த பர்யந்தமாக), தேர் - கார்யகரதசமான தேரை, கொடு - கொண்டு, உலக்க - முடிய, சென்ற - சென்ற, மாயமும் - ஆஶ்சர்யமும், உட்பட - முதலாக, மற்றும் - மற்றும்,

---

முட்கண்" என்னக்கடவதிறே. "என்ன கலக்கம்" என்றதுக்கு பாவம் - இவ்விவியத்தை இத்யாதி. பாவாந்தரம்-அதவா இத்யாதி. முன்னிரண்டு கலக்கமும் - வாணனுக்கு. மூன்றும் கலக்கம் - மறைவலிக்கு. (அ)

பல - (வைதிகபுத்ரர்களுடைய ஸ்ரௌதாகயநாளிலம்பாகமந்ருபமான) பல சேஷ்டிதங்களையும், (பரத்வசிஹ்நமான), வலக்கை ஆழி இடக்கை சங்கம் இவை - வலக்கையில் திருவாழியும் இடக்கையில் திருச்சங்கமுமாகிற இவ்வலாதாரணசிஹ்நங்களையும், உடை - உடைய, மால்வண்ணனை - ஸ்யாமளவிக்ரஹயுக்தனை, மலக்கும் - ஹர்ஷப்ரகர்ஷத்தாலே யலமாக்கும்படியுண்ணும், நா - நாவிறு, உடையேற்கு - உடைய எனக்கு, இ-இந்த, மண்ணினின் - பூமியின், மிசை - மேலே, மாறு - எதிர், உளரோ - உண்டோ? ஸர்வாதனுக்கு மநோஹாரியான வாக்கையுடையார் வேறுபூமியிலில்லையென்று கருத்து.

இ.—ஒன்பதாம்பாட்டில், வைதிகபுத்ராகயநக்ஷத்ரதாடக்கமான அபதானங்களையுடைய ஸர்வேஸ்வரனை மலக்கும் நாவிறுடைய என்னோடு ஒப்பாருண்டோ? என்கிறார். [கலக்க இத்யாதி] - ஏழுகடலையும் ஏழுமலையையும் ஏழுலோகங்களையும் கழிய, கறையிலே நடக்கிறாற்போலே நடத்தி நீருக்கும்மலைக்கும் ஆகாசத்துக்கும் வாசிதெரியாதபடி நடத்தி. கலக்கவென்றாய் - எங்குஞ்சென்று அதிரநடத்தினன்றுமாம். [உலக்க இத்யாதி] - தமஸ்ஸுக்கு அவ்வருகே சொல்லறியத் தேஜஸ்கொண்டு சென்ற ஆச்சர்யமும். உலக்க - பறிய. காரியரூபமான தேஜஸைக் காரணத்திலே கார்யாகாரம் குலையாமல் நடத்தின ஆச்சர்யம். [உட்பட மற்றும்பல] - வைதிகபுத்ரர்களை இத்தேஜஸ்தில்நின்றும் கொடுபோருகையும், போனசெவ்வியிலே கொடுவந்து கொடுக்கையும், ப்ரஹ்லாதஸ்ஸுவந்தனுக்குப்பின்பு மாத்யந்திநஸுவநத்துக்கு முன்னே இது அடங்கச்செய்கையும். [வலக்கையாழி இத்யாதி] - "கஸ்ஸுவோரஸோயாதா ஸுஹ்ருதுர்ஹ்ருதயாரஹ:" என்று - ஸர்வாபிகவஸ்துவுக்கு லக்ஷணமாயிற்று திவ்யாயுதங்கள். வலக்கையிலே திருவாழியும் இடக்கையிலே பாஞ்சஜந்யமும் இவற்றையுடையவனாய், கறுத்திறக்கை உடையவனை. "'மால்வண்ணனை' என்ன அமைந்திருக்க, திவ்யாயுதங்களைச்சொல்லுவதென்? " என்று கருத்தாய்வண்டிவைப்பிருமாள் பட்டரைக்கேட்க, "அவிக்ருதவஸ்துவுக்கு லக்ஷணமிறே திவ்யாயுதங்கள்" என்றார். [மலக்கு நாவுடையேற்கு] - "கவாகு)நாஹ:" என்கிற ஸர்வாபிகவஸ்துவை விக்ருதமாக்கும்நாவி லுடையவெனக்கு. தோளிலக்ஷணமிறேனை யுரைக்கக்கூடாமண்ணவல்ல நாவையுடைக்க வெனக்கு. [மாறுளரோ] - பூமியில்வேறுண்டோ? ஸர்வாதன் உருக்காக்கும்படி. கவிசொல்லவல்லார் தம்மையியாதியாகிலும் இல்லாமையாலே, வேறு என்றேனோ? ஒப்பாரில்லை என்கிறார்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. வைதிகபுத்ராகயந முதலான அபதானங்களையுடைய ஸர்வேஸ்வரனை மலக்கும் நாவிறுடைய என்னோடு ஒப்பாருண்டோ? என்கிறார்.

[கலக்கவேழ்கடலேழ்மலையுலகேழும்கழியக்கடாய்] - ஏழ்கடலேழ்மலையுலகேழும் கலக்க கழியக்கடாய். கலக்க - ஒக்க: அதாவது - தேரைநடத்துகிறபோது நீரோடு மலையோடு தரையோடு வாசியற ஒக்கநடத்தினபடி. அன்றிக்கே, கலக்க - ஏழ்

ஒன்பதாம்பாட்டு —கலக்கஇத்யாதி. பூர்வார்த்தத்தைக்கடாகூறித்து அவதாரிகை-வைதிக இத்யாதி. "மலக்குநாவுடையேற்கு" இத்யாதியைப்பற்ற - மலக்கும் நாவிறுடைய இத்யாதி.

"ஏழ்கடலேழ்மலையுலகேழுங் கழிய நடத்துகிறபோது - கலக்க - கடாய்" என்ற ப்ரதமத்ருதியார்த்தங்களுக்கு அந்வயம். ஒக்கநடத்துகையாவது - நீருக்கும்மலைக்கும் ஆகாசத்துக்கும்

கடல் என்று கடலுக்குவிசேஷணமானபோது, சேஷாலத்தை யுடைத்தான கடல் என்ற படி. அங்ஙனுமன்றிக்கே, ஏழ்கடலேழ்மலையுலகேழையும் கழியநடத்துகிறபோது அதிர நடத்தியென்றுமாம். [உலக்கத்தேர்கோடுசேன்றமாயமும்] - கார்யமான தேரைக்காரணமான மூலப்ரக்ருதியிலே நடத்துகிறவிடத்தில் அறியாதபடி நடத்தின ஆச்சர்யமும். உலக்க-முடிய. [உட்படமற்றுமல்லது] - வைதிகப்ரார்த்தனை இத்தேசத்தினின்றும் கொண்டு போருகையும், போனசேவ்வியிலே தொடுவந்து கொடுக்கையும், பாரதஸ் ஸமரத்துக்குப் பின்பு மாத்யந்திநஸவநத்துக்கு முன்பே இருடங்கச்செய்கையும். [வலக்கை யீத்யாதி] - இவ்விடத்தை பட்டாருளிச்செய்யாநிற்கச்செய்தே கஞ்சனூரில் வண்டுவரைப்பேருமாளிருந்தவர், "'மால்வண்ணனை மலக்கு நாவுடையேன்' என்னவகையாகோ, 'வலக்கையாழியிடக் கைச்சங்கமிவையுடை'என்கிற இதுக்குத்தாத்பர்யமென் ?" என்ன:— "சோளேந்த்ரசிங்கனை யுளுக்காக்கப்பண்ணுகிறேன் என்கிறார்காண்!" என்றருளிச்செய்தார். ஸர்வாயிக வஸ்துவுக்கு லக்ஷணமிறே சங்க சக்ரங்கள். "அவாக்யநாதர:" (அவாக்யநாதர:) என்கிற ஸர்வாயிகவஸ்துவை விக்ருதமாக்கும் நாவிறுடையேனென்கிறார். [மால்வண்ணனை] - கறுத்த நிறத்தையுடைய ஸர்வேச்வரனை. [மலக்குநாவுடையேற்கு] - இவருக்தியில் கலங்குமாகாதே அவன்தான். இவர் கலங்கிச்சொல்லச் சமைந்தாற்போலே யாகாதே அவனும் கலங்கிக் கேட்கச் சமைந்தபடி. [மாறளதோ இம்மண்ணின்மிசையே] - பரமபதத்தில் அநுபவம் வாய்ப்புகுந்தாகையாலே அத்தை யொன்றுகநினைத்திருக்கிறிலர். † (இனியுண்டாகில் பூமியிலே; அதிலுமில்லையென்கிறார்.) [இம்மண்ணின்மிசை - மாறளதோ] - "ஒப்புண்டு, இல்லை"என்று அதிசங்கைபண்ணுகைக்குத்தான் விஷயமுள்ளது நித்யவிபூதியிலேயன்றோ ?

(கூ)

தறைக்கும் வாசிதெரியாதபடி கடத்துகை. கழிய - அதிக்ரமிக்கும்படி. திவிஷயார்த்தத்துக்கு, கலக்கத்தை - கேஷாபத்தை உடையவென்றபடி. ப்ரலயங்காணாதை இருப்பாய் - ஒன்றிடத்தையு மிருப்பாதி. சோளேந்த்ரசிங்கனென்ற - பெருமாளுடைய ஆனை. உருக்காக்க - இருக்கும்படி. அதாவது ஸர்வமறுகிற மத்தகஜமானது படிந்துகொடுக்கும்படி பண்ணுகிறேனென்றபடி. "வலக்கையாழி" இத்யாதியாலே - சங்கசக்ர விசிஷ்டனான ஆகாரந் தோற்றுமதொழிய, பெருமை சொல்லிற்றில்லையே? என்ன-ஸர்வாயிக இத்யாதி. "சோளேந்த்ர" இத்யாதிவாக்யத்தால் ஸவிதம் - அவாக்யநாதர இத்யாதி. "மால்" - கறுப்பு. இவருக்திமாத்ரத்திலே ஸர்வாயிகன் கலங்குமோ? என்ன-இவருக்தியில் இத்யாதி. ஸர்வாயிகன் கலங்குகைக்கு ஹேது - வ்யாமோஹமென்று விவக்ஷித்து, அதுக்கு இவர் தம்மை த்ருஷ்டாந்தமாக்கிக்கொண்டருளிச்செய்கிறார்-இவர் இத்யாதி. உபயவிபூதியிலும்ஒப்பில்லையென்றதே,"மண்மிசைமாறில்லை" என்பானென்? என்ன-பரமபதத்தில் இத்யாதி. வாய்ப்புகுதீர்-வாயாவுறுவும். அதாவது - உர்மஸ்தகாநுபவமென்றபடி, பரிஹாராந்தரம் - ஒப்புண்டு இத்யாதி. ஆக, "மண்ணின்மிசை - மாறளதோ" என்றதுக்கு - பரமபதத்திலநுபவம்உர்மஸ்தகமாய், யரித்திருந்தநுபவிக்கப் போகாமையாலே யத்தைவிட்டு, யரித்திருந்தநுபவிக்கலான இந்தவிபூதியில் வைக்கெதிருண்டோ ? என்கிறாரென்று முந்தின பாவம். "இம்மண்ணின் மிசை - மாறளதோ" என்கையாலே - "எதிருண்டு, இல்லை" என்று சங்கிக்கைக்கு விஷயம் பரமபதத்தில் உண்டாகுமல் உண்டித்தனை யொழிய, இங்கில்லையென்கிறார் என்று இரண்டாம்பாவம். மலக்குநாவுடையேற்கு - அலமாக்கும்படி பண்ணுகிற நாவுடைய எனக்கு என்று ஸப்தார்த்தம்.

(கூ)

பத்தாம் பாட்டு.

மண்மிசைப்பெரும்பாரம்நீங்க ஓர்பாரதமாபெரும்போர்
பண்ணிமாயங்கள்செய்து சேனையைப்பாழ்படநூற்றிட்டுப்போய்
விண்மிசைத்தன தாமமேபுக மேவியசோதிதன்தாள்
நண்ணிநான்வணங்கப்பெற்றேன் எனக்கார்பிறர்நாயகரே?

அ.—(மண்மிசை.)—பூபாராவதரணார்த்தமாக சுதர்ஶநேந பாஸ்கராச்சாத நாதிகளைப் பண்ணியருளி மஹாபாரதயுத்தத்தைப் பண்ணுவித்து ஸர்வலோகங்களையும் நசிப்பித்து ப்ரதிகூலவிஜய ஜநிதநிரதிஶய தேஜஃபரிவ்ருதனாய்க்கொண்டு ஸ்வகீய திவ்ய பரம வ்யோமத்திலே எழுந்தருளின எம்பெருமானுடைய ஸர்வதிவ்யாவதாரங்களையும் ஸர்வ திவ்யசேஷ்டிதங்களையும் ஸர்வதிவ்யகல்யாணகுணங்களையும் ஸர்வகாலமும் அநுபவிக்கப்பெற்ற என்னில் மேற்பட்டாருண்டோ? என்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், ஸம்ஸாரத்திலுள்ளேவந்து திருவவதாரம் பண்ணியருளி, நிரபாயமான திருநாட்டிலே போய்ப்புக்கபடியை அநுபவிக்கப்பெற்ற எனக்கு வேறு சில நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையேனல்லேன் என்கிறார். [மாயங்கள் செய்து] - ஜயத்ரதவதத்தினாலும் திருவாழியாலே ஆதித்யனை மறைக்கை தொடக்கமான மஹா ஆஶ்சர்யங்களையுடையவனை. [நூற்றிட்டு] - மந்த்ரித்து.

ப.—அநந்தரம், பூபாரநிர்ஹரணார்த்தமாக பாரதசமரத்தைப் பண்ணிப் போய் ஸ்வாஸாயாரணயாமத்தை ப்ரவேசித்த பரஞ்ஜ்யோதிஸ்ஸ்வரூபனான க்ருஷ்ணன் திருவடியைக்கிட்டி யநுபவிக்கப்பெற்றேன்; எனக்கு வேறுநியாமகருண்டோ? என்கிறார்.

மண்-பூமியின், மிசை-மேலே, பெரு-(விஶ்வம்பரையானவளுக்கும் பொறுக்க அரிதாம்படி) பெரிதான, பாரம் - பாரம், நீங்க - நீங்கும்படியாக, ஓர்-அநந்விதீயமான, பாரதம் - பாரதம், ஆ-ஆகிற, பெரு-பெரிய, போர் - யுத்தத்தை, பண்ணி-உண்டாக்கி, மாயங்கள் - (சங்கல்பம்குலைந்து ஆயுதமெடுக்கை பகலையிரவாக்குகை தொடக்கமான) ஆஶ்சர்யசேஷ்டிதங்களை, செய்து - செய்து, சேனையை - எல்லாச்சேனையும், பாழ்பட - பாழ்படும்படிக்கீடாக, நூற்றிட்டு - சூழ்ந்து முடித்து, போய் - வந்தகார்யம் சமைந்தவாறே யெழுந்தருளி, விண்மிசை - பரமாகாசத்திலே, தன - தனக்கஸாதாரணமான, தாமமே-வாஸஸ்தாநத்திலே,புக மேவிய[மேவி-புக்க]சென்றுப்ரவேசித்த,சோதிதன் - ஜ்யோதிஸ்ஸ்வரூபனான க்ருஷ்ணனுடைய, தாள் - திருவடிகளை, நண்ணி - கிட்டி, நான்., வணங்க - சேஷவ்ருத்திபண்ண, பெற்றேன் - பெற்றேன்; எனக்கு - (இப்படி கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப்பெற்று * ஸ்வராட்டான) எனக்கு, பிறர்-வேறு, நாயகர் - நியாமகர், ஆர்-ஆர்? நான் * அநந்யாயிபதியன்றோவென்று கருத்து.

இ.—பத்தாம்பாட்டில், ஸம்ஸாரத்திலேவந்து அவதரித்து நிரபாயமாகப் பரமபதத்திலே புக்கபடியை அநுஸந்யிக்கப்பெற்ற எனக்கு வேறு சிலர் நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையவனோ நான்? என்கிறார். [மண்மிசைப் பெரும்பாரம்நீங்க]- த்ரிபாத்விபூதியிலே, "யத்ரவாஞ்சிவ ஸுஸாயுராஸுகிதெவா:" என்கிறபடியே கனத்

தார் உண்டாய் இருக்கச்செய்தேயும் பாரமில்லையிறே, அறைங்காரம்பண்ணுமவனாய் இல்லாமையாலே. ஆனையிறே - மண்மிசைப் பெரும்பாரம் என்று விசேஷிக்கிறது. [பெரும்பாரம்] - விஸ்வம்பரனை பொறுக்கவொண்ணாதிருக்கை. [ஓர் பாரதம்] - மறைபாரதம்: அதாகிற பெரும்போரை விளைத்து. [மாயங்கள்செய்து] - பகலை இரவாக்கியும், "ஆயுதம் எடேன்" என்று ஆயுதம் எடுத்தும். [சேனையைப்பாழ்படுத்து] - உபயலேனையிலும் உள்ள பூபாரம் அடங்க வெறுக்கறையாம்படி. [தூற்றிட] - மந்திரித்து. "யஸ்ய ஜ்ஞாநே ஜகந்நாஸ்தி" என்னக்கடவதிறே. "ஆயுதம் எடுக்கவொட்டேன்" என்னகையாலே, சூழ்ச்சியாலே அழித்தான்.

[போய் விண்மிசை] - பொய்ப்பாலனம் இவ்வார், பரிவிலாமையான ரக்ஷகத்தை விட்டுப்போய், பரிவுமேயான பரமபதத்திலே. [தன்னதாம்பேரதி மேவியபேரதி] - "ஹ்ருதஸ்வஸ்வாநாம் ஹ்ருஷீகேஶ" என்கிறபடியே தனக்கு அஸாதாரணமான ஸ்தாநத்திலே போய்ப்புக்கான். அவன் திருவாழ்வான்கிட்டு வந்து, ஆதரிக்கப்பெற்றிருந்தும், எனக்கு வேறு நியந்தாக்கள் என்கிறேனோ? புருஷார்த்த விஷயமாக ஆசையை விளைத்திருக்கையாலே, அவர்களைப் பிறர் என்கிறிலர்.

ஏடு.—பத்தாம்பாட்டு. அபாயபஹமான ஸம்ஸாரத்திலே வந்தவதரித்து, நிரபாயமாகப் பரமபதத்திலேபோய்ப் புக்கபடியை யநுஸந்தித்தக்கப்பெற்ற எனக்கு மேலே சிலர் நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையவனோ என்கிறார்.

[மண்மிசைப்பெரும்பாரம்நீங்க] - 'விஸ்வம்பரை' என்றும், 'தரணை, பொறை' என்றும் பேரையுடைத்தாய்ப் பரிக்கப்படுவதான பூமியாலும் பொறுக்கவொண்ணாதபடியிறே துர்வர்க்கம்திரண்டபடி. த்ரிபாத்விபூதியில் "யத்ர ஸுரஸ்ரேஷ்ட: ஸ்ரீஸஹாய: ஸ்ரீநிவாஸ:" (யத்ர ஸுரஸ்ரேஷ்ட: ஸ்ரீஸஹாய: ஸ்ரீநிவாஸ:) என்கிறபடியே - தனக்கு தாருண்டாயிருக்கச்செய்தேயும், பாரமில்லையிறே அறைங்காரம்பண்ணுமவனாய்க்கொண்டு யாலே. தங்கள்பாரத்தை அவன்தலையிலே வைத்திருக்கும் அவர்களிறே யவர்கள். [ஓர் பாரதமாபெரும்போர்பண்ணி] - அத்விதீயமான மறைபாரதமாகிற மஹாயுத்தத்தைப்பண்ணி. [மாயங்கள்செய்து] - பகலையிரவாக்குவது, "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுப்பது, கதிரியுடைய மர்மத்தைக்காட்டிக்கொடுப்பது ஆனவை தொடக்கமானவற்றைச் செய்து. [சேனை

ப்ர.—[மண்மிசைஇத்யாதி]—ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே, "ஸ்ரீ ஹ்ருதயாகுஹ்ய ஸ்ரீ ஸாரோ ஹ்ருஸ்வயுக்ஸ்ரீ ஸ்ரீநிவாஸ:".

பத்தாம்பாட்டு.—மண்மிசை இத்யாதி. "பொய்விண்மிசைத்தனதாமம்" இத்யாதிகளையும், "கண்ணிநான்" இத்யாதிகளையுங் கடாக்ஷித்தவதாரிகை - அபாயபஹமான இத்யாதி.

பாரமென்றதே "பெரும்பாரம்" என்றதுக்குபாவம் - விஸ்வம்பரை இத்யாதி. இத்தைப்பற்ற மும்மடங்குத் திருளுண்டாயிருக்கவும் நித்யவிபூதியிலும்பாரத்திருக்கவில்லையோ? அத்தைப்பற்ற இதுக்குபாரமோ? என்ன - த்ரிபாத்விபூதி இத்யாதி. இத்தால் - நமக்கு "பாரம்" என்கிறது ஜகபாரமல்ல, அஹங்காரஸம்பந்தமே பாரமென்றபடி. நித்யஸூரிகளுக்கு அஹங்காரஸம்பந்தமில்லையோ? என்ன - நாங்கள் இத்யாதி. த்ரிபாத்விபூதி இத்யாதி வாக்யத்வயமும் - "மண்மிசை" என்றவிசேஷித்ததுக்குபாவம். "ஓர் - மறைபாரதப்பெரும்போர்பண்ணி" என்று அந்வயிப்பது. "மாயங்கள் என்கிற

யைப்பாழ்படநூற்றிட்டு] - சேனை வேறுந்தறையாய்படி மந்த்ரித்து. "ய ஸ்ருதஞ்ஜீவமொ வ்யாத" (யஸ்யாமந்த்ரீசகோப்தாச) என்னக்கடவதிறே. "ஆயுதமெடுக்கவொட்டோம்" என்கையாலே, சூழ்ச்சியாலே வழிந்தான். [போய்விண்ணிசைத்தனதாமமே புகமேவியசோதி தன்தான்]-ப்ரதிகூலரை நிரஸித்ததுக்கு மேலேயன்றோ இவர்களிருந்த நிலத்திலிராதே பரம பதத்திலேபோய்ப்புகப்பெற்றபடி! என்று உகக்கிறார். போய்யாஸநமிடுவார், பரிபவிப்பாரான இந்நிலத்தைவிட்டுப்பரிவரேயான பரமபதத்தேறப் போகப்பெறுவதே! *(வந்தகார்யம் சமைந்தவாறே யெழுந்தருளி, பரமாகாசத்திலே தனக்கஸாதாரணமான வாஸஸ்த்தாநத்திலே சென்று ப்ரவேசித்த ஜ்யோதிஸ் ஸ்வரூபனான க்ருஷ்ணனுடைய திருவடிகளை.) "க்ருக்வா லாரராவதரணம்" (க்ருத்வாபாராவதரணம்) இத்யாதி. ப்ருதிவ்யாஃ - பாராவதரணம் - க்ருத்வா - ப்ருதுலோசந: - மோஹயித்வாஜகத்ஸர்வம் - ப்ரதிகூலரை யடங்கலும் உழவு கோலாலேவிழவிட்டு, அநுகூலரையடங்கலும் கண்ணாலேவிழவிட்டுப்போனான். "மத வ்ஸ்வ்ரதஸ உதஸு" (கதஸ்ஸ்வர்ஸ்த்தாநமுத்தமம்)- விண்ணிசைத்தனதாமமேபுக. "உத ஸு" - கம்ஸாதிகள்துர்யோதநாதிகளால்வரும்அச்சமின்றியே, தனக்குப்பரிவரானவர்களிருக்கிற நிலத்திலேபோய்ப்புகப்பெற்றபடி. ஒருதீர்த்தத்தினன்று நாயிறுபோது ஆண்டானும் எம்பாரும் தங்களிலேசந்தித்து," அஹங்காரமமகாரதூரிதராயிருப்பார் பத்துக்கோடிபேர்நடுவே, அதிஸுகுமாரமான திருமேனியைக்கொண்டு பத்தூரானேழுந்தருளி, நிரபாயமாகப்புக்கருளப் பெற்றபடி கண்டதே!" என்று ஒருவரையொருவர் தண்டனிட்டுத் தழுவிக்கொள்ளாநிற்க, தீயர் கண்டேன் என்றருளிச்செய்வர். [நண்ணவிநான் வணங்கப்பெற்றேன்]-காலயவநன் ஜராஸந்தன் தொடக்கமானோரைப்போலே எதிரிட்டுக்கிட்டுகையன்றிக்கே, முறையாலேகிட்

ப்ர.— [சேனையைப்பாழ்படநூற்றிட்டு] — உஹாஸாஸரேத, [ஸ்ரு-சகு] யுக்ரராஜ்ஜு:, "யஸ்ய ஜிஹ்ரு நவெ ஹ்ருதாஸ்ஸ்வ்ரூவெ ஜ்ஜநாரு-ஹ்ரு:। ஹரிவெஸ்ரு வொகு நாயஸ்ஸகிஜ்ரு-ஹ்ரு தஸ்ரு நிஜ்ரு-ஹ்ரு தி॥ உ0॥"

பஹுவசநத்துக்குபாவம் - பகலே இத்யாதி. மந்த்ரித்ததுக்குப்ரமாணம்—யஸ்ரு ஜிஹ்ரு இத்யாதி. "யஸ்ரு ஜிஹ்ரு வொகு பாவஸ்ரு ஹ்ரு வெ வஜ்ஜநாரு-ஹ்ரு:" இத்யாதி மஹாபாரதே ராஜஸூயே ந்ருதராஷ்ட்ர:. மந்த்ரிக்கிறதென், திருவாழியாலே ஸம்ஹரிக்கவொண்ணாதோ? என்ன-ஆயுதமெடுக்க இத்யாதி. சூழ்ச்சி - உபாயமும், விசாரமும், க்ருத்ரிமமும். 'போய்" என்று விசேஷித்ததுக்குபாவம் - ப்ரதிகூலரை இத்யாதி. அங்கே போனதுக்குஉகக்கைக்குஇங்குப் பொல்லாங்கேதென்ன-போய்யாஸநம் இத்யாதி. பூபாரத்தைப்போக்கி ஸ்வஸ்த்தாநத்திலேபோனதுக்கு ப்ரமாணம் - க்ருக்வா இத்யாதி. "க்ருக்வாலாரராவதரணம் வ்ருயிவ்ரு: வ்ருயுஹ்ரு வொகு:। சொகாயிக்வாஜஹ்ரு ஸ்ரு வ்ரு ஹ்ரு தஸ்ரு ஸ்வ்ரு ஸ்ரு நிஹ்ரு தி॥" இதி மௌஸல பர்வணி. அந்வயிக்கிறார்-வ்ருயிவ்ரு இத்யாதி. ஸ்லோகார்த்தம் - ப்ரதிகூலரை இத்யாதி. அதில், ஸ்லோகார்த்தம் - விண்ணிசை இத்யாதி. "உத்தமம்" என்றதுக்கர்த்தம் - கம்ஸாதிகள் இத்யாதி. ஸ்வஸ்த்தாநத்திலே ப்ரவேசப்பெற்றது உகப்பாயிருக்குமென்றுமதுக்கு ஸம்வாதம் - ஒரு தீர்த்தத்தினன்று இத்யாதி. நாயிறுபோது-அஸ்தமிக்கிறபோது, "வணங்கினான் நண்ண - பெற்றேன்" என்றந்வயித்ததுபாவம் - காலயவந இத்யாதி. "எனக்கு - பிறர்-ஆர் நாயகர்" என்றந்வயமாய் - எனக்கு வேறொருவரார் நியாமகரென்று ஸப்தார்த்தம். "எனக்கார் பிறர்

டப்பெற்றேன். [எனக்கார்பிறர்நாயகரே] - அவனுடைய அவதாரந் தொடக்கமாக, நடுவுள்ள அபாயங்களைத்தப்பி ஆஸ்ரிதரைவாழ்வித்துத் தனக்கமர்ந்த நிலத்தேபோய்ப் புக்கபடியளவும் அநுபவிக்கப்பெற்ற எனக்குஆர்தான் நியாமகர்? என்கிறார். "பயிலுந்திருவுடையார் யவரேலும்" என்கிறத்தை மறந்தார்போலேயிருந்தது; அவர்களைப் பிறராகநினையாநிற்றே.(ம்)

பதினோராம் பாட்டு.

நாயகன்முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகுந்தன்
வாயகம்புகவைத்துமிழ்ந்தவையாய் அவையல்லனுமாம்
கேசவனடியிணைமிசைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
தூயவாயிரத்துஇப்பத்தால் பத்துநாவாயினவே.

ஆ.—(நாயகன்.) —கீழ்இயன்றிருவாய்மொழியாலும்சொன்ன அர்த்தத்தை நிகமிக்கிறது.

நிலைபெறுவகுமாரனோடு ஒன்றாகியக்கருத்தை கிர்க்கோஷத்வாரகவாலே அநுகதஸர்வேஶ்வரத்வத்தையுடையனாய், ப்ரணதரக்ஷணாகாலைக்கேயே நித்யாலதாத நித்ய கைங்கர்யவிசிஷ்டனான எம்பெருமானைச்சொன்ன ஆயிரத்துள் இத்திருவாய்மொழி வல்லவர்களை, இத்திருவாய்மொழிதானே நிகிலப்ரதிபந்தக நிரஸநபூர்வகமாகப் பரமபுருஷசரணாரவிந்தவிஷயாநந்யப்ரயோஜந நித்யஸித்த நிரவயிக பக்தியுக்தராக்கு மென்கிறார்.

ஒ.—நிகமத்தில், க்ருஷ்ணசேஷ்டிதங்களைப் பேசின இப்பத்தும் கற்றார், ஆழ்வார்கண்ணைப்போலே க்ருஷ்ணனுக்கே பக்தராவர் என்கிறார்.

"நாயகன் முழுவேழுலகுக்குமாய் முழுவேழுலகுந்தன், வாயகம் புகவைத் துமிழ்ந்தவையாய் அவையல்லனுமாம்கேசவனென்றது - கீழில் திருவாய்மொழியையும் இத்திருவாய்மொழியையும் அநுபாஷிக்கிறது" என்றுஞ்சொல்லுவர். [நாயவாயிரத் திப்பத்தால்] - ஆயிரம் திருவாய்மொழியிலும் க்ருஷ்ணசேஷ்டிதங்களைப் பேசின இத்திருவாய்மொழியால். தவன் - குற்றம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியின் ஸாம்ப்ரதாயத்தாலே பகவதநந்ய பக்தியுக்தராவரென்று பலத்தை யநுஸந்தித்தாயிற்றாயிற்று.

முழுவேழுலகுக்கும் - ஸமஸ்த லோகங்களுக்கும், நாயகன் - நிர்வாஹகன், ஆய் - ஆய், முழுவேழுலகும் - நிர்வாஹ்யமான லோகத்தை, (ப்ரளயங்கொள்ளாதபடி),

---

நாயகர்" என்கிறதெத்தாலே? என்ன - அவனுடைய இத்யாதி. ததீயர் தமக்குநாயகராயிருக்க, இங்ஙனேசொல்லலாமோ? என்ன, த்வேதா பரிஹரிக்கிறார் - பயிலும் இத்யாதி வாக்யத்வயத்தாலே. அதாவது - இவ்வநுபவஜநிதப்ரீத்யதிஶயத்தாலே "யவரேலும்" இத்யாதியைமறந்தாரென்றாய்; அவர்களை ஈஶ்வரனோடொத்தியாக நினைத்திருக்குமெதுழிய வ்யதிரிக்தராக நினையாராகையாலே, இங்கு, 'பிறர்' என்கிறது தநிய வ்யதிரிக்தரையென்றாம் தாத்பர்யத்வயம். போய் - இங்குநின்றும்போய், விண்மிசை - பராகாசத்திலே, தனதாமமே - தனக்கு அஸாதாரணஸ்தாநத்திலே, புகவேவிய - சென்றுப்ரவேசித்த, சோதிதன்தான் - ஜ்யோதிஸ்ஸ்வரூபனான தன்திருவடியிலே இதி ஸம்தர்த்தஃ. (கo)

தன்-தன், வாயகம் - வாய்க்குள்ளே, புக-புக, வைத்து - வைத்து, உமிழ்ந்து-உமிழ்ந்து, (அவற்றுக்குத் தாத்பர்யம் வாய்க்கொண்டு), அவையாய் - தத்தாத்மகனாய், அவையல்லனும் - தத்ததேதோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனும், ஆம் - ஆன, கேசவன்-கேசிவதந்தாவான க்ருஷ்ணன், அடியிணைமிசை-திருவடிகள் விஷயமாக, நூறுசூர்ச்சடகோபன்- ஆழ்வார், சொன்ன-அருளிச்செய்த, தாய-சிறப்பமான, ஆயிரத்து - ஆயிரத்து, இப்பத்தால் - (அவதார சரித்ரப்ரகாரமான) இப்பத்தால், ஞாலவின்றிப்பத்தராவர்-(க்ருஷ்ணன்விஷயத்தில்) அநந்ய ப்ரயோஜந பக்தியுக்தராவர். ஞாலவின்றி - சூந்யமின்றி. இது-அநுசந்திப்பவிருத்தம்.

இ.—நிகமத்தில், க்ருஷ்ணசேஷ்டிதங்களைப் பேசின இப்பத்தைக்கற்றார், தம்மைப்போலே க்ருஷ்ணபக்தராவர் என்கிறார். [நாயகன் இத்யாதி] - ஸகல சேதந சேதநங்களுக்கும் நியந்தாவாய், ப்ரளயாபத்திலே வயிற்றிலேவைத்து ரக்ஷித்து, உள்ளிருந்து நெருக்குப்படாமே வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, ஸர்வாவஸ்தையிலும் அவற்றை ப்ரகாரமாக உடையனாய், அவற்றின் பக்கலிலே நிற்கச்செய்தேயும் அநித்தமான பரிணாமமும் சேதநகதமான குணீகிக்வாதிகளும் தன்பக்கல் கட்டாதபடி நிற்கும். இதிலே - கீழில் திருவாய்மொழியில் சொன்னது. அங்கை அநுபாஷிக்கிறது. [கேசவன்] - கேசிவதந்தாவான்றாலே, இத்திருவாய்மொழியில் க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தை யிறே சொல்லிற்று. ஆக, இவன்றி திருவாய்மொழியையும் அநுபாஷிக்கிறது என்றதல்; "கூ2ஏ- வாஸவஸிலோகாநாம்- கூ2ஏ" என்கிறபடியே க்ருஷ்ணவிஷயமே சொல்லுகிறது என்றதல். [நூறுசூர் இத்யாதி] - ஆர்கமான ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்திலும். [தாயவாயிரத்திப்பத்தால்] - தாய்மையாயிருப்பது, க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தில் கலப்பற்றிருக்கை. [ஞாலவின்றிப்பேர் - பத்தராவர்] - ஞாலம் - சூந்யம். அநாவது - பரத்வத்திலே வெந்த வெம்பலைகை. அங்கை - க்ருஷ்ணவ்ருத்தாந்தத்திலே ப்ரவணராகப்பெறுவர். இது ஸாரவ்ருத்தாந்தத்திலே ப்ரவணரல்லர் இருக்கவாரோமலே.

௪௫.—நிகமத்தில் - கிருஷ்ண சேஷ்டிதங்களைப் பேசினஇப்பத்தும் கற்றார், தம்மைப்போலே கிருஷ்ணபக்தராவரென்கிறார்.

[நாயகனித்யாதி] - ஸகல சேதநாசேதநங்களுக்கும் நியந்தாவாய், ப்ரளயாபத்தில் திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்து, உள்ளிருந்து நெருக்குப்படாமே வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, ஸர்வாவஸ்த்தையிலும் ஸகலபதார்த்தங்களும் "தான்" என்கிற சொல்லிலே அடங்கும்படி அவற்றை ப்ரகாரகமான சரீரமாகவுடையனாய், இப்படியிருக்கச்செய்தே தத்ததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனான. [கேசவனடியிணைமிசை] - கேசிவதந்தாவான ஸர்வேஶ்வரன்திருவடிகளிலே. "கீழிற்றிருவாய்மொழியிற் சொன்ன ஸர்வேஶ்வரத்வத்தையும், இத்திருவாய்மொழியிலே - கேசிவதந்தாவான க்ருஷ்ணனுடைய அவதாரத்தையும் அநு

நிகமம் - நாயகன் இத்யாதி. "இப்பத்தால் பத்தராவர்" என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை—க்ருஷ்ணசேஷ்டிதங்களை இத்யாதி.

"முழுவேழுலகுக்கும் - நாயகன் - ஆய்" இத்யாதி. ஒன்று குறையாத ஏழுலகுக்கும் நாயகனாயிருப்பவனை - க்ருஷ்ணவதாரத்தைச் சொல்லுகிற இடத்திலே ஸர்வேஶ்வரத்வம் சொல்லுவானென்? என்ன - கீழில் திருவாய்மொழி இத்யாதி. அதாவது-"நாயகன்முழுவேழுலகுக்குமாய்" என்று தொடங்கி, "அவையல்லனுமாய்" என்றாளாகையால் - 'கல்குரவிற்சொன்ன ஸர்வேஶ்வரத்வத்தையும், "கேசவன்" என்று - *ஞாலவையாய்ப்பியமிற்றிரியன்ன க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தையுமநுவதித்துத் தலைக்

பாஷித்துத் தலைக்கட்டுகிறது" என்று சொல்லுவர். "க்ருஷ்ணஏவஹிலோகாநாம்" (க்ருஷ்ணஏவஹிலோகாநாம்) என்கிறபடியே, க்ருஷ்ணவிஷயமே சொல்லுகிற தென்னுதல். [தூயவாயிரத்திப்பத்தால் பத்தராவர் துவளின்றியே]-இப்பத்தையும் அப்யஸித்தவர்கள் ஆழ்வாரைப்போலேயாவர். இப்பத்தையுடைத்தாகையாலே தூய்மை யுடைத்தான ஆயிரமென்னுதல்; அன்றிக்கே, ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு, க்ருஷ்ண வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகையாலே, தூய்மையையுடைத்தான இப்பத்தென்னுதல். [துவளின்றியே - பத்தராவர்] - துவளாவது குற்றம். அதாவது - அவதாராந்தரங்களிற் போகாதே க்ருஷ்ண வ்ருத்தாந்தத்திலே கால்தாழ்வர். (சக)

கட்டுகிற தென்னுதல்; "க்ருஷ்ணஏவஹிலோகாநாம் ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயவிஜாவ்யயம்" என்று - க்ருஷ்ணனையே ஸகல ஜகத்ஸர்க்க ஸ்த்திதி ஸம்ஹாரகர்த்தாவாகச் சொல்லுகையாலே *குரவையாய்ச்சிய ரிற்சொன்ன க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தையே யநுபாஷித்துத் தலைக்கட்டுகிறாரென்னுதல் என்றபடி. க்ருஷ்ணவிஷயமே யென்றது - இப்பாட்டெல்லாம் க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தையே, சொல்லுகிறதென்னுதல் என்றபடி. குற்றமேதென்ன - அவதாராந்தர இத்யாதி. "க்ருஷ்ண ஏவஹிலோகாநாம் ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயவிஜாவ்யயம். க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே ஜகதிதம் விஶ்வம் பராபவ:" இதி ராஜஸூயே பீஷ்ம: ஸபா. [க.அ.உக.] (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— "ஆநந்ஶீ தஜிதவாஶநாஸுநாஸுயிய க்ருஷ்ண ஸ்ருவீரஸ்ருவ்ரசிதாநுஸரிசாஷுரெண ।—உ தம்பராஸுயிவெக்ஷிதவாநு ச்ரி ஸுமுவாஸுசோஹி நசிசிதுவஷுதாயெழு॥"

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி— ராஸ்ரீ ஶாகிக்ருவெ ஸ்ருவியசிராஜிகாவாஷுவெ ஸ்ருஷுஸுவெஜ்ஜெஹுவீவெ ஸ்ருநாஸுஹுஸுவாஸ்ரு ஜஜநநசிராவெவெ: கம்ஸுவெஷெ ஸ்ருராஜிஸுவெஜ்ஜெ: । ஸ்ருராஷ-ஸுஹுவெவெநிஸுஹீவெ நஷ்வெஸுராஸுஹுராஜிஸுநவெஷுசிராவெவெஸ்ருராஸிவெஸ்ருராகுஷெஸுஹுவஸுவி கம்ஸுஹுசிரிசிகுஸ்ருராசிஸுகாவெஸ்ருவெ ஸ்ருஸு ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஞானவெழுகலாய்க்கண்ணன் கோலச்செயல்களெல்
இரவுபகலென்னாமல் ஏன்றும் - பரவுமனம்
பெற்றேனென்றேகளிக்கும் பேதைமனமாங்குரவன் தன்
சொல்தேனில் வெந்நீரே சூழல்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், சீயர் திருவடிகளே ஶரணம்.

அ.—(நுவளில்.)-இப்படி எம்பெருமான் திருவிண்ணகர்தொடக்கமாகவுள்ள திருநகரிகளிலே எழுந்தருளியிருந்த இருப்பையும், அவனுடைய திவ்யாவதாரங்களையும், திவ்யசேஷ்டிதங்களையும், ஸௌந்தர்யாதி ஸர்வகல்யாணகுணங்களையும் அநுஸந்தித்த ப்ரீதியையும், அவனோடு பாஶ்ரயஸம்ஶ்லேஷம்பெறுமையாலே வந்தநிரவயிக வ்யஸநத்தையும் அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். ஒருபெண்பிள்ளை "திருக்கோவலூர்வில்லிமங்கலத்தில் எம்பெருமானைக்காணவேணும்" என்று ஆசைப்பட்டுப் பெறுமையாலே அத்யந்தம் அவஸந்நையாய், அவனுடைய ஸௌந்தர்யாதி குணங்களையும் திவ்யசிஹ்நங்களையும் திவ்யசேஷ்டிதங்களையும் திருக்கோவலூர்வில்லிமங்கலத்தையும் சொல்லி அலற்றுகிறபடியைக்கண்டு இவளுடைய திருத்தாயாரும் பந்துக்களும் "இவளையிழக்கிறோம்" என்னும் பயத்தாலே "இவளுக்கு அவன்பக்கலுள்ள அநிகிவேஶத்தை நிவர்த்திப்பிக்கவேணும்" என்று இவளுடையதோழியை அபேக்ஷிக்க, இவளும் அவர்களை நோக்கி,

ஒ.—அந்தாந்திருவாய்மொழியில், * குரவையாய்ச்சியரில் க்ருஷ்ணகுணசேஷ்டிதங்களை அநுஸந்தித்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பாவராய், செல்லுகிற ப்ரீத்யநுபவம் கலங்கி நோவுபடுகிற ஆழ்வார் * பொய்ந்நின்றஞானம்தொடங்கி இவ்வளவும்வர பகவத்குணசேஷ்டிதாதிகளிலே ஈடுபட்டிருக்கிற தம்முடைய உஸுரையை அநுஸந்யித்து, இத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். இப்படி * குரவையாய்ச்சியரிலே க்ருஷ்ணகுணசேஷ்டிதாதிகளை அநுஸந்யித்த மிகவும் ப்ரீதராய், ஸாந்த்ரபாஶ்ரயஸம்ஶ்லேஷத்திலே அபேக்ஷையுண்டாகி, அதுபெறாமையால் தமக்கு ஒழிகிற ஸுஸுரையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார் என்றுமாம். திருக்கோவலூர்வில்லிமங்கலத்தில் ஸம்பத்திலும், அங்கு நின்று அருளுகிற தேவபிரானுடைய திருவழகிலும் அகப்பட்டு, பண்டுபடுகின்ற பழக்கத்தின் மிகுதியாலே மிகவும் ப்ரவணதிக்கையாய் இருக்கிற பிராட்டியுடையைக்கண்டு, இவளுக்கு அவன்பக்கல் உண்டான அதிமாத்ரப்ரவண்யத்தைக் தவிர்க்கைவிலே உபக்ராந்தைகளான திருத்தாய்மாரைக்குறித்து, இப்பிராட்டியுடைய கருத்தறிவாளொருதோழி, "இவள் திருக்கோவலூர்வில்லிமங்கலங்கண்ட அன்றுதொடங்கி அரவிந்தலோசனனை ஒழியப் புறம்புள்ள தொன்றறியாள் மற்று, அவனை எல்லாமாகக்கொண்டு அவன்பக்கலிலே இவளுடைய மநோரதங்கள் மிகவும் ப்ரவணமாயிற்று; இப்படி விளைபயப்படியான இவள் ப்ரக்ருதியை அறிந்துவைத்து இவளைத் திருக்கோவலூர்வில்லிமங்கலத்திலே நீங்கலைக்கொண்டுபுக்கு அங்குத்தைப்படி காட்டிக்கொடுத்து, இனி மீட்கநினைத்தால் முடியுமோ? ஆனபின்பு, இவள்பக்கலில் ஆசையறுங்கோள்" என்கிறாள்.

ப.—அந்தாந்திருவாய்மொழியில், மேலே - இப்படி க்ருஷ்ணசேஷ்டிதங்களிலே அவகாஹித்து அத்யந்தம் ஹ்ருஷ்டரான இவ்வாழ்வாருடைய மாநஸாநுபவம் முதிர்ந்து பாஶ்ரயஸம்ஶ்லேஷ அநிகிவேஶத்தைப் பிறப்பிக்க, அநிகிவேஶாநுரூபாநுபவாலாபத்தாலே அவஸந்நராய், பூர்வாநுபூதமான ஸர்வேஶ்வரனுடைய அஸாதாரண சிஹ்நயோகத்தையும், விலக்ஷணாநுஸாந்யத்வத்தையும், ரக்ஷணார்த்தப்ரவ்ருத்திகளையும், உபபநீயவிக்ரஹயோகத்தையும், ஆஸாணஔஜ்ஜ்வல்யாதிகளையும், ஸாக்ஷாதுஸௌந்தர்யத்தையும், உதாரஸ்வபாவத்தையும், ஆதிக்யஸூசகமான அரவிந்தாக்ஷத்வத்தையும்,

விரோதி நிவர்த்தகத்வத்தையும், வ்யாமோஹாதிசயத்தையும் அநுஸந்தித்து, ஸம்ஸித ஸ்வபாவனானவன் விஷயத்திலே அத்யந்தப்ரவணரான இவருடையநிலைமை, தூர்வாநு பவ ப்ரவர்த்தகரான பரிவர்தாங்களை அவஸாத பரிஹாரார்த்தமாக நிரூபித்தக்கால், இவருடைய ப்ரக்ருதியறிந்த ஸுஹ்ருத்துக்களானவர்கள், "அடியில் ப்ரவர்த்தகரான நீங்களே நிவர்த்தகரானால் இவர்க்கு அவ்ருத்யபாவமெங்கே வைஸம்" என்றுசொல்லி, அதுக்கடியான இவருடைய ஸகலத்ப்ராவண்யாதிசயவிகாரங்களை யறிவித்த ப்ரகாரத்தை, திருத்தொலைவில்லிமங்கலத்திலே தேவபிரானை அநுபவித்து ஈடுபட்டாள்ளொருநாயகியினுடைய ஈடுபாட்டைக்கண்டு, அடியிற் கூடக்கொண்டுபோய்ந் திருவடிதொழுவித்த தாய்மார் இவளிடுபாடு ரமிக்கைக்காக இவள்நிலைமை நிரூபித்தக்கால், இவள் பெருந்தகுதியுற்ற தோழியானவள், "அடியிலே இவளைமூட்டினபோதே ஆசையற்று மூட்டினிகோளன்றோ? இனி இவள்பக்கல் ஸங்கத்தை விடுங்கோள்" என்றுசொல்லி இவருடைய ப்ராவண்யவிகாரப்ரகாரங்களை யறிவித்த பாகத்தாலே அருளிச்செய்கிறார்.

பிராட்டிதானே பிறந்திட்டாளோ? ஸர்வேஶ்வரனுடைய ஸம்பத்தாயிருக்குமவள் பிறந்திட்டாளோ? அஸ்ஸம்பத்துவிளையும் பூமியாயிருக்குமவள் பிறந்தாளோ? அவ்விளைபூமியினுடைய ஸௌந்தர்யமாயிருக்குமவள் பிறந்தாளோ? அப்படியன்றிக்கே, [பிறந்திட்டாளோ] - அவர்களுக்கு இவள்படி யில்லாமையாலே அவர்களோடொப்பன்று; லோகமெல்லாம் வாழ்கைக்கு இவளொருத்தி பிறந்தாளோ! என்றுமாம். "விஶ்வ ஸ்ரஷ்டாவிஶ்வாஸ்ரீரேவ" (விஶ்வோநாஸ்ருஷ்டாவிஶ்வாஸ்ரீரேவ) என்றாற்போலே, கர்ப்பிராம் பக்கலிலேயும் ஓரோவகைக்கு ஒப்புச் சொல்லலாயிருக்கையாலே கதிர்பொறுக்குகிறாள். "உபமாநமபேக்ஷ்யாணாம் ஸர்வாஸாம் நாம்யஸ்ஸதாபவத்" (உபமாநமபேக்ஷ்யாணாம்ஸர்வாஸாம்நாம்யஸ்ஸதாபவத்) என்கிறபடியே இவளை எல்லார்க்கும் ஒப்பாகச் சொல்லலாம் இவர்க்கொப்பாவார் ஒருவருமில்லைகாணும். [என்னைமாயங்கொலோ] - ஸர்வத்விபுதியில் கூடாததில்லையாகாதே! இதென்ன ஆஶ்சர்யந்தான்! [இவள் நெடுமாலென்றே நின்றுகூவும்] - தன்பிச்சைக் காற்கடைக்கொண்டு, அவன்பிச்சைச்சொல்லிக் கூப்பிடாநின்றாள். [ஆல்] - ஆஶ்சர்யத்திலே, அசை. [முன்னி இத்யாதி] - தன்னுடைய வ்யாபாரமாறுத்துக்கும் அவன் க்ருஷிபண்ணின படி. முற்பாடனாய்வந்து அவன் நிற்பதிருப்பதாய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணுகிறவூர். பசியன், சோறுதாற்காமல் படுவாரோபோலே. [சொன்னியால்வணங்கும்] - *தன்கரங்கள் கூப்பித்தொழுகையும் ப்ராப்தமானபடி. இருந்தவிடத்தேயிருந்து தலைசாய்க்கும்படியானாள். [அவ்வூர் இத்யாதி] - அவ்வூர்த் திருநாமங்கேட்கச் செவிதாழ்க்கையிலே இவளுக்கு மநோரதம். இவள், அவ்வூரென்கிறது - பெண்பிள்ளை சொன்னாற்போலே யிராமை. ஆனால்ஒருகால் சொன்னாளோ? என்னில், "அது வறைமுறுகலாகையிறே பின்பு தவிர்ந்தது" என்றருளிச்செய்வர்.

(கம)

படி. கீழ்வாக்யத்தை ஒருவிசேஷத்தோற்ற வ்யுத்க்ரமமாகவிளக்கிறார். ஸர்வேஶ்வரனுடைய இத்யாதி. கீழே - மூன்றுபிராட்டிமாரிடத்திலும் "பிறந்திட்டாள்" என்றதனை யந்வயித்தருளிச்செய்து, அங்ஙனன்றிக்கே, "பிறந்திட்டாள்" என்றதனை ப்ரத்யேகவாக்யமாக்கி அர்த்தாந்தரம் - அங்ஙனன்றிக்கே இத்யாதி. முந்தின அர்த்தத்தில், மூவரையும் ஒப்பாகச் சொல்லுவானென்? என்ன - விஶ்வஸ்ரஷ்டா இத்யாதி. "ஓரோவகைக்கு" என்கிறதென்? ஸர்வதாஸாம்யம் சொன்னாளோ? என்ன - உபமாநம் இத்யாதி. இது - இரண்டாமத்தத்துக்கு அநுகுணம். த்விதீயார்த்தத்திலே, தோழியின்னபொழு - பதவர்த்திபுதியில் இத்யாதி. ஆகவாது - அதிலிலகுத்தேயான இவள் இந்த விடுதியிலே திருவவதரிக்கையாலே, பவர்த்திபுதியில் இதென்ன ஆஶ்சர்யமென்று கருத்து. மாயம் - ஆஶ்சர்யம். உறையுமென்றுதே, "நின்றிருந்து" என்று விசேஷிக்கிறதுக்குமாயம் - பசியன் இத்யாதி. இத்தால் - நிற்பதிருப்பதாகிற இரண்டையும் ஸாஸ்த்ரத்திலே செய்தானென்னையாலே, ஸர்வாநுக்ரஹ ஆற்றாமை யநுபவிக்கையில் உண்டான விடாயெல்லாந் தோற்றநின்றதென்றபடி. ப்ராப்தமானபடியென்றது - கையெடுத்துத் தொழுகைக்கும் பலமில்லாதே போயிற்றென்றபடி. செவிதாழ்க்கையிலே இவளுக்கு மநோரதமென்றது - பலவறாகியாலே கேட்கைதானும் ப்ராப்தமாய்விட்டதென்றபடி. வறைமுறுகல் - கருகிப்போகை. அஸாரமென்றபடி. இவள் நெடுமாலென்றே நின்றுகூவும்; முன்னி வந்தவன் இத்யாதியாய், கேட்பதுநினைத்து; பின்னே கொல் என்றதொடு நின்று, பிறந்திட்டாள்; என்னைமாயங்கொலோ? என்றந்வயம். "யதீ-ஹ-ஸ்ரீ-ஸ்ரீ-ஸ்ரீ

பதிநேழாம் பாட்டு.

சிந்தையாலுஞ்சொல்லாலுஞ் செய்கையினாலுந்தேவபிரானையே
தந்தைதாயென்றடைந்த வென்தமுதமன்ன சோபன்
முந்தையாயிரத்துள் இவை தொளாயிரவிப்பத்தைச்சொன்ன
செந்தமிழ்ப்பத்தும்வல்லார் அடிமைசெய்வார் திருமாலுக்கே.

அ.—(சிந்தையாலும்.) - மனங்மொழி மெய்களாலே தேவபிரானையே தந்தைதாயென்றடைந்த குருகூர்ச்சடகோபன் சொன்ன வாசகமேவுகளாகிய அயிரத்திருவாய்மொழியிலும் ஸாரபூதமான இத்திருவாய்மொழியை வல்லார், எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் அடிமை ஸ்வரூபத்துக்கு யோக்யராவர் என்கிறார்.

ஓ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் கருத்தை வியக்தமாக்கி நின்று கொண்டு, இதற்றவர்கள் இதுக்கு அநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவர் என்கிறார். [சிந்தையால் என்று தொடங்கி] - மநோவாக்காயங்களினால் திருத்தொலைவில்லிமங்கலத்தில் எம்பெருமானையே எல்லா உறவுமுறையும் என்று பற்றுவதும் செய்து, திருநகரியில் உள்ளார்க்கு ஸர்வஸ்வமுமான ஆழ்வார் அருளிச்செய்த. [முந்தையாயிரம்] - அர்த்தப்பழமையாலே பழையதான ஆயிரம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஸ்ரீயஃபதிக்கு நித்யகைங்கர்யபரராவர்கள் என்று பலத்தை அருளிச்செய்கிறார்.

தேவபிரானையே - தேவபிரானையே, (ஸர்வாதிகத்வத்தாலும் ப்ரியதமத்வத்தாலும்), தந்தை - தந்தையும், தாய் - தாயும், என்று - என்று அறுதியிட்டு, (இத்திருவாய்மொழியிற்சொன்ன வகையிலே), சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் - கரணத்ரயத்தாலும், அடைந்த - ஆச்ரயித்தவராய், என் - "அன்னையாயத்தலைவி" என்கிற ஸ்ரீமதுரகவிகளைப்போலே தம்மைப்பற்றியிருக்கிற, குருகூரவர் - திருநகரியிலுள்ளார்க்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், முந்தை - பழையதான ஸ்வரூபத்துக்கு ப்ரகாசகமான, ஆயிரத்துள் - ஆயிரத்திருவாய்மொழியிலும் வைத்துக்கொண்டு, தொலைவில்லிமங்கலத்தை - திருத்தொலைவில்லி மங்கலத்தைப்பற்ற, சொன்ன - அருளிச்செய்த, செம் - அர்த்த ப்ரகாசத்தில் ஆர்ஜவத்தையுடைய, தமிழ் - தமிழான, இவைபத்தும் - இப்பத்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், திருமாலுக்கு - ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரனுக்கு, அடிமைசெய்வார் - அடிமைசெய்யுமவர்களாவர். இது - எழுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் கருத்தைச் சொல்லிக்கொண்டு, இதற்றவர்கள் இதுக்கு அநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவர் என்கிறார். [சிந்தையாலும் இத்யாதி] - மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட்டு அவனபக்கலிலே ப்ரவணமாயிருக்கிறபடி. "இயங்கி" என்றும், "மனிவண்ணனேவாவென்று கூவுமால்" என்றும், "தன்கமலங்கள் கூப்பித்தொழும்" என்றும் - மூன்றாலும் இவர்க்கு உண்டான ப்ரவணயாதிசயமிறே இத்திருவாய்மொழியில் சொல்லிற்று. [தேவபிரான்

இத்யாதி] - * அயர்வறுமமரர்களதிபதியாய்வைத்துத் திருத்தொலைவில்லி மங்கலத்திலே ஸுலபனாய் இருந்தவனையே ஸர்வவிதபந்துவுமென்று, அப்படியே பற்றுவதும் செய்தவர். [வண்குருகூரவர்சடகோபன்] - அவனே நமக்கு ஸர்வவிதபந்துவுமானாற்போலே, அவ்வூரிலுள்ளார் "ஆழ்வாரே எல்லாவறவுமுறையும்" என்றுமிற்று இருப்பது. "அன்னையாயத்தனாய்" என்னைப்புரிந்து வளர்த்தவனாகிறபோலே. [முன்னைமறையாயிரம்] - பழையதான வேதார்த்தத்தை . அருளிச்செய்கையாலே, ஸர்வேஶ்வரன் இதர ஸஜாதீயனாய் அவதரித்தாற்போலே வேதமும் தமிழாய்வந்து இவர்பக்கலிலே அவதரித்தபடி. [செந்தமிழ்] - செவ்வியதமிழ், பசுந்தமிழ். அர்த்தத்தை விசதமாகக்காட்டுமது. இப்பத்தை அப்பயிக்கவல்லார் ஸ்ரீயஃபதிக்கு அடிமைசெய்யப்பெறுவர்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியிற்கருத்தை வ்யக்தமாக்காநின்று கொண்டு, இத்தைக் கற்றவர்கள் இதுக்குஅநுரூபமான கைங்கர்யத்தைப்பண்ணப்பெறுவர் என்கிறார்.

[சிந்தையாலும் இத்யாதி] - மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட்ட அவன் பக்கலிலே ப்ரவணமாயிருக்கிறபடி. "இரங்கி" என்றும், "மணிவண்ணனோ" என்றும், "தன்கரங்கள் கூப்பித்தொழும்" என்றும், மூன்றாலும் - இவர்க்குண்டான ப்ராவண்யாதிசயமிறே இத்திருவாய்மொழியிற் சொல்லிற்று. [தேவபிரானித்யாதி] - *அயர்வறுமமரர்களுக்கு அதிபதியாயிருந்துகொண்டுத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே ஸுலபனாயிருந்தவனே ஸர்வவிதபந்துவுமென்று அறுதியிட்டபடியே பற்றுவதும் செய்தவர். [வண்குருகூரவர்சடகோபன்] - அவனே யிவர்க்கு ஸர்வவிதபந்துவுமாறாற்போலே, அவ்வூரிலுள்ளார் ஆழ்வாரையே எல்லாவறவுமுறையாகப் பற்றியாயிற்றிருப்பது. "அன்னையாயத்தனாய் எனையாண்டிடும் தன்மையான்" என்றும், "ரக்ஷகாவிதாயாவதயாஸாநயா விஶுத்திஸ்ஸ்வ-ரு" (மாதாபிதா யுவதயஸ்தநயாவிபூதிஸ்ஸர்வம்) என்றும் சொல்லுகிறபடியே இருப்பர்கள். [முன்னைமறையாயிரம்] - பழையதான வேதார்த்தத்தை யருளிச்செய்கையாலே, ஸர்வேஶ்வரன் இதர ஸஜாதீயனாய் அவதரித்தாற்போலே, வேதமும் தமிழாய்வந்து இவர்பக்கலிலே அவதரித்தபடி. [செந்தமிழ்] - செவ்வியதமிழ், பசுந்தமிழ். அர்த்தத்தை விசதமாகக்காட்டுவது. இத்தை அப்பயிக்கவல்லார் ஸ்ரீயஃபதிக்கு அடிமை செய்யப்

நிகமம்—திருவாலும் இத்யாதி. "பத்தும்வல்லாரடிமைசெய்வார் திருமாலுக்கு" என்றதைக்கடாக்ஷித்தவாறாம். - இத்திருவாய்மொழியில் இத்யாதி. கருத்தையென்றது - காணத்ரய ப்ராவண்யத்தை. இது "சிந்தையாலும்" இத்யாதியைக்கடாக்ஷித்து.

"சிந்தையாலும்" இத்யாதியாலே காரணகார்யங்களையிட்டு, காரணங்களைக்கூறிக்கிறது. உக்தத்தையன்றோ நிகமிப்பது. காணத்ரயப்ராவண்யம் கீழுக்தமோ? என்ன - இரங்கி இத்யாதி. "வண்குருகூர்" என்று - * மந்ரசாக்ஷாத்காரசந்திபோலே, குருகூரிலுள்ளாரைச்சொல்லுகிறது. "அவர்" என்கிற தச்சப்தம் - ப்ரக்ருதபராமர்சியாகையாலே, கீழுக்தமான தந்தைதாயைச்சொல்லுகிறது. வண்மை- அழகு. ஆக, வண்குருகூரிலுள்ளார்க்கு, அவர்சடகோபன் - தந்தைதாயான சடகோபனென்று பரப்ரஹ்மவாலும் விவக்ஷித்தருளிச்செய்கிறார் - அவனையிவர்க்கு இத்யாதி. அப்படியிருப்பர்களோ? என்ன - அன்னையாய் இத்யாதி. மாதாவும்பிதாவும் என்னைவடனாகொள்ளுமாசார்யனையுமாகையே ஸ்வபாவமாக வுடையவர் இத்யர்த்தம். தாம் இப்போதருளிச்செய்ததாயிருக்க, "முன்னைமறையாயிரம்" என்கிறதென்? என்ன - பழையதான இத்யாதி. பரிணாமாந்தரம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. "பழையதான

பெறுவர். பெருமாளும் பிராட்டியும் சேவிருக்க இளையபெருமாள் அடிமைசெய்தாற் போலே, விஶிஷ்டவேஷத்திலே அடிமைசேய்யப்பெறுவர். (கக)

வேதார்த்தத்துக்கு ப்ரகாசகமானவாயிரம்" என்றபடியே பரப்பார்த்தம் ஸத்ருஷ்டாந்தமாக விவரணம் - பெருமாளும் இத்யாதி. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி. — கஸ்யாஶ்சித் ஸாநஸ்தயா நாராயணஸ்ய ஸாஹ்ரயுஸம்ஶ்லேஷணைகவாஸித ஸநாதீ ஶரீரஃ । ஸூதாநாராயணஜநாதி திவ்ய ஸ்வ ஹ்ருதம்நிநெயுzயிவ ஹ்ருதி திவ்ய ஸ்வணோஹ்ரு ஸெகஸஃ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி. — ஶாஸ்த்ரஸ்ய ஸாரபூதயாஸிஸ்ரீராயிக்ஷாஸ்ரீ தத்வெ ஹ்ரதாராஹாவாஹ்ரணஸ்ரஸ்ரீஜாக்ஷகுஷி ஸெஹ்ரநஸெஸஃ । ஸெவீஹிஸ்ஸெஸ்ரீ ஹாவாஹ்ரதிஸ்ரீ ஹ்ரயாஸ்ஸெஸ்ரீ திஸ்ரிஹ்ரஹாவாஹ்ரஸ்ரீ ஹ்ரு ஸ்ரீ ஸாநாராரிவிஹ்ரு ஸ்ரீ ஸ்ரீ திஹ்ரஸாஹி ஹ்ரு ஸெஸ்ரீ ஸாஸஃ॥ கூச॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

துவளறநின்றபால்திருந்துந்திருவின்பலத்தாலெங்கணும்
துவளறுதன்சீலமெல்லாந்துலங்கச்சான்றுநின் - துவளறவே
முன்னமனுபவத்தில்மூழ்கிநின்றமாறனதில்
மன்னுமுவப்பாலவந்தமால்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், சீயர் திருவடிகளே ஶரணம்.

ஆறாந்திருவாய்மொழி: மாலுக்கு - ப்ரவேசங்கள்.

அ.—(மாலுக்கு.)-இப்படி * மாங்கனிபம்இரங்கும்வகை "மணிவண்ணவோ" என்றுகூப்பிட்டும் அவனைக் காணப் பெறாமையாலே மோஹநதசாபந்தையாய், ஆத்மாத்மீயங்களை இழந்து அத்யந்தாவஸன்னையான இவளைக்கண்டு திருத்தாயார் இவளிடம் அநிமாத்ரவ்யஸநாபிபூதையாய்க்கொண்டு, எம்பெருமானுடைய குணசேஷ்டிதங்களுக்குத் தோற்று இவளிழந்தவற்றைச்சொல்லி அலற்றுகிறாள்.

ஒ.—ஆறாந்திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியில் பிறந்த வ்யஸநம் முறுகடியிலேயாலே இப்பிராட்டியும் மோஹித்து, அது பொறுக்கமாட்டாமை இவளுடைய தோழியும் மோஹித்ததனையிலும், இவளை ஜீவிப்பிக்கைக்கு விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயாரானவள், இவளுடைய வ்யஸநாதிகள் காணக்காண ஶிதிலமாய்ப்போகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லி ஶோகிக்கிறாள்.

ப. ஆறாந்திருவாய்மொழியில், இப்படி கமணக்ரயத்தாலும் பகவத்விஷயத்திலே ப்ரவணரான இவர், ப்ராவண்யஜநகமான அவனுடைய ஆஶ்ரித வ்யாமோஹப்ரகாஶகமான ஆகாரவிஶேஷங்களையும், அவர்களுக்கு போக்யமான ஆயுஶாகிபூர்த்தியையும், ரக்ஷணப்ரகாரத்தையும், ஸர்வப்ரகாரரக்ஷகோபகாரகத்வாதிஶயத்தையும், ப்ரமாணப்ரதாநாதி ரக்ஷணப்ரகாரத்தையும், ஆகர்ஷகமான அவயவஶோபையையும், அவயவஶோபையோடுகூடின ஆபரணஶோபையையும், விஶேஷதிவ்யஸகஸ்வபாவத்தையும், அபேக்ஷிதஸித்தியால்வந்த ஆநுகூல்யாதிஶயத்தையும், ஶேஷத்வபோக்யத்வாதிபரந்தமான ஸர்வாத்மபாவத்தையும் அநுஸந்தித்து, எம்பெருமானுடைய ஸர்வஸ்வபாவனான ஸர்வேஶ்வரன்விஷயத்தில் தமக்குப்பிறந்த நிரவதிகப்ரேமத்துக்கு ஈடுமான பாரவஶ்யாதிஶயத்தாலே, ஆத்மீய பதார்த்தங்களெல்லாம் அவனிட்டவழக்காய்படி அவற்றில் ஸ்வாம்யநிவ்ருத்தி தமக்குப் பிறந்தபடியைக்கண்ட பரிவர் வித்தராய்ச் சொன்னபாசுரத்தை, நாயகன்பிரிவாற்றாத நாயகியினுடைய ஆபரணஶோபையோடு ஆகிருப்யத்தோடு ஆத்மகுணத்தோடு வாசியற அழிந்துவருகிறபடியைக்கண்ட செவிலி இரங்கின பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.—ஆறாந்திருவாய்மொழியில், கீழ் இவளுக்குப்பிறந்த *ஸமமுற்றி வ்யஸநம் அதிஶயிக்கையாலே மோஹங்கனதையாய், அது பொறுக்கமாட்டாமையாலே இவளுடையதோழியும் மோஹிக்க, இத்தனையிலும் இவளை ஜீவிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார், இவளுடைய வ்யஸநாதிகள் காணக்காண ஶிதிலமாய்ப்போகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக்கூப்பிடுகிறாள். நகரபத்தநாதிகள் வேவப்புக்கால், "அது விழுந்தது, உது விழுந்தது" என்றாமாபோலே, விரஹாக்நியாலே தன்மகள் இழந்தவற்றைச் சொல்லுகிறாள். கீழில் திருவாய்மொழியில் அலாபதசையோராதி, "கிடையாது" என்றாலும் விடமாட்டாதபடி தன்னுடைய மநோவாக்காயங்கள் இவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடி சொல்லிற்று; இதில் - அந்த அலாபத்தால் வந்த பாரவஶ்யத்தைச் சொல்லுகிறது.

ஈடு—கீழ் இவளுக்குப்பிறந்த ஔமுற்றி ரம்யஸநம் அதிஶயிக்கையாலே மோஹங்கதையாய்க்கிடக்க, அதுகண்டு ஆற்றாளாய் இவளுடைய தோழியும் மோஹிக்க, இத்தனையிலும் இவளை ஜீவிப்பிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார் இவளுடைய வலயாதிகள் காணக்காண சிதிலமாகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக்கூப்பிடுகிறாள். ஓரோநகர பத்தநாதிகள் வேவப்புக்கால், "ஒரு மாடம் முறிந்தது, மாளிகை முறிந்தது" என்பாரைப்போலே. (விரஹாக்நியாலே தன் மகள் இழந்தவற்றைச் சொல்லுகிறாள்). கீழிற்றிருவாய்மொழியில் அலாபஶைஶயாய், "கிடையாது" என்றாலும் விடமாட்டாதபடி தம்முடைய மநோவாக்காயங்கள் அவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடிசொல்லிற்று; இதில், அந்த அலாபத்தால் வந்த பாரவஶ்யத்தைச் சொல்லுகிறது. "கேடுமாலென்றே நின்றுகூவுமால்" என்று தன் வ்யாமோஹத்தைக் காட்டியாயிற்று இவளையிப்படி விளைத்தது; பெரியவன் தாழநின்றால் பொறுக்கலாயிராதிறே. "ராகவேணாஶயேத்தே ஸந்ந:" (ராகவேணாபயேதத்தே ஸந்ந:) என்று இவன் தறைப்படும்படியிறே அவன் வ்யாமோஹம் இருப்பது.

(த்வராநுகுணமான அநுபவஅலாபத்தாலே ஆற்றாமைமுறுகி, கீழ்ச்சொன்னதசை கலங்கி, ஸம்பந்தஜ்ஞாநமும் தரிப்புக்கு உறுப்பாகையன்றிக்கே தளர்த்திக்கு உறுப்பாய்விட, உபாயாத்யவஸாய மித்தனையும் கலங்காமலிருந்து, ப்ராப்யஅலாபவிபேந்தநமான பாரவஶ்யத்தாலே, *ஏறாளுமிறையோனில் - தாம் "வேண்டா" என்று உபேக்ஷித்த ஆத்மாத்மீயங்களெல்லாம், தன்னடையே அழிந்து செல்லுகிறபடியை அநுஸந்திக்கிறார்.)

முதற்பாட்டு.

மாஸுக்ரு வையமளந்தாமரைமற்று
நீலக்கருநிற மேகநியாயற்கு
கோலச்செந்தாமரைக் கண்ணற்குஎன் கோங்கல
ரேலக் குழலி இழந்ததுசங்கே.

ஆ.—எம்பெருமானுடைய ஆஶ்ரிதவாத்ஸல்யத்துக்கும், ஆஶ்ரிதார்த்தமான த்ரைலோக்யவிக்ரமணரூப திவ்யசேஷ்டிதத்துக்கும், ஸ்நிக்ந மாய திகம்பீரமாய் வார்ஷிக

மாஸுக்ரு ப்ரவேஶே; கீழ் - தோழிவார்த்தையாயிருக்க, இதில் - தாய்வார்த்தையாகைக்கு ஹேதுவேதென்கிற சங்கையிலே ஸங்கதி-கீழ்இவளுக்கு இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - ஓரோ நகரம் இத்யாதி. 'சிதிலமாகிறபடியைக்கண்டு' என்றவளுக்தரம், 'ஓரோநகரபத்தநாதிகள்' இத்யாதி வாக்யத்தை அநுஸந்திப்பது. நகரம் - ராஜதாநி. பத்தநம் - பேட்டை. "வேவப்புக்கால்" என்றதுக்கநுகுணமாக, விரஹாக்நியாலே தன்மகளிழந்தவற்றைச் சொல்லுகிறாளென்று தார்ஷ்டாந்திகம் கண்டு கொள்வது. கீழிற்றிருவாய்மொழியும் இதுவும் - விஶ்லேஷமாயிருக்க, அதிற்காட்டில் இதுக்குவாசியே தென்ன - கீழிற்றிருவாய்மொழியில் இத்யாதி. இதுக்குஹேதுவேதென்ன - நெடுமால் இத்யாதி. அவன்வ்யாமோஹங்கண்டால் இவளுக்குறுப்பாடி ஈடுபடுகிறதுண்டோ? என்ன - பெரியவன் இத்யாதி. இத்தை ஸத்ருஷ்டாந்தமாகக்காட்டுகிறார் - ராகவேண இத்யாதி. "ராகவேணாஶயேத் தேஸந்தேராராவணாந்தகஃ। விஹீஷணோ ஹிஶரணாஸ்ஸாஜ்ஞோ ஹ்யுதீரிதஃ ஸகிவலோக யது", இதியுத்தகாண்டே, [கக-க].

மான காளமேகத்தினுடைய நிறத்தையும் குளிர்ந்தியையும் பெருமையையும் அழகையு முடைத்தான திருமேனிக்கும், மேகத்திலே அழகியதொரு காமனைத்தடாகம்போலே யிருந்த திருக்கண்களுக்கும் தோற்று, அந்நிலையிலுள்ளார்க்கு ரக்ஷகத்தையுடையனான எம் பெருமானையுங்கூடத் தோற்பிக்கும் திருக்குழலழகையுடையளான என் பெண்பிள்ளை, தன்னுடைய சங்கு இழந்தா ளென்கிறாள்.

ஓ — முதற்பாட்டில், இவள் திருவுலகளந்தருளின எம்பெருமானுடைய குணசேஷ்டிதாதிகளிலே அகப்பட்டு வளையிழந்தாள்என்கிறாள். [மாலென்று தொடங்கி]- ஆஸ்ரிதவிஷயத்தில் மிகவும்வ்யாமுக்தனாய் அதிமாநுஷசேஷ்டிதங்கள்பண்ணி ஆஸ்ரிதருடைய அபேக்ஷிதங்களை முடித்துக் கொடுத்த இச்செயலாலே இவளை அகப்படுத்தி இவளுக்குபோக்தாவானவனுக்கு. [நீலக்கருநிறமென்று தொடங்கி]- அறுகெய்த்துக்கறுத்த நிறத்தையுடைய மேகம்போலே ஸ்ரமஹரமானநிறத்தையும் அதினுடைய ஔதார்யாதி களையும் உடையனாய் ஆஸ்ரிதருடைய அபேக்ஷிதம்முடித்துக் கொடுக்கப்பெற்ற ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே அழகுபெற்ற திருக்கண்களையும் உடையவனுக்கு. விபேஷணைத்தோ றும் 'அவனுக்கு' என்கிறது, தனித்தனியே படுபேறுகளாலே. [என்னென்று தொட ங்கி] - வலம்போலே கறுநாற்றத்தைக் கமழாநின்ற குழலையுடைய என்மகள்.

ப.—முதற்பாட்டில், வ்யாமோஹகார்யமான வ்யாபாராதிகளையுடையவனுக்கு நிரதிசயபோக்யமான வேஷத்தையுடைய பெண்பிள்ளை வளையிழந்தா ளென்கிறாள்.

மாலுக்கு - ஆஸ்ரித வ்யாமோஹநிமித்தம்வந்தபனாய், (அந்தவ்யாமோஹமடி யாக), வையம் - பூமியை, அளந்த - (வேறொருவர் அபிமாநியாதபடி) அளந்து அநந்யார் ஹமாக்கி, மனுளற்கு - அவ்வபதாந ப்ரகாசநத்தாலே தனக்கு போக்தாவாய், (அந்த போகவ்யாமோஹமடியாக), நீலம் - ஸ்நிக்தமாய், கரு - கருத்த, நிறம் - நிறத்தை யுடைத்தான, மேகநியாயற்கு - மேகத்தோடு ஸாமாந்யாயமான ஆகாரத்தையுடையனாய், (அந்தவ்யாமோஹப்ரகாசகமாய்), கோலம் - ஔஜ்ஜ்வல்யாகாரமாய், செம் - சிவந்த, தாமரை - தாமரைபோலும், கண்ணற்கு - கண்ணையுடையனானவனுக்கு, என் - என்னுடைய, கொங்கு - தேனையுடைத்தாயுள்ள, அலர் - மலரையுடைத்தாய், எலம் - எலம்போலே ஸ்ரமஹரகந்தமான, குழலி - குழலையுடையவள், இழந்தது - சங்கு - சங்குவளை. பதந் தோறும், அவனுக்கவனுக்கென்கிறது - தனித்தனியே அகப்படுத்தும் முறை என்கைக் காக; இப்படி மேலும் காண்பது.

இ.—முதற்பாட்டில், இவள் ஸ்ரீவாமநப்ராதுர்பாவத்தில் குணசேஷ்டிதாதி களிலே அகப்பட்டு வளையிழந்தாள் என்கிறாள்.

[மாலுக்கு] - "நீ எனக்குவேண்டா" என்று அகன்று முடியப்புகுந்த தசையிலே தன்செல்லாமையைக் காட்டிப் பொருந்தவிட்டுக்கொண்ட வ்யாமோஹத்தை உடை யவனுக்கு. அவன் தன்பிச்சைக்காட்டியாயிற்று இவளைப் பிச்சேற்றிற்று. [வையமளந்த மனுளற்கு] - உகளாதானையுங்கூட, தன்னை இரப்பாளாக்கித் தன்திருவடிகளின்கீழே யிட்டுக்கொண்ட வ்யாமோஹத்தாலே அநந்யார்ஹமாக்கித் தனக்குபோக்தாவானவனுக்கு. [நீலக்கருநிறமேகநியாயற்கு] - நெய்த்துக்கறுத்த நிறத்தையுடைய மேகஸ்வபாவர்க்கு. ப்ரயோஜநநிரபேக்ஷமாகக் கொடுக்கையும், [illegible] உடம்பிலொருக்கை

யும். வ்யாமோஹமின்றிக்கே ஒழிந்தாலும் விடவொண்ணாத வடிவும் ஔதார்யமும் இருக்கிறபடி. [கோலச்செந்தாமரைக்கண்ணற்கு] - ஔர்ஜநீயமாய் வாத்ஸல்யத்தாலே சிவந்த விகாஸாதிகளை யுடைத்தான திருக்கண்களை யுடையவனுக்கு. "தாமரைத்தடம்கண் விழிகளின் அகவலைப்படுவான்" என்று கண்ணழகையாயிற்று அகப்படுத்திக்கொண்டது. விசேஷணந்தோறும் தனித்தனியே 'அவனுக்கு' என்று, தனித்தனியே அகப்பட்ட துறைகளைச் சொல்லுகிறாள். தன்மகன்போல் பட்ட காயபாணங்களை என்னுகிறாள்காணுக்காயார்! எலும்போல்காமழாநின்றுள்ள நறுநாற்றத்தையுடைய மயிர்முடியை யுடைய என்மகள். கொங்கு - பரிமளம். இவள் மயிர்முடி ஒன்றுக்கும் தோற்றுக் குனிநி நீருவன்னுமவன்கிடீர் இவளை அழித்தான்; பங்கயப்படைகொண்டு, தனிவீரஞ் செய்வாரை அழிக்குமாபோலே. [இழந்தது சங்கே] - இலளுக்குத்தோற்று அவன் இழக்கு மத்தை இவள் இழந்தாள். சங்கு - வளை.

ஈடு.—முதற்பாட்டு. இவள் ஸ்ரீவாமநபுராணத்தில் குணசேஷ்டிதங்களிலேயகப்பட்டு வளையிழந்தா ளென்கிறாள்.

[மாலுக்கு] - மின்னிடைமடவாரிலே, நீ எனக்கு வேண்டா வென்ன, நீஎனக்கு வேணுமென்று தடுமாறி நின்றநிலையைக் காட்டியாயிற்று இவளை இப்பாடு படுத்திற்று. ஸர்வேஶ்வரனை உத்கர்ஷந்தோற்ற நின்றானாகில் இப்பாடுபடாள்கிடீர்! (வ்யாமோஹத்தை யுடையவனுக்கு). [வையமளந்தமணாளற்கு] - உகவாதாரையுங்கூட விடமாட்டாத வ்யாமோஹம். "அழித்தா யுன்திருவடியால்" என்று இவளையும் தன்காற்கீழேயிட்டுக் கொண்டானிறே. அச்செயலுக்கு எழுதிக்கொடுத்தாள் இவளொருத்தியுமேயிறே; "மூவடி மண்கொண்டளந்த மன்னன்சரிதைக்கே மாலாகிப் போன்பயந்தேன்" என்கிறாள்: அவனிரந்து மண்பெற்றான், இவளுகந்து பொன்பெற்றாள். உகப்பாலே பெறுமது உரைபெற்றிருக்குமே. [மணாளன்] - ஸோத்தா. [நீலக்கருநிறமேகநியாயற்கு] - நெய்த்துக்கறுத்துநிறத்தை யுடைய மேகஸ்வபாவற்கு. நியாயம்-ஸமம், ஒப்பு. ப்ரயோஜந நிரபேக்ஷமாகக் கொடுக்கை

முதற்பாட்டு.—மாலுக்கு இத்யாதி. "வையமளந்தமணாளற்கு, இழந்தது சங்கு" என்கிற பதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - இவள் ஸ்ரீவாமந இத்யாதி.

"மாலுக்கு" - வ்யாமுக்தனுக்கு. அந்த வ்யாமோஹந்தான்எதென்ன - மின்னிடை இத்யாதி. வ்யதிரேகித்தஹாவம் - ஸர்வேஶ்வரனை இத்யாதி. "வையமளந்த" என்றதற்கு ஹாவம் - உகவாதாரையும் இத்யாதி வாக்யத்வயம். அதாவது - விமுகரான சேதநரையும் விடமாட்டாதே திருவுலகளந்தருளி யவர்களை ஸுலபராக்கிக்கொண்டாற்போலே, ப்ரணயகோபத்தாலே விமுகையான இவளையும் "அழித்தாயுன் திருவடியால்" என்று அந்த மறத்தை மாற்றித் தனக்குஸுலபமாக்கிக்கொண்டானென்றபடி. "மணாளற்கு" என்றதற்குஹாவம் - வ்யதிரேகியாகிற இத்யாதி. மணாளன் - நாயகன். அப்படி எழுதிக்கொடுத்திருப்பளோ? என்ன - மூவடி இத்யாதி. மறைபவிபக்ஷவிலே மூவடி மண் இரந்துகொண்டளந்த மன்னனுடைய செயலுக்கே வ்யாமுக்தையாய் விவர்ணையானேன் இத்யர்த்தம். திருமொழி ஒன்பதாம்பத்து நாலாந்திருமொழி இரண்டாம்பாட்டு, "முன்னங்குறளுருவாய்" இத்யாதி. இப்பாசுரத்துக்கு ரஸோக்தியாகபாவம்-அவ்வபிநிவேசம் இத்யாதி வாக்யத்வயத்தாலே. உரைபெற்றிருக்கையாவது, உரையென்ற - மாற்றாய், மாற்றேறி யிருக்குமென்றதல்; உவரையென்ற - கொண்டாட்டச்சொல்லாய், ஸௌஹார்தமுடையகொண்டாட்டத்தை யுடைத்தாயிருக்கும் என்றதல். "நியாயம்" என்ற ஸ்வபாவமாக அருளிச்செய்தது, அர்த்தாந்தரம் - நியாயம் ஸமம்ஒப்பு என்ற. ஸ்வபாவமான போது, மேகம்போன்ற ஔதார்யநிலையுடையவற்கென்றும், ஒப்பானபோது, மேகம்போன்றவடிவை யுடையவற்கென்றும் அர்த்தங்கண்டுகொள்வது. மேகஸ்வபாவமேதென்ன - ப்ரயோஜந இத்யாதி.

யும், கொடுக்கப்பெறாதபோது உடம்பு வெளுக்கையும். வ்யாமோஹமின்றியே யொழிந்தாலும் விடவொண்ணாத வடிவும் ஒளாஹார்யமுமிருக்கிறபடி. [நீலக்கருநிறமேகநியாயற்கு]- மஹாவலியைவடிவைக்காட்டி அபஹரித்தாற்போலேகாணும் இவளையும் வடிவைக்கர்ட்டி அபஹரித்தபடி. இவள் பிச்சேறுகைக்கிட்ட மை யிருக்கிறபடி. *மைப்படிமேனியிறே. [கோலச் செந்தாமரைக்கண்ணற்கு] - ஔர்ஜுநீயமாய், வாத்ஸல்யத்தாலே சிவந்து, விகாஸாதிகளையுடைத்தான திருக்கண்களையுடையவனுக்கு. "தாமரைத்தடங்கண்விழிகளின் அகவலைப்படுப்பான்" என்று கண்ணாலேயாயிற்று அகப்படுத்திக்கொண்டது. விசேஷணந்தோறும் அவனுக்குஎன்று தனித்தனியே யகப்பட்ட துறைகளைச் சொல்லுகிறாள். [மால்இத்யாதி]- தன்மகள்மேல்பட்ட அம்புகளையெண்ணுகிறாள்; இதோருகுத்து, இதோரு வெட்டு, இதோரம்பு என்று. [என்கோங்கலரேலக்குழலி] - மதுஸ்யந்தியாநின்றுள்ள பூவையுடைத்தாய், நறுநாற்றத்தையுடைத்தான குழலையுடைய என் பெண்பிள்ளை. கோங்கேன்பது - தேன். அலரேன்பது - பூ. ஏலம் - நறுநாற்றம். இவள் மயிர்முடியொன்றுக்குந் தோற்றுக் குறிழிருக்கிறாளவன்கிட்டச் இவளையழித்தான்! பங்களப்படைகொண்டு, தனிவீரம் செய்வாரை யழிக்குமாபோலே. [இழந்ததுசங்கே] - இவள் மயிர்முடிகண்டு அவனிழக்கக்கடவத்தை இவ ளிழந்தாள். சங்கு - வளை. (க)

நெய்த்து - பளபளத்து. "மாலுக்கு" என்ற பதத்திலேநோக்காக அர்த்தத்வயத்தையுங்கூட்டிபாவம் - வ்யாமோஹமின்றியே இத்யாதி. "வையமளந்தமணாளற்கு" என்றத்தோடே "நீலக்கருநிறம்" இத்யாதியைக்கூட்டிபாவம் - மஹாபலியை இத்யாதி. "நீலக்கருநிறம்" என்ற விசேஷணத்துக்குபாவம் - இவள்பிச்சேறுகைக்கு இத்யாதி. திருமேனி கறுத்திருக்குமோ? என்ன - மைப்படிமேனியிறே என்று. அஞ்சநத்தின்வடிவுபோலேயிருக்கிற திருமேனி இத்யர்த்தம். கண்ணைச்சொன்னதுக்குபாவம் - தாமரை இத்யாதி. ஓரிடத்திலே, "அவனுக்கு" என்னவமைந்திருக்க, ப்ரதிபதம் வஷட்டயத்தமாகச்சொன்னதுக்குபாவம் - விசேஷணந்தோறும் இத்யாதி. அதாவது - "மாலுக்கு" என்று தொடங்கி - வ்யாமோஹகுணத்திலும், சேஷ்டிதத்திலும், விக்ரஹத்திலும், கண்ணழகிலும் தனித்தனியே யகப்பட்ட துறைகளைச்சொல்லுகிறாளென்றபடி. "மாலுக்கு" என்றுதொடங்கி, "கோலச் செந்தாமரைக்கண்ணற்கு" என்னுமளவாக இவற்றைச்சரங்களாகருபிக்கிறார் - தன்மகள்மேல் இத்யாதி. ரீத்யந்தரேணரூபணம் - இதோருகுத்து இத்யாதி. அம்பென்றது - கண்ணை. இரண்டாலும் - குணசேஷ்டிதங்கள் ஈடுபடுத்தும் என்றபடி. கறுநாற்றம் - ஸுகந்தம். "மாலுக்கு" என்றுதொடங்கி - குணம், சேஷ்டிதம், வடிவழகு, அவயவஸௌந்தர்யம், என்ற அநேகத்தைச்சொல்லி; "ஏலக்குழலி" என்று - இவளுக்குஒன்றுசொன்னதுக்குபாவம் - இவள் மயிர்முடி. இத்யாதிவாக்யத்வயத்தாலே, பங்களப்படை - கூளப்படையான கூட்டுப்படை பங்களப்படையென்றது - "மாலுக்கு" இத்யாதியாற்சொன்னகுணாதிகளை. தனிவீரம்செய்வாரொன்றது - * கொங்கலரேலக்குழலியை. "தனிவீரம் செய்வாரைப் பங்களப்படைகொண்டு அழிக்குமாபோலே" என்று அந்வயிப்பது. "கொங்கலர்" இத்யாதி விசேஷணங்களுக்குபாவம் - இவள் மயிர்முடிகண்டு இத்யாதி. (க)

இரண்டாம் பாட்டு.

சங்குவில்வாள் தண்டு சக்கரக்கைமற்று
செங்கனிவாய்ச் செய்யதாமரைக்கண்ணற்கு
கொங்கலர் தண்ணந்துழாய் முடியானுக்குன்
மங்கைபிழந்தது மானமிறமே.

அ.—(சங்கு.) - அளந்தருளுகிறபோது வளர்ந்த ரதாங்க ஶங்க ஶார்ங்காதி திவ்யாயுதங்களை வந்தின வழகுக்கும், ஸ்வசரணாரவிந்த யுகளஸம்ஸ்பர்ஶோஜ்ஜீவிதமான ஸர்வாத்மாக்களையுங்கண்ட ஹர்ஷத்தாலே புதுக்கணித்த திருப்பவளத்துக்கும் திருக்கண்களுக்கும், த்ரைலோக்யவிக்ரமணபாஸுரிதஸ்வரூபமாபநோதநார்த்தமாக *அயர்வறுமமரர்கள் அதிபரிமளதுலஸீமாலைகளைக்கொண்டு ஓட்டித்தருளின அழகுக்கும்தோற்று, என்மங்கை மானமை நிறமிழந்தா ளென்கிறாள்.

ஒ.—இரண்டாம் பாட்டில், திருவுலகளந்தருளின எம்பெருமானுடைய ஸ்ரீபஞ்சாயுத யாரணத்தாலேவந்த அழகிலே அகப்பட்டு என்மகள் தன்னுடைய அழகிய நிறத்தை இழந்தாள் என்கிறாள் [சங்கென்று தொடங்கி] - திருப்பவளத்தில் அழகும் திருக்கண்களில் அழகும்போலே தகுதியான ஸ்ரீபஞ்சாயுதங்களைத் திருக்கையிலே யரித்த அழகையுடையவனுக்கு. இவை ஸர்வாயுதங்களுக்கும் உபலக்ஷணம். [கொங்கலர்] - பரிமளம்மிகுகை.

ப.—அநந்தரம், ஸௌந்தர்யமான ஆயுதாதிகளையுடையவனுக்குத் தன் நிறத்தையிழந்தாளென்கிறாள்.

சங்கு வில் வாள் தண்டு சக்கரம் - ஸ்வாபிமாநாநுரூபமாய் உத்பிந்நமாய்த் தோன்றின ஸ்ரீபஞ்சாயுதத்தையுடைய, கைமற்று - திருக்கையையுடையனாய், (தாத்காலிகபோக்தாக்களுக்கு அநுபாவ்யமாய்), செம் - சிவந்த, கனி - கனிபோலேயிருக்கிற, வாய்-திருவதரத்தையும், செய்ய - சிவந்த, தாமரை - தாமரைபோலும், கண்ணற்கு - கண்ணையுமுடையனாய், கொங்கு அலர் - பரிமளவிகாஸியாய், தண் - ஸ்வாமஹரமாய், அம் - தர்ஶநீயமான, துழாய் - திருத்துழாயாலே யலங்க்ருதமான, முடியானுக்கு - திருமுடியையுடையனானவனுக்கு, என்மங்கை- அவன்ஈடுபடும் பருவத்தையுடைய என்பெண்பிள்ளை, இழந்தது - இழந்தது, மானமிறம் - பெண்மைக்கு அஸாதாரணமான மாமைநிறத்தை. கொங்கு - தேனுதல், பரிமளமாதல்.

இ.—இரண்டாம் பாட்டில், திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதங்களின் அழகிலே அகப்பட்டுத் தன்னுடைய அழகியநிறத்தை இழந்தாள் என்கிறாள்.

[சங்குவில்வாள் இத்யாதி] - ஸ்ரீபஞ்சாயுதங்களின் சேர்த்தியழகிலேயாயிற்று இவள் ஈடுபட்டது. இவளுடைய நிறங்கொள்ளுமைக்கு வந்தனை ஆஸ்மணாலேஸுஸ்மிதமும் நோக்கும்போலே ஆயுதச்சேர்த்தியும் தகுதியாய் இருக்கிறபடி. [கொங்கலர்] - பரிமளம் ப்ரஸரிக்கிற குளிர்ந்த திருத்துழாய் வளையத்தை யுடையவனுக்கு. ஆஸரணம்! அவயவங்கள்! ஓப்பனை! வந்தனை செயல்களினால், இவள் நிறங்கொள்ளு

கைக்கு ? [என்மங்கை] - தன்பருவத்தாலே இவற்றையடங்கத் தோற்பிக்குமவள் கிடீர். மாமை என்றும், நிறம் என்றும் - பர்யாயம் ; இவ்விடத்தில் நிறம்என்றது அழகாய், நிறத்தில் அழகை இழந்தாள்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதாதிகளில் அழகிலேயகப்பட்டுத் தன்னுடைய அழகிய நிறத்தை யிழந்தா ளென்கிறாள்.

[சங்குஇத்யாதி] - ஸ்ரீ பஞ்சாயுதங்களின் சேர்த்தியழகிலேயாயிற்று இவள் ஈடுபட்டது. இவளுடைய ஓராபரணம் வாங்குகைக்கு எத்தனையாபரணம் பூண்டு காட்டினான் ? கைக்குமேல்ஐந்துங்காட்டிக்காணும் இவளுடையஆபரணம் வாங்கிற்று. ஆபரண கோடியிலும் ஆயுதகோடியிலும்இருபுடைமெய்க்காட்டிறே இவைதாம்! [சேங்கனிவாய்ச் செய்யதாமரைக் கண்ணற்கு] - கையிலே யொன்றைஎரித்துக்காட்டி ஆகர்ஷிக்கவேண்டி யிருந்ததோ? ஸ்மிதமும் நோக்குமமையாதோ நலிகைக்கு? [கோங்கலரித்யாதி] - முயலு ஸ்யந்தியான திருத்துழாய்மாலையை, ஆதிராஜ்யசூசகமான திருவபிஷேகத்திலே யுடைய வலுக்கு. வைத்த வளையத்தைக் காட்டிக்காணும் இவள்நிறத்தை யபகரித்தது. ஆபரண சோபை அவயவசோபை ஒப்பனையழகு, எத்தனை செய்யவேணும் இவள்நிறங் கொள்ளுகைக்கு. [என்மங்கை] - தன்பருவத்தாலே இவற்றையடைய்த் தோற்பிக்குமவள் கிடீர் நிறமிழந்தாள் ! மாமைநிறம் - அழகியநிறம். மாமை - அழகு. அழகிய நிறத்தை யிழந்தாள்.

(உ)

மூன்றாம் பாட்டு.

நிறங்கரியானுக்கு நீலகுண்டை
நிறங்கிளர்வாய்ச் சிறுத்தகள்வைவைக்க
கறங்கியசக்கரக் கையவனுக்குன்
பிறங்கிருங்கூந்தல் இழந்ததுபீடே.

அ.—(நிறங்கரியானுக்கு.)-ஸர்வலோகங்களையும் அமுதுசெய்தருளின சுவடு காணலாயிருந்த திருப்பவளத்தில் அழகுக்கும், ஸகலஜந மநோஹரமாயுள்ள அந்தச் சிறிய வடிவு தனக்கும், திருவடிவிலுடைய நீலவரம்போலே யிருந்த நிறத்துக்கும்,

---

இரண்டாம்பாட்டு.—கங்கு இத்யாதி. மேலிரண்பாட்டுக்கள்தோறும் ஸ்ரீராமாவதாரங்கள் சொல்லுகையாலே, ததநுகுணமாக இப்பாட்டையும் - கீழிற்பாட்டில் அவதாரத்தோடேசேர்த்து, "சங்கு வில்வான்" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - திருவுலகு இத்யாதி.

மெலிதம் - இவளுடைய இத்யாதி. ஓராபரணமென்றது - * பாலைநிறத்தை. சாடு - கைக்கு மேல் இத்யாதி. கைக்குமேல்ஐந்துங்காட்டியென்றதுக்கு - திருக்கைகளிலிருக்கிற பஞ்சாயுதங்களைக் காட்டியென்று ஸ்வபாவார்த்தம்; குறுகிறியாகிறவளாவிலே அஞ்சுக்கு இலக்காயொருபருக்கையிருந்தால், "கைமேலையஞ்சுபோட்டுவெட்டுகிறான்" என்றாற்போலே. அப்படியேபோகட்டு அத்தைவாங்குகை யென்று சாடுவுக்கு அர்த்தம். இவற்றுக்கு ஆயுதத்வயவியாபியான ஆபரணத்வமுண்டோ? என்ன - ஆபரண கோடியிலும் இத்யாதி. இருபுடைமெய்க்காட்டி - உபயகோடியையும். உபயகோடியிலும் ஆக்காட்டுகையென்று ஸம்தாரார்த்தம். அலருமை - ப்ரவணிக்கை. "சங்கு வில்வான்" என்றதொடக்கி மூன்றுக்கும் பேஷகயாக பூர்வகமாகபாவம் - ஆபரணகோடியை இத்யாதி.

(உ)

---

* கள்வனவற்கு' என்று வழங்குவர்.

ப்ரணத பரித்ராண தத்விரோதிநிரஸநங்களிலே எப்போதும் ஸத்வரமான திருவாழியை வந்தின திருக்கையினழகுக்குத் தோற்று, நீலரத்நங்களுடைய ஒளிகள் திரண்டாற் போலே விளங்குகிற திருக்குழலையுடையவளான என்பெண்பிள்ளை, தன்பெருமையை யிழந்தாளென்கிறாள்.

ஓ.—மூன்றாம்பாட்டில், ஆலிலையிலே கண்வளர்ந்தருளினவனுடைய ஸௌந்தர்யாதிகளிலே அகப்பட்டு, என்பெண்பிள்ளை தன்னுடைய பெருமையை இழந்தாள் என்கிறாள் [நீடுலகுண்டதிறம்கிளர்வாய்ச் சிறுக்கள்வரவர்க்குன்றுதொடங்கி] - இம்மஹாலோகத்தையெல்லாம் திருவயிற்றிலே வைத்துக்கொண்டமை தெரியும்படியான திருப்பவளத்தையுமுடையனாய் தான்சிறுத்து ஒருவர்க்கும் பரிச்சேதிக்கவொண்ணாத அத்யாஶ்சர்ய சேஷ்டிதங்களை யுடையவனுக்கு. ப்ரதிபக்ஷத்தை மாய்க்கையில் உண்டான த்வரையாலே எப்போதும் சுழன்றுவாராநின்றுள்ள திருவாழியைத் திருக்கையிலே உடையனானக்ருஷ்ணனுக்கு. [என் பிறங்கிருங்கூந்தல்] - வளர்ந்து பெருத்து இருந்துள்ள கூந்தலையுடைய என்பெண்பிள்ளை.

ப.—அநந்தரம், வடதளமாயிரத்வயமுக மகிஷப்ரகாரத்தை யுடையவனுக்குத் தன் பெருமையை யிழந்தாளென்கிறாள்.

(வடதளத்திலே கண்வளருங்போது), நிறம்கரியானுக்கு - ஶ்யாமளவர்ணவடிவையுடையனாய், நீடுலகு - மஹாலோகங்களை, உண்ட - அமுதுசெய்த, திறம் - ப்ரகாரம், கிளர் - தோற்றுகிற, வாய் - திருப்பவளத்தை யுடையனாய்க்கொண்டு, சிறு - சிறுவடிவிலே, கள்வரவர்க்கு - பெரியலோகத்தை மறைத்து வைத்தவனாய், (இப்படி ப்ரளயாபத்தில் ரக்ஷித்தாற்போலே ப்ரளயங்கழிந்து வெளிநாடு கண்டவளவிலும்), கறங்கிய - (ஜகத்விரோதிகளை யழிக்கையிலுண்டான உத்யோகத்தாலே) சுழன்றுவருகிற, சக்கரம் - திருவாழியையுடைய, கையவனுக்கு - கையை யுடையவனுக்கு, என் பிறங்கு இருங்கூந்தல் - வளர்ந்து கறுத்த மயிர்முடியை† யுடைய என் பெண்பிள்ளை, இழந்தது - பீடு - பெருமை. பீடென்று - பெருமையாய், மறுப்பைச் சொல்லுகிறது.

இ.—மூன்றாம்பாட்டில், வடதளமாயிபடிகளிலே அகப்பட்டுத் தன்பெருமையை யிழந்தாள் என்கிறாள்.

[நிறங்கரியானுக்கு] - ஶ்யாமஹாரவடிவிலேயாயிற்று இவள் தோற்றது. "நீலக்கருநிறமேக நியாயத்து" என்ன வேண்டாவாயிற்று, நிறத்துக்கு ஒப்பாகவிட்டாமையாலே. [நீடுலகு] - பரப்பையுடைத்தான பூமியைத் திருவயிற்றிலேவைத்த ப்ரகாரத்தைக் கோட்சொல்லாநின்ற திருவுதரத்தையுடைய. "வையமேழுங்கண்டாய் பிள்ளையாயுளே" என்னக்கடவதிறே. ரக்ஷகத்வ ப்ரகாரமாகமான திருவுதரம். [சிறுக்கள்வரவர்க்கு] - சிறியவடிவிலே பெரிய லோகங்களைவைத்து, ஒருவர்க்கும் பரிச்சேதிக்கவொண்ணாத சேஷ்டிதத்தை யுடையவனுக்கு. வடிவுக்குச்சேராத சேஷ்டிதம், சேஷ்டிதத்துக்குச் சேராதவடிவு. தன்னுடைய ரக்ஷகத்வத்தையும் அவ்வடிவுதவடநாஸாமர்த்யத்தையும் காட்டியாயிற்று, இவளை அகப்படுத்திற்று. விரோயிநிரஸந த்வரையாலே சுழன்றுவாராநின்ற திருவாழியைக் கையிலேயுடையவனுக்கு. வடிவழகும் ரக்ஷகத்வமுமன்றியே ரக்ஷணத்தில் உத்யுக்தபரிகரத்தை யுடையவன் என்கை. [என்பிறங்கிருங்கூந்தல்] - சுற்றுடைத்தாயொழுகு நீண்ட மயிர்முடியை யுடையவள். பிறங்கு

† 'ப்ரகாசமாய்ப் பெருமைபொருந்திய கூந்தலையுடைய' என்றுபாடாந்தரம்.

என்று பெருமை; இருமைஎன்றும் பெருமை; சுற்றுடைமையிலும், ஒழுகுநீட்சியிலு மாய் இருக்கிறது. கூந்தல் - மயிர்முடி. எதிர்த்தலையைத்தோற்பிக்கும் கூந்தலை உடை யவள்கிறார் தன் பெருமையை இழந்தாள்! "யஸ்ய ஸுவாஜநகா-ந்ஜா-ஸுவுயேயம் ஹித ஜெ" என்று அவனுக்கும் வற்றத்தைக்கொடுக்கும் பெருமையைக் கிறார் இவள் இழந்தது! பீடு - பெருமை.

ஈடு.—மூன்றாம்பாட்டு. வடதளசாயிபடிகளிலே அகப்பட்டு இவள் தன் பெருமையை யிழந்தாளென்கிறாள்.

[நிறங்கரியானுக்கு] - "இழந்ததுமானமிறம்" என்றாள்; அந்நிறமும் அவன் பக்கலிலே கிடக்கையாலே இரட்டித்துக் காட்டிற்று வடிவு. தன்னிறத்துக்குமேலே ஒருநிறம் உண்டாயிற்று. "நீலக்கருநிறமேகநியாயற்கு" என்னவேண்டாவாயிற்று; நிறத் துக்குஒப்பாகமாட்டாமையாலே. நெய்த்துக்குளிர்ந்து ஸ்ரமஹரமான வடிவு தன்னையே சொல்லுகிறாள். [நீடுலகுஇத்யாதி]-பரப்பையுடைத்தான பூமியைத் திருவயிற்றிலே வைத்த ப்ரகாரத்தைக் கோட்சொல்லாநின்ற திருவதரத்தையுடைய. கிளருகை - சொல்லுகை: "வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுளே" என்னக்கடவதிறே. ரக்ஷகத்வப்ரகாசகமான திருவதரம். [சிறுக்கள்வரவர்க்கு] - சிறுவயிற்றிலே பெரியலோகங்களை வைத்து,பரிச்சேதிக்க வொண்ணாத சேஷ்டிதத்தை யுடையவனுக்கு. [நீடுலகுண்டதிறங் கிளர்வாய்] - வேறொரு வர்வாயால் கேட்கவேண்டாதே, இவன் வாயாலே சொல்லக் கேட்கலானபடி. [சிறுக்கள் வரவர்க்கு] - வடிவில் சிறுமையும், ரக்ஷகத்வத்தில் பாரிப்புமிருக்கிறபடி. தன்னுடைய ரக்ஷகத்வத்தையும் அவ்விடுதலையடைந்தாலாமர்த்யத்தையுங் காட்டியாயிற்று, இவளாயகப்படுத் திற்று. [கறங்கியசக்கரக்கையவனுக்கு] - கறங்குகை-சுழலுகை: விரோதிநிரஸநத்வரை யாலே எப்போதும் சுழலாநின்றுள்ள திருவாழியைத் திருக்கையிலே யுடையவனுக்கு: தான் ரக்ஷகனானவளவன்றியே, பரிகரமும் ரக்ஷணத்திலே உத்யுக்தமாயிருக்கிறபடி. அவன் கைப் பிடித்தார் எல்லாரும் ரக்ஷணத்வரையுடையராயிறே யிருப்பது. ஸ்ரீ பாஞ்சஜந்யாழ்

மூன்றாம்பாட்டு.—நிறம் இத்யாதி. "நீடுலகுண்ட" என்றதனைக் கடாக்ஷித்தவதாரிகை - வடதள இத்யாதி. "நிறங்கரியானுக்கு" என்றதுக்குபாவம் - இழந்தது இத்யாதி. அதாவது, கீழே "நீலக் கருநிறமேகநியாயற்கு" என்ற - மேகத்தை ஒப்பாகச்சொல்லிப்பார்த்தால். அதுஒப்பாகமாட்டாமை யாலே மேகத்தைவிட்டு, "நிறங்கரியான்" என்ற - "நீலக்கருநிறம்" என்றதனையே சொல்லுகிறா ளென்றபடி. இரட்டித்துக்காட்டுகையாலே ஒப்பில்லையென்றபடி. விவரணம் - தன்னிறத்துக்கு இத்யாதி. இதுக்கு நியாமகமேதென்ன - நீலக்கருநிறம் இத்யாதி. அதுக்கு ஹேதுவேதென்ன - நிறத்துக்கு இத்யாதி. தாத்பர்யவிவரணம் - நெய்த்து இத்யாதி. திருவதரத்தாலே - திருவாயைச் சொல்லுகிறது. அப்படி கோட்சொல்லுமோ? என்ன - வையமேழும் இத்யாதி. இத்தால்பலிதம் - ரக்ஷகத்வ இத்யாதி: சிறியவனாயிருக்கச்செய்தே கள்ளவிதன்ன; - பாலனாயிருக்கச்செய்தே அபரிச் சிந்நமான அதிமாநுஷசேஷ்டிதங்களை யுடையனாகை யென்கிறார்-சிறுவயிற்றிலே இத்யாதி. ரஸோக்தி- வேறொருவர் இத்யாதி. பலிதமாதல், தாத்பர்யமாந்தரமாதல் - வடிவில் இத்யாதி. ரக்ஷகத்வத்தில் பாரிப்பென்றது - "நீடுலகுண்ட" என்றதைப்பற்ற. "கறங்கிய" என்கிறவிசேஷணத்துக்குபாவம்- நான்காவதுகுணன் இத்யாதி. அல்லாதாரால்ஒருவனுக்குண்டான வ்யாவ்ருத்தியை யருளிச்செய்கிறார் - அவன் கைப்பிடித்தார் இத்யாதி. அதாவது - அல்லாதார் ஒருவனுக்கு ஒன்றைக் கொடுக்கப்புக்கால் பரிகரங்கள் விக்கம்பண்ணுவர்களிறே: இவனுக்கு அப்படியில்லை யென்றபடி; இதுவும், ஸ்ரீ பாஞ்சஜந்யாழ் வானுக்கு ரக்ஷணத்வரை காணுமோ என்ன - ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானும் இத்யாதி. முந்தினவர்த்

வானும், "ஒருவினையுண்டாகவற்றே, நாம் வாய்க்கரையிலேயிருந்து ஓசையைவிளைத்து வினைதீர்க்க!" என்று ப்ரார்த்தியாநிற்கும். [என்பிறங்கிருங்கூந்தல்] - சுற்றுடைத்தாய்ஒழுகு கீண்ட மயிர்முடியையுடையவள். மிகவும் பெரிய குழலையுடையவளென்றுமாம். இருமை-பெருமை. இங்குப் பெருமையாவது - நீட்சி. பிறங்குதல் - மிகுதி. கூந்தலென்கிறது-மயிர். "ஐம்பால் கூந்தல் குழல்" என்றிவை பர்யாயம். எதிர்த்தலையைத் தோற்பிக்கும் குழலையுடையவள்கிடீர் தன்பெருமைவிழந்தாள். பீடு - பெருமை "யஸ்ய ஸாஜ்ஞகாத்மஜா-ஸ்ஹ்ரஸெயம்ஹிதத்தேஜ:" (யஸ்யஸாஜ்ஞகாத்மஜா - அப்ரமேயம்ஹிதத்தேஜ:) என்று அவனுக்கும் பெருமையைக் கொடுக்கும் பெருமையைக்கிடீர் இவளிழந்தது. (ங)

நான்காம் பாட்டு.

பீடுடைநான் முகனைப் படைத்தானைக்கு
மாடுடையையம் புளந்தாமரைவற்கு
நாடுடைமன்னர்க்குத் † தூதுசெல்லம்பிக்குவன்
பாடுடையல்குல் இழந்ததுபண்பே.

அ.—(பீடுடை.)-நிகிலஜகத்ஸ்ருஷ்டிகுசலனாய் ஸ்ருஷ்டிக்கு முன்னாகவே ஸ்ருஷ்டிக்கு ஸாதக பூத கரணகளேபமாக் யுபகரண நிர்மாணாநுகுண ஜ்ஞாந சக்தியுக்த சதுர்முக ஸ்ருஷ்டிகேஹ ஹேது பூத காருண்யத்துக்கும், குணவிகுணவிபாகநிர்ணயிக்கே ஸர்வாந்தராத்மாக்களும் தன்கிருபையினாலே ஸம்ஸ்பர்சித்து நின்ற நின்றவிடங்களிலே கண்டு ரக்ஷணம்பண்ணி இந்தலீலைகளுக்கு அனந்தருளினை ஸௌஶீல்யகுணத்துக்கும், ஸர்வப்ரகார ஸமாஶ்ரிதரான பாண்டவர்கள் ஸார்வபௌமராம்படி அவர்களுக்கு ஔத்யோக்யபர்வாதி தூதுதேவை தன்கிருபைமாயிருக்கிற ஆஶ்ரிதவாத்ஸல்யத்துக்குக் கோதாற்று, என்பாடுடையல்குல் தன் சீர்மையை யிழந்தாளென்கிறாள்.

ஒ.— காலாம்பாட்டில், சதுர்முகனைக்கு ஸ்ரஷ்டாவாய் வைத்து தன் ஔன்னத்யமாராகிற ஆஶ்ரிதகாமிதங்களைச் செய்தருளும் மஹாமஹத்வத்தை யுடையவனுக்கு, என் பெண்மையினாலே தன்னையடைய நினைக்கிற இந்த்ரன் [மாரி பொழிந்து] - வஸுமதியாகிற வஸுமதியை இந்த்ரன் இழந்தான் என்று பார்த்து, அவனைக்கு

ப்ர — ஸ்ரீமணவாளனை (ங.எ) சாரீரம், "யஸ்ய ஸெயம்ஹிதத்தேஜ:யவ்வ ஸாஜ்ஞகாத்மஜா । நஸ்வம்ஸஶ்ரீ-ஸ்ஸாம்ஹ்ரதுஸ்ஸராஶோவாஹ்ரயாம்வஸெநாகத:॥"

தத்தில், பிறங்குதல் - சுற்றுடையை; சுற்றுடைமையாவது - உருட்சி; இருமை - ஒழுகுநீட்சி. த்ரௌபதீ யார்த்தத்துக்கு, பிறங்குதல் - மிகுதி; இருமை - பெருமை. "கூந்தல் - மயிர்" என்றதுக்கு திவ்யஸூரி - ஐம்பால் இத்யாதி. குழலை வர்ணித்ததுக்குபாவம்-எதிர்த்தலையை இத்யாதி. சதுரபாடி - யஸ்ய இத்யாதி.

---

† தூதுசெல்லம்பிக்கு என்ற பள்ளிராயிரப்படியின் பாடம்.

வாங்கிக் கொடுத்தருளுகைக்காகப் பண்ணின க்ருத்ரிமசேஷ்டிதத்தாலே தன்னை அகப்படுத்தினவனுக்கு. [நாடென்று தொடங்கி] - நாடுடைய ராஜாக்களான பாண்டவர்களுக்கு தூதக்ருத்யம்பண்ணி அத்தாலே பரிபூர்ணனானவனுக்கு. இடமுடைத்தான கடிப்ரதேசத்தை யுடைய என் பெண்பிள்ளை.

ப — அநந்தரம், ஸ்ரஷ்ட்ருத்வாதிகளான ஸர்வப்ரகாரோபகாரகத்வத்தை யுடையவனுக்குத் தன்னுடைய அஸாதாரணஸ்வபாவத்தை யிழந்தாளென்கிறாள்.

பீடு - ஸ்ரஷ்ட்ருத்வாதிரூபமான ஜ்ஞாநாதிகுண வைபவத்தை, உடை - உடைய, நான்முகனை - சதுர்முகனை, படைத்தானுக்கு - ஸ்ருஷ்டித்தவனாய், மாடுடை - வகமுடியான, வையம் - பூமியை, அளந்த - அளந்த அவதாரத்தாலே, மணாளற்கு - தன்னை யநந்யார்ஹையாக்கும் போக்தாவாய், நாடு-நாட்டுக்கு, உடை-கடவ, மன்னர்க்கு-ராஜாக்களான பாண்டவர்களுக்கு, தூது - தூதக்ருத்யத்தை, செய் - அநுஷ்டித்து, நம்பிக்கு-அத்தாலே பரிபூர்ணனானவனுக்கு, என் பாடெடை அல்குல் - விஸ்தாரத்தை யுடைத்தான அல்குலையுடைய என் பெண்பிள்ளை, இழந்தது-, பண்பு - தன்னஸாதாரணஸ்வபாவம். மாடு - தநம், பாடு - பாக்யம், பண்பு - ஸ்வபாவம்.

இ.—நாலாம்பாட்டில், சதுர்முகஸ்ரஷ்டாவான பெருமையைப் பாராதே ஆஶ்ரிதார்த்தமான மஹாகுணத்தை யுடையவனுக்கு இவள் தன்கீர்மையை இழந்தாள் என்கிறாள். [பீடுடை இத்யாதி] - சதுர்தச புவநத்தையும் ஸ்ருஷ்டிக்கவல்ல பெருமையையுடைய சதுர்முகனை ஸ்ருஷ்டித்தவனுக்கு. மாடென்று - நம், வஸுமதியான பூமி என்றுகள் ; மாடென்று இடமாய், பரப்பையுடைத்தான பூமியென்றுகள். திருவுகளைத்தருவின க்ருத்ரிமசேஷ்டிதத்தாலே தன்னை அநந்யார்ஹையாக்கினவனுக்கு. நாடுடைய ராஜாக்களான பாண்டவர்களுக்கு தூதக்ருத்யத்தைப் பண்ணி, அத்தாலே பூர்ணனானவனுக்கு. [நாடுடை] - நாடுடையார் வேறே சிலராக்கி, அவர்களுக்கு ஏவலாளாய்த்திரியும். [நம்பிக்கு] - "இன்னார்தாதன் வரக்கிடக்கிறான்" என்று அச்செயலாலே இட்டசட்டை பிறழாமலாய் இருக்கை. அடியிலே ஐகத்தை யுண்டாக்கி, அபரோக்ஷித்தார் உண்டாகில் எல்லைகட்டி மீட்டுக்கொண்டு, அத்தை அஶ்ரிதர்க்கு ஆக்குகைக்கு இழிதொழில்செய்து, அந்நீர்மையைக்காட்டி இவள் நீர்மையை அபஹரித்தான். [என்பாடெடையல்குல்] - இடமுடைத்தான கடிப்ரதேசத்தை உடையவள். பாடு-இடம். "வோஸ்யவரீரஸ்யாயாம்" என்று மைதிலீபக்ஷமாகவும் அபிநிவேசம் வடிவழகு. அவளை வோஸ்யாம் ஹ்ருதயவிதிகாவஸ்தாபிதியாய் இருக்கிறாள்போலே. பண்பு - நீர்மை.

ஈடு.—நாலாம்பாட்டு. சதுர்முக ஸ்ரஷ்டாவானமேன்மையைப் பாராதே ஆஶ்ரிதார்த்தமான மஹாகுணத்தை யுடையவனுக்கு இவள் நீர்மையை யிழந்தாளென்கிறாள்.

[பீடுடையித்யாதி] - சதுர்த்தச புவநத்தையும் ஸ்ருஷ்டிக்கவல்ல பெருமையை யுடைய சதுர்முகனை ஸ்ருஷ்டித்தவனுக்கு. பீடு - பெருமை. [மாடுஇத்யாதி] - மாடு -

---

நாலாம்பாட்டு.—பீடுடை இத்யாதி. "பீடுடைநான்முகன்" இத்யாதிகளைக்கடாக்ஷித்தவதாரிகை - சதுர்முக இத்யாதி.

சதுர்முகனுக்குப் பீடேதென்ன - சதுர்த்தச இத்யாதி. "மணாளற்கு" என்றதுக்கர்த்தம் - அநந்யார்ஹமாக்கினவற்கு என்றது. நாடுடைமன்னர் துர்யோதநாதிகளாயிருக்க, இவர்களை "நாடுடை

தநம். வசுமதியான பூமியென்னுதல்; மாடென்று - இடமுடனடையாய், பரப்பையுடைய பூமியென்னுதல். திருவுலகளந்தருளின க்ருத்ரிமவேஷ்டிதத்தாலே தன்னை யநந்யார்ஹமாக்கினவற்கு. [நாடுஇத்யாதி] - நாடுடைய ராஜாக்களான பாண்டவர்களுக்குத் தூதுபோய் அத்தாலே பூர்ணனானவனுக்கு. லாகவதபிப்ராயத்தாலே, அவர்களை நாடுடைமன்னரென்கிறார்காணும், "இருக்கைக்குஒரு குறிச்சியுங்கொடோம்" என்று ராஜ்யம் பண்ணுகிறார்கள் துர்யோதநாதிகளாயிருக்க: "ஸலிலநிலவுவலுஜாயாடு" (அபிஷிச்யச லங்காயாம்) இத்யாதிவத். [நம்பிக்கு] - *இன்னோர்தூதன் என நின்ற சேயவாலே இட்டசட்டை பீறப்படியிருக்கை. அடியிலே ஜகத்ததுண்டாக்கி, அபஹரித்தாருண்டாகில் எல்லைகடந்து மீட்டுக்கொண்டு, அத்தை ஆஸ்ரிதர்க்கு ஆக்குகைக்கு இழிதொழில்செய்த இந்நீர்மையையுங்காட்டி இவள் நீர்மையை யபஹரித்தான். [என்பாடுடையல்குல்] - இடமுடைத்தான நிதம்ப ப்ரதேசத்தையுடையவள். பாடு - இடம். "வாஜ்ரவம்ஶ நவஸாயயாடு" (பும்பாவம்மநஸாயயுடு) ஸஜாதீயரையழிக்கும் வழிவழகு. அவன் *பும்ஸாம்த்ருஷ்டி சித்தாபஹாரியானாற்போலே. பண்பு-நீர்மை.

(ச)

ஐந்தாம் பாட்டு.

பண்புடைவேதம் பயந்தபரனுக்கு
மண்புடைவையம் இடந்தவராகற்கு
தெண்புனற்பள்ளி எம்தேவபிரானுக்குஎன்
கண்பனைகோகை திழிந்தகடற்றே.

அ.—(பண்புடை.)-நன்னடையுடைய ஸ்வாத்யாயங்களை ப்ரதிபாதகமாகையாலே தன்னிலுஞ்சீரியதான வேதங்களை ப்ரஹ்மாதிகளுக்குக் கொடுத்த பரமபுருஷனை

ப்ர.—[பீடுடைஇத்யாதி]—[நாடுடையவர்க்கு]—ஸ்ரீ ஸஹஸ்ரநாமம், "ஸுஹிஷிஷ்ய ஸுஹ்ருதாம் ராக்ஷஸாநாம் விதீஷணே । கூ கூ கூ ஸுஹ்ருதாம் ராஜா விஜயஸ்ரீ-ஸோஜயாமயம்" மன்னர்" என்கிறதென்? என்ன - பாகவதபிப்ராயத்தாலே இத்யாதி. குறிச்சி - குப்பம். ஆஸ்ரிதகார்யம் செய்ததாலே பூர்ணனாயிருக்குமோ? என்ன - அபிஷேக இத்யாதி. "கூ கூ கூ" என்றதிலேகோக்கு. "தூதுசெல்" என்றவிவக்தாம், "கர்மி" என்றதுக்குப்பாவம் - இன்னோர் இத்யாதி. இன்னாருடைய தூதனென்னும்படிநின்றஇத்யர்த்தம். "பீடுடை" இத்யாதி பதத்ரயத்துக்கும்பாவம் - அடியிலே இத்யாதி. அல்குலைக்கொண்டாடுகிறதுக்கு பாவம் - ப்ரியாவம் இத்யாதி. ஸஜாதீயரையழிக்கக்கூடுமோ? என்ன - அவன் இத்யாதி "வாஜ்ரவம்ஶ நவஸாயயாடு" இதி பதாபாரமே. பண்பு-நீர்மை. அஸாதாரணஸ்வபாவ இத்யர்த்தம்.

(ச)

த்துக்கும், பூமிப்பிராட்டியை எடுத்துக்குளி அவளோடேஸம்ஶ்லேஷித்துக்குளின ஸ்ரீ வராஹமான திருவடிவில் அழகுக்கும், திருநாட்டிலே எழுந்தருளியிருக்கிற இருப்பைக் கண்டு அநுபவிக்கிற * அயர்வறும்மமரர்களையுங்கூடத் தோற்பித்து அடிமையாக்கவல்ல திருப்பாற்கடலிலேபிராட்டியோடேகூடக் கண்வளர்ந்தருளுகிற அழகுக்குந் தோற்று, கர்ஶநீயமான திருக்குழலையுடைய என்பெண்பிள்ளை, தன்னையடைய கற்பிழந்தாளென்கிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், வேதப்ரதாநாத்யுபகாரங்களைப் பண்ணினவனுக்கு என்மகள் கற்பிழந்தாள் என்கிறாள்

[பண்பொன்று தொடங்கி.] - தன்னை ப்ரதிபாதிக்கவற்றான வேதத்தை ப்ரஹ்மாவுக்காக ஆவிர்ப்பிரதுஞ்செய்ந்த எல்லாரிலும் பரனாய் மண்மிக்க ப்ருத்விவியைஇடந்த ஸ்ரீவராஹமானவனுக்கு. மண்மிகுதி சொல்லிற்று, எடுக்கையில் அநுபவத்தோற்றுகைக்காக. [தெண்புனல் என்று தொடங்கி] - கண்வளர்ந்தருளுமிடமாகக்கு ஈடாம்படி ஸ்வச்சமான நீர்வெள்ளத்தையுடைத்தான எகார்ணவத்திலே கண்வளர்ந்தருளாநின்று ப்ரஹ்மாதி தேவர்களுக்கும் ஸ்ருஷ்ட்யாத்யுபயோகனானவனுக்கு, கண்டாருடைய கண்களைப்பிணிக்கவல்ல அழகையுடைய என்பெண்பிள்ளை தன்னையடைய கற்பிழந்தாள்.

ப.—அநந்தரம், வேதப்ரதாநாதியான ரக்ஷணப்ரகாரத்தையுடையவனுக்குக் கற்பிழந்தாளென்கிறாள்.

பண்பு - பகவத்ஸ்வரூபாதிகளை யதாவத்ப்ரகாசிப்பிக்கும் ஸ்வபாவத்தை, உடை-உடையவனாய், தேவநம்-வேதத்தை, பயந்த - ப்ரஹ்மாதிகளுக்கு உண்டாக்கிக்கொடுப்பானாய், பரனுக்கு - சர்வப்ரகாரத்தாலுமுள்ளவனாய், மண்-மண்ணின், புவை - மிருதுத்வத்தையுடைய, வையம் - பூமியை, இடந்த - இடந்தெடுத்த, வராகற்கு - வராஹரூபத்தையுடையனாய், தெண்-தெளிந்த, புனல் - புனலையுடைத்தான எகார்ணவத்திலே, பள்ளி-ஜகத்காரணசிந்தையுண்ணிக்கிடப்பானாய், (அந்த ஜகத்காரணசிந்தையாலே), எம் - எம்பெருமான், தேவர் - ப்ரஹ்மாதிகளான தேவர்களுக்கு, பிரானுக்கு - உபகாரகனானவனுக்கு, என்கண்புனைதோளைத - என்கண்களைப் புனைந்துகொள்ளுந் தகுதியையுடைய என்பெண்பிள்ளை, இழந்தாள், கற்பு-தன்னறிவுடையாள். கற்பு-அறிவுடையாள்.

இ.—அநந்தரம், வேதப்ரதாநாதி முதலான உபகாரங்களைப் பண்ணினவனுக்கு என்மகள் கற்பிழந்தாள் என்கிறாள்.

[பண்புடை வேதம்] - சர்வபதார்த்தங்களை யதாவத்தாகவே காட்டிக்கொடுக்கும் நீர்மையையுடையவேதம். [பயந்த] - ப்ரஹ்மாவை ஓதுவித்தை. [பரனுக்கு]-வேதப்ரதிபாத்யனாகையாலும், ப்ரஹ்மாவுக்கு வேதசக்தியைக்கொடுக்கையாலும் ஸர்வஸ்மாத்பரனானவனுக்கு. அறிவு இழந்தாற்கு அறிவுகொடுக்குமவன் கிடீர் இவள் அறிவை அழித்தான்! [மண்புடைவையம்] - மண்மிக்கவுலகு. [இடந்தவராகற்கு] - பிறருடைய ஸ்வரூபவிநாசகனாகத் தன்னை அழிய மாறுமவன். "மானமிலாப்பன்றியாய்த்தேக" என்னக்கடவதிறே. மண்மிகுதி சொல்லிற்று - எடுக்கையில் அநுபவத்தோற்றுகைக்காக. [தெண்புனற்பள்ளி] - தெளிந்தபுனலை யுடைத்தான எகார்ணவத்தைப் பரிக்கிரகமாக வுடைய

வன். முதலிலே ஸ்ருஷ்டியுமுமாய் ஸ்வாதந்த்ரமான நீர்மையுடைய ஏகாரணவத்திலே ஜகத்ரக்ஷணோபாயசிந்தனபண்ணிக்கொண்டு கண்வளர்ந்தருளுமவன் என்கை. [தேவபிரானுக்கு] - ப்ரஹ்மாதிகளுக்கு ஸ்ருஷ்ட்யாதியுபகாரகனானவனுக்கு என்றுமாம்; அயர்வறுமமரர்களதிபதி நிமிர் ஒருவர் இல்லாதாற்போலே ஸ்ருஷ்ட்யுமுமாய் இருக்கிறான் என்றுமாம். [என்கண்புனை கோதை] - கண்டார் கண்களை ஆபரணமாகவுடைய மயிர்முடி. அதாகிறது - கண்டார்க்கு வைத்த கண் வாங்கலொண்ணாதபடி கண்களைப் பிணிக்கவற்றாயிருக்கை. "கண் என்று - பீலிக்கண்ணாய், அந்தகாபரணத்தை கோதை என்று, ஜாத்யுசிதமான ஆபரணம்" என்றான் ஒருகாலியன். [இழந்தது கற்பே] - ஸர்வர்க்கும் ஜ்ஞாநப்ரதானனை தனக்குங்கூட அறிவுகொடுக்குமவன் அறிவையன்றோ இழந்தது! கற்பு - கல்வி: அதாவது-ஜ்ஞாநம்.

ஈடு.— அஞ்சாம்பாட்டு. வேதப்ரதாநம் முதலான உபகாரங்களைப் பண்ணினவனுக்கு என்மகள் கற்பிழந்தாளென்கிறாள்.

[பண்புடைவேதம்] - ஈச்வரனை உள்ளபடியே காட்டித்தரும் நீர்மையையுடைய வேதம். [பயந்த] - ஸாப்தப்ரபுத்தந்யாயத்தாலே ப்ரஹ்மாவை யோதுவிக்கை. [பரனுக்கு] - "யொ ப்ரஹ்மாணம் விதாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்கிறபடியே - ப்ரஹ்மாவுக்கு வேதசக்ஷுஸ்ஸைக் கொடுக்கையாலும், வேதைகஸமதிகம்யனாகையாலும் ஸர்வஸ்மாத்பரனானவனுக்கு. அறிவிழந்தார்க்கு அறிவு கொடுக்குமவன்கிடீர் இவளறிவை அழித்தான். [மண்புரைவையம்] - மண்மிக்கபூமி. [இடந்தவராகற்கு] - மண்ணோடு விண்ணோடு வாசியற, தன்முகேந ரக்ஷித்தபடி. பிறருடைய ஸ்வரூபஸித்த்யர்த்தமாகத் தன்னையழிய மாறாமவன். அறிவுக்கு இட்ட வழக்கு ஆலத்திவறிக்கவேண்டும்படியிறே இருப்பது. "மானமிலாமாமறியாங்தேக" என்னக்கடவ

அஞ்சாம்பாட்டு.—பண்பு இத்யாதி. "பண்புடைவேதம்" இத்யாதிபதங்களைக் கடாகதித் தவதாரிகை - வேதப்ரதாநம் இத்யாதி. "கீழிற்பாட்டிலே - "யொ ப்ரஹ்மாணம் விதாதி பூர்வம் வழி" என்றதத்தையும், இப்பாட்டிலே - "யொ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்றதத்தையுஞ்சொல்லுகிறது" என்றருளிச்செய்வர். வேதத்துக்குப்பண்பேதென்ன - ஈச்வரனை இத்யாதி. பயந்த - ஸ்ருஷ்டித்த: "உண்டாக்கிக்கொடுத்த" என்று உரையிலைப்பதார்த்தம். நித்யமான வேதத்தைப்பயக்கையாவதேதென்ன - ஸாப்தப்ரபுத்த இத்யாதி. "பண்புடைவேதம்" என்றதைப் பற்ற - வேதைகஸமதிகம்யனாகையாலும் என்றது. "பண்புடைவேதம்பயந்தபரனுக்கு - கற்பிழந்தான்" என்ற தாயாருடைய ஹார்த்தபாவம் - அறிவிழந்தார்க்கு இத்யாதி. "புரை" என்று - மிகுதி. மண்மிகுகையாவது - அதிகமாயிருக்கை. கீழிற்பதத்தையுங்கூட்டி "இடந்தவராகற்கு" என்றதுக்கு ரஸோக்தி - மண்ணோடு இத்யாதி. மண்ணை, தன்முகேந ரக்ஷிக்கையாவது - திருவயிற்றிலேவைத்து ரக்ஷிக்கை. விண்ணை, தன்முகேந ரக்ஷிக்கையாவது - ஹம்ஸமுகேநவேதோபதேசம்பண்ணி ரக்ஷிக்கை. ஜ்ஞாநப்ஸந்நியமாய்விருப்பான வராஹனவேஷத்துக்குக் கற்பிழக்கக்கூடுமோ? என்ன - பிறருடைய இத்யாதி. குணத்துக்கு ஈடுபட்டான் என்றபடி. குணத்துக்கேயன்றிக்கே, அழகுக்கும் ஈடுபட்டானென்கிறார் - அழகுக்கு இத்யாதி. அழகுக்கு இட்டவழக்காவது - தன்மேன்மையையிட்டு நீர்மையைக் கொள்ளுகைக்கு ஈடாகக்கொண்ட வராஹவேஷம். ஆலத்திவறிக்கை - ஆலத்தியெடுக்கை. த்ருஷ்டி தோஷபரிஹாரம் பண்ணுகையென்றபடி. அப்படி யழகியதாயிருக்குமோ? என்ன - மானமிலா இத்

திறே. மண்மிகுதிசொல்லிற்று - எடுக்கையில் அருமை தோற்றுகைக்காக. [வராகற்கு] - அல்லாத ரக்ஷணம்போலன்றியே முக்யமான ரக்ஷணம் இதிறே எல்லார்க்கும் ஏற; "எயிற்றிடை மண்கொண்ட வந்தை யிராப்பகலோதுவித்தென்னைப் பயிற்றிப்பணிசெய்யக் கொண்டான்" என்று இவளோட்டையார்க்கு ஜ்ஞாநப்ரதாநம்பண்ணினவன் இவளை அறிவழித்தான். [தெண்புனற்பள்ளி] - தெளிந்தபுனலையுடைய ஏகார்ணவத்தைப் படுக்கையாக வுடையவன். அழிந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டமான சேதநர்க்கு அறிவுகொடுக்கக் கிடக்கிறவனுக்கு. ஸத்தையே பிடித்துண்டாக்கி அறிவுகொடுக்கக் கடவ அவன்கிடீர் உண்டான அறிவை வாங்கிக்கொள்ளுகிறான்! [எம்தேவபிரானுக்கு] - ப்ரஹ்மேஶாநாதிகளுக்கும் உபகாரகனானவனுக்கு. "ஈஶ்வரோஹம்" என்றிருந்தாளாகில் அறிவிழக்கவேண்டாகிடீர்! [என்கண்புனைகோதை] - கண்டார்கண்கள் பிணிப்புண்கையாலே, அவற்றை ஆபரணமாகவுடைய மயிர்முடியை யுடையவள். அதாவது - வைத்த கண் வாங்கவொண்ணாதிருக்கை. கண்களுக்கு விஷயம் தலையாய்விட்டது. [இழந்தது கற்பே] - ஸர்வர்க்கும்

யாதி. தேசு - தேஜஸ்ஸை. பூமிக்கு கடிக்யம்சொன்னதுக்கு ப்ரயோஜநம் - மண்மிகுதி இத்யாதி. கீழ்ச்சொன்ன ரக்ஷணம்போலே தேஹத்தைப்பூண்கட்டிக்கொண்டிருக்கையன்றிக்கே, ஸ்வாதந்த்ர்யரூப தேஹமுமேகொண்டு ஸம்ஸாரார்ணவத்தில் நின்றும் கரையேற்றும் அவதாரமென்று விவக்ஷித்து ரக்ஷகத்வ - அல்லாத யவுணம் இத்யாதி. முக்யமான - முகத்தாலுண்டான; ஸ்வீகரிக்கப்பட்டமான என்றர்த்தத்வயம். எல்லார்க்கும்வரவென்றது - எல்லார்க்கும் ஸம்ஸாரார்ணவத்தில்நின்றும் கரையேறுகைக்கென்று ஸ்வபாவார்த்தம்; எல்லாரும்சம்பந்திக்கவென்றாயிற்று. "வராகற்கு - அறிவிழந்தாள்" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - எயிற்றிடை இத்யாதி. தன்னுடைய திருவெயிற்றின் நுனியிலே பூமியையெடுத்த என்ஸ்வாமியானவன் இவளாகாத்ரவிபாகமாற ஜுதுவித்து: அதாவது - தன்னுடைய சேஷத்வாதிகளையும் தம்முடையசேஷத்வாதிகளையும் அறிவித்தென்றபடி. பயிற்றி - அநுஷ்டாநபர்யந்தமாக்கி. பணிசெய்யக்கொண்டான் - "நித்யகைங்கர்யங்கொள்ளக்கடவோம்" என்ற திருவுள்ளத்தாலே மறுத்துவிட்டுக் கொண்டானென்றபடி. இவளோட்டையார்க்கென்றது - பெரியாழ்வாரை. "மதுசூதன்புனற்பள்ளி" என்றதுக்குபாவம் - அழிந்தஜகத்தை இத்யாதி. அழிந்தஜகத்தை ஸ்ருஷ்டித்தென்றது - "சான்றுகளைப்படைத்தானுக்கு" என்றதத்தைப்பற்ற. இத்தைச்சொல்லுகிற தாயாருடைய ஹார்த்தபாவமாதல், ஹிதமாதல் - ஸத்தையேபிடித்து இத்யாதி. "எம்" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - ஈஶ்வரோஹம் இத்யாதி. 'அறிவிழக்கவேண்டாகிடீர்' என்றவகந்தாம், 'அச்செயலுக்குத்தோற்று எம் என்கையாலே அறிவிழந்தாள்' என்று கூட்டிக்கொள்வது. புனைகை - பிணிப்புண்கை. நாயகனுடையகண்களை ஆபரணமாகவுடைய மயிர்முடியென்று விவக்ஷித்து, அத்தை ஸஹேதுகமாகக்காட்டுகிறார் - கண்டார் இத்யாதி. கண்கள்பிணிப்புண்ணாதபோது மயிர்முடிக்கு ஆபரணமாகக்கூடாமையாலே, பிணிப்புண்கையாலே என்றது அர்த்தாக்ஷேபம். பிணிப்புண்கையாவதேதென்ன - அதாவது இத்யாதி. "கண்டார் கண்ணைப்புனைந்துகொள்ளும்கோதை" என்று உரையில் ஸப்தார்த்தம். "இழந்தது" என்கைக்கு, இவளறிவுக்கேற்றமேதென்ன - ஸர்வர்க்கும் இத்யாதி. "வேஷாம்ஜ்ஞாநப்ரதாநேந" என்றதத்தைப்பற்ற - ஸர்வர்க்கும் ஜ்ஞாநப்ரதாநேந என்றது. அவளுக்கும் அறிவுகொடுக்கும்படியான அறிவு இவளுக்குண்டோ? என்ன - அபிஜ்ஞா இத்யாதி. "தேவகார்யம்ஸுஸுகரம்கர்தும்ஜாநாமிதேஜஸா | ஸமிதோராவணஸ்யாஹம் ராஜ்ஞா தஶரதேந ச" இதி அயோத்யாகாண்டே. பிணிப்புண்கையாவது - கட்டுண்கை. 'ஸுப்ரபாதத்தியாயத்தாலே' என்கிறவிடத்திலே- "ஸாஸ்ரோரேஷு திவஸேஷு விஶேஷதஸ்தே ஸ்ரீவைஷ்ணவாஸ்ஸுகிதா ஹரிபாதபக்தா: | ஸ்ரீமந்நிவாஸ ஹரிவாஸ ஜகந்நிவாஸ ஸர்வேஶ்வர ப்ரதிபதம்ஸுகிதா பவந்தி" இதி

ஜ்ஞாநப்ரதமுண தனக்குப்கூட அறிவுகொடுக்கும் இவளறிவைக்கிட்டி தோன்றாது! "ஸுமி ஜ்ஞாநராஜயசூரணாரு" (அபிஜ்ஞாநராஜதர்மாணும்). கற்பு-கல்வி; அதாவது-ஜ்ஞாநம்.

ஆறும் பாட்டு.

கற்பகக்காவன கற்பலதோன்றாத
போற்சுடர்க்குன்றன்ன பூந்தண்புறவற்கு
நற்பலதாமரை நாண்மலர்க்கைவற்கு என்
விற்புருவக்கோடி தோற்றதுமேய்பே.

அ.—(கற்பகக்காவன.)-திருப்பாற்கடலிலே பிராட்டியோடே ஸம்ஶ்லேஷித்திருக்கையாலே ஒரு கற்பகச்சோலை தழைத்தாற்போலே யிருக்கிற திருத்தோள்களின் அழகுக்கும், கற்பகச்சோலையிலே ஒரு தாமரைக்காடு அலர்ந்தாற்போலே யிருந்த திருக்கைகளின் அழகுக்கும், நிரதிசய தேஜோமய கநக மிரிவாஸத்ருஶமான திருவஸிஷேகத்தில் அழகுக்கும், பூநீபரர்ங்கம் வளைந்தாற்போலே யிருந்த திருப்புருவத்தையுடைய வளான இவள், தன் திருமேனி தோற்றாள் என்கிறாள்.

ஒ.—ஆறும்பாட்டில், ஏகார்ணவஶாயியான எம்பெருமானுடைய திவ்யாவயவ ஸௌந்தர்யத்திலே அகப்பட்டு என்பெண்பிள்ளை தன்னுடைய மெய்யழிந்தாள் என்கிறாள். [கற்பகக்காவென்று தொடங்கி] - ஒருகாலும் கற்பகச்சோலைபோலேயாய் அவ்வளவன்றிக்கே நன்றான பல திருத்தோள்களையுடையனாய் ஒளியையுடைய பொன்மலைபோலேயாய் அழகியதாய் திருமுடிக்கு அநுகூலமான திருவஸிஷேகத்தை உடையவனுக்கு. திருவஸிஷேகம் - ஸர்வாபரணங்களுக்கும் உபலக்ஷணம். [கற்பலவென்று தொடங்கி] - அழகியதாய் பலவாய் செவ்விந்தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கைகளை யுடையவனுக்கு வில்போலேயிருக்கிற புருவத்தையுடைய என்னுடைய பெண்பிள்ளை உடம்பு இழந்தாள்.

ப.—அநந்தரம், ஆகர்ஷகமான அவயவசோபையையுடையவனுக்குத் தன்னுடையஸ்வாதீந ஶரீரத்தையிழந்தாளென்கிறாள்.

ப்ர.—[இழந்ததுகண்டே]—கலியாயுகாவெண, [உகூ] "வெவெஷெஷீ வாவிதகுவ்ரநஶாஸ்ரூாவகவெஷ்ஷி । ருஷெவஷ்ரூஷிகஷ்யாஶயளாவஶாஜ்யாஶிஷெ வநழுாகு॥ ஷெவகாரூயாஷ்ஷவாகூபுகூவாகூபுகிஜ்ரா ஷ்ரூஷெஷெவெகநா । ஸ்ரிஜ்ரூாஶாஜயசூரணாஶாஜவாஶ்ரூஶ்வுகிகூஷெகாசு॥ ஷ்ரூவிவெஶாயு ராகிஷ்ஷாஷ்ஷவெஶ்ஷாவி ஹுவிகிழ । ஷ்ரூஷ்ரூஷெஜநஷாஶ்வாஶுணஶ்ரூஶியாகிஶ்ஜ்ஷவாஜ்ரூஷ்ரு॥" வ்ரூகுகுகிகஶாஷஷ்ரூவுகுகுகுகுகாநு வகுஷவகியவெஷ்ரூகுகுஷ்ரூசோணஶாகுகு॥" என்கிற ஸ்ரீரங்கராஜஸ்தவஶ்லோகம் அநுஸந்தேயம்.

கற்பகம் ௪ அன - கற்பகச்சோலைபோலேயாய், நல்-அதிலும்விலக்ஷணமாய், பல - பலவான, தோளற்கு - தோள்களையுடையவனுய், சுடர் - சுடரையுடைத்தான, பொற்குன்றன்ன - பொற்குன்றை பொத்திருப்பதாய், பூ - சோபாயமாய், தண் - அநுகூலமான, முடியற்கு - திருவபிஷேகத்தையுடையவனுய், நல் - அழகியதாய், பல - பலவாய், தாமரை - தாமரையின், நாள் மலர் - புதுமலர்போலேயிருக்கிற, கையற்கு - கைகளையுடையவனுயவனுக்கு, என்விற்புருவக்கொடி - வில்போலேயிருக்கிற புருவத்தையுடையவளாய்க் கொடிபோலே மெல்லியளான என்பெண்பிள்ளை, தோற்றது - இழந்தது, மெய் - தனக்கு விதேயமான சரீரத்தை. அவிதேயசரீரையானு ளென்று கருத்து.

இ.—ஆறும்பாட்டில், ஏகார்ணவசாயியானவனுடைய ஸௌந்தர்யத்திலே அகப்பட்டு இவள் தன்னுடம்பை இழந்தாள் என்கிறாள். [கற்பகம் இத்யாதி] - ஒரு சாயை கற்பகச் சோலை போலேயாய், அவ்வளவன்றிக்கே விலக்ஷணமான தோள்களை உடையவனுக்கு. ஒளியையுடைய பொன்மலைபோலேயாய், சர்வாதீயமாய்த் திருமுடிக்கு அநுகூலமான திருவபிஷேகத்தை யுடையவனுக்கு. பூவென்று-மாலைகளாலே அலங்கரிதம் என்றுமாம். இது-ஸர்வாபரணங்களுக்கும் உபலக்ஷணம். [நற்பலவித்யாதி] நன்றாய்ப் பலவாய் செவ்வித்தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கையை யுடையவனுக்கு. [என்விற்புருவக்கொடி] - வில்போலே இருக்கிற புருவத்தை உடைய என்பெண். ப்ரஹ்மாஸ்த்ரத்தைக்கொண்டு முடிந்துகிடப்பாரைப்போலே, ஜயஹேதுவான பரிகரத்தைக்கொண்டுகிடீர் தோற்றது. [தோற்றதுமெய்யே] - "ஊயூ-ம்சாஸாஜீவிஷ்யே" என்னும்வடிவைக்காட்டி, "நஜீவெயம்க்ஷணமபி" என்னப்பண்ணும் வடிவைக்கிடீர் கொண்டது!

ஈடு.—ஆறும்பாட்டு. ஏகார்ணவசாயியானவனுடைய அவயவஸௌந்தர்யத்திலே அகப்பட்டு இவள் தன்னுடைய மெய் இழந்தா ளென்கிறாள்.

[கற்பகக்காவித்யாதி] - தன் அவயவங்களைக் காட்டி இவள் அவயவவிழையைக் கொண்டான். கற்பகச்சோலைபோலேயாய், அவ்வளவன்றியே விலக்ஷணமான பல திருத்தோள்களையுடையவனுக்கு. [பொற்சுடரித்யாதி] - ஒளியையுடைய பொன்மலைபோலேயாய் சர்வாதீயமாய்த் திருமுடிக்குஅநுரூபமானதிருவபிஷேகத்தை யுடையவனுக்கு.பூவென்று மாலைகளாலே அலங்கரிதமென்றுமாம். இது - ஸர்வாபரணங்களுக்கும் உபலக்ஷணம். [நற்பலவித்யாதி] - நன்றாய்ப் பலவாய்ச் செவ்வித்தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கைகளையுடையவனுக்கு. [என்விற்புருவக்கொடி] - வில்போலேயிருக்கிற புருவத்தை யுடைய என்பெண். (கொடிபோலே யிருக்கிறவள்) ப்ரஹ்மாஸ்த்ரத்தைக்கொண்டு பட்டுக்

ஆறும்பாட்டு.—கற்பகம் இத்யாதி. இதில் - தனியேஅவதாரம் சொல்லாமையாலே, கீழிற்பாட்டிற்சொன்ன ஏகார்ணவசாயியைச்சொல்லுகிறதென்று விவக்ஷித்து, 'கற்பகக்காவன" இத்யாதிகளைக்கடாக்ஷித்தவதாரிகை - ஏகார்ணவ இத்யாதி.

"நற்பலதோளற்கு - தோற்றதுமெய்யே" என்றதற்கு பாவம் - தன்னுவயவங்களை இத்யாதி. "சுடர் - பொன் - குன்றன்ன" என்று அந்வயித்தர்த்தம் - ஒளியையுடைய இத்யாதி. "தண்" என்று - குளிர்த்தியாய், அத்தாலே - அநுரூபதையைச் சொல்லுகிறது. "நற்பல - நாள் - தாமரை - மலர்" என்று அந்வயம். நாள்மலர்-ஸத்யோவிகாஸியானபுஷ்பம். "விற்புருவக்கொடி" என்றவிடத்திலே- "யதா-ஹ்ரஹ்மாஸ்த்ரேண" இத்யாத்யநுஸந்தேயம். "விற்புருவக்கொடிதோற்றது" என்றதற்கு

கிடப்பாரைப்போலே, விஜயஹேதுவான பரிகாத்தைக்கொண்டு கிடீர் தோற்றது! [தோற்றதுமெய்யே] - "ஊர்த்வம்மோஸாந்நஜீவிஷ்யே" (ஊர்த்வம்மோஸாந்நஜீவிஷ்யே) என்னப்பண்ணும் வடிவைக் காட்டி, "நஜீவெயம்க்ஷணமபி" (நஜீவேயம்க்ஷணமபி) என்னப்பண்ணும் வடிவைக்கிடீர் கொண்டது. அவிதேயசரீரையானாள் என்று கருத்து.

ஏழாம் பாட்டு.

மெய்யமர்பல்கலன் நன்கணிந்தாணுக்கு
பையரவினணைப் பள்ளியினணுக்கு
கையொடுகால்செய்ய கண்ணபிரானுக்குஎன்
தையல்இழந்தது தன்னுடைச்சாயே.

அ.—(மெய்யமர்.) - அவனுடைய திருமேனியில் தேஜஸ்ஸை மூக்காற் போலேயிருந்த அலங்கரியமான திருவாபரணங்களாலே ஒப்பித்தருளின அழகுக்கும், திருப்பாற்கடலிலே நிரதிசய ஸுகந்யாயமான திருவரவணையிலே கண்வளர்ந்தருளுகிற அழகுக்கும், அந்தத்திருவணிகலன்களுடைய நிரவதிகமான தேஜஸ்ஸையும் திருவநந்தாழ்வானுடைய படுமணிகளில் நிரவதிகமான தேஜஸ்ஸையும் விஞ்சிப்புறப்படா நின்ற ஒளியையுடைய திருக்கைகள் திருவடிகள் திருக்கண்களில் அழகுக்கும் இவள் தோற்று, தன் ஒளி யிழந்தாளென்கிறாள்.

யற ப்ராப்யமாகிறவோபாதி அவன் விரும்பினதேசமும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே [அவன் சீர்] - அவன் கல்யாணகுணங்கள். அவையாகிறன, அவன் தன்திறத்தில் தாழ நிற்கும் நிலைகள். [வளம்மிக்கவனூர்] - பரமபதம் கலவிருக்கையோபாதி உகந்த விஷயத்தைப் பெறும்இடமிறே ஊராகிறது! *கிம்கார்யம் ஸீதயாமமவிறே. பரமபதத்திற்காட்டிலும் ஆஸ்ரிதர் இருந்தஇடமிறே ஊராகிறதும், அவன் திருவுள்ளத்துக்குப் பொருந்தியிருப்பதும். [வளம்மிக்கவன்] - ப்ரணயதாரையில் விதக்ஷன் என்றாராம். இப்போது வைதக்ஷ்யமாவது தானிருந்தவிடத்தே இவள் வரும்படி இத்தலையை யழித்தபடி. [வினவி] - "திருக்கோளூரெத்தனை யிடம்போரும்" என்று எதிரே வந்தாரைக்கேட்டு, அவர்கள் "இன்னதனை யிடம் போரும்" என்ன, அதுதானே வழிக்கு பாதேயமாகப் போகை. "பாதேயம்புண்டரீகாக்ஷ" (பாதேயம்புண்டரீகாக்ஷ) இத்யாதி. பூவலரும்போதைச் செவ்விபோலே "திருக்கோளூரெத்தனையிடம்போரும்" என்றுகேட்கும்போதைத் திருப்பவளத்தில் செவ்வி காணப் பெற்றிலேன் என்று காணும் திருத்தாயார் தான்நோவுபடுகிறது. [என் இளமான் புகுமூர் திருக்கோளூரே] - என்வயிற்றிற் பிறப்பாலும், இவள் ப்ரக்ருதியாலும் அவ்வூரிலல்லது புகாள் என்கிறாளாயிற்று. தாய் வழிகொண்டே ஸ்வபாவங்கள் அறுதியிடலாமாகாதே. பெருமாளைக்கண்டல்லது ரூரிக்கமாட்டாதாளாய் வருகிற ரூரீபரதாழ்வானைக் கண்டுவைத்தேயும், த்ரிகாலஜ்ஞனென ருஷியுங்கூட, "கூறிஸ்ஸ-ஸெஸ்ரு ஜஸி" (கச்சிந்நதுஷ்டோவ்ரஜஸி) என்று தாயாரையிட்டு வழக்குப்பேசுவித்துக் கொண்டு இவரைக் காடேறப்

குணங்களோபாதி அவனூரும் ப்ராப்யமாயிருக்குமோ? என்ன - ஸோஸ்ருத இத்யாதி. இந்த ஸ்ருதிக்கு, இங்கு ஸோக்யஸாமாநாதிகரண்யம் விவக்ஷிதம். இங்கு இவளுக்கு விவக்ஷிதகுணங்கள் எவை? என்ன - அவையாகிறன இத்யாதி. "ஸர்" என்று விசேஷித்ததுக்குமாகும் - பரமபதம் இத்யாதி. கலவிருக்கை - ஒலக்கமிருக்கை. பரமபதத்தைக்காட்டிலும் இதுக்கதிசயமேது? என்ன - உகந்த இத்யாதி. உகந்தவிஷயம் அங்கில்லையோ? என்ன - கிம்கார்யம் இத்யாதி. அதாவது, அவர்களிற்காட்டிலும் இன்ற ஆஸ்ரயித்தவர்களை அவனுக்கு மிகவும் உகந்தவர்களென்று கருத்து. "ஸுயுகிஸுயுகி ஸாவபேக்ஷ கிம் காயபூம்ஸீதயா 88" இத்யாதி யுத்தகாண்டே. இத்தால்பலிதம் - பரமபதத்தில் இத்யாதி. கீழ், "வளம்" என்று - ஸம்பத்தாக அருளிச்செய்து, சாமர்த்யமாக அர்த்தாந்தரம் - ப்ரணயதாரையில் இத்யாதி. ப்ரணயதாரையில் மிக்க ஸாமர்த்யத்தையுடையவன் என்றபடி. போகிறது திருக்கோளூராகையால், வெறுமனேபோகாதே வினவிக்கொண்டுபோகிறதுக்கு ப்ரயோஜநமேது? என்ன - திருக்கோளூர் இத்யாதி. வினவுகிறது பாதேயமாயிருக்குமோ? என்ன - பாதேயம் இத்யாதி. "ஸுயுதாம் ஹ்ருதிஸ்யூநாம்தவ்ஷாரிஸ்ருமிதுதவெதஸாழு । வாதேயம் வாணரீகாக்ஷநாமவாழி தபுநாஷ்வதழு". வினவி - உசாவிக்கொண்டு; சொல்லிக்கொண்டு என்றபடி. புகுமூர் என்றதே "வினவி - புகுமூர்" என்று - வினவுகிறதைச்சொல்லுகிற தாயாருடைய ஹார்த்தபாவம் - பூவலரும் இத்யாதி. "திருக்கோளூரிலேபுகும்" என்று எதுகொண்டு நிஶ்சயக்கிறது? என்ன - என்வயிற்றில் இத்யாதி. இவள் ப்ரக்ருதியாலுமென்றது - "இளமான்" என்ற ம்ருதுப்ரக்ருதியாலையாலும் என்றதல்; "உண்ணுஞ்சோறு முதலானவையெல்லாங் கண்ணன்" என்னும் ப்ரக்ருதியாலையாலும் என்றதல். தன்வயிற்றிற் பிறப்பாலே அவ்வூரிலேபோகவொண்ணாதபடி நிஶ்சயிக்கும்படி. யெங்ஙனே? என்ன - தாய்வழி இத்யாதி. அப்படி தாய்வழிகொண்டு அறுதியிட்டபேருண்டோ? என்ன - பெருமாளை இத்யாதி. 'கீழ்வயிற்றிற்கழலை'-அடிவயிற்றில் வ்ரணம். கீழ்வயிற்றிற் கட்டிபோலே பொதுகாமென்று கருத்து. ஸம்வாதாந்தரம் - பதார்த்தஸ்வபாவங்களோ இத்யாதி. "கூறிஸ்ஸ-ஸெஸ்ரு ஜஸி" என்

போகவிட்டாயாகில், இன்னம் "பெருமாள் இருக்கில் கீழ்வயிற்றில் கழலையாகிறது" என்று அங்குப்போய் நலியத் தேடுகிறாயல்லையிறே என்றாளிறே; அவன்படிகள் காணாநிற்கச் செய்தேயும் மாத்ருஸம்பந்தங்கொண்டு சங்கித்தாளிறே; பதார்த்த ஸ்வபாவங்களைக் கொண்டு பத்தும்பத்தாக நிமித்தங்களை யறியக்கடவரா யிருப்பர்களாயிற்று வேடர்; இங்ஙனே யிருக்கச்செய்தேயும், தம் எல்லையிலே இவள்வந்து புகுந்ததுக்கு ஹ்ருஷ்டராய் "அடிச்சேரியிலே வந்துபுகுவதே!" என்பது; "ஆனாலும், ராஜாக்களாயிருப்பார் வண்ணியர்பற்றிலே புகுரும்போது கேள்விகொண்டன்றோ புகுருவது" என்றாற்போலே யிருக்க வெளிரும்காற்பு மாகச் சொல்லி, தாய்வழியை நினைத்து அசிர்த்தாரிற்ற ஸ்ரீகுஹப்பெருமானும். அப்படியே இவளும் தன்வயிற்றிற்பிறந்த சுத்தியே ஹேதுவாக "திருக்கோளூரிலேபுகும்" என்றறுதியிடுகிறாள். ராமாஸ்த்ரம் இலக்குத்தப்புமோ! என்மகள புகுமூர் அதுவேயென்கிறாள். [இளமான்] - இப்பருவத்தில்இவளைத் தலக்கறுக்கும்போது அவ்வூரில் அவனேயாகவேண்டாவோ? [என்னிளமான்] - க்ரமப்ராப்தி பற்றாதவள். தன் மாதாதவம் பாராதே பதறிக்கொண்டு போனாள். [புகுமூர்] - காட்டுத்தீயிலே யகப்பட்டவன் போய்கையும் பொழிலுந் தேடிப் புகுமாபோலே, ஸம்ஸாரமாகிற பாலைநிலத்தில் காட்டுத்தீயிலே யகப்பட்டவனுக்கு உகந்தருளின நிலங்களானவை போய்கையும் பொழிலும்போலேயிறே. புகுமூரென்கையாலே புக்கார்போகும் ஊர் அன்றென்கை. எம்பெருமானோ தேடிக்கொண்டுவந்தருளாநிற்க, எதிரே வருகிறாள் ஒருபெண்பிள்ளையைக் கண்டு "எங்குநின்றும்?" என்ன, "திருக்கோளூரில்நின்றும்" என்ன, "அவ்வூரில்புக்கபெண்களும் போகக்கடவராயிருப்பர்களோ!" என்றருளிச்செய்தார். 'என்னிளமான் - மண்ணினுள் - புகுமூர் திருக்கோளூரே - இது திண்ணம்' இவள் போய்ப்புகுமூர் திருக்கோளூரே, இது நிச்சயம். இவ்வூரில் பிள்ளைகளைக் காணாவிட்டால், கோயிலுக்குள்ளே தேடும் அத்தனையிறே.

றது குஹவசனமாயிருக்க, இதனையெடுத்தது, பரத்வாஜபகவானுக்கும் கருத்து இதுவானையாலே அடிச்சேரி - அடியாருடையகுப்பம். வெள்ளறு - அஸாரம். காழ்ப்பு - சாரம். விஷயமும் பருஷமுமாகச் சொல்லி என்றபடி. அசிர்த்தார் - சங்கித்தார். "சுஹ்ருதோ ஹ்யேஷோவ ஜனஸ்ராஸ்யோ ராக்ஷஸ கிமுணா । ஐயவெஷ்ட ஸமீபஸ்தோ ராஜாஜநபதீவரே" இதிபாதம் ப்ரதிகுஹ. 'கீழ்வயிற்றிற்கழலை' இத்யாதிவாக்யம் .. "சுஹ்ருதஸ்யாபாவஸ்ய பாவம்கதுமிஹாஸி । சுகுணகுஹொகுரிநாராஜ்யம்தஸ்யாகுரு ஜஸ்ய" இத்யாதி பரத்வாஜ வசநத்தைக்கடாகுவித்து. "என்" என்றதுக்குஸ்வாவம் - ராமாஸ்த்ரம் இத்யாதி. "இளமான்" என்றதுக்கு மூன்று ஹாவம் - இப்பருவத்தில் இத்யாதி. தலக்கு - ஒஜ்ஜை. "புகுமூர்" எனகிறதுக்கு ஸ்வாபதேசத்திலே ஹாவம் - காட்டுத்தீயிலே இத்யாதி. "புகுமூர்" என்றதுக்கு ஸ்யாவர்த்யமாதல், "புகும்" என்றவாத்தமாகத்துக்குபாவமாதல் - புகுமூர் என்கையாலே இத்யாதி. "போகுமூரன்று" என்றதுக்கு சம்வாதம் - எம்பெருமானார் இத்யாதி. இவள்போனத்தைக் காணாதிருக்கிறதிவள் "திண்ணம்" என்கிறதெங்ஙனே? என்ன - இவ்வூரில் இத்யாதி. 'உண்ணாநின்றீசோறு' என்றதொடங்கி, 'கண்ணநீர்கள்மல்கி' இருக்கிற - 'என்னிளமான்' - 'அவன்சீரையும் வடிவழகையும்' வினவிக்கொண்டு - 'மண்ணினுள் புகுமூர்-திருக்கோளூரே' இதுதிண்ணம் இத்யந்வய.

(க)

இரண்டாம் பாட்டு.

ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போ அவனுடைய
பேரும் தார்களுமேபிதற்றக் கற்புவானிடறி
சேரும் நல்வளஞ்சேர் பழனத்திருக்கோளூர்க்கே
போருங்கொல்? உரையீர் கொடியேன்கொடிபூவைகளே!

அ.—(ஊரும்நாடும்.) - அவனுடைய கல்யாண குணங்களையும் திவ்ய திவ்ஸ்தங்களையும் நிரவதிகமான ஆர்த்தியோடே கூப்பிடுகிற தன்னுடைய ஆர்த்தஸ்வரத்தைக்கேட்டு ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போலே அத்யந்தம் அவஸந்நமாய்க் கொண்டு அத்திருநாமங்களையும் திவ்ய திவ்ஸ்தங்களையுமே சொல்லிக் கூப்பிடும்படியாகக் கூப்பிடுகிற இவள், அந்த வ்யஸனம் பொறுக்கமாட்டாமையாலே தாரிக்கமாகாத தன்னுடைய ஸ்த்ரீத்வத்தை க்ருஷ்ணவிஷயமாகையாய்க் கொண்டு பொறுத்து, நல்வளஞ்சேர்பழனத் திருக்கோளூர்க்கே போய்ப்புகும் யோக்யதையுடையவளான என்னுடைய பெண்பிள்ளை உங்களை நினைத்தாவிலும் ஒருகால் வருமென்பதை அவளுடைய பூவைகளைக் கேட்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், திருக்கோளூரிலேபுக்க என் பெண்பிள்ளை மீள வருமோ? சொல்லிக்கொள்ளென்று பூவைகளை திருத்தாயார் கேட்கிறாள். [அவனுடைய பேருந்தார்களுமேபிதற்ற] - தன்பக்கலையுண்டு அவனுடைய திருநாமங்களையும் திவ்ஸ்தங்களையும் அடைவுகெட்டுப் பிதற்றும்படியாகி. [கற்புவானிடறி] - கடக்க வரிதான தன்மர்யாதையை க்ருஷ்ணன்பேரிலே பொறுத்து, [சேரும்நல்வளமென்று மேலுக்கு] - நல்ல ஸம்பத்தையுடைய திருக்கோளூர்க்கே போய்ச்சேரும் என் பெண்பிள்ளை, பூவைகாள்! உங்களைக்காண என்றாவிலும் வருமோ? சொல்லிக்கொள். [போருங்கொல்] - போகவல்லளோ என்றுமாம். இப்பெண்பிள்ளையைப் பிரிந்த இன்னாப்பாலே 'கொடியேன்' என்கிறாள்.

ப.—அநந்தரம், ஸர்வலோகப்ரஸித்தமாம்படி அவனுடைய நாமங்களை ப்ரவர்த்திப்பிக்கும் இவள், நிரதிசயபோக்யமான திருக்கோளூரிலே போய்ப்புக்கு மீண்டுபோருமோ? என்று, அவளுடைய ஸீலாப்ரகரணமான பூவைகளைக் கேட்கிறாள்.

ஊரும் - (தானிருந்த) ஊரும், நாடும் - (அந்தநாடே சேர்ந்த) நாடும், உலகமும் - (நாட்டோடணைந்த) லோகமும், தன்னைப்போல் - தன்னைப்போலே, அவனுடைய - அவனுடைய, பேரும் - பேரையும், தார்களும் - தாரையும், பிதற்ற - (பஹுமுகமாகப்) பிதற்றும்படியாக, வான் - ஆகாசவத் அநதிலங்க்யமான, கற்பு - ஸ்த்ரீத்வ மர்யாதையை, இடறி - கடந்து, நல் - விலக்ஷணமான, வளம் - ஸம்ருத்தியோடே, சேர் - சேர்ந்து, பழனம் - நீர்நிலங்களையுடைத்தான, திருக்கோளூர்க்கே - திருக்கோளூருக்கே, சேரும் - சென்று சேருமவளாய், கொடியேன் - தன்னைப்பிரிகைக்கு ஈடான கொடுமையையுடைய என்பெண்பிள்ளையாய், கொடி - உபக்ரமபேஷமான கொடிபோலே அவளைக்கிட்டியல்லது தரிக்கமாட்டாதவள், போருங்கொல் - மீண்டு போருமோ? பூவைகளே - பூவைகாள்! (என்னைப்போலன்றே உங்களுக்குத் தொல்லைப் போகக்கூடுமிறே) உரையீர் - சொல்லுங்கோள்.

இ.—இரண்டாம்பாட்டில், திருக்கோளூர்க்கே புக்க என்மகள் வருமோ? சொல்லிகோளென்று பூவைகளைக்கேட்கிறாள்.

[ஊரும்] - தானிருந்த ஊரும். [நாடும்]-அந்தோடு சேர்ந்தநாடும். [உலகமும்] - அந்தோடுசேர்ந்த லோகமும். ராமாவதாரத்திலும் ஒருவரிடமே திருந்திற்று; இங்கு, "லோகைக ரக்ஷணாயாவதீர்ண:" என்கிறபடியேயாயிற்று திருந்திற்று. [தன்னைப்போல்] - இவ்விஷயத்தில் தன்னைபோதி லாவவேந்தம் உண்டாம்படி திருத்தகை. அங்கே, பரமஸாம்யாபந்நனைத்தேடிப் போகிறாளாகில், தான் திருத்தினாளாகாதோ [அவனுடைய பேருந்தார்களுமே] - "அரவிந்தலோசநன்" என்றும், "மட்டவிழ் தண்ணந்துழாய்" என்றும், "விரைமட்டலர் தண்துழாய்" என்றுஞ் சொல்லாநிற்கை. [பிதற்ற]-ப்ரீதிப்ரேரிதராய் அக்ரமமாகச்சொல்லுகை. "ஜாதிஷு ஸ்ரீ:ஸ்ரீ:ஜகதி" என்கிறபடியே. இப்படி, லோகமடங்க அக்ரமமாகச் சொல்லும்படிபண்ணி. [கற்பு வானிடறி] - வானுணகற்பை இடறி. லௌகிகாணாம்யாணகளை மதியாதே என்றுகொல்; வலிய அறிவை என்றுகொல். கடக்க அரிதானாம்யாணகளை த்ருணம்போலே அதிலங்கிக்க. [சேரும் இத்யாதி] - தகுதியான நல்ல ஸம்பந்தத்தையும் நீர் நிலங்களையுமுடைய திருக்கோளூர்க்கே புகுருமோ. தன் மனஸ்ஸை அங்கே முற்பட்டுநிற்கையாலே, வந்து புகுரவல்லளோ? என்கிறாள். திருக்கோளூர்க்கே புக்கவள் மீளுமோ? என்றுமாம். [கொடியேன்] - இவளைப்பெறுகைக்கு வாக்யத்தைப்பண்ணி வைத்து, தனியே புறப்பட்டுப்போன இவளளவு உங்களைக்கேட்டு அறியவேண்டும்படி பாபத்தைப்பண்ணினேன். [கொடி] - உபகாரத்தையொழியக் தரியாதவளை. அவ்வூரில் புக்கல்லது பிரிக்கமாட்டாள் என்கை. [பூவைகளே - உரையீர்] - சொல்லாதொழிகைக்குப்பெற்ற குற்றமில்லையே உங்களுக்கு? நான் ஸந்தேசம்சொல்லுகையாலே மறைத்தாளாகிலும், இன்னவிடத்துக்குப்போகிறேன் என்றும், அங்குப்போனால் செய்யுமவையும் உங்களுக்குச் சொல்லிப் போகக்கூடுமிறே; சொல்லிகோள்! அறிவித்துப் போனாளாகில் ராமாவதாரத்தில்போலே லோகமாகப் பின்தொடருமிறே.

ஈடு.—இரண்டாம்பாட்டு. திருக்கோளூர்க்கே போய்ப்புக்க என் பெண்பிள்ளை மீளவருமோ? சொல்லிகோள்! என்று பூவைகளைத் திருத்தாயார் கேட்கிறாள்.

[ஊரும்நாடும் இத்யாதி] - இவ்விருப்பில் என்னதுறையுண்டு? இங்கே ஒரு துறையுண்டாய், அங்கே அதுதீர்ப்போனாளோ? இங்கே, * போதயந்தபரஸ்பரம்பண்ணுகைக்கு ஆளில்லாமை "யத்ரவதவெ ஹுஸாயஸ்ரீ:" (யத்ரபூர்வேஸாத்

ப்ர.—[ஊரும்நாடும்இத்யாதி]—ஸ்ரீதாஸரதிஸ்வாமி, "ஜ்ஞாதிஷு ஸ்ரீ:ஸ்ரீ:ஜகதி ஸ்வாமிநீ

யாஸ்ஸந்திதேவாஃ) என்றொரு தேச விசேஷந்தேடிப்போனாளோ? "நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி" (நிரஞ்ஜநஃபரமம் ஸாம்யமுபைதி) என்று அவன் அங்குள்ளாரைத் தன்னோடு ஸாம்யாபந்நராம்படி பண்ணினாற்போலேயாகாதே, இங்குள்ளாரை இவள் தன்னோடொக்கப் பண்ணினபடி. [ஊருந்நாடும் உலகமுந்தன்னைப்போல்] - தானிருந்த ஊரும், அத்தோடு தோள்தீண்டியான நாடும், அத்தோடுசேர்ந்த லோகமும். ராமாவதாரத்திலும் ஒருவரேயிறே திருந்திற்று; இங்கு ஸம்ஸாரமாகத் திருந்திற்றுக்கிடீர்! என்கை. இன்று நம் மளவும் வரவேறிப்பாயும்படியிறே இவள் ஸம்பந்தம் வெள்ளமிட்டபடி. "லோகவதீ ணபுவாரசேயபுஷஃ ஹ்ருதியொமாய" (லோகேவதீர்ணபரமார்த்தஸமக்ரபக்தியோகாய) என்னும்படியே எல்லாமேடுகளிலும் ஏறிற்றென்கை. [ஊருந்நாடுமித்யாதி] - 'காலையெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள் மாலின்வரவுசொல்லி' ப்ராஹ்ம முஹூர்த்தத்திலே திர்யக்குக்களுங்கூட எழுந்திருந்து, அவன் இவள்பக்கல் பிச்சேறிவரும்படியைச் சொல்லாநின்றன. தானிருந்தவிடத்தே செல்லவேண்டுமவன் இவளிருந்த இடத்தேற வரும்படியைச் சொல்லி. [தன்னைப்போல் அவனுடைய பேருந்தார்களுமே பிதற்ற]-அவன் "மயர்வறமதிநலமருளவந்த பிதற்றிறேயிவளது! இவளிதான் அடியாகவந்த பிதற்றிறே யிவர்களது! [பிதற்ற]-நினைத்துச் சொல்லுகையன்றியே, பகவத்குணங்களிலே யவகாஹித்து உணர்த்தியற்றுச் சொல்லும்படியாகப்பண்ணி. [அவனுடைய பேருந்தார்களும்] - "சங்கேன்னும் சக்கரமேன்னும் துழாயேன்னும்" என்பது, "தேவத்தேவிரான்" என்பது, "விண்ணகரமட்டலர் தண்டுழாய்" என்பதாகை. [பிதற்ற] - "ஸ்ரீ ரெகாயகமெபூராராகஸ்ஸ ஜாகஹ்ருஸ்ஸ

ப்ர.—கிஸ்ஸொவ நிஷெஹி [கூ.க] "கதாவி ஹாநுவாணுவாவெவிய ஹிய திரஜ்ஜநஃபரமம் ஸாம்யமுபைதி"

ஸொவெ தியாகிஸ்ஸ நாவாரணாஃ, "ஸ்ரீயொ நகோசவெஸிரி காயுஸ்ஸ தஸ்ஸ ஜ்ஜோ நாகிஸ்ஸ காலுவிஸிவாஹமஸ்ஸவெவ்வுவொ ஹி। லொகெவ தீணபுவாரசாயபுஸ்ஸ ஹ்ருதியொமாய நாகுகிஸ்ஸ நயெ யகி நாமவராயா"

"இவ்விருப்பில்" இத்யாதி வாக்யத்தாலே யருளிச்செய்து, ஸம்தர்ப்பம் - தானிருந்த இத்யாதி. இத்தால் வ்யாவ்ருத்தி - ராமாவதாரத்திலும் இத்யாதி. அப்படி திருந்திற்றோ? ஸன்ன - இன்றுநம் மளவும் இத்யாதி. இப்படி ஸம்ஸாரமாகத்திருந்தமையாலே ஆழ்வார் க்ருஷைக்கு மேட்டுநிலமாயிருப்பாரில்லை என்னுமர்த்தை ஸப்ரமாணமாக அருளிச்செய்கிறார் - லோகேவதீர்ணா இத்யாதி. ஸ்தோத்ரமே. லோகே - பகவத்பக்திக்கு மேட்டுநிலத்திலே. 'அவதீர்ணபரமார்த்த ஸமக்ரபக்தியோகாய:' அவதரிக்கப்பட்ட பரமார்த்த ஸமக்ரபக்தியோகத்தையுடையவர் என்றபடி. திருக்கலிகன்றி சரமாவதி வியக்காட்டுகிறார் - காலை இத்யாதி. நாச்சியார்திருமொழி, ஒன்பதாந்திருமொழி, எட்டாம்பாட்டு. இதுக்கர்த்தம் - ப்ராஹ்ம இத்யாதி. "மாலின்" என்றது - வ்யாமுக்தனுடையவென்றுதல், டேரியோனுடையவென்றுதல். அதில் முந்தினவர்த்தம் - அவன் இவள்பக்கல் பிச்சேறிவரும்படி இத்யாதி. இரண்டாமர்த்தம் - தானிருந்தவிடத்தே இத்யாதி. * மயர்வறமதிநலம்பெற்ற தன்னைப்போலே பிதற்றலைக்கு ஹேதுவேதென்ன - அவன்மாயிவற இத்யாதி. இத்தால் - அவன் * மயர்வறமதிநலமருளினது இவளொருத்தி யளவிலே சுவறிவிட்டது; இவள் * மயர்வறமதிநலமருளினதெல்லார்க்குமாய்விட்டதென்று - இவ்வாக்யத்துக்கு தாத்பர்யம். "பிதற்ற" என்றதுக்கர்த்தம் - நினைந்து இத்யாதி. "பேருந்தார்களும்" என்றதுக்கர்த்தம் - சங்கேன்றும் இத்யாதி "உணர்த்தியற்றுச்சொல்லும்படி" என்றதுக்குப்ரமாணம் - ஸ்ரீரெகாயகமெபூராராகஸ்ஸ ஜாகஹ்ருஸ்ஸ

ஜ்ஜுதஃ" (ஸ்ருதோயமர்த்தோராமஸ்ய ஜாமதக்ந்யஸ்யஜல்பதஃ) என்கிறபடியே. [கற்புவானிடறி] - வானை கற்பைஇடறி. ஒருவரால் கடக்கவொண்ணாத மர்யாதையைக்கடந்து மேலேபோலேயிருக்கிற மர்யாதையை, கீழ்க்கீழே அகப்பட்டதொரு க்ஷுத்ரபாஷாணத்தை இடறுமாபோலே இடறி. பெரு வெள்ளமானது சிறுக்கரைகளோடு பெரியகரைகளோடு வாசியற ஏறுமாபோலே, நாண், மடம், அச்சம் தொடக்கமானவற்றை மதியாதே போகை. [கற்புவானிடறி] - "வலியவறிவை யென்றுதல்; பெரியஞானத்தை யென்றுதல்" என்றும் சொல்லுவர்கள். அப்போது, கற்பென்று - கல்வியாய், அத்தாலே அறிவைச்சொல்லி, வானென்று - வலியைச்சொல்லிற்றாகிறது. அன்றிக்கே, கற்பென்று - கல்வியாய், அத்தாலே ஜ்ஞாநமாய், வானென்று - பெருமையாய், பெரியஜ்ஞாநத்தை யென்றுமாம். அபிநிவேசத்துக்கு ஓரளவு உண்டாகிலிறே ஓரளவிலே தடை நிற்பது. "காவலுங்கடந்து" என்னக்கடவதிறே. "யயளவகாவிசவெஹோ" (யயௌசகாசித்ப்ரேமாந்தா) - ஒருத்திபுறப்பட்டுப்போனாள். இவளைக் கொண்டுபோனார் ஆர்? என்னில்: ப்ரேமத்தாலே வந்த இருட்சி வழிகாட்டப் போனாள். "குரவ்கிங்கரிஷ்யந்தித்தாநாம்விரஹாக்நிநா" (குரவ்கிங்கரிஷ்யந்தித்தாநாம்விரஹாக்நிநா) - "குருக்கள்கிடாய்" என்ன, வேந்துவிழுகிறதுக்கோரு குடநீர் சோரியவல்லர்களோ? [சேருமித்யாதி] - இங்கே அசல்காக்க இருக்கிறவள் அங்கே தன் வயிறுவளர்க்கப் போவதே! இங்கே பிறர் திருந்தும்படியிருக்கிற இவளாங்கே திருந்தினவிடந் தேடிப் போவதே! தன்னைக்கண்டு பிறர் வாழவிருக்கிற இவள், தான் அவனைக்கண்டு வாழப்போவதே! [சேருநல்வளமித்யாதி] - ஸத்ருசமான நல்ல ஸம்பத்துச்

ஜ்ஜுதஃ । நாரஹஸ்யுசவெவஷெ-ஃக்ரூஷெவெவாய நஸ்யுச" இதி மோக்ஷதர்மே. ஜல்பதஃ என்று - அக்ரம பாஷணத்தைச்சொல்லுகிறது; ஜாமதக்ந்யஸ்யாமஸ்ய, ஜல்பதஃ - ஜல்பத்தில் நின்றும், அயமர்த்தஃஸ்ருதஃ என்றபடி. 'ஜல்பதஃ என்கிறபடியே' என்றவநந்தரம், அக்ரமமாகச்சொல்லும்படி பண்ணி என்று அத்யாஹாரம். பிதற்ற - பிதற்றும்படிபண்ணி. "வாநுன - கற்பு" என்று-வ்லியமர்யாதையாய், மர்யாதைக்கு வலிமையேதென்ன - ஒருவரால் இத்யாதி. கடக்கவொண்ணாத மர்யாதையை - குலைக்கப்போகாத ஸ்த்ரீத்வத்தையென்றபடி. கீழ்வாக்யத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவரியாநின்றுகொண்டு, "இடறி" என்றதுக்குபாவம் - மலைபோலே இத்யாதி. அவிசாலியான மர்யாதையை அதிக்ரமித்தவுக்குத்ருஷ்டாந்தம் - பெருவெள்ளம் இத்யாதி. கீழே, "கற்பு" என்று - மர்யாதையாக. அருளிச்செய்த, ஜ்ஞாநமாக அர்த்தாந்தரம் - வலியவறிவை இத்யாதிவாக்யத்வயம். இவ்வாக்யத்வயத்தில், "கற்பு" என்றதுக்கர்த்தமேதமில்லை. "வான்" என்றதினர்த்தத்வயத்தையும் அடையே விவரிக்கிறார் - அப்போது இத்யாதி. மர்யாதையை அதிக்ரமிக்கவோ? என்ன - அபிநிவேசத்துக்கு இத்யாதி. மர்யாதாதிக்ரமத்துக்கு ஸம்வாதத்வயம் - காவலுங்கடந்து இத்யாதி. ஸ்வஸ்டோர்த்தம். பெரியாழ்வாதிருமொழி, "காவலம்பெரிய" இத்யாதி. "காவி தூ ஷெ கிசு ஷெ கி வெ ரூ ஸு ஜ்ஜாசு வாயயள । யயளவகாவிஸ்ரெ ஶாஸ்ரூ தூ ஷு ஸு ஷு விலுஂவெ தழு" இதி பஞ்சமேஸ்லோ [கூ௨] த்ரயோதஸோ ஸத்ரைவாஷ்டாதஸோ, "குரவ்கிங்கரிஷ்யந்தித்தாநாம்விரஹாக்நிநா" [உ௨] இதி. "யயளவகாவிஸ்" இத்யாதிக்கர்த்தம்-ஒருத்தி இத்யாதி. காவலைக்கடந்த ப்ரகாரத்தைக்காட்டுகிறார் நாவ இத்யாதி. "ஊரும்காடும்" இத்யாதியைக்கடாக்ஷித்து "போருங்கொல்" என்கிறவிருடைய ஹார்த்தபாவத்தை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - இங்கேயாகில் இத்யாதிவாக்யத்வயத்தாலே காக்க - ரக்ஷிக்க. "இவ்வேசல்காக்க" இத்யாதியின் விவரணம் - ஊரோடுகூடிக்காடு இத்யாதி. "போருங்கொல்" என்றதுக்குமுன்னர்த்தம். "சேரும்" என்றது - நல்வாத்துச்சு விசேஷணமாதல்; "சேரும்-கொடி" என்று

சேர்ந்திருப்பதாய், நீர்நிலங்களையு முடைத்தாயிருக்கிற திருக்கோளூர்க்கே. [திருக்கோளூர்க்கே போருங்கோல்] - போருங்கோல்என்றது புகுங்கோல் என்றபடி. அன்றியே, இவளுக்கு முன்னே தன் நெஞ்சு முற்பட்டபடியாய், அங்கேயிருந்து அவள்வழியில் ஒருகுறைகளின்றி யிலே வருமோ? என்கிறாளாகவுமாம். அன்றியே, 'நல்வளஞ்சேர் பழனத்திருக்கோளூர்க்கே-சேரும் - கொடி, பூவைகாள்!-போருங்கோல்உரையீர்!' என்றுதல். அதாவது மீண்டு புறப்பட்டு வரவல்லளோ? சொல்லிகோள்! [கொடியேன்] - இவளைப் பெறுகைக்கு லாக்யம் பண்ணிவைத்து, இவளளவுஉங்களைக்கேட்கவேண்டும்படியான பாபத்தைப்பண்ணினேன். [கொடி] - உபக்ருத்தையொழியில் தறைப்படும். * கோல்தேடியோடுங் கொழுந்தே போன்றதே மால்தேடியோடும் மனமிறே. [கொடியேன்கொடி] - பெற்ற என்னையுங்விட்டு வேறேயுமோர் அபாச்ரயமுண்டாம்படியான பாபத்தைப்பண்ணினேன். பெற்ற தாயாரை விட்டகலுகை குடிஸ்வபாவம்போலே காணும். (* கள்வன்கோல்லிலும், * நல்லதோர்தாமரைப் போய்கையிலுமுண்டிறே.) [பூவைகாள் - போருங்கோல்-உரையீர்] - பெற்றதாயாரைவிட்டாலாவது தன்னையல்லது, பிறந்தாளைக் கைவிடப் போகாதென்றிருக்கிறாள்காணும் தன்னையிட்டு. போக்குவரத்து எனக்கன்றோ சொல்லலாகாது, உங்களுக்கு ஒதுக்காதே சொல்லுமே. வயிற்றிற் பிறந்தாளை ஒளிப்பாரில்லையே: [உரையீர்] - அவள் சொல்லிப்போகச்செய்தே இவை சொல்லாதிருக்கிறன என்றிருக்கிறாள். [போருங்கோல்] - என்கிற ஸம்ஶயத்துக்சடி, பாலியான நான் இருக்கையாலே மீளாதொழியவுங்கூடுமே, நீங்களிருக்கையாலே மீளவுங்கூடுமிறே; என் பாபமே ப்ரபலமாய் வாராதொழியுமோ? உங்களைப்பார்த்து வருமோ? சொல்லிகோள்! அறிவித்துப் போனாளாகில் ராமாவதாரத்திற்போலே லோகமாகப் பின்தொடருமிறே; * சுற்றமெல்லாம் பின்றொடர இறே போயிற்று!

தல், த்ருதியார்த்தவிவரணம் - மீண்டு புறப்பட்டு இத்யாதி. ஆக, புகுங்கோல், வருங்கோல், மீண்டு புறப்பட்டுவரவல்லளோ என்று மூன்றர்த்தம். "உபக்ருத்தையொழியில் தறைப்படும்" என்றதுக்கு ப்ரமாணம் - கோல்தேடியோடும் இத்யாதி. ஸர்வேஶ்வரனைத் தேடிவிடாதே பதறிச்செல்லுகிற என்னுடைய மநஸ்ஸானது, கொம்பைத்தேடிப் படர்ந்துசெல்லுகிற கொழுந்துபோல இராநின்றது என்றபடி. இரண்டாந்திருவந்தாதி இருபத்தேழாம்பாட்டு. "கொடி" என்றதுக்கர்த்தாந்தரம் - பெற்ற வென்னையும் இத்யாதி. 'பெற்றதாயாரைவிட்டகலுகை' இத்யாதிக்கு - "பெற்றதாயாரைவிட்டகன்று" என்றதிலே நோக்கு. பெற்ற தாயானதனக்குச் சொல்லாளோ, இவற்றைக் கேட்கிறதென்? என்ன - பெற்றதாயாரைவிடலாம் இத்யாதி. தன்னையிட்டென்றது - தன்மகளுக்குத்தான் மறையாதே சொல்லுமாபோலே, தான் வளர்த்த இவற்றுக்கு மறையாதே சொல்லிப்போயென்று கேட்கிறாளென்றபடி. தாத்பர்யார்த்தம் - போக்குவரத்து இத்யாதி வாக்யத்ரயம். "உரையீர்" என்று நியமிக்கிறதென்? என்ன - அவள்சொல்லி இத்யாதி. "போருங்கோல்" என்று சம்ஶயிக்கிறதென்? என்ன - போருங்கோல் என்கிற இத்யாதி. போருங்கோலென்று சம்ஶயிக்கிறதென்றது - வருமோ? என்று சம்ஶயிக்கிறதென்றபடி. மகள்தான் அறிவித்துப்போகாதொழிவாளென்? என்ன - அறிவித்து இத்யாதி. ராமாவதாரத்தில் பின்தொடர்ந்தார்களோ? என்ன - சுற்றமெல்லாம் இத்யாதி. பந்துவர்க்கமெல்லாம் பின்தொடரவித்யர்த்தம். பெருமாள்திருமொழி, எட்டாந்திருமொழி ஆறும்பாட்டு. கொடியேன்கொடி - கொடுமையையுடைய என்னுடைய கொடிபோன்ற பெண்பிள்ளை இத்யர்த்தம். பூவைகளென்றது - பூவைகாளென்ற சம்போதனை. 'பூவைகாள்! ஊருமூநாடும்' என்றுதொடங்கி, பிதற்றும்படிபண்ணி 'வானுன - கற்பக - இடறி - நல்வளஞ்சேர் பழனத் திருக்கோளூர்க்கே - சேரும் - கொடியேன்கொடி - போருங்கொல், உரையீர்', இத்யங்கமம். "அறிவென்கிறது - தத்த்வத்தை; ஜ்ஞாநமென்கிறது - உபாஸநத்தை. அன்றிக்கே, அறிவென்கிறது - திருவாய்மொழியிற்பிறந்த ஜ்ஞாநம்; ஜ்ஞாநமென்கிறது - வேதாந்தஜ்ஞாநமென்றபடி" என்று சில ஸ்ரீகோஶத்திலிருக்கிறது. (உ)

மூன்றாம் பாட்டு.

பூவைபைங்கிளிகள் பந்தாதாதைபூம்புட்டில்கள்
யாவையுந்திருமால் திருநாமங்களேகூவியேழும் என்
பாவைபோய் இனித் தண்பழனத்திருக்கோளூர்க்கே
கோவைவாய்நுடிப்ப மழைக்கண்ணோடுகொண்டேசெய்யுங்கோலமோ?

ஆ.—(பூவை.) - லீலார்த்தமாகக் கொண்டிவர்த்த ரக்ஷாரிகாதி லீலோபகரணங்களைக்கண்டால் எல்லாம் லீலாரஸமும், தனக்குப் பிராட்டியோடே ரமமாணனான எம்பெருமானைக் காணுமதுவே யாகையால், அவனை நினைத்துக் காணப்பெறாமையாலே அவன் திருநாமங்களைச் சொல்லிக்கூப்பிடச் சொல்லி அதினுடைய மாதுர்யத்தாலும் குளிர்த்தியாலும் உஜ்ஜீவித்திருக்கிற என் பெண்பிள்ளை திருக்கோளூரிலே போய்ப்புக்கு, இவர்க்கன்னாடைய ஸர்வோபகரணமெல்லாம் பரிபூரணமாய்ப் பிறக்குமோ? அன்றியே, தன்னுடைய கண்ணீரும் அழுகையுமாயாய் நிற்குமோ என்கிறாள்.

ஓ.—மூன்றாம்பாட்டில், திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமானால் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்கிறாள்.

[பூவையெல்லாம் தொடங்கி] - பூவை பந்து முதலான அநேக லீலோபகரணங்களைக்கண்டால் ஸ்ரீராமதாஸ்வாமிக்கு ராஜ்யங்கண்டாற்போலே இவளுக்கு அஸஹ்யமாய் அவற்றிலுள்ள ரஸமெல்லாம் பகவந்நாமோச்சாரணத்தாலேயாய் உஜ்ஜீவிக்கும் என் மகள். [போயினியென்று மேலுக்கு] - இதுக்குமேலே ப்ரமஹரமான நிலங்களையுடைய திருக்கோளூர்க்கேபோய், என் பாவை, எம்பெருமானுடைய ப்ரத்யாஸத்தியாலே உடைகுலைப்பட்டு, தான் நெடுநாள் அவனைப்பிரிந்து பட்டபாடும், அவன் கைவிட்டிருந்த படியையும் நினைத்து கோவைப்பழம்போலேயிருக்கிற திருப்பவளம் துடிப்ப மிக்கிருந்துள்ள நீரையுடையகண்ணும் இவளுமாய் என்படக்கடவளோ?

ப.—அநந்தரம், தன்னுடைய லீலோபகரணங்களாலுள்ள ரஸமெல்லாம் திருநாமோச்சாரணத்தாலே பிறக்கும்படியாயிருக்கிற இவள், திருக்கோளூரிலே புக்கு அவன் தன் நினைவுக்கிடாகப் பரிமாறுமையாலே கண்ணுங்கண்ணீருமாய் எங்ஙனே க்லேசப்படுகிறாளோ? என்கிறாள்,

(லீலோபகரணமான) பூவை-பூவைகள், பை - பசுமை, கிளிகள் - கிளிகள், பந்து - பந்து, தூதை - தூதை, பூ - பூவிதழ், புட்டில்கள் -, யாவையும் -,(இவையெல்லாவற்றிலுமுள்ள ரஸம்பிறக்கும்படி), திருமால் - திருமாலுடைய, திருநாமங்களை - திருநாமங்களையே, கூவி - உச்சரித்து, ஏழும் - அக்காலே ஜீவிக்கும்படியான, என் - என், பாவை - பெண்பிள்ளையானவள், இனி - இத்திருநாமோச்சாரண ரஸங்கிடக்கச் செய்தே பின்னையும், தண்-குளிர்ந்த, பழனம் - பழனங்களையுடைய, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, போய் - போய், (அவன் எதிர்வந்து) ஸ்வாகதாதிகளைப் பண்ணி ஆலோகாலாபாலிங்கநாதிகளாலே ஆப்யாஸிப்பியாமையாலே), கோவை - கோவைப் பழம்போலேயிருக்கிற, வாய் - அதரம், துடிப்ப - துடிப்ப, மழை - வர்ஷம்போலே தாராளமான நீரையுடைத்தான, கண்ணொடு - கண்களோடே நின்று, என்செய்யுங்

கொலோ - என்செய்கிறார்களோ? யாவற்றையும் திருமால் திருநாமங்களைச்சொல்லு மென்றுமாம்.

இ.—மூன்றும்பாட்டில், திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமாறுல் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்கிறாள்.

[பூவை] - இளிபிரிலை அவர்க்கரேபோலும். [வைகுளி] - பச்சைக்கிளி, பூப்புட்டில்கள். [யாவையும்] - தன்னுடைய லீலோபகரணங்களான யாவையாலும் பிறக்கும் ரஸமெல்லாம் அவனுடைய திருநாமத்தாலே பிறக்குமாயிற்று இவளுக்கு. அவனுடைய லீலோபகரணங்களைப்போலும் போருமாயிற்று இவளுடைய லீலோபகரணங்கள். [திருமால் திருநாமங்களே கூவியெழும்] - ஸ்ரீவைகுண்ட நாமங்களைச்சொல்லி உஜ்ஜீவிக்கும்; திருநாமச்சுவடறிந்தபின்பு லீலோபகரணங்கள் ஸ்ரீபரதாழ்வானுக்கு ராஜ்யகர்ப்பம்போலே அஸஹ்யமாயிருக்கும். இவளுடைய லீலோபகரணங்கள் அவனுக்கு போலோபகரணங்களாயிருக்கும். "இந்த லீலோபகரணங்கள் திருநாமத்தைச் சொல்லிற்றுண்டோ?" என்று பெற்றிகேட்க, "பத்துநாளைக்கு பூப்புட்டில்களில் வருமு" என்று பிள்ளை பரிஹரித்தார். அவற்றைத் திருநாமத்தைச்சொல்லி அழைத்தாளாறுலோ என்னில்: அது, "உண்ணுநீரோடு பருகுநீர் தின்னும்வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றிருக்கிறதுக்குச் சேராது. [திருமால்] - இவள் திருநாமம் சொல்லும்போது த்வயத்தில்படியே ஸ்ரீமந்நாராயணன் என்றாயிற்று சொல்லுவது. [என்பாவை] - திருபாயிகஸ்த்ரீத்வத்தை யுடையவள். [போயினி] - லீலோபகரண ரஸமும் திருநாமமே யானவிருப்பை விட்டு. அங்கு என்ன வேற்றுமைக்கிடந்தது போறுள். [கண்பழனம்] - ப்ரமஹரமான நீர் நிலங்களையுடைய ஊர். [கோவைவாய் துடிப்ப] - கலங்கிறபோது தானே மேல்விழுந்து கலந்தபடியும், "பிரிவேன், பிரியில் தரியேன்" என்று கலந்தபடியும், பிரிந்தபடியும், வாயுதாழ்ந்தபடியும், தனிவழி போகாமல் மெல்லவிருந்தபடியும், சென்றபின்பு, "ஹீ ரெஷொஹமிதோ ஹ்ரூ" என்று ஸஜ்ஜாவிஷ்டனாய்க் காலைப்பிடியா தொழிந்தபடியும், இவற்றை நினைத்து கோவைப்பழம்போலேயிருக்கிற அபரம் துடிக்க, மிக்கநீரையுடைய கண்ணோடே என்படுகிறாளோ? தனிவழியே போறுள், தான்கூடப் போகப்பெற்றிலேன்! என்கிறாள்.

ஈ.—மூன்றும்பாட்டு. திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமாறுல் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்கிறாள்.

[பூவையித்யாதி] - வேறொன்றைக்கொண்டு போதுபோக்கவேண்டு பெருவத்தியும் திருநாமத்தையே கொண்டு ஜீவித்திருக்குமவள்கிடீர் போறுள்! இங்கிருந்தாள் மற்றொன்று தாரகமாய், அங்கேபோய் அவறுலே தரிக்கப்போறுளோ. பூவைதொடக்கமான லீலோபகரணங்களால் பிறக்கும் ஹர்ஷமெல்லாம் த்வயத்திற்படியே ஸ்ரீயஃபதியென்கிற திருநாமத்

மூன்றும்பாட்டு—பூவை இத்யாதி. "கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணோடு என்செய்யுங்கொலோ" என்றதனைக்கடாக்ஷித்தவதாரிணை - திருக்கோளூர் இத்யாதி.

"கூவியெழும்என்பாவை" என்றுயானவுக்கும் தாத்பர்யசித்தார்த்தம் - வேறொன்றை இத்யாதி. விவரணம் - இங்கிருந்த இத்யாதி. "பூவை" இத்யாதிக்கு பூவை பதார்த்த த்வயந்தவிர, சித்தார்த்தார்த்தம் இரண்டு அதில்முந்தினது - பூவைதொடக்கமான இத்யாதி. புட்டில்கள் - புட்டில்களாகிற, யாவையும் - யாவையாலும்பிறக்கும் ஹர்ஷமெல்லாமென்றபடி. வாழிஎன் பாவை - உன்னடாகாதின்

தைச்சொல்லி அத்தாலேயுண்டாகாநின்றது. "'ஊருண்நாடு முலகமுந்தன்னைப்போல்' என்கிறபடியே, இவைதாம் திருநாமத்தைச் சொல்லிற்றாகாதோ" என்று பெற்றி நம் பிள்ளையைக்கேட்க, "அதுக்குமல்லாமலிசாரமுண்டு, 'பந்துராதை' என்கிறவிடத்தே நட்டுப் பிறக்கும்" என்ன, "அப்படியேயிறே" என்று இசைந்துபோருவர். அவன் திருநாமங்களை இவற்றுக்கிட்டு அழைத்ததாகுமோ? என்னில்; "(உண்ணாநாழி பருகுநீர் தின்னும் வெற்றிலையும்) எல்லாங்கண்ணன்" என்றிருக்கிற அதிமாத்ர ப்ரேமவிஷயத்துக்கு இதுசேராது. [பூவையித்யாதி] - திருநாமச்சுவடறிந்தபின்பு லீலோபகரணதர்மநம் இவளுக்கு அஸஹ்யமாயிருக்கும்; ஸ்ரீ பரதாழ்வானுடைய ராஜ்யதர்மநம் அவனுக்கு அஸஹ்யமானாப்போலே. சக்ரவர்த்திக்கு ஶாஸ்த்ரார்த்தங்கள் பண்ணின அன்று நாயிறுபாடு, "கைகேயிபண்ணின கர்மமலத்துக்கு நாமும் கீழோலையிட்டோமென்று நாட்டார் நினைத்திருப்பதொன்றுண்டு; அத் தோஷம் நமக்கில்லை என்றறிவிக்கவேணும்" என்றுபுக்கான். ராஜலோகமடங்கலும் தீரண்டு "கர்த்தாவானவனை இழந்தோம்; அநந்தரம் ப்ராப்தரானவர் சாடேறப்போய்க்கொடுநின்றார், இனிராஜபுத்ரர்களில் நின்றாரைக்கொண்டு நிர்வஹிக்குமத்தனையிறே" என்றுபார்த்து, மங்களாவஹமான தூர்யகோஷங்களையும் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இத்த்வனி செவிப்பட்டபோது *கருமாணிக்கமலையில் பிராட்டி ஸ்வயம்வரத்துக்கு மணமுரசு அறைந்தபோது தோழி பட்டதெல்லாம் பட்டான். "விருமாவைஸஹாஶெயெ" (விலலாபஸபாமத்யே)

ப்ர. — [பூவைஇத்யாதி] — ஈயொயுராகாணெ, [அஉ] ஸஸ்வாஷ்ஷுகுஷுஷ்ட வாவாசுஷுஷுஷ்ஸஸ்ரொயாவா । விஷுமாவைஸஹாஶெயெ ஜமஷுஷ்ஷுவ ஈரொராஹி கழுகரு॥ உஸிக்வெஷுஷுஷ்ஷுவிஷுராஸ்ராகஸ்ஷுஷிஷு । ஷுஷிஷுஷுஷுகஶாகஸ்ஷுகொ ராஜுஷுஷியொஷுஷ்ஸ ॥ கக ॥ சுஷுஷுஷுஷுஷுராஶொஷுஷுஷுவெஷுராஜுராவெஷுராரகு । ராஜுஷுவாஷுஷுஷுஷுராஶஸ்ஷுஷுஷு வஷுஷுஷுஷுஷுஷுஷுஷுஷுஷுஷுஷு ॥ ஜெஷுஷு ஷ்ரொஷுஷுஷுஷுஷு தாஷுஷுவெநஷுஷுஷொவெஷு । ஷுஷுஷுஷுஷுஷுஷுஷுஷுராஜுஷுராஷுஷுஷுஷுஷுஷு ॥ கங ॥ சுநாராஜுஜுஷுஷ்ஷுஷுஷுஷுராஷுவாவெஷுஷுஷுஷுஷு । ஜுஷுதாகுஷுணாஶுஷுஷுவொ கெஷுவெஷுஷுகுஷுவொஷுஸெஷு ॥ கச ॥ ஷுஷுஷுதாகுஷுதஷுவாவெஷுநாஷுஷுதஷுவிஷுராஷு யெ । ஜுஷுஷ்ஷுவஷுஷுஷுஷுஷுஷுஷுஷுஷுஷுஷுஸ்ஸ்ராஷுகுஷுதாஷுஷு ॥ கரு ॥

நுள்ள என் பாவையென்றபடி. கூவி - சொல்லி, எழுகை - உண்டாகை. பெற்றிநிர்வாஹத்துக்கு, கூவி - கூவும்படிபண்ணி, எழும் - சந்தோஷிக்கும், என்பாவையென்றபடி. த்ருதீயார்த்தத்துக்கு, யாவைக்கும் திருமால்திருநாமங்களையிட்டழைத்து சந்தோஷிக்கும் என்பாவை என்றபடி. இதுசேராது என்றது, வேறொன்றால் காலக்ஷேபம்பண்ணுகை சேராதென்றபடி. சித்தாந்தார்த்தத்திலிரண்டாவது - திருநாமக்கூவல் இத்யாதி. அதாவது - திருமால் திருநாமங்களைக்கூவி "மாற்பால்" இத்யாதிப்படியே பூவைதொடக்கமான யாவையையும் இகழும் என் பாவை என்றபடி. எழுகை - த்வேஷிக்கை. "என்கலிராகம்" என்னக்கடவதிறே; கூவுகை - அநுஸந்திக்கை. பூவை - கிளியில் அவாந்தரபேதம். தூவை - சிறுசோறசமைக்கும் பானைச்சட்டி. பூப்புட்டிலகள் - பூப்பெட்டிகள். உத்தரார்த்தத்துக்கு த்ருஷ்டாந்தம் - ஸ்ரீபரதாழ்வானுடைய இத்யாதி. ஸ்ரீபரதாழ்வானுக்கு அஸஹ்யமாயிருந்ததுக்கு ப்ரமாணோபபாதநம் பண்ணுவாராக, அதுக்கவதாரிகை - சக்ரவர்த்தி இத்யாதி. சாஸ்த்ரார்த்தங்கள் - உத்தரக்ரியைகள். நாயிறுபாடு - ப்ராதஃகாலத்திலே. 'புக்கான்' சதஸ்ஸிலே இதிசேஷம். கர்த்தா - தசரதன். ப்ராப்தரானவர் - பெருமாள். மணமுரசு - மங்களவாத்யம். அறைகை - அடிக்கை. "ஸஸ்வாஷ்ஷுகுஷுஷ்ட வாவாசுஷுஷுஷ்ஸஸ்ரொயாவா । விஷுமாவைஸஹாஶெயெ ஜமஷுஷ்ஷுவ

தனியிடத்திலன்றோ பறிகொடுப்பது. தனக்கு சேஷத்வமிறே ஸ்வரூபம்; ஸ்வரூபத்தையிறே அபஹரிக்கநினைக்கிறது! "ஜகர்ஹே" (ஜகர்ஹே) ஸங்க்யாவந்தருக்குப் பிற்பட்டாரை சிஷ்டகர்ஹணபண்ணுமாபோலே. "பௌரோஹிதம்" (புரோஹிதம்) இக்குடிக்கு நாங்கள் கைவாங்கியிருக்க, நீ முன்னோடிக் காரியங்கள் நடத்தக் கடவதாகச் சமைந்தபடி சாலவழகிதாயிருந்தது. "ஸபாமத்யேஜகர்ஹே" (ஸபாமத்யேஜகர்ஹே) "நியமாதிக்ரமம்ரஹஸிபோதயேத்" (நியமாதிக்ரமம்ரஹஸிபோதயேத்) என்கிற நிலையைக்குலைத்தான்; (புரோஹிதத்வமாகிற) ஹேது கழிகையினாலே. "ராஜ்யஞ்சாஹந்சராமஸ்ய" சேஷவஸ்துக்களிலே ஒன்றையொன்று ஆளுமோ? அங்ஙனேயாமன்று; ராஜ்யந்தானெனக்குக் கடவதானாலோ? "யதோவ ஹ்யுபிஹாரஹ்ருஷி" (தர்மம்வக்துமிஹார்ஹஸி) - லோகத்திலே தமப்பன்மாரையும் தமப்பன்மாரையும் அழியச்செய்து தாந்தாம் ராஜ்யத்தைக் கைக்கொண்டு போருவதொன்றுண்டு; "அகஇந்த வ்யக்திபிலும்செய்யும்" என்றிராதேகொள்ளாய்; என் ப்ராக்ருதியறிந்து அதுக்கீடாக வார்த்தை சொல்லப்பாராய். "கயாஹ்யஸராயராஜ்யாதொஹவெஹ்ராஜ்யாவஹாரகஃ" (கதர்த ஸாதாஜ்ஜாதோபவேத்ராஜ்யாபஹாரகஃ) - அவர் பிரிந்த அநந்தரம் முடியவல்லவன் வயிற்றிலே பிறந்தேனெம்பட எங்ஙனே? அவர்போகட்டுப்போன ராஜ்யத்தை நான் அபஹரித்தால். "நமஸ்யாமிக்ருதாஞ்ஜலிஃ" (நமஸ்யாமிக்ருதாஞ்ஜலிஃ)-அப்ராப்தம் அவன்சொல்லச்செவி தாழ்த்ததுக்கு அபவாதப்ராயஶ்சித்தம்பண்ணுகிறான். [என்பாவையோயினி] - என் புத்த்ய

பௌரோஹிதம்" இத்யபோத்யாகான்டே. "ஸஹாஶயெ" என்றதுக்குபாவம்-நமியிடத்தில் இத்யாதி. அதாவது - காட்டிலே பறிகொடுப்பாளாகில் நான் நிரனிலேபறிகொடுத்தேன் என்றபடி. இவர்கள்பறித்ததேது? என்ன - தனக்கு சேஷத்வம் இத்யாதி. இவன்சொல்லிற்ற ப்ரகாரத்தை ஸத்ருஷ்டாந்தமாக உபபாதிக்கிறார் - ஸங்க்யாவந்தருக்கு இத்யாதி. சிஷ்டகர்ஹணபண்ணுமாபோலேயென்றது - சிஷ்டகர்ஹணபண்ணுமாபோலேயென்றபடி. புரோஹிதப்பஸ்யதீதி - புரோஹிதஃ என்றவிவக்ஷித்தபாவம் - இந்நடக்க இத்யாதி. "ஸஹாஶயெ" என்றதை - கீழே கூட்டியருளிச்செய்து, மேலேயுங்கூட்டிபாவம் - நியமாதிக்ரமம் இத்யாதி. ஹேது - குருத்வ ஹேது. "ராஜ்யம்வாஹமம்வ ராஶேஷ்யுபரிம் வக்துமிஹார்ஹஸி । கயாஹ்யஸராயராஜ்யாதொஹவெஹ்ராஜ்யாவஹாரகஃ" அசேதநமான ராஜ்யத்தையுந் தன்னையும் சேஷமாகச் சொல்லுகிறவனுடைய ஹார்த்தபாவம் - சேஷவஸ்துக்களிலே இத்யாதி. அங்ஙனேயாமன்று என்றது - சேஷவஸ்துக்களிலே யொன்றையொன்று நியமிக்குமதாகுமென்றபடி. "யதோவக்துமிஹார்ஹஸி" என்றதுக்குபாவம் - லோகத்திலே இத்யாதி. "இஹ" என்றதுக்குபாவம் - என்பேசுகிறு இத்யாதி இஹ - மயி என்றபடி. நீர் கம்மை வெறுக்கிறதென்? உம்முடையதாயார் "உமக்கு" என்ற ராஜ்யத்தைவாங்கிப் பெருமாளைக்காட்டிலே போகவிடாநிற்க என்ன - நமஸ்யாமி இத்யாதி. "யதிசாக்ருதமவாவம்நாஹம்தத்ஹவிஷ்யாமியெ । இஹாஸ்தெஸாவநிஷ்ஹ்ருஷ்யஃ நமஸ்யாமிக்ருதாஞ்ஜலிஃ" இப்போது நமஸ்காரத்துக்கு ப்ரஸக்தமேதென்ன - அப்ராப்தம் இத்யாதி. அபவாத ப்ராயஶ்சித்தமாவது - "தன்னிடத்தில் பாபமில்லாவிட்டாலும் லோகாபவாதமுண்டானால் ப்ராயஶ்சித்தம்பண்ணவேணும்" என்று சாஸ்த்ரஞ்சொல்லுகையாலே ப்ராயஶ்சித்தம்பண்ணுகிறானென்றபடி. "ப்ரஸாதாதாவர்யபுஸ்யுவாக்யிவாமுவபுஃவாநியமாதிக்ரமம்ரஹஸிபோதயெத்" இதி இபஸ்தம்பஸ்மர்தம். "பாவை" என்று - மாப்பாவையாய், அதுபோலே பாதந்த்ரையானவளென்று சொல்லி, அநந்தரம் "போய்" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - என் புத்த்யதிநம் இத்யாதி. த்விதீ

தீங்மான வ்யாபாரத்தையுடையவள் கிடீர் என்னையொழியப் புறப்பட்டேப்போனாள். நிருபாதிகமான ஸ்த்ரீத்வத்தையுடையவளென்றுமாம். [இனி - போய் - லீலோபகரணங்களாற் கோள்ளும் கார்யமும் அவனேயாய்ப்படியான இந்தப்ராவண்யத்துக்குமேலே அங்குப்போய்ப் பெறுவது என்னுகப்போனாளோ? [தண்பழனத்திருக்கோளூர்க்கே] - ஶீதமவுரமான நீர் நிலங்களையுடைய திருக்கோளூர்க்கே. [கோவைவாய்துடிப்ப] - கோவைப்பழம்போன்ற சிவப்பையுடைத்தான அதரமானது ஸ்ப்புரிக்க. "பிரியேன்' என்று பிரிந்தாய்; 'வருகிறேன்' என்று வந்திலை; என்னைத்தனியேயிட்டுவைத்தாய்; நான்வருமளவும் இருந்தாய்" என்றாற் போலேயிருக்கச் சில சொல்லநினைக்குமே; அதுதோற்றும்படி உதடுநெளிக்கிறபடி. [கோவை வாய்துடிப்ப மழைக்கண்ணெறு] - நினைத்ததுசொல்லித் தலைக்கட்ட வோட்டாநின்றதோ கண்ணநீர்! உடைகலைப்பட்டுக் கண்ணநீராலே தலைக்கட்டாநின்றாள். "உக்தாயெதுதி வஸ்ஸுஹ்ருதம்வாநரெந்ரபுராவரவஸிஸ்வத" (உக்த்வார்யேதிஸக்ருத்தீநம்புநர்நோவாசகிஞ்சந) என்னும்படியே. [என்செய்யுங்கொலோ] - சொல்லமாட்டாள். தவிரமாட்டாள், அழாதொழியமாட்டாள்; எங்ஙனே படுகிறாளோ? நம்மையும் பிறரையும்விட்டு அவன்திருநாமங்களை அநுஸந்திக்கிறபோதை அழகுகாணப்பெற்றோம்! அவன்தன்னையே கண்டநுஸந்திக்கிற போதை அழகுகாணப்பெற்றிலோமே. அநுஸந்தாநவேளையிற்போலன்றிறே கண்டால்பிறக்கும் விகாரங்கள்; "காமனுடல்கொண்ட தவத்தாற்குமையுணர்த்த வண்டலம்பும் தாரலங்கல் நீண்முடியான் தன்பெயரே கேட்டிருந்தங்காரலங்கலானமையால் - கண்டுவணங்கினார்க்கென்னுங்கொல்" என்றிறேயிருப்பது. அலாபத்தோடேயிருக்கும் இருப்புக்கண்டேன், லாபத்தோடேயிருக்கும் இருப்புக்காணப்பெற்றிலேன் என்கிறாள்.

யார்த்தத்துக்கு, பாவை யென்று - ஸ்த்ரீத்வம். "பூவை" இத்யாதியின் முன்னினவர்த்தத்தைக்கடாகூறித்து, "இனி" என்றதுக்கு பாவம் - லீலோபகரணங்களால் இத்யாதி. துடிக்கைக்குஹேதுக்கள் - பிரியேனென்று இத்யாதி. ஆநால் அத்தைச்சொல்லாமல் உதடுநெளிக்கிறதென்? என்னை-நினைத்தது இத்யாதி. உடைகுலைப்பட்டென்றது-அவன்எதிரேநடந்ததுக்கு ஈடுபட்டென்றபடி. "மழைக்கண்ணெறு" என்றது - ஹர்ஷாஶ்ருவை. சொல்லமாட்டானமைக்கு ப்ரமாணம்-உக்த்வார்யேத இத்யாதி. "ஊஃவாஹி தவொஹாரதொராரஜவுஃதெ்ரூரிஹாவலுஃ । உக்தாயெதுதிஸஸ்ருஹ்ருதம்வாநரெந்ரபுராவரவஸிஸ்வத" இத்யயோத்யாகாண்டே. [கூகூ-கூஅ] காலாமர்த்தத்தைக்கடாகூறித்துபாவம் - நம்மையும் இத்யாதி. அநுஸந்தாநதசையைப்பற்ற, கண்டபோதைக்கதிசயமேதென்ன - அநுஸந்தாந வேளையில் இத்யாதி. இதுக்கு ஸர்வாதம் - காமனுடல் இத்யாதி: காலாந்திருவந்தாதி எழுபத்தெட்டாம்பாட்டு, "கண்டுவணங்கினார்க்கு" இத்யாதி. இதுக்கர்த்தம் - காமனுடைய சரீரத்தை தக்கமாக்கின, தபஃ-க்ரௌர்யத்தையுடைய ருத்ரனுக்கு மஹிஷியான உமையானவள். "கம்கூஷிஷ்ஷுயலெ தெவ" இத்யாதி ப்ரஸ்ஸுபேண ஸர்வேஶ்வரனை ஸ்மரிப்பிக்க, வண்டுகள் தேன்வெள்ளத்திலே அலையாநிற்கிற பூமாலையையுடைய ஆதிராஜ்ய சூசகமான நீண்டதிருவபிஷேகத்தையுடைய ஸர்வேஶ்வரனுடைய திருநாமத்தைக்கேட்டு அதுக்குள்ளீடான குணங்களை யநுஸந்தித்துக்கொண்டிருந்த தசையிலே சூடின மாலைபோலே துவண்டபடிகண்டால், ஸாக்ஷாத்கரித்து வணங்கினவர்களுக்கு எந்த விக்ருதி பிறக்குமோவென்றபடி. தார் - புஷ்பம். அலங்கல் - மாலை. அங்கு - கேட்டிருந்தசமயத்தில், ஆர்தல் - சூடுதல், ஆய்ந்து - அநுசந்தித்து. அலம்புகை - அலைகை. "நம்மையும் பிறரையும்" இத்யாதி. வாக்யவிவரணம் - அலாபத்தோடே இத்யாதி. 'பூவை'என்றதொடங்கி, திருநாமங்களே கூவியெழும்படியாயிருக்கிற 'என்பாவை' - இனித் தண்பழனத்திருக்கோளூர்க்கே போய் - கோவை வாய்துடிப்ப-மழைக்கண்ணெறு-என்செய்யுங்கொலோ' இத்யந்வயம். (ஈ)

நான்காம் பாட்டு.

கொல்லையென்பர்கொலோ? குணம்மிக்கனளென்பர்கொலோ?
சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாரும்எல்லே!
செல்வம்மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே
மெல்லிடை நடங்க இளமான்செல்ல மேவினளே.

அ.—(கொல்லை.) - ஐஶ்வர்யத்தால் ஸுஸம்ருத்தமாய்க்கொண்டு அவன் கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே, முக்யையானவள் மெல்லிடை நடங்கப் போனாள்; மர்யாதையைக்கடந்தாளென்று லோகத்தார் இவளுக்குக் குற்றமாகச்சொல்வரோ? அன்றியே, திருக்கோளூரிலே ஒருத்திக்குள்ள அதிநிவேஶமிருக்கும்படியென்! என்று மஹாகுணமாகச் சொல்வரோ? அங்ஙனே, குணமாகச்சொல்லுகை ஸம்பவிக்குமோ? பரகதமான குணத்தையும் தோஷமாகவே காண்கிற லோகஸ்பாவமிருந்தபடியென்! என்று இன்னுதாகிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், சிறுகுவாரிகளான நம் சேரியில் உள்ளாரும் அயற்சேரியில் உள்ளாரும் அந்யஸ்த்ரீகளும் இவளுடைய ஸ்ருத்தாந்தத்தைக்கண்டு குணஹீனைகளென்பரோ? இம்மஹாகுணத்தை அறிந்து கொண்டாடுவரோ? என்கிறாள். [கொல்லை] - வரம்புகடந்தாள். [செல்வம் மல்கி என்று மேலுக்கு] - ஸம்பத்தாலே மிக்கு அவன் கண்வளர்ந்த திருக்கோளூர்க்கே அத்யந்தமுக்யையான பெண்பிள்ளை தன் இடையம்ருதுவான இடைதுவளப் போய்ப்புக்காள்.

ப.—அநந்தரம், நிரதிஶயைஶ்வர்யவிஶிஷ்டனானவனுடைய திருக்கோளூர்க்கே போக ஒருப்பட்டுவிட்டாள்; இவளை ஊரார் என்ன சொல்லுவர்களோ? என்கிறாள்.

செல்வம்மல்கி - அதிஶயிதஐஶ்வர்யத்தையுடையவனாய்க்கொண்டு, அவன் - அவன், கிடந்த - கண்வளர்ந்தருளின, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, மெல் - மெல்லிய, இடை - இடையானது, நடங்க - நடங்கும்படி, இள - முக்தமான, மான் - மான்போலேயிருக்கிற இவள், (கண்வளராதிருக்கையையும் பருவத்தையும் பாராதே), செல்ல - போகையிலே, மேவினள் - நெஞ்சுபொருந்திப்போய்விட்டாள்; சில்லை - சிறுகிடுகையே ஸ்வபாவமான, வாய் - வாயையுடையவர்களாய், பெண்டுகள் - ஆஸந்நைகளானபெண்களும், அயற்சேரி - அயற்சேரியில், உள்ளாரும் - உள்ளாரும், கொல்லை - வரம்பழிந்தாள், என்பர்கொலோ - என்று கர்ஹிப்பர்களோ? குணம்மிக்கனள் - (அதிஶயிதமாய் அநுரூபமான விஷயத்தையறிந்து மேல்விழும்படியான விலக்ஷணை) குணாதிஶயத்தையுடையவள், என்பர்கொலோ - என்று கொண்டாடுவர்களோ? எல்லே - எல்லே! இதென்னாயிருக்கிறதோ என்று விஷாதகூறாகம்.

இ.—நாலாம்பாட்டில், இவளை நாட்டார் குணஹீனை என்பர்களோ, குணநிதியென்று கொண்டாடுவர்களோ?என்கிறாள். [கொல்லை] -வரம்பழிந்த நிலம். அவன் தானே வரவிருக்கக்கடவ மர்யாதையை அழித்துப்போனாள் என்பர்களோ? குணநித

விஷயத்துக்குப்போரும்படி செய்தாள் என்று கொண்டாடுவர்களோ? "தத்ஸ்வயஸ்ஸ்ரீயாம் ஹவெஸ" என்கிற வசநத்தைப் பார்த்து ஹர்ஷிப்பர்களோ? இவளுடைய ருசி விஷயத்துக்கு அநுரூபமாயிருந்தது என்பர்களோ? வியிலையைப்பார்த்து ஹர்ஷிப்பர்களோ? காம வசநத்தைப்பார்த்து 'நன்று' என்பர்களோ? "நகாமத்தெ தவவ-ஶிரஸி". விரக்தரானநீர் - காமபரவஶரான எங்களை என்பநித்துகிறீர் என்றாளிறே, தாரை இளையபெருமாளை. ஸ்வரூபத்தைப் பார்த்து ஹர்ஷிப்பர்களோ, விஷயத்தைப் பார்த்து உகப்பர்களோ? [சில்லை இத்யாதி] - சிறுகுவாரிகளான நம் சேரியில் உள்ளாரும், அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளும்: வசநபரரானவர்களும், அவர்களுக்கு உடலன்றியே "இருந்தவூரி லிருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார்கொலோ" என்னும் வெரோஜ்ஜித்தரும். [எல்லை] - என்னே என்று ஆச்சர்யமாதல்; சொல்லுகிறவர்களைக்குறித்து ஸம்வொரயநமாதல். [செல்வம்மல்கி] - "இவர்கள் சொல்லிற்றுச் சொல்லுகிறார்கள்" என்று அவள் செய்வது செய்தாள். ஸம்பத்தானது கரைபுரண்டு வரும்படியான தேசம். [அவன் கிடந்த] - தன்பெருமையைப் பாராதே, ஆர்த்த ரக்ஷணார்யமாகவந்துகண்வளர்ந்தருளுகிற தேசம். [மெல்லிடை துடங்க] - இவளும் தன் ஸ்வரூபத்தை அறிந்திலள்; தன் இடையை அறிந்தாளாகில் போக்கிலே ஒருப்படுமோ? ம்ருதுவான இடைதுவள. [இளமான்] - முக்ஷ்யையானபெண். தன்மார்த்தவத்தையும், வழியில் அருமையையும், அவன் ஸ்வரூபத்தையும் அறியமாட்டாத மௌக்த்யம். [செல்ல மேவினள்] - இவள்போக்கிலே ஒருப்பட்டாள்; கொல்லையென்பர் கொலோ?

ஈடு.— நாலாம்பாட்டு. இவளைக்கண்ட நாட்டார், குணஹீநையென்பர்களோ? குணாதிகையென்று கொண்டாடுவர்களோ? என்கிறாள்.

[கொல்லையென்பர்கொலோ] - இவள் வாசல்கடந்து புறப்படக்கடவதல்லாத மர்யாதையைக் குலைத்தாள்: இவள் நிஷித்தாநுஷ்டாநம் பண்ணினாள்: இவள் வரம்பழிந்த செயல்களைச் செய்தாள்என்பர்களோ? கொல்லையென்ற - வரம்பில்லாததுக்குப்பேர். [குணம்மிக்கனளென்பர்கொலோ]-குணாதிகவிஷயத்துக்குப் போரும்படி செய்தா ளென்பர்களோ? [கொல்லையென்பர்கொலோ குணம்மிக்கனளென்பர்கொலோ] - இவள் வித்யதிக்ர

நாலாம்பாட்டு:—கொல்லை இத்யாதி. "கொல்லை" என்றதொடங்கி, "அயற்சேரியுள்ளாரும்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - இவளைக்கண்ட இத்யாதி.

"கொல்லை" என்கிறதுக்கு - 'வரம்பழிந்தசெயல்களைச்செய்தாள்' என்றர்த்தமாக்கி, அதுதான் இன்னதென்னுமத்தை விஶதமாக அருளிச்செய்கிறார் - இவள்வாசல் இத்யாதி. வரம்பழிந்த செயலாவது: வாசல்கடந்து புறப்படுகையும், நிஷித்தாநுஷ்டாநம்பண்ணுகையும் என்றபடி. இத்தால்வருகிற பொல்லாங்கானது? என்ன; குடிக்கு நிலைநின்றபழியாய்விளையும் தாகையாலே, 'இவள் நிஷித்தாநுஷ்டாநம்பண்ணினாள்' என்கிறது. இனி, "கொல்லை" என்றதுக்குசப்தார்த்தம் - இவள் வரம்பழிந்த இத்யாதி. "கொல்லை" என்றால் இவ்வர்த்தத்தைக்காட்டுமோ? என்ன - கொல்லை யென்று இத்யாதி. மர்யாதாதிலங்கநம்பண்ணினவளே - "குணாதிகை" என்று சொல்லுகிறபடி யெங்ஙனே? என்ன - குணாதிக இத்யாதி. குணம்மிக்கனளாகையாவது - குணாதிகவிஷயத்துக்கீடாக ப்ராவண்யத்தைப் பண்ணுகையென்றபடி. "கொல்லை" இத்யாதிக்குஸ்வாபதேசம் - இவளைப்பார்த்து திகீரமம் இத்யாதி. அதாவது - தானேபோகையாலே அநந்யோபாயத்வவிருத்த ஸ்வயத்நவைத்யோபாயாந்தரத்யாகவிதாயகமான "வாரி தாஜ" என்கிறவிதியை யதிக்ரமித்தாளோ? என்றபடி. ஸித்

மம்பண்ணினாருள் என்பர்களோ: அன்றிக்கே ஸித்தாந்தந்தன்னையே சொல்லுவர்களோ? ஓரளவிலேநின்று நிஷேதித்தவற்றைக்கொண்டு, இது அப்ராப்தம் என்பர்களோ; ருசிஸ்வபாவத்தாலும் விஷயஸ்வபாவத்தாலும் இது ப்ராப்தமென்பர்களோ? ஸாதநவிதியளவிலே நின்று தடுமாறுவர்களோ: ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ? உபாயாம்சத்தைப் பற்றிநின்று, இதுகடவதல்ல என்பர்களோ: ப்ராப்தாவின் ஸ்வரூபத்தையும் ப்ராப்யஸ்வரூபத்தையும்பார்த்து, இது கடவதென்பர்களோ? அந்யநிஷேதபூர்வகமான ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால், புறப்பட ப்ராப்தியில்லை; ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநுஸந்தாநம்பண்ணினால், போய்ப்புக்கல்லது நிற்கவொண்ணாது. விதியைப்பார்த்து கர்ஹிப்பர்களோ: காமவசநத்தைப் பார்த்து நன்றென்பர்களோ? "நகாமதந்த்ரேதவபுத்திரஸ்தி" (நகாமதந்த்ரே தவபுத்திரஸ்தி)-'விரக்தரானநீர்காமபரவசரானஎங்களை என்படுத்துகிறீர்?' என்றாளிறே தாரை, இளைய பெருமாளை. [சில்லைவாய்ப்பெண்டுகள்] - சிலுகுசிலுகு என்னும் ஸ்த்ரீகள். விஷயாதீந்-

---

தாந்தந்தன்னையே யென்றது - ஏதத்விவரணவாக்யங்களிலே, 'ருசிஸ்வபாவத்தாலும் விஷயஸ்வபாவத்தாலும் ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்தாலும்" என்றுசொல்லப்படுகிற இவருடைய ப்ராவண்யாதிஸயவிஷயவைலக்ஷண்ய ஸேஷத்வஸ்வரூபமாகிற ஹேதுத்ரயத்தாலும் இதுப்ராப்தமென்கிற ஸித்தாந்தந்தன்னையேயென்றபடி. உத்தகோடித்வயவிவரணம் - ஓரளவிலே என்றுதொடங்கி மேலெல்லாம். அதில், அலவிருந்ததேசத்தேறப்போயையாகிறதிங்கு, வித்யுதிக்ரமமும் ஸித்தாந்தமுமாகிறபடி யெங்ஙனே? என்ன - ஓரளவிலே இத்யாதி. ஓரளவிலேயென்றது - தநேகோபாயத்வ தநேகாக்ஷயத்வாதிகளிலே என்றபடி நிஷேதித்தவற்றைக்கொண்டு என்றது - ஸ்வப்ரவ்ருத்தி ஸ்வரூபவிருத்தமென்று நிஷேதிக்கிற 'ஸுயுவாதகுஹீதஸ்ஸுழு' இத்யாதி ப்ரமாணங்களைக்கொண்டு என்றபடி: ஸித்தாந்தமாகைக்குஇரண்டுஹேது அருளிச்செய்கிறார்-ருசிஸ்வபாவத்தாலும்' இத்யாதி. ருசிஸ்வபாவமாவது - விஷயத்திலுண்டான ஆதராதிசயம். விஷயஸ்வபாவமாவது - குணாதிகவிஷயமாகை "ஓரளவிலே" இத்யாதிவாக்யவிவரணம் - ஸாதநவிதியளவிலே இத்யாதி. ஸாதநவிதியளவிலேநின்று தடுமாறுவர்களோ? என்றது - ஸாதநவிதியளவிலேநின்று நிஷேதித்தத்தைக்கொண்டு தடுமாறுவர்களோ என்றபடி. ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ? என்றது - சேஷத்வம் சேஷிக்கு அதிபயகரத்வமாகையாலே, ஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ என்றபடி. "ஸாதநவிதி" இத்யாதிவாக்யதலயவிவரணம் - உபாயாம்சத்தை இத்யாதி. ப்ராப்தாவின் ஸ்வரூபத்தையுமென்றது சேஷிவிஷயப்ராவண்யமே வடிவான ஸ்வரூபத்தையு மென்றபடி. கீழுக்தமான தெல்லாவற்றாலும் ஸுவிதம் அந்யநிஷேத இத்யாதி. ஸ்வயத்நநிஷேதபூர்வகமான பாரதந்த்ர்ய ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்தால் என்றபடி. ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநுஸந்தாநம் பண்ணினாலென்றது - த்வராஸ்வரூபோத்தம்பகமான ப்ராப்யவைலக்ஷண்யாநுஸந்தாநம் பண்ணினாலென்றபடி. புநஶ்ச, அந்யாபதேஶஸமாதியாலே யருளிச்செய்கிறார் - விதியைப்பார்த்து இத்யாதி. "கடலன்னகாமத்தராகிறும்மாதர் - மடலூரார்" இத்யாதிவிதியைப்பார்த்தென்றபடி. காமவசநமாவது - "காதாயிபூமீ ஈயாயாதிஸுதெ தம் ஸாஹிஸாரிகா" என்கிறஇது. காமவசநத்தை - காமசாஸ்த்ரத்தை. காமசாஸ்த்ரத்தைப்பார்த்தால் "நன்று" என்று தோற்றுமோ? என்ன - நகாமதந்த்ரா இத்யாதி. "நகாமதந்த்ரே தவபுத்திரஸ்தி ஸுஂவெவயாரேநு வஶம்வ்ரவாம: । நதெஶகாலஸ்ஸுரிநவாயுயுபூவவெகூ தெகாரோரிபூநுஷ்ட:" இதி லக்ஷ்மணப்ரதி தாரா. (ரூ. ரு. ரு) இதுக்குபாவம்-விரக்தாளஇத்யாதி. தந்த்ரம்-ஶாஸ்த்ரம். நீர் காமஶாஸ்த்ரஜ்ஞராகிலன்றோ நான்செய்தது நன்றென்று புத்திபண்ணக் கடவீர் என்று கருத்து. சிலுகுசிலுகென்னும் ஸ்த்ரீகள் - பறறாஜல்பம்பண்ணும் ஸ்த்ரீகளென்றபடி. சில்லைவாய்ப்பெண்டுகள் - சிலுகிடுகையே ஸ்வபாவமான வாயையுடைய ஸ்த்ரீகளித்யர்த்த:. சிலுகிடுகை - சண்டையிடுகை. சிலுகு - சண்டை. அவர்களாரென்ன - விஷயாதீநம் இத்யாதி. அதா

ஸ்ரீய்வருமத்தையும் வசநஸித்தம் என்றிருக்குமவர்கள். உபாயபுத்தியா வருமவற்றி லிறே விதிக்குவிஷயமுள்ளது; குணப்ரேரிதராய்ப்போமிடத்தில் விதி கோசரியாதே. [அயற்சேரியுள்ளாரும்] - (சிலதுவாய்ச்சிகளான நம்சேரியிலுள்ளாரும் அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளும்.) இவளிருந்ததோரூர்வாசியுங்கூட இல்லாதவர்கள். [எல்லே] - கீழில் அவர்களை ஸம்போதித்ததாதல், இதோராச்சர்யமிருந்தபடி யென்! என்றதாதல். [செல்வ மித்யாதி] - அவன்வரவை அஸத்ஸமமாக்கினாள். முற்பாடனாய்வந்தவனை, தான் நாலடி யிட்டுப் பிற்பாடனும்படி பண்ணினாள். அவன்ஸ்வரூபத்தை யழித்தாள். பரவ்யூஹாதிகளை விட்டு இங்குவந்துகிடக்கிறது இவளுக்கு முற்பாடனாய் உதவுகைக்குஇறே. [செல்வம்மல்கி யவன்கிடந்த திருக்கோளூர்க்கே] - நிரவதிக ஸம்பத்தானது கரைபுரளும்படியாக அவன் வந்து கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே. ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே அந்வயித்தாலிறே நியந்தாவினுடைய ஐஸ்வர்யம் ப்ரகாசிப்பது! [அவன்கிடந்த] - அவன் வரவுபார்த்து இவளிருக்கையன்றிக்கே, இவள்வரவுபார்த்து அவன் அவஸரப்ரதீக்ஷனாய்க் கிடக்கிறபடி. [மெல்லிடைநுடங்க] - அவன் ஸ்வரூபஜ்ஞாநமில்லாவிட்டால், தன்ஸ்வரூப ஜ்ஞாநமோதான் இவளுக்குஉண்டாயிருக்கிறது. இவளுக்கு விழுக்காடறியாமை எங்குமோத் ததுகிடீர்! தன்னிடையை யறிந்தாளாகில் தான் புறப்பட்டுப்போமோ? நடுவே அறியாமல் புகுந்தபிழையிறே. [மெல்லிடைநுடங்க] - மிருதுவான இடையானது துவளும்படியாக.

வது - ராகப்ராப்தமாய் வருமவற்றையும் "யுஞ்யாத்" "உபாஸீத" இத்யாதி வசநஸித்தோபாஸ நத்திலே அந்வயிக்கும்என்றிருக்குமவர்களென்றபடி. அப்படி நினைத்திருக்கவொண்ணாதோ? என்ன - உபாயபுத்தியா இத்யாதி. "கொல்லை" என்கிறவர்கள்-சில்லைவாய்ப்பெண்டுகள்; "குணமிக்கனன்" என்கிறவர்கள் - அயற்சேரியுள்ளாரென்று கொள்ளுமளவில், 'இவளிருந்ததோரூர்வாசியுங்கூட இல் லாதவர்கள் என்றவாக்யத்தோடு வ்யாஹதமாம்; ஆகையால், இரண்டுதிறத்தாரும் "கொல்லை" என் றும் "குணமிக்கனன்" என்றும் சொல்லுவர்களோவென்றபடி. "சில்லைவாய்ப்பெண்டுகள்" என் கிறது - அத்யவஸாயநிஷ்டர்களை. இவர்களுக்கு அசலானத்வாநிஷ்டர்களை - "அயற்சேரியுள்ளார்" என்கிறது. கீழில்அவர்களையென்றது - கீழிற்பாட்டிற்சொன்ன பூவைதொடக்கமானவற்றையாதல்; தன்கீழில்அவர்களையென்றாய், விதேயரான அண்டையிலிருக்கிறவர்களையாதல்; சில்லைவாய்ப்பெண்டு கள் தொடக்கமானாரையாதல். "திருக்கோளூர்க்கே - செல்லமேவினள்" என்றதாயாருடைய ஹார்த்த பாவம் - அவன்வரவை இத்யாதிவாக்ய சதுஷ்டயமும். விவரணம் - முற்பாடனாய் இத்யாதி. இத் தால்புலிதம் - அவன்ஸ்வரூபத்தை இத்யாதி. அவன்தான் இவளுக்கு முற்பாடனாகைக்கோ வந்த தென்ன - பரவ்யூஹாதிகளை இத்யாதி. "செல்வம்" என்று - ஸம்பத்தாக அர்த்தம் - நிரவதிக இத் யாதி. ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணசம்பத்தாகவர்த்தாந்தரம் - ரக்ஷ்யவர்க்கத்தினுடைய இத்யாதி. ஏகார்த்தமாகவுமாம்; அப்போது, பரமபதத்திலும் சம்பத்துண்டாயிருக்க, இங்கே கரைபுரளுகையாவ தேதென்ன - ரக்ஷ்யவர்க்க இத்யாதி என்று வாக்யசங்கதி. "அவன்கிடந்த" என்கிற பதத்துக்கு ஹார்த்த பாவம் - அவன்வரவு இத்யாதி. அவன்வரவுபார்த்து இவளிருக்கையன்றிக்கே என்றது - சேஷியினுடையவரவை ஆசைப்பட்டு அவனிருந்தேசத்திலே இவன்போகவிறே ப்ராப்தம்; அப்படி யிருக்கையன்றிக்கே என்றபடி. "அவன்கிடந்த" என்றவநந்தரம், "மெல்லிடைநுடங்க" என்கிறவளு டையஹார்த்தபாவம் - அவன்ஸ்வரூபஜ்ஞாநம் என்றுதொடங்கி.இது - ஸ்வாபதேசம். அவன் ஸ்வரூப ஜ்ஞாநமாவது - அவனுடையநிருபாதிகரக்ஷகத்வஜ்ஞாநம். தன் ஸ்வரூபஜ்ஞாநமாவது-ஸ்வப்ரவ்ருத்த ஸஹ பாரதந்த்ர்யஜ்ஞாநம். எங்கும்ஒத்ததென்றது - அவன்ஸ்வரூபத்திற்போலே தன்ஸ்வரூபத்திலும் ஒத்ததென்றபடி. அதெப்படியென்ன - தன்னிடையை இத்யாதி. நடு - நடுவே இத்யாதி. "மெல் லிடைநுடங்க - செல்லமேவினள், அவன்கிடந்த" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - இவ்விடையை இத்யாதி. 'எதிரேபுறப்பட்டுவரவேண்டாவோ' - செல்வக்கிடப்பாலேகிடந்தானென்றபடி. இது -

இவ்விடையைக்கொண்டு இவள் நடக்கப்புக்கால் எதிரே புறப்பட்டு வரவேண்டாவோ? [இளமான்] - போகிறவழியில் மிறுக்கும், தன்ப்ரக்ருதியும் அறிந்து மீளவல்ல பருவமல்ல கிடீர்! [செல்லமேவினளோ] - போகவொருப்பட்டாள். இவள்கையிலும் இவர்கள்கையிலு மன்றிமே ப்ராப்தி கிடப்பது; அது அவன்கையதிறே; இத்தலையில் துணிவேயிறேயுள்ளது. கீழே - "போனாள்" என்றுநின்றாள், இங்கே - "போக்கிலேயொருப்பட்டாள்" என்று நின்றாள்; இதுசேரும்படியென் ? என்னில்:- இவள் போகையிலே ஒருப்பட்டபோதே போய்ப்புக்காளன்றோ ? என்கிறாள். [இளமான் செல்லமேவினள் - கொல்லையென்பர் கொலோ, குணம்மிக்கனளென்பர்கொலோ] - அவள்கைகழிந்து கொடுநின்றாள்: இனியிருந்த நாம் என்கேட்கிறோமோ ? இங்கிருந்தநாள் நம்முடைய ஹிதவசநங்கேட்கிலன்றோ வழியி

"செல்வம்மல்கி" என்றதின் முந்தின அர்த்தத்திலே பாவமாகவோழிப்பது. ரகுவம்சத்தான பக்ஷத்தில், அவன் ரகுவோடுத்தனாய் முற்பாடனாயிருக்க, தான் நாலடியிட்டு அவன்வரவை யபேக்ஷமாகக் கிடந்தானென்று தன்மகனோடொன்றாக்கி அவனைக்கொண்டாடுகிறானென்று கண்டுகொள்வது. வ்யாக்ரக பக்ஷத்தில், பேதமில்லை; செல்வக்கிடப்பாலே கிடந்தானென்று கீழ்ச்சொன்னபடியே கண்டுகொள்வது. போனாளென்றாலே, "ஒருப்பட்டாள்" என்கிறதென்? என்ன - இவளிடையிலும் இத்யாதி. அதாவது - சேதநாநுகூலையாலே இவளிடத்தில் உத்யோகமாத்ரமேவேண்டுவது; ப்ராப்திக்கு உபாயம் அவன்நினைவாலையாலே, இவளுக்கும் பிறர்க்கும் ப்ராப்தியில்லையென்றபடி. ஆனால் இவளுக்குச் செய்யத்தக்கதேதென்ன - இந்நிலையிலே இத்யாதி. 'கீழேபோனாளென்றுநின்றாள்' இத்யாதி சங்கா பரிஹாரவாக்யங்களுக்கு - பரிவழிபோனாள் என்னையிலே, தாத்பர்யம். அதெங்ஙனேயென்னில்:— இத்திருவாய்மொழியின் ப்ரவேசத்திலே, "படுக்கையையர்த்தவிடத்தில் வெறும்படுக்கையாய்க்கிடந்தது" என்றிருக்கையாலும்; * பொன்னுலகாளீர் ப்ரவேசத்திலே, "புறச்சோலையிலேகிடந்து தூதுவிடுகிறாள்" என்கையாலும், ஒருப்பட்டாளென்றது-பரிவழி போனாளென்றபடி. இப்படி அந்வயித்த பக்ஷத்தார்த்தபாவம் - அவளைக்கொண்டு இத்யாதி. வழியிலுள்ளார்பழிகேட்கில் மீளாளோ ? என்ன - இங்கிருந்தநாள் இத்யாதி. ஆனால்எந்தவார்த்தைகேட்டுமென்ன - இவளிடையிலும் இத்யாதி. நல்வழியிலுள்ளார் - * சில்லைவாய்ப்பெண்டுகள். பெருவழியாளுர் - அயற்சேரியுள்ளார்: 'செல்வம் மல்கி' என்றதொடங்கி, மேலினள்; 'சில்லைவாயிலன்று' தொடங்கி, 'அயற்சேரியுள்ளாரும் - கொல்லையென்பர்கொலோ குணம்மிக்கனளென்பர்கொலோ, எல்லே' இத்யந்தம். "சில்லைவாய்ப்பெண்டுகள்" இத்யாதிக்கு - அப்பு அரும்பதத்திற்சொன்ன ஸ்வாபதேசம் - "சில்லைவாய்ப்பெண்டுகளென்கிறது - அத்யவஸாயநிஷ்டரை; அயற்சேரியுள்ளாரென்கிறது - அத்யவஸாயநிஷ்டர்க்கு அசலான த்வாரநிஷ்டரை" என்று. அப்படி, அயற்சேரியுள்ளாரை த்வாரநிஷ்டரென்றுசொல்லுமளவில், 'இவளிருந்தகோநூர் வாசியுங்கூடஇல்லாதவர்கள்' என்றவாக்யத்தோடும், பாட்டுமுடிவிலே, 'இவள்வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார்வார்த்தை கேட்குமதொழியப் பெருவழியாளுர் வார்த்தைகேளாள்' என்கிறவாக்யத்தோடும் வ்யாஹதமாயிருக்கிறது; இதுக்கு பரிஹாரம் யோஜித்துக்கொள்வது. இங்ஙனன்றிக்கே இருபத்துநாலாயிரத்திலே, "சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாரும்" என்கிறஇதுக்கு - கஞ்சேரியிலுள்ளாரும் அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளுமென்று பொருள் அருளிச்செய்து, இதுக்கு ஸ்வாபதேசமாக, "அயற்சேரியுள்ளாரும்" என்கிறவிதுக்கு-வசநபரரானவர்களு மென்றருளிச்செய்து, "சில்லைவாய்ப்பெண்டுகள்" என்கிறவிதுக்கு - அவர்களுக்கு உடலன்றியே, இருந்தவூரிலிருக்கும் மானிடரெத்தவங்கள்செய்தார்கொலோ" என்னும் ப்ரேமார்த்தாதித்தருமென்று ஸ்வாபதேசமாக அருளிச்செய்தார். இதிலேயும், பாட்டின்முடிவிலே 'இவள்வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார்வார்த்தை கேட்குமதொழியப் பெருவழியாளுர்வார்த்தைகேளாள்', என்றிருக்கிறது; இவற்றையெல்லாம் அநுஸந்தித்து, 'சிலகுசிலரென்னும் ஸ்த்ரீகள்' என்கிறஇத்தை, "இவளுடையகுணத்திலேயீடுபட்டு அலவலைகளைப்போலே வொக்கடாடுகிற கஞ்சேரியிலுள்ளாரைச்சொல்லுகிறது" என்றும்; 'விஷயாந்த

லுள்ளார் பழிகேட்பது அவள். இவள் வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார் வார்த்தை கேட்
குமதோழியப்பெருவழியானார் வார்த்தைகேளாள். (௪)

ஐந்தாம் பாட்டு.

மேவிநைந்துநைந்துவிளையாடலுறுள்ளன்றிறத்
தேவிபோய்இனித்தன்திருமால்திருக்கோளூரில்
பூவியல்பொழிலுந் தடமுமவன்கோயிலுங்கண்டு
ஆவியுள்குளிர எங்ஙனேயுகக்குங்கொல்நின்றே?

ஆ.—(மேவிநைந்து.)-பிள்ளையாய் விளையாடும் பருவமாகுல் பிள்ளைகளோடு விளையாடுகையில் "ஆநாயின்றியே, எம்பெருமானைக் காணவிலையாம்" என்றுவைராக்கியப் பெருமையாலே நைந்துநைந்திருந்த என்னிறுத்தேவி போய் இனித்தன் திருமால் திருக்கோளூரில் பூவியல் பொழிலையும் அதுக்குள்ளே தாமரைத்தடாகங்களையும் அதுக்குள்ளே யவன்கோயிலையுங் கண்டு, தன்னுடைய நிரவதிக ஸந்தாபமெல்லாம் போய் ஆவியுள் குளிர இன்று எங்ஙனே உகக்கிறாளோ? காண் அந்த ஸம்ருத்தியைக்காணப்பெற்றிலேன் என்கிறாள்.

ஓ.—அந்தாம்பாட்டில், திருக்கோளூர்க்கு அணித்தான திருத்தேசங்களையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன் கோயிலையும் கண்டால் எங்ஙனே உகக்குமோ? என்கிறாள்

[மேவி யென்றுதொடங்கி] - அவளுடைய குணசேஷ்டிதாதிகளை அநுபவித்து மிகவும் ஶிதிலையாய் விளையாட்டுகளிலும் முனைவாள். ப்ரயோஜநாந்தரபரவசையாய் மிக்க கிருக்கி, பருவத்தில் இப்படி விலக்ஷணையாயிருக்கிற இப்பெண்பிள்ளை இதுக்கு மேலே தனக்கு ஸர்வஸ்வமான ஸ்ரீயபதியுடைய திருக்கோளூரிலே போய், [பூவியல் பொழில்] - என்றும் பூத்திருக்கும்பொழில். [ஆவியுள் குளிர] - மிகவும் கலங்கிக் கிடக்கிற ஹ்ருதயம் உள் குளிரும்படி.

ட.— அநந்தரம், ஸ்ரீயபதியானவனுடைய விலக்ஷணை தேஶிகன்க்காகத்தனக் கண்டு எங்ஙனே ப்ரியப்படுகிறாளோ? காண்கிறாள்.

மேவி - (அவனுடைய லாவண்யசீலாதிகளை) நெருங்கிச்சேர்ந்து, நைந்து நைந்து - க்ஷணந்தோறும் ஶிதிலையாய், விளையாடல் - விளையாடுகையிலும், உறுள் - பொருந்தமற்றிருப்பாளாய், என்றிறுத்தேவி - ப்ரயோஜநாந்தரபரவசையாயிருக்கச்செய்தே வாசியறியும்படியான திவ்ய ஸ்வரூபத்தை யுடையவளான என்பெண் பிள்ளை, போய் - இங்குநின்றும்போய், தன் - தனக்கவாதாரவானவனை, திருமால் - ஸ்ரீயபதியுடைய, திருக்கோளூரில் - திருக்கோளூரில், பூ - பூவை, இயல் - இயல்பாகவுடைத்தான, பொழிலும் - பொழில்களையும், தடமும் - (பொழிலுக்குச் செவ்விதாகிற) தடாகங்களையும், அவன் - (லக்ஷ்மியோடே) அவன்வர்த்திக்கிற, கோயிலும் - தேஶிகன்க்காகமான மாய்வருமத்தையும் வசகமித்தமென்றிருக்குமவர்கள் என்கிறவாய்த்தை - "அயற்சேரியுள்ளாரும்" என்கிறபதத்துக்கவதாரிக்க" என்றும் நிர்வஹிப்பர்கள். (௯)

கோயிலையும், (நினைத்து முன்பு சிநிலையானவள்), இனி-இனி, கண்டு - காணப்பெற்று, ஆவி-ப்ராணப்ரியமான, உள்-நெஞ்சு, குளிர-குளிரும்படியாக, இன்று-(எனக்கு நல்விடி-யான) இன்று, எங்ஙனே - எங்ஙனே, உகக்குங்கொல் - உகக்கிறாளோ?

இ.—அந்தாம்பாட்டில், திருக்கோவலூரில் கோலங்களையும் பொய்கைகளையும் அவன்கோயிலையும் கண்டால் எங்ஙனே உகக்குமோ? என்கிறாள்.

[மேவி] - அவனுடைய லீலைக்கிடமான நிலங்களிலே நெஞ்சை வைத்து. [கைந்து கைந்து] - "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்து நொந்து" என்று பரிதிலை யாக நின்றாள். [விகோயாட ஆறாள்] - பகவத்விஷயமான வ்யாபாரத்தை விட்டாள். "மாற்பால் மனந்நுழைப்ப மங்கையர்க்கரசி கைவிட்டு" என்கிறபடியே அந்தலையைப் பற்றியாயிற்று இங்கு உள்ளவற்றை விட்டது. [மன்னிறுக்கி] - த்யாஜ்யோபாதேயவிஶேஷம், பகவத் விஷயங்களிலே கிடீர் உண்டாயிற்று! "வோஜ்ஞாந ப்ரூஷ்ட்கீஸுபஸ்ஸிஷு" என்கிறபடியே, பகவத் விஷயங்களிலே பிராட்டிமாரோடு ஒக்கச்சொல்லலாம்படி இருக்கிறபடி. [இனி-போய்] - இங்கிருக்கிற பிராட்டி என்ன? ஏற்றமிகுமுண்டாய்ப்போனாள். "தத்ஸ்வஸ்வரூபமாகவே" என்றிருக்கிறாளன். [கன்றிருமால் திருக்கோவலூரில்] - தனக்கு வாய்த்தவனான ஸுந்தரபுத்தி கண்வளர்ந்தருளுகிறவூரிலே: பிராட்டியோடாகி தன்பக்கல் வ்யாமுக்தனாவன் வர்த்திக்கிறவூரிலே என்றுமாம். [பூவியல் பொழிலும்] - சித்ரவனங்களான பொழிலும். [கடமும்] - அதுக்குள்ளாகப் பரப்பமாறப்பூத்த கடம்பங்களும், அதுக்குள்ளாக அவன் கோயிலும் கண்டு. இங்கேயிருந்து அதுவுண்டாக்கி கோயிலுக்கு வந்து காணப்பெறுகிறதோ! [ஆவி யுள்குளிர] - கமர்கொண்ட ஆற்றாமை தணியும்படி. [எங்ஙனேயுகக்குங்கொல்] - எங்ஙனே ப்ரியப்படுகிறாளோ? இங்கே கிடந்து கிலைத்தாள் ஸ்ரீவைகுண்ட நாதன், அந்த அழகையாயிற்று காணப்பெறுகிறாள். [இன்று] - காலம் அவனோடிருந்த பேராகமேயாய்ச் செல்லுகிறது, அவனுக்கு நல்லிளாய்ப் பிரிவோடே செல்லுகிறதிறே.

ஈ.—அந்தாம்பாட்டு. திருக்கோவலூரில் சோலைகளையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன்கோயிலையுங் கண்டால் எங்ஙனே யுகக்குமோ? என்கிறாள்.

[மேவி] - லீலைத்தலங்களிலே நெஞ்சை வைத்து. [கைந்து கைந்து] - ஆஶ்ரயங்களை யழிக்கும் பதார்த்தம்போலே குணங்கள் தானழிக்கவே: "நினைதொறும்சொல்லுந்தொறும்" இத்யாதி. இவள்மேலிற்று நிர்க்குணமாயிருப்பதொரு விஷயத்தோடன்றே; *உபர்வறவுயர்நலமுடையவனேயோ யன்றோ. [மேவி] - இங்கிருந்தாளாகிறாளும் எங்களோடு பொருத்தமில்லைகிடீர். [கைந்து கைந்து] - கைந்து கிளாமாட்டாள்; மறித்திருக்கமாட்டாள். [விகோயாட

அந்தாம்பாட்டு.—மேவி இத்யாதி. "திருக்கோவலூரிற்பூவியல்பொழிலும்" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை - திருக்கோவலூர்ப்பொழில் இத்யாதி.

